# இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்

ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி[அலை]
வாக்களிக்கப்பட்ட மஸீஹ், மஹ்தி



The essay entitled *The Philoshophy of the Teaching of Islam* was written in Urdu by Hadrat Mirza Ghulam Ahmad, the Promised Messiah and Mahdi[as] at the invitation of Swami Shugan Chandar under whose auspicious the conference of Great Religions was held in Lahore Town Hall from 26th to 29th December 1896. The scholars of Muslims, Christians, Arya Samaj and other religions were invited to represent their religions at the conference of Great Religion. They were required to write on the following five topics on the basis of their Holy Books.

- The Physical, moral and spiritual states of man
- The state of man after death.
- The object of man's life and the means of its attainment.
- The operation of the practical ordinances of the Law in this life and the next.
- Sources of Divine knowledge.

Allah revealed to the Promised Messiah[as] that his essay will be declared supreme over all other essays. And so it was. For instance the Civil and Military Gazette, Lahore, wrote that Hadrat Ahmad's essay was the only one worth mentioning and the only one paper which was commended highly. The essay has been published in several languages in different countries.

It is the best and most comprehensive introduction to Islam within the scope of the above five questions.

**Islami Usool ki Philosophy**

(in Tamil)

By

Hazrat Mirza Ghulam Ahmad Qadiani[as]

The Promised Messiah and Mahdi

# இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்

உருது மூலம்

## ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)

தமிழாக்கம் : மவ்லவி A. அப்துர்ரஹ்மான் தாஹிர்

Tamil Translation of the Book
Islami Usool ki Philosophy '
(இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்)

| | |
|---|---|
| Written by | : Hazrat Mirza Ghulam Ahmad [as] |
| First Edition | : 1986 |
| Second Edition | : 1996 |
| Present Edition | : 2019 |
| Copies | : 1000 |
| Translated by | : Moulavi A. Abdur Rahman Tahir |
| Typesetting by | : Ibnu Jafar Ali |
| Published by | : Nazarat Nashr-o-Isha'at<br>Qadian - 143 516,<br>Gurdaspur, Punjab. |
| Printed at | : Fazl-e-Umar Printing Press,<br>Gurdaspur, Qadian-143516,<br>Punjab, India. |

Noorul Islam TollFree No : 1800-3010-2131

Tamil TollFree No : 1800-425-40000

# பொருளடக்கம்


| எண் | பொருள் | பக்கம் |
|---|---|---|
| 1. | கேள்விக்கான பதில்களும் அதற்கான சான்றுகளும் இறைவேதத்திலிருந்து அளிப்பது அவசியமாகும் | 1 |
| 2. | **முதல் கேள்விக்கான பதில் :** மனிதனின் பௌதீக, நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைகள் | 3 |
| 3. | மனித ஆன்மாவின் மூன்று வகையான நிலைகள் | 3 |
| 4. | முதல் ஊற்று - தீமையின் பக்கம் சாய்க்கும் ஆன்மா | 3 |
| 5. | இரண்டாம் ஊற்று - குற்றஞ்சாட்டும் ஆன்மா | 4 |
| 6. | மூன்றாம் ஊற்று - சாந்தியடைந்த ஆன்மா | 6 |
| 7. | ஆன்மா படைப்பாகும் | 13 |
| 8. | ஆன்மாவின் இரண்டாவது தோற்றம் | 14 |
| 9. | மனிதனின் படிப்படியான முன்னேற்றம் | 14 |
| 10. | இயல்பான நிலைகளுக்கும், நல்லொழுக்க நிலைகளுக்குமான வேறுபாடுகள் | 17 |
| 11. | சீர்திருத்தத்திற்கான மூன்று வழிமுறைகள் | 20 |
| 12. | சீர்திருத்தத்தின் தேவையின் காலக்கட்டத்தில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள் | 21 |
| 13. | திருக்குர்ஆன் போதனையின் அசல் நோக்கம் மூவகை சீர்திருத்தம் ஆகும். இயல்பு நிலைகள் நடுநிலைப்பாங்கினால் நல்லொழுக்கமாகி விடுகின்றன. | 23 |
| 14. | உண்மையான நல்லொழுக்கம் | 26 |
| 15. | கல்க் மற்றும் குல்க் என்றால் என்ன? | 27 |
| 16. | முதல் சீர்திருத்தம் அதாவது இயல்பான நிலைகள் | 30 |
| 17. | பன்றி மாமிசம் விலக்கப்பட்டதன் விளக்கம் | 36 |
| 18. | மனிதனின் நல்லொழுக்க நிலைகள் | 38 |
| 19. | தீமையை விட்டு விலகுதல் | 39 |
| 20. | தூயவர்களாக திகழ ஐந்து சிகிச்சைகள் | 44 |
| 21. | நன்மையை அடைவதற்கான நல்லொழுக்கங்களின் வகைகள் | 56 |
| 22. | உண்மையான வீரம் | 67 |
| 23. | உண்மை | 69 |
| 24. | பொறுமை | 72 |
| 25. | படைப்பினங்களின் மீதான அனுதாபம் | 73 |
| 26. | மேன்மைமிக்க ஓர் இறைவனைத் தேடுதல் | 75 |
| 27. | ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அரபு நாட்டில் தோன்றியதில் உள்ள நுட்பமான ஞானம் | 79 |

| | | |
|---|---|---|
| 28. | முழு உலகின் மீதும் திருக்குர்ஆன் செய்த அருள் | 80 |
| 29. | இறை இருப்பிற்கான ஆதாரங்கள் | 82 |
| 30. | இறைபண்புகள் | 86 |
| 31. | ஆன்மீக நிலைகள் | 96 |
| 32. | ஓர் அழகிய பிரார்த்தனை | 100 |
| 33. | கற்பூர பானம் மற்றும் இஞ்சி பானத்தின் உண்மைத்துவம் | 108 |
| 34. | இஞ்சியின் நன்மைகள் | 110 |
| 35. | அல்லாஹ்வுடன் முழுமையான ஆன்மீகத் தொடர்பை ஏற்படுத்துவதற்கான வழி | 119 |
| 36. | **இரண்டாவது கேள்வி :-** மரணத்திற்குப் பின் மனிதனின் நிலை என்ன? | 123 |
| 37. | மறு உலகை குறித்து திருக்குர்ஆன் கூறும் மூன்று நுட்பமான ஞானங்கள் | 128 |
| 38. | முதலாவது நுட்பமான ஞானம் | 128 |
| 39. | மூவகை அறிவு | 131 |
| 40. | மூவகை உலகம் | 132 |
| 41. | இரண்டாவது நுட்பமான ஞானம் | 140 |
| 42. | மூன்றாவது நுட்பமான ஞானம் | 144 |
| 43. | **மூன்றாவது கேள்வி :-** வாழ்க்கையின் நோக்கம் என்ன? மேலும் அதனை எவ்வாறு அடைய முடியும்? | 149 |
| 44. | மனித வாழ்க்கையின் நோக்கத்தை அடைவதற்கான வழிகள் | 152 |
| 45. | **நான்காவது கேள்வி :-** இம்மையிலும், மறுமையிலும் மார்க்கச் சட்டங்களின் செயல்பாடு என்ன? | 161 |
| 46. | திருக்குர்ஆனில் பல்வேறு பொருட்கள் மீது செய்யப்பட்டுள்ள சத்தியங்களின் தத்துவம் | 165 |
| 47. | **ஐந்தாவது கேள்வி :-** இறைஞானத்தை பெறுவதற்குரிய வழிமுறைகள் என்னென்ன? | 173 |
| 48. | மனித இயல்பின் உண்மைநிலை | 178 |
| 49. | 'இல்ஹாம்' என்பதன் பொருள் என்ன? | 182 |
| 50. | ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை) அவர்கள் இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றார்கள் | 188 |
| 51. | இறைவனின் இல்ஹாம் மூலமாகவே முழுமையான அறிவு கிடைக்க முடியும் | 190 |
| 52. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களது வாழ்க்கையின் இரண்டு காலக்கட்டங்கள் | 195 |
| 53. | ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் செய்த போரின் நோக்கங்கள் | 201 |

**உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் நான்காவது கலீஃபத்துல் மஸீஹ் ஹஸ்ரத் மிர்ஸா தாஹிர் அஹ்மது (ரஹிமஹுல்லாஹ்) அவர்கள் வழங்கிய தூதுச் செய்தி :-**

1896-ஆம் ஆண்டு டிசம்பர் 26-ஆம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை சர்வ சமய மாநாடு லாஹூர் நகரில் நடைபெற்றது. அதில் வாசிக்கப்பட்ட இந்தச் சிறப்புமிகு கட்டுரை வெளியிடப்பட்டு நூறாண்டுகள் நிறைவுற்றதை உலகளாவிய அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் கொண்டாடி வருகிறது. இக்கட்டுரை இறை உதவியால் எழுதப்பட்டது. மேலும் இக்கட்டுரை மற்ற கட்டுரைகளைவிட முதன்மையானதாக தேர்ந்தெடுக்கப்படும் என இறையறிவிப்புகள் மூலமாக முன்னரே அல்லாஹ் கூறியிருந்தான். அந்த அறிவிப்பு மாநாடு துவங்குவதற்கு முன்னரே செய்யப்பட்டிருந்தது. லாஹூரின் பல்வேறு பொது இடங்களில் சுவரொட்டிகள் மற்றும் பிரசுரங்கள் வாயிலாக அதன் விளம்பரம் செய்யப்பட்டது.

இறைவனுக்கு நன்றி கூறும் வகையில் நடைபெறும் இவ்விழாவை பொருளுடையதாகவும், எல்லாவகையான வீணான காரியங்கள் மற்றும் பகட்டான காரியங்களிலிருந்தும் தூய்மையானதாக அமைத்துக் கொள்வதே, நம்பிக்கை-யாளர்களின் ஜமாஅத்திற்கு அழகாகும். எனவே, நாம் முடிந்தவரை, பெரிய, பெரிய மொழிகளில் இந்நூலின் மொழியாக்கத்தை வெளியிட்டு நூற்றாண்டு விழாவை கொண்டாடுகிறோம். உலகின் பெரும்பாலான நாடுகள் இதன் அருட்களிலிருந்து பெருமளவு பங்குபெறும் என நாம் நம்புகிறோம்.

அல்லாஹ்வின் தனிப்பெரும் அருளால் நாம் இதுவரை உலகின் 52 பெரிய மொழிகளில் இந்நூலின் மொழியாக்கம் மற்றும் அதன் வெளியீட்டினை முழுமை செய்து விட்டோம்.

அதுமட்டுமின்றி, மீதமுள்ள மொழிகளிலும் இந்நூலின் மொழியாக்கப் பணி நடைபெற்று வருகின்றது. அல்லாஹ்வின் அருளினால் 1996-ஆண்டு இறுதிக்குள் அப்பணியை முழுமை செய்து விடுவோம் எனவும் நாம் நம்புகிறோம்.

இந்த நற்பணியில் தமது ஆற்றலையும், நேரத்தையும் செலவு செய்து, முயற்சி செய்த அனைவருக்கும் அல்லாஹ் தனது அருட்கொடைகளை வழங்குவானாக. ஆமீன்.

ஜனவரி-1996 மிர்ஸா தாஹிர் அஹ்மது
(நான்காவது கலீஃபத்துல் மஸீஹ்)

**'இஸ்லாமிய போதனைகளின் தத்துவஞானம்' என்ற தலைப்பில் நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவின் பின்னணி தகவல்கள் மற்றும் அது தொடர்பாக மதிப்பிற்குரிய மவ்லான ஜலாலுத்தீன் ஷம்ஸ் மர்ஹூம் அவர்களின் கருத்துகள் :-**

சுவாமி 'சாது ஷோகன் சந்தர்' என்பவர் 'காலிஸத்' என்ற ஹிந்துக்களின் சமூகத்தின் சீர்திருத்தம் மற்றும் பொது தொண்டிற்காக மூன்று, நான்கு ஆண்டுகள் பணி செய்து வந்தார். எதுவரை மக்கள் ஒன்றுபட மாட்டார்களோ அதுவரை எந்தப் பயனும் கிடைக்காது என அவர் 1892-ஆம் ஆண்டு கருதினார். இறுதியில் அவர் ஒரு (சர்வ) சமய மாநாடு நடத்த வேண்டும் என்று முடிவெடுத்தார். அந்த வகையில் அது போன்ற முதல் மாநாடு அஜ்மீரில் நடைபெற்றது. அதன் பிறகு 1896-ஆம் ஆண்டில் இரண்டாவது மாநாட்டிற்கான உகந்த இடம் 'லாஹூர்' ஆகும் எனக்கருதி அங்கு அந்த மாநாட்டை நடத்துவதற்குரிய ஏற்பாடுகளில் அவர் இறங்கினார்.

அந்த (சர்வ) சமய மாநாட்டின் ஏற்பாடுகளுக்காக சுவாமி அவர்கள் கமிட்டி ஒன்றை அமைத்தார். அதன் தலைவராக, மாஸ்டர் துர்கா பிரசாத் அவர்களையும், செயலாளராக லாஹூர்

தலைமை நீதிமன்ற வழக்கறிஞரான லாலா தன்பத் ராய் B.A., L.L.B., அவர்களையும் நியமனம் செய்தார். 1896-ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 26, 27, 28 ஆகிய தேதிகளில் மாநாடு நடத்தப்பட வேண்டுமெனவும் தீர்மானிக்கப்பட்டது. கீழ்க்காணும் ஆறு நபர்கள் மாநாட்டின் அமைப்பாளர்களாகவும் நியமிக்கப்பட்டனர் :

1) பஞ்சாப் தலைமை நீதிமன்ற நீதிபதி
திரு. ராய் பகதூர் பாபு பர்தோல் சந்த் அவர்கள்,

2) லாஹூர் தலைமை நீதிமன்ற நீதிபதி
திரு. கான் பகதூர் ஷேக் பக்ஷ் சாஹிப்,

3) ஜம்மு நகர முன்னாள் கவர்னர் மற்றும் தலைமை
நீதிமன்ற வழக்கறிஞர் திரு. ராய் பகதூர் பண்டித் ராதா
கிருஷ்ணன் அவர்கள்

4) காஷ்மீர் அரசவை மருத்துவர்
ஹஸ்ரத் மவ்லவி ஹக்கீம் நூருத்தீன் (ரலி) அவர்கள்

5) ஜெஹ்லம் நகரின் குடியிருப்பு அதிகாரி
ராய் பவானி தாஸ் M.A., அவர்கள்

6) லாஹூர் காலிஸா கமிட்டி செயலர்
திரு. சர்தார் ஜவாஹிர் சிங் அவர்கள்.

(ஆதாரம் : லாஹூர் சித்தீக்கி அச்சகத்தில், 1897-ஆம் ஆண்டு அச்சிடப்பட்ட சர்வ சமய மாநாட்டு அறிக்கை பக் : 253-254)

சுவாமி ஷோகன் சந்தர் அவர்கள் கமிட்டி சார்பாக மாநாடு தொடர்பான பிரசுரம் ஒன்றை வெளியிட்டார். அதில் ஒவ்வொரு மார்க்கத்தின் பிரதிநிதிகள் மற்றும் அறிஞர்கள் தத்தமது சமயங்களின் சிறப்புகளையே எடுத்துரைக்க வேண்டும் என முஸ்லிம்கள் கிறிஸ்துவர்கள் மற்றும் ஆரியர்களிடம் அவர் வலியுறுத்தி இருந்தார்.

சான்றோர் நிறைந்த ஒரு பெரும் திரளில் உண்மையான மார்க்கத்தின் சீரும், சிறப்பும் வெளிப்பட்டு அதன் மீதான அன்பை மக்களின் உள்ளத்தில் நிலைபெறச் செய்ய வேண்டும். மேலும், அந்த உண்மையான மார்க்கத்தின் சான்றுகளையும், ஆதாரங்களையும் பொதுமக்கள் நன்றாக புரிந்து கொள்ள வேண்டும். இதுவே லாகூர் நகரில் நடத்தப்படும் சர்வ சமய

மாநாட்டின் நோக்கங்களாகும் என்றும் அவர் அந்த பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தார். இதன் மூலம் ஒவ்வொரு மதத்தைச் சார்ந்த போதகருக்கும் தமது சமயத்தின் உண்மையை பிறரின் உள்ளத்தில் குடிகொள்ளச் செய்ய சந்தர்ப்பம் கிடைத்து விடும். மேலும் மாநாட்டினை செவிமடுப்பவருக்கும் சான்றோர்களின் சபையில் நிகழ்த்தப்பட்ட ஒவ்வொரு சொற்பொழிவையும் மற்ற சொற்பொழிவுடன் ஒப்பீடு செய்து பார்த்து, எங்கு உண்மையின் பிரகாசம் கிடைக்குமோ அதனை ஏற்றுக் கொள்ளும் வாய்ப்பும் கிடைத்து விடும்.

இன்றைய காலத்தில், மார்க்கங்களுக்கிடையேயான சண்டைகளின் காரணமாக உண்மை மார்க்கத்தை அறிந்து கொள்ளும் ஆசையும் உள்ளங்களில் காணப்படுகிறது. எனவே அதற்குரிய சிறந்த வழி இதுவே ஆகும். அதாவது, மார்க்கப் போதனைகள் செய்வதை தனது பணியாகக் கொண்ட அனைத்து சமயத்தின் சான்றோர்கள் ஓரிடத்தில் ஒன்றுகூடி, ஏற்கனவே அறிவிக்கப்பட்ட கேள்விகளுக்குரிய பதில்களாக தத்தமது மார்க்கத்தின் சிறப்புகளை எடுத்துரைக்க வேண்டும். ஆக, அந்த மாபெரும் மார்க்க அறிஞர்களின் சபையில் எந்த மார்க்கம் உண்மையான இறைவன் புறமிருந்து தோன்றிய மார்க்கமாக இருக்குமோ அது தனது தெளிவான ஒளியை வெளிப்படுத்தி விடும். இந்த நோக்கத்திற்காகவே இந்த மாநாட்டிற்கான ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. தத்தமது மார்க்கத்தின் உண்மையை வெளிப்படுத்துவது தமது கடமை என்பதை அனைத்து சமுதாய சான்றோர்களும், போதகர்களும் நன்கறிவர். எனவே உண்மைகள் வெளிப்பட வேண்டுமென்ற இந்த நோக்கத்தோடு மாநாடு நடத்தப்பட்டது. இறைவன் அவர்களுக்கு இந்த நோக்கத்தை நிறைவேற்ற தற்போது சிறந்த வாய்ப்பினை நல்கியுள்ளான். இது ஒருபோதும் மனிதனின் அதிகாரங்களுக்கு உட்பட்டது அல்ல.

அடுத்து சுவாமிஜி அந்த பிரசுரத்தில் கீழ்க்கண்டவாறும் குறிப்பிடுகின்றார் :–

பிறரை கொடிய நோய்க்கு ஆளானவராக ஒருவர் எண்ணுகிறார். ஆனால் அதே நேரத்தில் தனது மருந்தே அவரை

குணப்படுத்தும் என்றும் அவர் நம்புகிறார். மனித இனத்தின் மீது தமக்கு அனுதாபம் இருப்பதாகவும் அவர் வாதிடுகிறார். அவ்வாறிருக்க, ஓர் ஏழை நோயாளி, தம்மை குணப்படுத்தும்படி அந்த நபரை அழைத்தால், அவர் அந்த நோயாளியை வேண்டுமென்றே புறக்கணித்து விடுவார் என்பதை என்னால் ஏற்க முடியாது. எந்த மார்க்கம் உண்மை மற்றும் சத்தியத்தால் நிறைந்து இருக்கின்றது? என்பதை தீர்மானிக்க எனது உள்ளம் துடிக்கின்றது. எனது உள்ளத்தின் உண்மையான உணர்வுகளை எடுத்துரைக்க என்னிடம் வார்த்தைகள் இல்லை.

லாஹூரில் சர்வ சமய மாநாட்டில், கலந்து கொள்வதற்காக சுவாமிஜி அவர்கள் விடுத்த அழைப்பை பல்வேறு மார்க்கங்களின் பிரதிநிதிகளும் ஏற்றுக் கொண்டனர். 1896-ஆண்டு டிசம்பர் மாதம் இறுதியில், விடுமுறை நாட்களில் ஒரு மாபெரும் மாநாடு லாஹூரில் நடைபெற்றது.

அதில், மாநாட்டின் அமைப்பாளர்களால் அறிவிக்கப்பட்ட ஐந்து கேள்விகளுக்கு பதில் கூறும் வகையில், பல்வேறு மதங்களின் பிரதிநிதிகளும் சொற்பொழிவுகள் நிகழ்த்தினர். மாநாட்டு அமைப்புக் குழு அந்த ஐந்து கேள்விக்குரிய பதில்களை அளிப்பதற்கு ஏதுவாக அதனை முன்னரே வெளியிட்டு, நிபந்தனை ஒன்றையும் விதித்திருந்தது. ஒவ்வொரு சொற்பொழிவாளரும் தமது மார்க்கத்தின் புனித நூலாக எதை ஏற்றுக் கொண்டிருப்பாரோ அதிலிருந்தே அந்த ஐந்து கேள்விகளுக்குரிய பதிலை வழங்க வேண்டும் என்பதே அந்த நிபந்தனையாகும்.

**அந்த ஐந்து கேள்விகள் இவையாகும் :-**

**(1) மனிதனின் பௌதீக, நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைகள் யாவை?**

**(2) மனிதனின் மரணத்திற்குப் பிறகு அவனது நிலை என்ன?**

**(3) உலகில் மனித வாழ்வின் உண்மையான நோக்கம் என்ன? அந்த நோக்கத்தை எவ்வாறு அடைய முடியும்?**

(4) செயல்களின் தாக்கம் இம்மையிலும், மறு உலகிலும் எவ்வாறு அமைகின்றது?

(5) இறைஞானத்தை பெறுவதற்குரிய வழிமுறைகள் என்னென்ன?

1896-ஆண்டு டிசம்பர் மாதம் 26-ம் தேதி முதல் 29-ஆம் தேதி வரை நடைபெற்ற அந்த மாநாட்டில் சனாதன் தர்ம், ஆரிய சமாஜம், ஃபிரீ திங்கர், பிரம்ம சமாஜம், தியா சஃபிகல் சமூகம், ரிலிஜன் ஆஃப் ஹார்மனி, கிறிஸ்துவம், இஸ்லாம், சீக்கியம் போன்ற மார்க்கங்களின் பிரதிநிதிகள் சொற்பொழிவு ஆற்றினர். ஆனால் அந்த அனைத்து சொற்பொழிவுகளிலும் ஒரேயொரு சொற்பொழிவு மட்டுமே மேற்கண்ட கேள்விகளுக்குரிய உண்மையான மற்றும் முழுமையான பதிலாக அமைந்திருந்தது. ஹஸ்ரத் மவ்லவி அப்துல் கரீம் சியால் கோட்டி அவர்கள் அந்தக் கட்டுரையை தமது அழகிய குரலில் வாசித்துக் கொண்டிருந்தபோது மாநாட்டில் நிலவிய சூழலை வார்த்தைகளால் வருணிக்க இயலாது. அனைத்து மதங்களை சார்ந்தவர்களும் மெய்மறந்து, வெகுவாக அந்த சொற்பொழிவைப் பாராட்டினர். அப்போது, மாநாட்டில் அமர்ந்திருந்த ஒவ்வொருவரும் தம்மை வேறொரு உலகில் இருப்பதாகவே கருதினர். கட்டுரை வாசிக்கப்பட்ட விதம் மிகவும் சுவாரஸ்யமாகவும், அனைவரின் மனதையும் கவரும் வகையில் இருந்தது. இஸ்லாத்தின் எதிரிகள் கூட அக்கட்டுரையை செவிமடுத்து அருமை, அருமை எனக்கூறினர். இதை விட அக்கட்டுரையின் சிறப்பிற்கு வேறு என்ன ஆதாரம் வேண்டும்?

அக்காலத்தில் மிகவும் புகழ்பெற்ற லாஹூர் 'சிவில் மிலிடரி கெஸட்' என்ற ஆங்கில நாளிதழ் ஒரு கிறிஸ்துவ பத்திரிக்கையாக இருந்தும் அக்கட்டுரையின் உயர்தரத்தை பாராட்டி எழுதியது. மேலும் அதுவே பாராட்டத்தக்கது எனக் கூறியது.

இந்தக் கட்டுரை அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத்தின் ஸ்தாபகர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்களால் எழுதப்பட்டதாகும். அக்கட்டுரை நிர்ணயிக்கப்பட்ட

இரண்டு மணி நேரத்தில் முழுமை பெறாததனால் மாநாடு 29-ஆம் நாளும் நீட்டிக்கப்பட்டது.

'பஞ்சாப் ஆப்ஸர்வர்' என்ற நாளிதழ் இக்கட்டுரையை பாராட்டுவதிலேயே தனது ஏட்டின் பல பத்திகளை நிரப்பியது. பைசா நாளிதழ், சவ்திவீன் சதி, ஸாதிகுல் அக்பார், முஹ்பீர் டக்கன் மற்றும் கல்கத்தாவிலிருந்து வெளிவந்த ஜஸலோ கவ்ஹர் ஆஸஃபி போன்ற அனைத்து பத்திரிகைகளும் இக்கட்டுரையை வெகுவாக பாராட்டின. மாநாட்டில் வாசிக்கப்பட்ட அனைத்து கட்டுரைகளை விடவும், இக்கட்டுரையே தலைசிறந்தது என மாற்று சமூகங்கள் மற்றும் மதங்களைச் சார்ந்த பெரியவர்களும் ஒப்புக் கொண்டனர்.

இந்த சர்வ சமய மாநாட்டின் செயலராகத் திகழ்ந்த திரு தன்பத் ராய் **B.A., L.L.B.,** அவர்கள் 'சர்வ சமய மாநாட்டின் அறிக்கை' என்ற தலைப்பில் எழுதப்பட்ட புத்தகத்தில் அக்கட்டுரையைப் பற்றி இவ்வாறு குறிப்பிடுகிறார் :-

பண்டித் கோர்தன் அவர்களின் சொற்பொழிவு முடிந்து அரை மணிநேர இடைவேளைக்குப் பிறகு இஸ்லாத்தின் புகழ்பெற்ற பிரதிநிதி சார்பாக சொற்பொழிவு நிகழவிருந்தது. எனவே பெரும்பாலான பார்வையாளர்கள் மாநாட்டுத் திடலில் தத்தமது இடத்தை விட்டு அகலவில்லை. பிற்பகல் 1.30 மணி ஆக இன்னும் அதிகமான நேரம் இருந்தது. எனினும் இஸ்லாமிய கல்லூரியின் விசாலமான அரங்கம் விரைவாக மக்களால் நிரம்பத் தொடங்கியது. மேலும் சில நிமிடங்களிலிலேயே முழு அரங்கமும் நிரம்பிப் போனது. அப்போது அங்கிருந்தோரின் எண்ணிக்கை ஏழாயிரத்திலிருந்து, எட்டாயிரம் வரை இருக்கும். பல்வேறு மார்க்கங்கள் மற்றும் சமூகங்களை சார்ந்தவர்களும், அறிஞர்களும் அங்கு குழுமியிருந்தனர். அமர்வதற்கு போதுமான அளவு நாற்காலிகள் மற்றும் விரிப்பிற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. எனினும் அரங்கம் நிறைந்திருந்ததால் நூற்றுக்கணக்கான மக்களுக்கு

நின்று கொண்டிருக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. அவ்வாறு நின்று கொண்டிருந்த பார்வையாளர்களின் வரிசையில், பஞ்சாபின் பல்வேறு தலைவர்கள், அறிஞர்கள், செல்வந்தர்கள், பேரஸ்டர்கள், வழக்கறிஞர்கள், பேராசிரியர்கள் மற்றும் மருத்துவர்களும் அடங்குவர். சுருக்கமாக, பல்வேறு துறைகளைச் சார்ந்த உயர்தகுதி படைத்த மக்களும் அப்போது அங்கு குழுமியிருந்தனர். இவ்வாறு இந்த மக்கள் எல்லாம் ஒன்றுகூடி, மிகவும் பொறுமையுடன் தொடர்ந்து நான்கைந்து மணிநேரம் சொற்பொழிவை நின்று கொண்டே கேட்டதிலிருந்து இந்த நன்மதிப்பிற்குரிய மக்கள், எந்த அளவிற்கு அந்த புனிதமான திட்டத்திற்கு தங்களின் ஆதரவை அளித்தனர் என்பது தெளிவாகின்றது. இந்தக் கட்டுரையை எழுதியவர் மாநாட்டில் கலந்து கொள்ளவில்லை. ஆனால், அன்னார் தமது சிறப்பிற்குரிய சீடர் மவ்லவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி அவர்களை கட்டுரையை வாசிப்பதற்காக அனுப்பி வைத்திருந்தார்கள். அந்தக் கட்டுரையை வாசிப்பதற்கு இரண்டு மணி நேரம் மட்டுமே கமிட்டி சார்பாக கொடுக்கப்பட்டிருந்தது. ஆனால் மாநாட்டில் பங்குகொண்ட பார்வையாளர்களுக்கு கட்டுரையை செவிமடுப்பதில் இருந்த ஆர்வம் மற்றும் விருப்பத்தை கருத்தில் கொண்டு, கட்டுரை முழுவதுமாக வாசித்து முடிக்கப்படும் வரை மாநாட்டினை நீட்டிப்பதற்கு அனுமதி வழங்கப்பட்டது. மாநாட்டுக் குழுவின் இந்த அறிவிப்பு பொதுமக்களின் விருப்பத்தின் பெயரிலேயே செய்யப்பட்டது. ஏனென்றால் கட்டுரை வாசிக்கப்படுவதற்கு ஒதுக்கப்பட்ட நேரம் முடிவடைந்த போது, மவ்லவி அபூ யூசுஃப் முபாரக் அலி சாஹிப் தமது நேரத்தையும் அக்கட்டுரையை முழுமையாக வாசித்துக்காட்டுவதற்காக வழங்கினார். அப்போது அங்கு கூடியிருந்த மக்கள் மிகுந்த ஆரவாரத்துடன், மவ்லவி சாஹிபுக்கு நன்றி கூறினர். மாநாட்டு நிகழ்ச்சிகள் மாலை 4.30 மணிக்கு முடிந்திருக்க வேண்டும். ஆனால் பொது மக்களின் வரவேற்பைக் கண்டு மாநாடு மாலை 5 மணி வரை நீட்டிக்கப்பட்டது. ஏனென்றால் இந்தக் கட்டுரை சுமார் 4 மணி நேரம் வாசித்து முடிக்கப்பட்டது. இந்தக் கட்டுரை ஆரம்பம் முதல் கடைசி வரை ஆர்வத்தையும், வரவேற்பையும் ஒருங்கே பெற்றிருந்தது.

ஆச்சரியத்திற்குரிய விஷயம் என்னவென்றால் மாநாடு துவங்குவதற்கு முன்னர் அஹ்மதிய்யா ஜமாஅத்தின் ஸ்தாபகர் 1892-ம் ஆண்டு டிசம்பர் 21-ஆம் தேதியன்று தனது கட்டுரையின் வெற்றி தொடர்பாக அல்லாஹ்விடம் இருந்து செய்தி பெற்று பிரசுரம் ஒன்றை வெளியிட்டார்கள்.

அதன் நகல் கீழ்கண்டவாறு இணைக்கப்பட்டுள்ளது.

## 'உண்மையை தேடுவோருக்கு ஒரு மகத்தான நற்செய்தி'

1896-ம் ஆண்டு டிசம்பர் 26, 27, 28 ஆகிய தேதிகளில் லாஹூர் டவுண் ஹாலில் சர்வ சமய மாநாடு நடைபெறும். அதில் திருக்குர்ஆனின் சிறப்புகள் மற்றும் அற்புதங்களை பற்றிய இந்த எளியவனின் கட்டுரை ஒன்று வாசிக்கப்படும். இந்தக் கட்டுரை மனித சக்திகளுக்கு அப்பாற்பட்டதும், இறைவனின் அடையாளங்களில் ஓர் அடையாளமும் ஆகும். மேலும் இறைவனின் சிறப்பான உதவியினால் எழுதப்பட்ட கட்டுரையாகும். அதில் திருக்குர்ஆனின் ஞானங்கள் அடங்கியிருக்கின்றன. மேலும் திருக்குர்ஆன் உண்மையில் இறைகூற்று என்பதையும், அகில உலகங்களின் இறைவனின் வேதம் என்பதையும் பட்டப் பகலைப் போன்று வெட்ட வெளிச்சமாக்கும் திருக்குர்ஆனின் ஞானங்கள் அதில் அடங்கியிருக்கின்றன. எந்த நபர் இக்கட்டுரையின் துவக்கம் முதல் கடைசி வரை ஐந்து வினாக்களுக்கான பதிலையும் செவியேற்பாரோ, அவரிடத்தில் ஓர் உண்மையான ஈமான் உருவாகும் என நான் நம்புகிறேன். ஒரு புதிய ஒளி அவரிடத்தில் வீசத் துவங்கும். மேலும் இறைவனின் பரிசுத்த வேதத்தின் சுருக்கமான விரிவுரை அவரது கரங்களில் வந்து விடும். எனது சொற்பொழிவு மனித உளறல்களிலிருந்து முற்றிலும் தூய்மையானதாகும். மனித இனத்தின் மீதான அனுதாபமே என்னை தற்போது இந்தப் பிரசுரத்தை எழுதும்படி கட்டாயப்படுத்தியது. இதன்மூலம் மனித இனம் திருக்குர்ஆனின் அழகையும், சிறப்பையும் கண்டுகொள்ள வேண்டும் என நான் விரும்புகிறேன். மேலும் எமது எதிரிகள் இருளை நேசித்தும்,

ஒளியை வெறுத்தும் எவ்வளவு அநீதியிழைக்கின்றனர் என்பதையும் பொதுமக்கள் அறிந்து கொள்ள வேண்டும். இந்தக் கட்டுரை எல்லாவற்றின் மீதும் மேன்மை பெறும். அதில் உண்மை, நுட்பமான ஞானம் மற்றும் இறைஞானத்தின் ஒளி உள்ளது. நிபந்தனை என்னவென்றால் அவர்கள் அதனை செவி ஏற்க வேண்டும். இக்கட்டுரையை துவக்கம் முதல் கடைசிவரை (எதிரிகள்) செவியுற்றால் அவர்கள் வெட்கத்திற்குள்ளாகி விடுவர்.

அவர்கள் கிறிஸ்த்துவர்களாக இருந்தாலும், சனாதன் மார்க்கத்தைச் சார்ந்தவர்களாகவும் அல்லது வேறெவராக இருந்தாலும் சரியே! ஏனெனில் தனது பரிசுத்த வேதத்தின் மகத்துவம் அந்நாளில் வெளிப்பட வேண்டுமென இறைவன் நாடிவிட்டான்.

அது தொடர்பாக, நான் ஆன்மீகக் காட்சியில் இவ்வாறு கண்டேன்.

எனது வீட்டினை மறைமுகமான கரம் ஒன்று தொட்டது. அந்தக் கரம் தொட்டவுடன் ஒரு பிரகாசமான ஒளி வெளிப்பட்டது. அது அக்கம்பக்கத்தில் பரவியது. மேலும் எனது கரங்களிலும் அதன் பிரகாசம் பட்டது. அப்போது எனக்கு அருகில் நின்று கொண்டிருந்த நபர் ஒருவர் அல்லாஹு அக்பர், கரிபத் கய்பர்–என்று உரத்த குரலில் கூறினார். இதன் விளக்கம் இதுவாகும்.

அந்த வீடு என்பது எனது உள்ளமாகும். அது பிரகாசமான ஒளி இறங்குவதற்குரிய தளமாகும். மேலும் ஒளி என்பது திருக்குர்ஆன் ஞானங்களாகும். கய்பர் என்பதன் பொருள் இணைவைத்தலும், சடங்குச் சம்பிரதாயங்களும் கலந்துவிட்ட சீர்கெட்டுப்போன அனைத்து மார்க்கங்களும் ஆகும். அவை மனிதனுக்கு இறை அந்தஸ்தை கொடுத்து விட்டன. அல்லது இறைபண்புகளுக்கு அதன் எல்லா நிலைகளிலும் களங்கம் கற்பித்த மார்க்கங்கள் ஆகும்.

இந்தக் கட்டுரை மிகவும் பரவிவிட்ட பின்னர் பொய் மார்க்கங்களின் பொய் வெளிப்படும். மேலும் திருக்குர்ஆனின் உண்மை தனது எல்லையை அடையும்வரை அனுதினமும் பூமியில் பரவிக்கொண்டே செல்லும் என்று எனக்கு கூறப்பட்டுள்ளது. அடுத்து ஆன்மீகக் காட்சியை நான் கண்டபிறகு எனக்கு இந்த இறையறிவிப்பு இறங்கியது.

இன்னல்லாஹ மஅக இன்னல்லாஹ யகூமு அய்னமாகுன்து.

அதாவது இறைவன் உம்முடன் இருக்கின்றான். நீர் நிற்குமிடத்தில் இறைவன் நிற்கின்றான். இது இறையுதவிக்கான ஓர் உவமையாகும். இனி நான் அதிகம் எழுத விரும்பவில்லை. அனைவருக்கும் நான் கூறுவது என்னவென்றால், நீங்கள் ஒவ்வொருவரும் சிரமப்பட்டாவது இந்த இறைஞானத்தை செவிமடுக்க மாநாட்டிற்குரிய தேதிகளில் கண்டிப்பாக லாஹூர் வருகை தாருங்கள். நீங்கள் எதிர்பார்த்திராத அளவில் அதன் மூலம் உங்களின் அறிவிற்கும், நம்பிக்கைக்கும் இந்தக் கட்டுரை பயனளிக்கும்.

வஸ்ஸலாமு அலா மனித்தபஅல் ஹுதா

எளியவன்,
மிர்ஸா குலாம் அஹ்மது
காதியான்.
21, டிசம்பர் 1896.

சிவில் அன்ட் மிலிடரி கெஸட் (லாஹூர்) பத்திரிகை இவ்வாறு எழுதியது :-

இந்த மாநாட்டில் கலந்து கொண்டவர்கள், இஸ்லாத்தின் உதவி மற்றும் பாதுகாப்பில் முழுமையான நிபுணரான மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் காதியானி அவர்களின் கட்டுரையை மிகவும் விரும்பினார்கள். அந்தக் கட்டுரையை செவிமடுக்க அருகிலிருந்தும், தொலைவிலிருந்தும் பல தரப்பட்ட கூட்டத்தினர் அலை கடலென திரண்டிருந்தனர். மிர்ஸா சாஹிப் அவர்கள் கலந்து கொள்ள இயலாத காரணத்தால் அன்னாரின் அந்தக் கட்டுரையை மிர்ஸா சாஹிபின் தகுதிவாய்ந்த சீடர் முன்ஷீ அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி அவர்கள் வாசித்துக் காட்டினார்கள். 27-ஆம் தேதியன்று மூன்று மணி நேரம் வரை கட்டுரை வாசித்து காட்டப்பட்டது. பொதுமக்கள் மிக மகிழ்ச்சியுடனும், கவனத்துடனும் கேட்டனர். ஆயினும் ஒரு கேள்வி மட்டுமே முடிந்திருந்தது. நேரம் கிடைத்தால் எஞ்சிய பகுதியையும் நான் வாசித்து விடுவேன் என மௌலவி அப்துல் கரீம் சாஹிப் வாக்குறுதி வழங்கினார்கள். அதன் காரணமாக

மாநாட்டு அமைப்பாளர்களின் குழுவும், அதன் தலைவரும் டிசம்பர் 29-ஆம் தேதி வரை மாநாட்டை நீட்டிக்க வேண்டும் என்ற ஆலோசனைக்கு ஒப்புதல் நல்கினார்கள்.

**'சௌத்வீன் சதி' என்ற செய்தித்தாள் ஹஸ்ரத் வாக்களிக்கப்பட்ட மஸீஹ் (அலை) அவர்களின் சொற்பொழிவைப்பற்றி கீழ்க்கண்ட செய்தியை வெளியிட்டது:-**

மற்ற சொற்பொழிவுகள் அனைத்தையும் விட ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி அவர்களின் சொற்பொழிவே சிறந்த சொற்பொழிவாகவும், மாநாட்டின் உயிரோட்டமாகவும் இருந்தது. அதனை பிரபலமான தெளிவான பேச்சாளர் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் சியால்கோட்டி மிகவும் சிறப்பாகவும், அழகிய முறையிலும் வாசித்து காட்டினார்கள். இரண்டு நாட்களில் அந்த சொற்பொழிவு நிறைவடைந்தது. டிசம்பர் 27-ஆம் தேதி சுமார் நான்கு மணி நேரமும், டிசம்பர் 29-ஆம் தேதி இரண்டு மணி நேரமும் சொற்பொழிவு நிகழ்த்தப்பட்டது. மொத்தம் ஆறு மணி நேரத்தில் இந்த சொற்பொழிவு நிறைவடைந்தது. அது 100 பக்கங்கள் கொண்டதாக இருக்கும். சுருக்கம் என்னவென்றால் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் இந்த சொற்பொழிவை ஒட்டுமொத்த பார்வையாளர்களும் மெய் மறந்துவிடும்படி நிகழ்த்தினார்கள். ஒவ்வொரு வாக்கியங்களின் போதும் பாராட்டு குரல்கள் ஒலித்தன. சிலமுறை ஒவ்வொரு வாக்கியத்தையும் மீண்டும் வாசிக்கும்படி பார்வையாளர்கள் கேட்டுக் கொண்டனர். வாழ்நாள் முழுவதிலும் அது போன்ற அழகிய சொற்பொழிவை நாங்கள் செவியேற்கவில்லை என்று அவர்கள் கருத்து தெரிவித்தனர்.

மற்ற மார்க்கத்தின் சார்பாக நிகழ்த்தப்பட்ட சொற்பொழிவுகளைப் பொருத்தவரை அவை மாநாட்டில் முன்வைக்கப்பட்ட கேள்விகளுக்கு பதிலாக அமையவில்லை. பொதுவாக பேச்சாளர்கள் நான்காவது கேள்வியிலேயே நின்று கொண்டிருந்தனர். மற்ற கேள்விகளுக்கு மிகவும் குறைவாகவே அவர்கள் பதிலளித்தனர். பெரும்பாலான நபர்கள் மிக அதிகமாக பேசினர். ஆயினும் அதில் உயிரோட்டம் இருக்கவில்லை. மிர்ஸா சாஹிபின் சொற்பொழிவில் மட்டுமே அந்த கேள்விகளுக்கு

தனித்தனியாகவும் விரிவாகவும் பதில் இருந்தது. அதனை மாநாட்டுப் பார்வையாளர்கள் மிக கவனத்துடனும் ஆர்வத்துடனும் கேட்டனர். மேலும் மிகவும் விலைமதிப்புள்ளதாகவும், மிக உயர்தரமானதாகவும் அதனைக் கருதினர்.

நாங்கள் மிர்ஸா சாஹிபின் சீடர்கள் அல்லர்; மேலும் அன்னாருடன் எங்களுக்கு எந்தத் தொடர்பும் கிடையாது. ஆயினும் எங்களால் ஒருபோதும் நீதியை சாகடிக்க முடியாது. மேலும் தூய இயல்புடைய, சரியான பகுத்தறிவு கொண்ட எவரும் அதனை புறக்கணிக்க முடியாது. மிர்ஸா சாஹிப் அவர்கள் அனைத்து கேள்விகளுக்கும் (உகந்த முறையில்) திருக்குர்ஆனிலிருந்தே பதில்களை வழங்கினார்கள். அனைத்து பெரும் பெரும் விதிகளை, இஸ்லாத்தின் கிளைகளை அறிவுப் பூர்வமான ஆதாரங்கள் மற்றும் சான்றுப் பூர்வமான தத்துவத்துடன் அழகுபடுத்தினார்கள். முதலில் அறிவுப் பூர்வமான சான்றுகளுடன் இறைகாரியங்களை நிரூபணம் செய்வதும் அதன்பிறகு அதற்கு சான்றாக இறைகூற்றை மேற்கோள் காட்டுவதும் ஒரு தனித்துவ அழகு வாய்ந்ததாக இருந்தது.

மிர்ஸா சாஹிப் திருக்குர்ஆன் கூறும் விஷயங்களின் தத்துவங்களை மட்டும் எடுத்துரைக்கவில்லை. மாறாக திருக்குர்ஆன் சொற்களின் தத்துவங்களையும் அத்துடன் எடுத்துரைத்துள்ளார்கள்.

சுருக்கம் என்னவென்றால், மிர்ஸா சாஹிபின் சொற்பொழிவு ஒட்டுமொத்தத்தில் ஒரு முழுமையான மற்றும் மேன்மையான கட்டுரையாக இருந்தது. அதில் எண்ணற்ற இறைஞானங்கள், மற்றும் இரகசியங்களின் முத்துக்கள் ஒளிவீசின. இறை தத்துவம் அனைத்து மார்க்கத்தினரும் வாயடைக்கும் வகையில் எடுத்துரைக்கப்பட்டது. மற்ற நபர்களின் சொற்பொழிவின்போது இந்த அளவிற்கு கூட்டமில்லை. மிர்ஸா சாஹிபின் கட்டுரையின்போது அரங்கம் மேலும், கீழும் முழுமையாக நிறைந்திருந்தது. பார்வையாளர்கள் எப்போதும் மிக கவனத்துடன் சொற்பொழிவைக் கேட்டுக் கொண்டிருந்தனர். மிர்ஸா சாஹிபின் சொற்பொழிவு மற்ற பேச்சாளர்களின்

சொற்பொழிவிற்கிடையில் உள்ள தனித்துவத்தை கூறுவதற்கு இது ஒன்றே போதுமானதாகும். அதாவது மிர்ஸா சாஹிப் கட்டுரை வாசிக்கப்பட்ட போது தேனை தேனீக்கள் மொய்த்துக் கொள்வது போல் கூட்டம் அலை மோதியது. ஆனால் மற்ற பேச்சாளர்களின் சொற்பொழிவின்போது ரசனையில்லாத காரணத்தால் அமர்ந்திருந்த மக்கள் கூட எழுந்து சென்றனர். மௌலவி முஹம்மது ஹுஸைன் பட்டாலவியின் சொற்பொழிவு மிகவும் சாதாரணமானதாக இருந்தது. தினமும் நாம் கேட்டு வந்த முல்லாயிய சிந்தனைகளே அவரின் சொற்பொழிவில் இருந்தன. அதில் ஒன்றும் புத்தம் புதிய விஷயம் எதுவும் இடம் பெறவில்லை. அந்த மௌலவி சாஹிபின் இரண்டாவது சொற்பொழிவின்போது பலர் எழுந்து சென்று விட்டனர். மௌலவி சாஹிபின் சொற்பொழிவை முழுமை செய்வதற்கு கூடுதலாக ஐந்து நிமிடம் கூட கொடுக்கப்படவில்லை. **(சௌத்வீன் சதி - பத்திரிக்கை ராவல்பிண்டி 1891-ஆம் ஆண்டு, பிப்ரவரி-1)**

“ஜெனரல் மற்றும் கவாஹிர் ஆஸ்ஃபி” என்ற பத்திரிக்கை – கல்கத்தா 1897–ஆண்டு ஜனவரி 24–ஆம் தேதி வெளியீட்டில், “லாஹுரில் நடைபெற்ற மாபெரும் மாநாடு” மற்றும் இஸ்லாத்தின் வெற்றி என்ற இரண்டு தலைப்பில் இவ்வாறு எழுதியது :–

மாநாட்டு நிகழ்ச்சிகளை பற்றி பேசுவதற்கு முன் இதனை கூறுவது அவசியமாகும். அதாவது இந்த மாபெரும் மார்க்க மாநாட்டில் இஸ்லாத்தின் சார்பாக வாதிட அனைவரையும் விட மிக தகுதியான நபர் யார்? என்ற விவாதம் நமது பத்திரிக்கையின் கட்டுரையில் ஏற்கனவே நடந்துள்ளது! நம்முடைய மிகவும் கண்ணியத்திற்குரிய வாசகர் ஒருவர் முதன் முதலில் திறந்த மனதுடன், உண்மையை கருத்தில் கொண்டவாறு, காதியான் தலைவராகிய, ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களை தனது கருத்தின்படி தேர்ந்தெடுத்தார். அவருடன் நம்முடைய மற்றுமொரு கண்ணியத்திற்குரிய நண்பர் ஒருவர் தனது கடிதத்தின் வாயிலாக அதே கருத்தை வெளிப்படுத்தியிருந்தார். மதிப்பிற்குரிய மௌலவி சய்யிது முஹம்மது ஃபக்ருத்தீன் சாஹிப் ஃபக்ர் அவர்கள் மாபெரும் அழுத்தத்துடன் அந்த தேர்வு தொடர்பாக தனது சுதந்திரமான, சான்றுப் பூர்வமான மற்றும் விலை மதிக்க முடியாத தனது

கருத்தை பகிரங்கமாக வெளிப்படுத்தியிருந்தார். அதில் காதியான் தலைவர் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களையும், அலிகடைச் சார்ந்த சர் சய்யிது அஹ்மது சாஹிப் அவர்களையும் அவர் தேர்ந்தெடுத்திருந்தார். அத்துடன் இஸ்லாத்தின் சார்பாக வாதிடுவதற்கு கீழ்கண்ட பெரியோர்களின் பெயர்களும் வந்தன. ஜனாப் மௌலவி அபூ ஸயீத் முஹம்மது ஹுஸைன் பட்டாலவி சாஹிப், ஜனாப் மௌலவி ஹாஜி சய்யிது முஹம்மத் அலி சாஹிப் கான்பூரி, மௌலவி அஹ்மது ஹுஸைன் சாஹிப் அஸீம் ஆபாதி ஆகியோர் ஆவர். நம்முடைய உள்ளூர் பத்திரிகையின் நிருபர் ஒருவர் ஜனாப் மௌலவி அப்துல் ஹக் சாஹிப் தெஹ்லவி அவர்களை இந்த பணியின் நிமித்தம் தேர்ந்தெடுத்தார்.

இதன்பிறகு சுவாமி ஷோகன் சந்தரின் பிரசுரங்களிலிருந்து, இந்தியாவின் பல்வேறு மார்க்கங்களைச் சார்ந்த மார்க்க அறிஞர்களை மிகவும் உணர்வூட்டி தத்தமது மார்க்கத்தின் சிறப்புகளை வெளிப்படுத்தும்படி கேட்டுக் கொண்ட அந்த பகுதியையும் இப்பத்திரிகை வெளியிட்டது. அது தொடர்பாக பத்திரிகை இவ்வாறு எழுதுகிறது :

இந்த மாநாட்டின் பிரசுரங்கள் போன்றவற்றை பார்ப்பதற்கும், பெண்களை கொண்டு வந்து சேர்ப்பதற்கும், எந்தெந்த இந்திய அறிஞர்களின் தன்மான உணர்வு புனித மார்க்கமான இஸ்லாத்தை பிரதிநிதித்துவப்படுத்த வெளிப்பட்டது? மேலும் அவர்கள் இஸ்லாத்திற்கு உதவி செய்யும் நோக்கத்தை சுமந்தவாறு தெளிவான என சான்றுகள் மூலம் திருக்குர்ஆனின் திகில் எனும் நாணயத்தை மற்ற மார்க்கத்தினரின் உள்ளத்தில் நிலைநாட்ட எந்த அளவு முயன்றனர் என்பதும் தெளிவாகி விட்டது.

மாநாட்டு ஏற்பாட்டாளர்கள் ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது சாஹிப் அவர்களுக்கும், சர் சய்யிது அஹ்மது சாஹிப் அவர்களுக்கும் மாநாட்டில் கலந்து கொள்வதற்கு கடிதம் எழுதினர் என்று நமக்கு நம்பத் தகுந்த வட்டாரங்கள் மூலம் தெரிய வந்துள்ளது.

ஹஸ்ரத் மிர்ஸா சாஹிப் அவர்களோ உடல்நிலை பாதிப்பால் மாநாட்டில் நேரடியாக பங்கேற்கவில்லை. ஆயினும்

தனது கட்டுரையை அனுப்பி வைத்து, தனது சிறப்பான சீடராகிய ஜனாப் மௌலவி அப்துல் கரீம் சாஹிப் அவர்களை அதனை வாசிப்பதற்கு நியமனம் செய்தார்கள்.

ஆனால் ஜனாப் சர் சய்யிது அவர்களோ மாநாட்டில் பங்கு பெறுவதிலிருந்தும் கட்டுரையை அனுப்பி வாசிக்கச் செய்வதிலிருந்தும் பின்வாங்கிக் கொண்டார்கள். அதற்கு காரணம் அன்னார் அதிகாரியாக இருந்தார்கள். அதன் காரணமாக அன்னாரால் மாநாட்டில் கலந்து கொள்ள இயலாதவராக இருந்தார்கள் என்பதல்ல. அல்லது அதே நாட்களில் கல்வி மாநாடு மீரட்டில் நடத்த முடிவாகியிருந்தது என்பதும் காரணம் அல்ல. ஏனென்றால் அன்னார் தனது கடிதத்தில் தெளிவாக எழுதி விட்டார்கள். அதனை நாம் இன்ஷா அல்லாஹ் நமது பத்திரிகையில் வேறொரு சந்தர்ப்பத்தில் வெளியிடுவோம். நான் ஒன்றும் போதகரோ மௌலவியோ அல்ல. இந்தப் பணி என்பது போதகர்களின் பணியாகும் என்று அவர் பதில் எழுதியிருந்தார்.

மாநாட்டின் நிகழ்ச்சிகளை பார்க்கும் போதும், மேலும் ஆய்வு செய்ததன் மூலமும் மௌலவி சய்யிது முஹம்மது அலி சாஹிப் கான்பூரியும், ஜனாப் மௌலவி அப்துல் ஹக் சாஹிப் தஹ்லவியும், ஜனாப் மௌலவி அஹ்மத் ஹுஸைன் சாஹிப் அஸீம் ஆபாதியும் இந்த மாநாட்டின் பக்கம் உணர்வுப் பூர்வமான எந்த கவனமும் செலுத்தவில்லை என்பது தெரிய வந்துள்ளது. அல்லது நமது தூய ஆலிம்களின் வட்டத்தில் வேறெந்த தகுதி வாய்ந்த நபரும் தனது கட்டுரையை வாசிப்பதற்கோ அல்லது வாசிக்கச் செய்வதற்கோ எந்த உறுதியும் கொள்ளவில்லை. ஆயினும் இரண்டு ஆலிம்மார்கள் மிக தைரியத்துடன் நாங்கள் இருக்கின்றோம் என்று கூறி அடியெடுத்து வைத்தனர். ஆயினும் அவர்கள் ஒன்று குறிப்பிட்ட கட்டுரையைப் பற்றி எதையும் பேசவில்லை. அல்லது சம்பந்தமில்லாமல் எதையோ உளறினார்கள் என்பது நமது அடுத்துவரும் அறிக்கையில் தெளிவாகும்.

சுருக்கமாக, காதியானின் தலைவரான ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது அவர்களே, இந்த மைதானத்தில் இஸ்லாமிய வீரருக்கான முழு உரிமையையும் செலுத்தினார்கள் என்பது

மாநாட்டின் நடவடிக்கையில் இருந்து நிரூபணமாகிறது. பெஷாவர், ராவல்பிண்டி, ஜெஹ்லம், ஷாஹ்பூர், பேரா, கூஷாப், சியால்கோட், ஜம்மு, வஸீராபாத், லாஹூர், அமிர்தசரஸ், குர்தாஸ்பூர், லூதியானா, ஷிம்லா, டில்லி, அன்பாலா, பட்டியாலா டெஹ்ராதூன், ஆலோ ஆபாத், மதராஸ், பம்பை, ஹைதராபாத், பெங்களூர் போன்ற இந்தியாவின் பல்வேறு நகரங்களின் இஸ்லாமிய அமைப்புகள் சார்பாக கையெழுத்துடன் கூடிய கடிதத்தை அனுப்பின. அதில் இஸ்லாத்தின் வழக்குரைஞராக தேர்ந்தெடுக்க வேண்டுமென கூறப்பட்டது. அந்த தேர்வை மிர்ஸா சாஹிப் சரியென நிரூபணம் செய்து காட்டினார்கள். ஒருவேளை இந்த மாநாட்டில் ஹஸ்ரத் சாஹிபின் கட்டுரை இடம் பெறாமல் இருந்திருந்தால், இஸ்லாமியர்களுக்கு மற்ற மார்க்கத்தினரின் முன்னிலையில் இழிவும், வெட்கக்கேடும் ஏற்பட்டிருக்கும் என்பது உண்மை என தெளிவாகின்றது. ஆனால் இறைவனின் வலிமை மிக்க கரம் புனித இஸ்லாத்தினை வீழ்வதிலிருந்து பாதுகாத்து விட்டது. இன்னும் சொல்லப்போனால் இக்கட்டுரையின் மூலம் ஒருமித்த கருத்து கொண்டவர்களும், மாற்றுக் கருத்து கொண்ட எதிரிகளும் கூட தமது இயல்பான உணர்வினால் இந்தக் கட்டுரையே மேன்மை மிக்கதாக இருந்தது எனக் கூறும் அளவிற்கு இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்தது. இன்னும் சொல்லப்போனால் எதிரிகளின் வாயிலிருந்து உண்மையான கூற்று இவ்வாறு வெளிப்பட்டது :

இப்போது இஸ்லாத்தின் உண்மை வெளிப்பட்டு விட்டது. மேலும், தேர்வு செய்யப்பட்ட அம்பு சரியாக இலக்கை பட்டப் பகலில் தெளிவாக தாக்கியது போன்று இஸ்லாத்திற்கு வெற்றி கிடைத்துள்ளது. தற்போது அதன் எதிர்ப்பில் பெருமூச்சுவிடுவதை தவிர்த்து எதிரிகளுக்கு வேறெந்த வழியும் எஞ்சியிருக்கவில்லை. இன்னும் சொல்லப்போனால் அது நாம் பெருமிதம் கொள்வதற்கான காரணியாகும். ஏனெனில் அதில் இஸ்லாத்தின் மகிமை உள்ளது. மேலும் அதிலேயே இஸ்லாத்தின் மகத்துவம் உள்ளது என்பதே உண்மையாகும்.

இது இந்தியாவில் நடைபெறும் இரண்டாவது சர்வ சமய மாநாடு என்ற போதிலும் அது தனது சிறப்பு, மகிமை மற்றும் மகத்துவம் என்ற ரீதியில் முழு இந்திய காங்கிரஸ் மற்றும் இதர

அமைப்புகளின் கூட்டங்களை பின்னுக்குத் தள்ளிவிட்டது. இந்தியாவின் பல்வேறு நகரங்களைச் சார்ந்த தலைவர்கள் அதில் கலந்து கொண்டனர். நமது மதராஸ் நகரமும் கூட அதில் பங்கு பெற்றது என்பதை நாம் மிக மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறோம். மாநாட்டின் மீதான ஆர்வம் எந்தளவிற்கு அதிகமானதென்றால் முன்னறிவிக்கப்பட்ட மூன்று நாட்களிலிருந்து மேலும் ஒரு நாள் மாநாட்டை நீட்டிக்க நேரிட்டது. லாஹூரில் மிகப்பெரிய இடமான இஸ்லாமிய கல்லூரியில் மாநாட்டை நடத்துவதற்கு கமிட்டி உறுப்பினர்கள் ஆலோசனை வழங்கினார்கள். ஆனால் இறை மக்களின் கூட்டம் எந்த அளவுக்கு இருந்ததென்றால் அந்த இடமும் போதுமானதாக இருக்கவில்லை. பஞ்சாபின் முக்கியஸ்தர்கள் மட்டுமல்லாமல், Cheif Court மற்றும் உயர்நீதிமன்றத்தின் கண்ணியத்திற்குரிய நீதிபதி பாபு பர்தோல் சந்தர் அவர்களும், திரு பேனர்ஜி அவர்களும் மிக மகிழ்ச்சியுடன் மாநாட்டில் கலந்து கொண்டது மாநாட்டின் மகத்துவத்திற்கு போதுமான சான்றாகும்.

முதலில் இந்தக் கட்டுரை முழுவதும் லாஹூர் சர்வ சமய மாநாட்டு அறிக்கையில் வெளியானது. இஸ்லாமி உசூல் கீ ஃபிலாஸஃபி என்ற பெயரில் புத்தக வடிவில் உருதுவிலும், ஆங்கிலத்திலும் அஹ்மதிய்யா முஸ்லிம் ஜமாஅத் சார்பாக வெளியிடப்பட்டுள்ளது. அது மட்டுமில்லாமல் அதன் மொழியாக்கம் ஃபிரன்ச், டச், ஸ்பெயின், அரபி, ஜெர்மன் ஆகிய மொழிகளிலும் வெளியாகியுள்ளது. அதைப் பற்றி பெரும் பெரும் தத்துவ ஞானிகளும், வெளிநாட்டு செய்தித்தாள்கள் மற்றும் பத்திரிகைகளின் ஆசிரியர்களும் கட்டுரையைப் பற்றி சிறப்பான விமர்சனங்களை எழுதினர்.

மேற்கத்திய சிந்தனையாளர்கள் இக்கட்டுரையை வெகுவாக பாராட்டினார்கள். உதாரணமாக,

பிரிஸ்டல் டைம்ஸ் அன்ட் மிரர் இவ்வாறு எழுதியது :-

நிச்சயமாக, இந்த வகையில் ஐரோப்பாவையும், அமெரிக்காவையும் எதிர்நோக்கும் இவர் [ஹஸ்ரத் மிர்ஸா குலாம் அஹ்மது (அலை)] சாதாரண நபராக இருக்க முடியாது.

Spiritual Gernal - Bostan இவ்வாறு எழுதியது :-

இந்தப் புத்தகம் மனித இனத்திற்கு ஒரு முழுமையான நற்செய்தி ஆகும்.

தியோ சோஃபிகல் புக் நோட்ஸ் இவ்வாறு குறிப்பிட்டது :-

இந்தப் புத்தகம் முஹம்மத் (ஸல்) அவர்களின் மார்க்கத்தின் சிறந்த மற்றும் மிகவும் மனம் கவர் சித்திரம் ஆகும்.

இன்டியன் ரிவியூவ் இவ்வாறு குறிப்பிட்டது :-

இந்தப் புத்தகம் ஒளிமயமான எண்ணங்களாலும் நுட்பமான ஞானத்தாலும் நிறைந்துள்ளது. வாசிப்பவர்களின் நாவிலிருந்து தன்னையுமறியாமல் பாராட்டுகள் வெளிப்படுகின்றன.

இந்தப் புத்தகத்தை படிக்கக்கூடியவர் ஆன்மாவை மகிழ்விக்கும் உண்மையான மற்றும் ஆழமான எண்ணங்களை இதில் அதிகம் காண்பார்.

( ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மத் (ரலி) நூலாசிரியர் – அஹ்மதிய்யா அமைப்பு )

இந்த கட்டுரையின் சிறப்பு என்னவென்றால் இதில் ஏனைய மார்க்கத்தின் மீது தாக்குதல் செய்யப்படவில்லை. மாறாக இஸ்லாத்தின் சிறப்பு மட்டுமே எடுத்துரைக்கப்பட்டுள்ளது. மேலும் கேள்விகளுக்கான பதில்கள் திருக்குர்ஆனிலிருந்தே வழங்கப்பட்டுள்ளன. மேலும் இஸ்லாம் மற்றெல்லா மார்க்கங்களை விட முழுமையானதும், அழகு வாய்ந்ததும் நிறைவானதும் ஆகும் என்பதை நிரூபிக்கும் வகையில் அந்த பதில்கள் கொடுக்கப்பட்டுள்ளன.

* * * * *

# இஸ்லாம்

## வாதம் மற்றும் ஆதாரம் இறைவேதத்தின் அடிப்படையில் அமைவது அவசியமாகும்.

இன்றைய இந்த அருளுக்குரிய மாநாட்டில் அழைக்கப்பட்டுள்ள ஒவ்வொரு சகோதரரும் விளம்பரப்படுத்தப்பட்டுள்ள கேள்விகளின் அடிப்படையில் தத்தமது மதங்களின் சிறப்புகளை எடுத்துரைக்க வேண்டும். நான் இஸ்லாத்தின் சிறப்புகளை எடுத்துரைப்பேன்.

இறைவனின் பரிசுத்த வேதம் திருக்குர்ஆனிலிருந்தே வாதங்களை எடுத்துரைக்க வேண்டும் என்பதை நான் என் மீது கடமையாக்கியுள்ளேன். எனது கட்டுரையை துவங்குவதற்கு முன் இதனை தெளிவுபடுத்துவது உகந்தது என நான் கருதுகிறேன். ஏனென்றால், ஒரு வேதத்திற்குக் கட்டுப்படுகின்ற அந்த வேதத்தை இறை வேதமாகக் கருதுகின்ற ஒவ்வொருவரும் ஒவ்வொரு விஷயத்திலும் அதே வேதத்தை சான்றாக எடுத்துத் தர வேண்டும் என்பதும் புதிதாக ஒரு வேதத்தை உருவாக்கும் அளவுக்கு எவரும் தமது வாதத்திற்கான அதிகாரங்களை விரிவாக்கி விடக்கூடாது என்பதும் என்னை பொருத்தவரை மிக அவசியமானதாகும்.

இன்று திருக்குர்ஆனின் சிறப்புகளை நிரூபித்துக் காட்டுவதும், அதன் மேன்மைகளை வெளிப்படுத்தி காட்டுவதும் எமது பணியாகும். எனவே நாம் எந்தவொரு விஷயத்திலும் திருக்குர்ஆனின் கூற்றிலிருந்து வெளியே சென்றுவிடாமல் இருப்பது பொருத்தமானதாகும். மேலும் பார்வையாளர்களுக்கு கட்டுரையை ஒப்பிட்டுப் பார்ப்பதற்கும், பிரித்தறிந்து கொள்வதற்கும் எளிதாக இருப்பதற்காக நாம் திருக்குர்ஆனின் சைகை அல்லது விளக்கங்களுக்கு ஏற்ப அதன் வசனங்களின் அடிப்படையிலேயே ஒவ்வொரு கேள்விக்குரிய பதிலையும் எடுத்துரைப்போம். இறைவேதத்தை பின்பற்றுகின்ற ஒவ்வொருவரும் தத்தமது இறை வேதத்தின் கூற்றுகளையே எடுத்துரைப்பதற்கு கட்டுப்பட்டவர்களாக இருப்பார்கள்: அந்த

அந்த வேதத்தின் கூற்றுகளையே எடுத்துரைப்பார்கள். எனவே நாம் இங்கு ஹதீஸ் (நபிமொழி)களின் கூற்றுகளை எடுத்துரைக்கவில்லை. ஏனெனில் எல்லா நம்பத்தகுந்த நபிமொழிகளும் திருக்குர்ஆனிலிருந்து எடுக்கப்பட்டுள்ளன. மேலும் திருக்குர்ஆன் எப்படிப்பட்ட முழுமையான இறைவேதம் என்றால் அதன் மூலமாக மற்ற இறைவேதங்கள் முற்றுப் பெறுகின்றன. சுருக்கமாக இன்று திருக்குர்ஆனின் மகத்துவம் வெளிப்படும் நாளாகும். இந்த பணியில் இறைவன் எமது உதவியாளனாக இருக்க வேண்டும் என நாம் இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்கிறோம். ஆமீன்.

# முதல் கேள்விக்குரிய பதில்

## மனிதனின் பௌதீக, நல்லொழுக்க ஆன்மீக நிலைகள்

கண்ணியத்திற்குரிய பார்வையாளர்களே! இந்த கட்டுரையின் (ஆரம்பப்) பக்கங்களில் சில அறிமுக கூற்றுகள் இருக்கின்றன. அவை வெளிப்படையில் கட்டுரைக்கு சம்பந்தமில்லாதவையாக தோன்றலாம். ஆனால் சரியான பதில்களை புரிந்து கொள்வதற்கு முதலில் அவற்றைப் புரிந்து கொள்வது மிகவும் அவசியமானவையாகும். எனவே சரியான பதில்களை புரிந்து கொள்வதில் சிக்கல் எழாமல் இருப்பதற்காக கட்டுரையை தொடங்குவதற்கு முன் மேற்கண்ட கூற்றுகள் தெளிவுபடுத்தும் வகையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

## மனிதனின் மூன்று நிலைகளின் வகைகள்

முதல் கேள்வி, மனிதனின் இயல்பான, நல்லொழுக்க, ஆன்மீக நிலைகள் தொடர்புடையதாகும். இறைவனின் புனித வேதமாகிய திருக்குர்ஆன் இந்த மூன்று நிலைகளை எவ்வாறு வகைபடுத்தியுள்ளதென்றால், இந்த மூன்று நிலைகளுக்கும் தனித்தனியாக மூன்று துவக்க இடங்களை அது குறிப்பிடுகின்றது என்பதை அறிந்து கொள்ள வேண்டும். வேறு விதமாகக் கூறுவதென்றால், அவை மூன்று நீரூற்றுகளாகக் கூறப்பட்டிருக்கின்றன. அவற்றிலிருந்து தனித்தனியான இந்த நிலைகள் தோன்றுகின்றன.

## முதலாவது ஊற்று - தீமை செய்யத் தூண்டும் ஆன்மா (நஃப்ஸே அம்மாரா)

எல்லா இயல்பான நிலைகள் வெளிப்படும் இடமாகவும் வெளியேறும் இடமாகவும் இருக்கின்ற முதல் ஊற்றிற்கு திருக்குர்ஆன் 'நஃப்ஸே அம்மாரா' (தீமையைத் தூண்டும் ஆன்மா) என பெயரிட்டுள்ளது.

إِنَّ النَّفْسَ لَأَمَّارَةٌ بِالسُّوٓءِ

நிச்சயமாக ஆன்மா தீமையைத் தூண்டக்கூடியதே
(12:54 காண்க.)

அதாவது 'நஃப்ஸே அம்மாரா' (தீமையைத் தூண்டும் ஆன்மா)வின் தன்மை என்னவென்றால் அது மனிதனின் சிறப்புகளுக்கு எதிராகவும், அவனது நல்லொழுக்க நிலைகளுக்கு நேர்மாற்றமாகவும் இருக்கின்ற தீமையின் பக்கம் மனிதனை தூண்டுகிறது. மேலும் அது மனிதனை விரும்பத்தகாத மற்றும் தீய வழிகளில் வழிநடத்த விரும்புகின்றது.

சுருக்கமாக, நடுநிலையற்ற தன்மை மற்றும் தீமைகளின் பக்கம் செல்வது மனிதனின் ஒரு நிலையாகும். அது நல்லொழுக்க நிலைக்கு முன்பாக மனிதன் மீது இயல்பாக மேலோங்கி இருக்கிறது. மனிதன் அறிவு மற்றும் இறைஞானத்தின் வழிகளில் நடக்காதவரை அவனது அந்த நிலை இயல்பான நிலை என்றே கூறப்படுகிறது. இன்னும் கூறப்போனால் அவன் இந்நிலையில் விலங்குகளைப் போன்று உண்பதிலும், குடிப்பதிலும் தூங்குவதிலும், விழிப்பதிலும் கோபம் மற்றும் ஆவேசத்தை வெளிப்படுத்துவதிலும் இயல்பான மனஇச்சைகளையே பின்பற்றுகின்றான். எப்போது மனிதன் அறிவு மற்றும் இறைஞானத்தின் ஆலோசனைக்கேற்ப இயல்பான நிலைகளில் ஆதிக்கம் செலுத்துகின்றானோ, பொருத்தமான நடுநிலையை கைக்கொள்கின்றானோ அப்போது இந்த மூன்று நிலைகளும் இயல்பான நிலைகளாக இருப்பதில்லை. மாறாக, அப்போது இந்நிலைகள் நல்லொழுக்க நிலைகள் என்றழைக்கப்படும். இதைப் பற்றிய குறிப்பு பின்னரும் சிறிது எடுத்துரைக்கப்படும்.

## இரண்டாம் ஊற்று நஃப்ஸே லவ்வாமா (குற்றம் சாட்டும் ஆன்மா)

நல்லொழுக்க நிலைகளுக்கான ஊற்றின் பெயரை திருக்குர்ஆன் 'நஃப்ஸே லவ்வாமா' (குற்றம் சாட்டும் ஆன்மா) எனக் குறிப்பிடுகின்றது.

திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

وَلَآ أُقۡسِمُ بِٱلنَّفۡسِ ٱللَّوَّامَةِ ۝٣

தீமையான மற்றும் நடுநிலையற்ற அனைத்து செயல்களின்போது தன்னை குற்றப்படுத்தும் ஆன்மாவை நான்

சான்றாகக் காட்டுகிறேன். (75:3)

இந்த நஃப்ஸே லவ்வாமாதான் மனித நிலைகளின் இரண்டாம் ஊற்று ஆகும். இதிலிருந்துதான் நல்லொழுக்க நிலைகள் தோன்றுகின்றன. இந்த நிலையில் மனிதன் மற்ற விலங்குகளுடனான ஒப்புமையிலிருந்து விடுதலை பெறுகின்றான்.

மேலும் இவ்விடத்தில் நஃப்ஸே லவ்வாமாவை (குற்றம்சாட்டும் ஆன்மாவை) சான்றாகக் காட்டுவது அதனை கண்ணியப்படுத்துவதற்காகும். அதாவது நஃப்ஸே அம்மாரா (தீயதைத் தூண்டும் ஆன்மா)விலிருந்து வெளி வந்து நஃப்ஸே லவ்வாமா, குற்றம் சாட்டும் ஆன்மா என்ற முன்னேற்றத்திற்குரிய நிலையை அடைந்ததால் இறை சன்னிதியில் கண்ணியம் பெறும் தகுதியை அது அடைந்து விடும்.

மனிதன் தீமை செய்யும்போது அவனை இது குற்றஞ்சாட்டுவதால் இதற்கு நஃப்ஸே லவ்வாமா (குற்றம் சாட்டும் ஆன்மா) என பெயரிடப்பட்டுள்ளது. மேலும் மனிதன் தனது மனஇச்சைகளை பின்பற்றி தான்தோன்றித்தனமாக செயல்படுவதையும், விலங்குகளை போன்ற வாழ்க்கையை நடத்துவதையும் அது ஏற்றுக் கொள்வதில்லை. மாறாக, தன்னிடமிருந்து நல்ல நிலைமைகளும், நல்லொழுக்கங்களும் வெளிப்பட வேண்டும் என நஃப்ஸே லவ்வாமா (குற்றம் சாட்டும் உள்ளம்) விரும்புகின்றது. மேலும் மனித வாழ்க்கையின் எல்லா அடிப்படையான விஷயங்களிலும் எவ்வித நடுநிலையற்ற செயல்களும் வெளிப்படாமல் இருக்க வேண்டும் எனவும், இயல்பான உணர்வுகளும், இயல்பான ஆசைகளும் அறிவின் வழிகாட்டலுக்கேற்ப வெளிப்பட வேண்டும் எனவும் அது விரும்புகின்றது. எனவே தீய செயல்களை அது கண்டிப்பதால் இந்நிலைக்கு 'நஃப்ஸே லவ்வாமா' அதாவது அதிகமாக குற்றஞ்சாட்டும் ஆன்மா எனப் பெயராகும். நஃப்ஸே லவ்வாமா இயல்பான மன இச்சைகளை விரும்புவதில்லை; மாறாக தன்னை அது கடிந்து கொண்டிருக்கிறது. எனினும் நன்மைகளை மேற்கொள்வதற்கு அது முழுமையான ஆற்றலையும் பெற்றிருப்பதில்லை. அவ்வப்போது மனஇச்சைகள் அதன்மீது

ஆதிக்கம் செலுத்திவிடுகின்றன. அந்நிலையில் தடுமாற்றம் அடைந்து அது கீழே விழுந்து விடுகிறது. ஆக, அதன் நிலை கிழே விழ விரும்பாவிட்டாலும் பலவீனத்தின் காரணமாக கீழே விழுந்து பின்னர் தனது இயலாமையை எண்ணி வெட்கப்படும் ஒரு பலவீனமான குழந்தையைப் போன்றதாகும். சுருக்கமாக, இது ஆன்மாவின் எப்படிபட்ட ஒழுக்க நிலையென்றால் இந்நிலையில் ஆன்மா நல்லொழுக்கங்களை தன்னகத்தில் ஒன்று சேர்க்கிறது; கிளர்ச்சி செய்வதிலிருந்து விலகி நிற்கின்றது. ஆயினும் அதனால் முழுமையாக மேலோங்க முடியாது.

## மூன்றாவது ஊற்று : நஃப்ஸே முத்மயின்னா (நிம்மதியடைந்த ஆன்மா)

இது ஆன்மீக நிலைகள் வெளிப்படும் இடமாகிய மூன்றாம் ஊற்று ஆகும். இந்த ஊற்றிற்கு திருக்குர்ஆன் நிம்மதியடைந்த ஆன்மா எனப் பெயரிட்டுள்ளது. திருக்குர்ஆன் கூறுகின்றது :

يَٰٓأَيَّتُهَا ٱلنَّفْسُ ٱلْمُطْمَئِنَّةُ ۝٢٨ ٱرْجِعِىٓ إِلَىٰ رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً ۝٢٩
فَٱدْخُلِى فِى عِبَٰدِى ۝٣٠ وَٱدْخُلِى جَنَّتِى ۝٣١

அதாவது, இறைவனிடமிருந்து நிம்மதியைப் பெற்ற நிம்மதியடைந்த ஆன்மாவே! நீ உனது இறைவனிடம் திரும்பி வா. நீ அவனிடம் திருப்தி கொள். அவன் உன்னிடம் திருப்தி கொள்வான். எனவே நீ எனது அடியார்களுடன் சேர்ந்து விடுவாயாக. மேலும் எனது சொர்க்கத்திற்குள் வந்துவிடு!

(89:28-31)

இது எப்படிப்பட்ட நிலையென்றால், இதில் ஆன்மா எல்லா பலவீனங்களிலிருந்தும் விடுதலை அடைந்து ஆன்மீக ஆற்றல்களால் நிறைந்து விடும். மேலும் இறைவனின்றி உயிர் வாழவே முடியாது என்ற அளவுக்கு அவனோடு உறவை ஏற்படுத்திக் கொள்ளும். மேலும் எவ்வாறு தண்ணீர் கீழ்நோக்கி வழிந்தோடுமோ மேலும் பெருக்கெடுத்து ஓடுவதனாலும் தடைகள்

அகன்று விடுவதனாலும் மிக வேகமாக பாய்ந்தோடுமோ அது போன்று இந்நிலையை அடைந்த ஆன்மா இறைவனை நோக்கி பாய்ந்தோடிக் கொண்டே இருக்கும்.

இறைவனிடமிருந்து நிம்மதியை பெற்றுவிட்ட ஆன்மாவே! நீ அவன் பக்கம் திரும்பி வந்துவிடு என்று அல்லாஹ் கூறுவது இதையே சுட்டிக்காட்டுகின்றது.

எனவே அது மரணத்திற்குப் பிறகு அல்ல. இவ்வுலக வாழ்க்கையிலேயே அது மிகப் பெரிய ஒரு மாறுதலை ஏற்படுத்துகின்றது. மேலும் வேறோர் இடத்தில் அல்ல; மாறாக இவ்வுலகிலேயே அதற்கு ஒரு சொர்க்கம் கிடைக்கின்றது. நீ உன் இறைவனின் பக்கம்-அதாவது பரிபாலிப்பவனின் பக்கம் திரும்பி வந்துவிடு என இவ்வசனத்தில் கூறப்பட்டதைப் போன்றே அந்த நேரத்தில் அது இறைவனிடமிருந்து பரிபாலனத்தைப் பெறுகின்றது. மேலும் வாழ்வளிக்கும் இந்த நீரூற்றிலிருந்தே அது நீர் அருந்துகின்றது. அதனால் மரணத்திலிருந்து விடுதலை பெறுகின்றது.

இது தொடர்பாக மற்றோரிடத்தில் அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :-

قَدْ أَفْلَحَ مَنْ زَكّٰىهَا ۝١٠ وَقَدْ خَابَ مَنْ دَسّٰىهَا ۝١١

அதாவது, உலக இச்சைகளிலிருந்து தமது ஆன்மாவை தூய்மைபடுத்தியவர் தப்பித்துக் கொண்டார். மேலும் அவர் அழிவிற்குள்ளாக மாட்டார். ஆனால் இயல்பான உணர்ச்சிகளாகிய உலகியல் இச்சைகளில் தன்னை மாய்த்து அல்லது மறைத்துக் கொண்டவன் வாழ்க்கையில் நம்பிக்கை இழந்து விட்டான்.

( திருக்குர்ஆன் - 91 : 10, 11 காண்க )

சுருக்கமாக, இவை மூன்று நிலைகளாகும். இவற்றை நாம் வேறு வார்த்தைகளில் இயல்பான, நல்லொழுக்கமான, ஆன்மீக நிலைகள் எனக் கூறலாம். மேலும் மனிதனின் இயல்பான மன இச்சைகள் எல்லை மீறுகின்ற நேரத்தில் அவை மிக அபாயகரமானவையாக ஆகி விடுகின்றன. மேலும் அவை நல்லொழுக்கங்களையும், ஆன்மீகத்தையும் அழித்து

விடுகின்றன. எனவேதான் இறைவனின் பரிசுத்த வேதத்தில் இவற்றிற்கு நஃப்ஸே அம்மாரா (தீமையைத் தூண்டும் ஆன்மா)வின் நிலை எனப் பெயரிடப்பட்டுள்ளது.

மனிதனின் இயல்பான நிலைகளின் மீது திருக்குர்ஆன் என்ன தாக்கத்தை ஏற்படுத்துகின்றது? மேலும் அவை தொடர்பாக திருக்குர்ஆன் என்ன வழிகாட்டல் வழங்குகிறது? மேலும் செயல் ரீதியாக அவற்றை எந்த அளவு கட்டுக்குள் வைக்க வேண்டுமென திருக்குர்ஆன் விரும்புகிறது? ஆகிய கேள்விகளுக்குரிய பதில் என்னவெனில், திருக்குர்ஆனின் அடிப்படையில் மனிதனின் இயல்பான நிலைகளுக்கு அவனது நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைகளுடன் மிக வலுவான தொடர்புகள் உள்ளன. எந்த அளவுக்கென்றால் மனிதனின் உண்கின்ற, அருந்துகின்ற வழிமுறைகளும் கூட அவனுடைய நல்லொழுக்க மற்றும் ஆன்மீக நிலைகளின் மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. இந்த இயல்பான நிலைகளில் மனிதன் இறைச்சட்டத்தின் வழிகாட்டுதல்களுக்கேற்ப செயல்பட்டால் உப்பளத்தில் விழுகின்ற எல்லா பொருளும் உப்பாகவே மாறிவிடுவதைப் போன்று அந்த இயல்பான நிலைகள் நல்லொழுக்க நிலைகளாக ஆகி விடும். மேலும் ஆன்மீகத்திலும் மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்தும். இந்த காரணத்தினால்தான் அனைத்து இறைவணக்கங்கள் மற்றும் உளத்தூய்மை மற்றும் உருக்கத்தின் நிலைகளை அடையும் நோக்கங்களில் உடல் தூய்மை, உடல் அளவிலான ஒழுங்குமுறைகள் மற்றும் பௌதீக சட்டதிட்டங்கள் ஆகியவற்றை பேணும்படி திருக்குர்ஆன் வலியுறுத்துகின்றது. மேலும் உடலின் செயல்பாடுகள் ஆன்மாவின் மீது மிக வலுவான தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்ற தத்துவம் மிகவும் சரியானது என்பது சிந்திக்கும்போது தெரிய வருகின்றது. நமது இயல்பான செயல்கள், அவை வெளிப்படையில் பௌதீகமானவையாக இருந்தபோதிலும் அவற்றால் நமது ஆன்மீக நிலைகளில் நிச்சயமாக தாக்கம் ஏற்படுவதை நம்மால் காண முடிகின்றது. உதாரணமாக, நமது கண்கள் அழத் தொடங்கிவிடும்போது, அந்த அழுகை செயற்கையாக இருந்தாலும் சரியே உடனடியாக அந்தக் கண்ணீர் துளிகளின் ஒரு தீச்சுடர் உள்ளத்தின்மீது தாக்கத்தை ஏற்படுத்துகின்றது. அப்போது உள்ளமும் கண்களை

பின்தொடர்ந்து துக்கத்தில் ஆழ்ந்து விடுகின்றது. அதே போன்று நாம் செயற்கையாக சிரிக்கத் தொடங்கினால் உள்ளத்திலும் ஓர் உற்சாகம் தோன்றி விடுகின்றது. அதே போன்று உடல் அளவிலான சஜ்தாவும் (சிரம்பணிதலும்) ஆன்மாவில் உருக்கம் மற்றும் பணிவையும் ஏற்படுத்துவதை நம்மால் காண முடிகின்றது. இதற்கு நேர்மாற்றமாக நாம் கழுத்தை உயர்த்தி விறைப்பாக வைத்துக் கொண்டும், நெஞ்சை நிமிர்த்திக் கொண்டும் நடந்து சென்றால் இதுபோன்ற நிலை, நடக்கின்ற முறை நம்மிடத்தில் ஒருவகையான தற்பெருமை மற்றும் ஆணவத்தை ஏற்படுத்துவதையும் காண முடிகின்றது. ஆக, பௌதீகமான செயல்பாடுகள் ஆன்மீக நிலைகளில் நிச்சயமாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்று மேற்கண்ட உதாரணங்களிலிருந்து தெள்ளத் தெளிவாக தெரிகின்றது.

அதே போன்று பலதரப்பட்ட உணவுகளும் மனிதனின் அறிவு மற்றும் உள்ளத்தின் ஆற்றல்களில் கண்டிப்பாக தாக்கத்தை ஏற்படுத்துகின்றன என்பதை அனுபவம் நமக்கு வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக எவர்கள் ஒருபோதும் மாமிசம் உண்பதில்லையோ அவர்களிடத்தில் வீர உணர்வு படிப்படியாக குறைந்து கொண்டு வருவதை சற்று சிந்தித்துப் பார்க்க வேண்டும். எந்த அளவுக்கென்றால் உள்ளத்தால் அவர்கள் மிகவும் பலவீனமடைந்து விடுகின்றனர். மேலும் இறைவனால் வழங்கப்பட்ட, புகழுக்குரிய ஓர் ஆற்றலையும் அவர்கள் இழந்து விடுகின்றனர். இதற்கான சாட்சி இவ்வாறு கிடைக்கின்றது. அதாவது விலங்கினங்களில் எத்தனை தாவர உண்ணிகள் உள்ளனவோ அவற்றில் எதனிடத்திலும் மாமிச உணவுகளை உண்ணும் விலங்குகளில் காணப்படும் வீர உணர்வு இருப்பதில்லை. இறைவனின் இந்த இயற்கைச் சட்டத்திலிருந்தும் மேற்கண்ட விஷயத்திற்கு சாட்சி கிடைக்கின்றது. பறவைகளிடத்திலும் இந்நிலை காணக் கிடைக்கின்றது. எனவே, உணவு நல்லொழுக்க நிலைகளில் தாக்கத்தை ஏற்படுத்துகின்றது என்பதில் என்ன ஐயம் உள்ளது? ஆயினும் அதே சமயம் எவர்கள் இரவும், பகலும் அதிகமாக இறைச்சி உண்கிறார்களோ மேலும் காய்கறிகளை மிக குறைவாக உண்கிறார்களோ அவர்களிடத்திலும் சகிப்புத்தன்மை மற்றும் பணிவு என்ற

நற்பண்புகள் குறைந்து விடுகின்றன. மேலும் நடுநிலையை பேணுபவர்கள் இரு நற்பண்புகளுக்கும் உரிமையாளர்களாக திகழ்கின்றனர். இந்த நுட்பமான கருத்தின் அடிப்படையில்தான் இறைவன் இவ்வாறு திருக்குர்ஆனில் கூறுகின்றான் :

وَّكُلُوا وَاشْرَبُوا وَلَا تُسْرِفُوا ۚ

அதாவது, இறைச்சியையும் உண்ணுங்கள்; மற்ற (ஆகுமான) உணவுகளையும் உண்ணுங்கள். ஆனால் நல்லொழுக்க நிலைகளில் தீய தாக்கம் ஏற்படாமல் இருக்கவும், உடல் நலத்தில் பாதிப்பை ஏற்படுத்தாமல் இருக்கவும் எவ்விஷயத்திலும் எல்லையை தாண்டி விடாதீர்கள்.(7:32) மேலும் உடல் ரீதியான அசைவுகள் மற்றும் செயல்பாடுகள் ஆன்மாவின் மீது தாக்கத்தை ஏற்படுத்துவதைப் போன்றே, சில நேரத்தில் ஆன்மாவின் தாக்கமும் உடலின் மீது ஏற்படுகின்றது. ஒருவருக்கு ஏதாவது துன்பம் ஏற்பட்டால், இறுதியில் அவரது கண்கள் கண்ணீரால் நிறைந்து விடுகின்றன. மேலும் எவர் மகிழ்ச்சியடைகின்றாரோ இறுதியில் அவர் புன்னகைக்கின்றார். உண்ணுதல், அருந்துதல், உறங்குதல், விழித்தல், நடத்தல், ஓய்வெடுத்தல், குளித்தல் போன்ற நமது இயல்பான செயல்கள் அனைத்தும் நமது ஆன்மீக நிலைகளின் மீது ஒருவகை தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. நமது உடல் வடிவமைப்பிற்கும் நமது இயல்புகளுக்கும் பெரிய தொடர்பு உள்ளது. மூளையில் ஓரிடத்தில் காயம் ஏற்பட்டு விடுவதால் உடனடியாக நினைவாற்றல் குறையத் தொடங்குகின்றது. மேலும் அதன் வேறொரு பகுதியில் காயம் ஏற்பட்டால் சுயநினைவே பறிபோய் விடுகின்றது. நோய்களைப் பரப்பும் ஒரு விஷக் காற்று எந்த அளவுக்கு வேகமாக உடலில் பாதிப்பை ஏற்படுத்தி பின்னர் உள்ளத்தையும் பாதிக்கின்றது என்றால் பார்த்துக் கொண்டிருக்கும்போதே எல்லா நல்லொழுக்க நிலைகளையும் கொண்ட உள்ளார்ந்த அமைப்பு சின்னாபின்னமாகத் தொடங்கி விடுகின்றது. அதனால் பாதிப்புக்குள்ளான அந்த மனிதன் பைத்தியக்காரனாகி சில நொடிப் பொழுதிலேயே காலம் சென்று விடுகின்றான். சுருக்கமாக, பௌதீகமான துக்கங்களும் நூதனமான காட்சிகளைக் காட்டுகின்றன. இதிலிருந்து ஆன்மாவுக்கும்

உடலுக்கும் உள்ள தொடர்பு எப்படிப்பட்டதென்றால், அதன் ரகசியத்தை அறிந்து கொள்வது மனிதனால் முடியாத ஒன்றாகும் என நிரூபணமாகின்றது. உடல்தான் ஆன்மாவின் தாய் என்பது சிந்திப்பதால் தெரிய வரும். இதுவும் அந்த தொடர்புக்கு மிகப் பெரிய சான்றாகும்.

ஆன்மா என்பது கர்ப்பிணி பெண்களின் வயிற்றில் ஒருபோதும் வெளியிலிருந்து நுழைவதில்லை; மாறாக அது விந்தணுவிலேயே மறைந்திருக்கும் ஓர் ஒளியாகும். மேலும் உடல் வளர்ச்சிக்கேற்ப ஆன்மாவும் ஒளிர்ந்து கொண்டு செல்கிறது. விந்தின் மூலமாக கருப்பையில் தயாராகும் அந்த உடலினுள்ளிருந்தே ஆன்மா வெளிப்பட்டு விடுகின்றது என்பதையே இறைவனின் பரிசுத்த வேதம் நமக்குப் புரிய வைக்கின்றது. இறைவன் இவ்வாறு திருக்குர்ஆனில் கூறுகின்றான் :

ثُمَّ اَنْشَاْنٰهُ خَلْقًا اٰخَرَ ؕ فَتَبٰرَكَ اللّٰهُ اَحْسَنُ الْخٰلِقِيْنَ ﴿١٥﴾

அதாவது, கருப்பையில் தயாரான அந்த உடலில் பின்னர் நாம் வேறொரு படைப்பைக் கொண்டு வருகிறோம். மேலும் அதனுடைய மற்றுமொரு படைப்பை வெளிப்படுத்துகின்றோம். (23:15) அது ஆன்மா என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது. இறைவன் மிக்க அருளுக்குரியவன் ஆவான். அவன் எப்படிப்பட்ட படைப்பாளன் என்றால் அவனுக்கு நிகர் எவருமில்லை.

நாம் அந்த உடலில் இருந்தே வேறொரு படைப்பை வெளிப்படுத்தினோம் என்று இறைவன் கூறியதில் ஆன்மாவின் உண்மை நிலையை விளக்குகின்ற ஓர் ஆழமான ரகசியம் உள்ளது. மேலும் அது ஆன்மாவிற்கும் உடலுக்குமிடையில் உள்ள மிக உறுதி வாய்ந்த அந்தத் தொடர்பைச் சுட்டிக் காட்டுகின்றது. மனிதனின் அங்க செயல்பாடுகள் மற்றும் கூற்றுகள் மற்றும் எல்லா இயல்பான செயல்களும் இறைவனுக்காகவும், இறைவழியிலும் வெளிப்படத் துவங்கும்போதும் இதே இறை தத்துவம் பொருந்தக்கூடியதாக இருக்கும் என்பதையும் மேற்கண்ட வசனம் நமக்கு

போதிக்கின்றது. அதாவது விந்துவில் எவ்வாறு அது (ஆன்மா) மறைந்திருந்ததோ அதேபோன்று மேற்குறிப்பிட்ட நற்செயல்களின் போதும் ஆரம்பத்திலிருந்தே ஓர் ஆன்மா ஒளிந்திருக்கின்றது. மேலும் நற்செயல்களின் வடிவம் தயாராக, தயாராக அந்த ஆன்மாவும் ஒளிர்ந்து கொண்டே செல்கின்றது. மேலும் அந்த வடிவம் முழுமை பெற்று தயாராகிவிடும்போது அதே நேரத்தில் அந்த ஆன்மாவும் தனது முழுமையான பிரகாசத்துடன் ஒளிர்கின்றது. மேலும் தனது ஆத்மீக தன்மையுடன் தனது வடிவத்தை வெளிப்படுத்துகின்றது. மேலும் வாழ்க்கையின் உயிரோட்டமான செயல்பாடுகள் தொடங்கி விடுகின்றன. நற்செயல்களின் முழுமையான வடிவம் தயாரான அதே கணம் மின்னலைப் போன்று ஒரு பொருள் உள்ளிருந்து தனது தெளிவான பிரகாசத்தை வெளிப்படுத்தத் துவங்குகின்றது.

இந்த நிலையைப் பற்றித்தான் இறைவன் திருக்குர்ஆனில் உதாரணமாக இவ்வாறு குறிப்பிடுகிறான் :

فَاِذَا سَوَّيْتُهٗ وَنَفَخْتُ فِيْهِ مِنْ رُّوْحِيْ فَقَعُوْا لَهٗ سٰجِدِيْنَ ۝۳۰

அதாவது நான் அதன் வடிவத்தை வடித்து, எல்லா அம்சங்களையும் சீரமைத்து என் ஆவியை அதில் ஊதியதும் எல்லாரும் இறைவனுக்கு சஜ்தா செய்தவாறு பூமியில் விழுந்து விடுங்கள்.(15:30) ஆக, இந்த வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டிருப்பது என்னவென்றால், நற்செயல்களின் முழு வடிவம் தயாராகிவிடும்போது அந்த வடிவத்தில் அல்லாஹ் தனது ஆவியாக கூறும் அந்த ஆன்மா என்பது ஒளிர்ந்தெழுகின்றது. உலக வாழ்க்கையை ஒரு வகையில் மாய்த்துக் கொண்ட பிறகுதான் அந்த வடிவம் தயாராகின்றது. இதன் காரணமாக முன்பிருந்த மங்கலான இறை ஒளியானது உடனடியாக சுடர் விட்டெரிகின்றது. மேலும் இறைவனின் இது போன்ற மகத்துவத்தை கண்டு அனைவரும் ஸஜ்தா செய்வதும் (சிரம்பணிவதும்), அவன் பக்கம் ஈர்க்கப்படுவதும் கடமையாகின்றது. எனவே இருளுடன் நட்பு கொண்டுள்ள இப்லீஸை தவிர மற்ற அனைவரும் இந்த ஒளியைப் பார்த்துவிட்டு ஸஜ்தா (சிரம்பணிதல்) செய்கின்றனர். மேலும் இயல்பாகவே அவன் பக்கம் செல்கின்றனர்.

## ஆன்மாவானது படைக்கப்பட்ட ஒன்றாகும்

ஆன்மா என்பது கருப்பையில் வளர்கின்ற உடலினுள்ளிருந்தே பிறந்த ஒரு நுண்ணிய ஒளியாகும் என்பது மிகச் சரியானது என்ற எனது முந்தைய கூற்றின் பக்கம் நான் வருகின்றேன். பிறக்கின்றது என்பதன் கருத்து, தொடக்கத்தில் அது ஒளிந்தும், உணர முடியாததாகவும் இருந்து பின்னர் அது வெளிப்படுகின்றது என்பதாகும். தொடக்கம் முதலே அதன் சாறு விந்தணுவில் அமைந்திருக்கின்றது. நிச்சயமாக அது விண்ணின் இறைவனின் எண்ணம் மற்றும் அவனது கட்டளை மற்றும் விருப்பத்திற்கேற்ப ஒரு மறைவான இடத்திலிருந்து விந்தணுவுடன் தொடர்பு கொண்டுள்ளது. அது விந்தின் ஒரு பிரகாசமான மற்றும் ஒளிமயமான அணுவாகும். எவ்வாறு ஒவ்வோர் உடலுக்கும் உடற்கூறுகள் உள்ளனவோ அது போன்று ஆன்மா என்பது விந்தணுவின் ஒரு பகுதி என்று கூற முடியாது. ஆனால் அதே நேரத்தில் அது வெளியிலிருந்து நுழைகின்றதென்றோ அல்லது நிலத்தில் விழுந்து விந்தின் துகள்களில் கலந்து விடுகின்றது என்றோ கூற முடியாது. மாறாக, கற்களுக்குள் நெருப்பு ஒளிந்திருப்பதைப் போன்று விந்தணுவில் அது மறைந்திருக்கின்றது. ஆன்மா என்பது வானத்திலிருந்து இறங்குகின்ற தனித்த ஒன்று என்பதோ அல்லது விண்ணிலிருந்து பூமியில் விழுகின்ற ஒன்று என்பதோ இறைவேதத்தின் கருத்தல்ல. இந்த சிந்தனை எவ்வகையிலும் சரியாக இருக்கமுடியாது. நாம் அவ்வாறு கருதினால் இயற்கைச் சட்டம் நமது எண்ணம் தவறானதாகும் என்பதை நிரூபணம் செய்கின்றது. அசுத்தமான மற்றும் அழுகிப்போன உணவுகளிலும் புரையோடிப்போன புண்களிலும் ஆயிரக்கணக்கான கிருமிகள் தோன்றி விடுவதையும், அழுக்கான ஆடைகளில் நூற்றுக்கணக்கான பேன்கள் தோன்றி விடுவதையும், மனிதனின் வயிற்றுக்குள் புழுக்கள் போன்றவை உருவாகி விடுவதையும் நாம் அன்றாடம் பார்க்கின்றோம். இவையாவும் வெளியிலிருந்து உள்ளே நுழைந்தன என்றோ அல்லது வானத்திலிருந்து இறங்கின என்றோ நம்மால் கூற முடியுமா? ஆக, ஆன்மா என்பது உடலிலிருந்தே வெளிப்படுகின்றது என்பதே சரியான கூற்றாகும். மேலும்

இதிலிருந்தே (ஆன்மாவான) அது படைக்கப்பட்ட ஒன்று என்பதும் நிரூபணமாகின்றது.

## ஆன்மாவின் இரண்டாவது தோற்றம்

எந்த ஆற்றல் வாய்ந்த இறைவன் ஆன்மாவை தனது முழுமையான வல்லமையினால் உடலிலிருந்து வெளிப்படுத்தினானோ, அவன் ஆன்மாவின் இரண்டாவது தோற்றத்தையும் உடலின் மூலமே வெளிப்படுத்துவதுதான் அவனது நாட்டம் எனத் தெரிகின்றது. தற்போது எமது வாதத்தின் கருத்தும் இதுவேயாகும். ஆன்மாவின் செயல்பாடுகள் உடலின் செயல்பாடுகளை சார்ந்தவையாக உள்ளன. நாம் உடலை எதன் பக்கம் ஈர்ப்போமோ ஆன்மாவும் கண்டிப்பாக அதனை பின்தொடர்ந்து செல்கின்றது. எனவே மனிதனின் இயல்பான நிலைகளை கருத்தில் கொள்வது உண்மையான இறைவேதத்தின் பணியாகும். இதே காரணத்தினால்தான் திருக்குர்ஆன் மனிதனின் இயல்பான நிலைகளின் சீர்திருத்தத்தின் பக்கம் அதிக கவனம் செலுத்தியிருக்கின்றது. மனிதனின் சிரிப்பு, அழுகை, உணவு உண்பது, தண்ணீர் அருந்துவது, ஆடை அணிவது, உறங்குதல், பேசுதல், மௌனமாக இருப்பது, திருமணம் செய்தல், திருமணம் செய்யாமல் தனித்திருத்தல், நடத்தல், நிற்றல் மற்றும் வெளிப்புறத் தூய்மை, குளித்தல் போன்றவற்றில் நிபந்தனைகளை பின்பற்றச் செய்கின்றது. மேலும் நோயின் நிலையிலும், உடல் நலமாக இருக்கும் நிலையிலும் மேற்கண்ட அனைத்து விஷயங்களிலும் குறிப்பான ஒழுங்குமுறைகளை பின்பற்றும்படி போதனைகள் தரப்பட்டுள்ளன. மேலும் மனிதனின் பௌதீக செயல்பாடுகள் ஆத்மீக நிலைகளின் மீது மிக ஆழமான தாக்கத்தை ஏற்படுத்துவதாகவும் அது குறிப்பிடுகின்றது. அந்த போதனைகள் விரிவாக எழுதப்பட்டால் இந்த கட்டுரையை எடுத்துரைக்க போதுமான நேரம் கிடைக்கும் என நான் கருதவில்லை.

## மனிதனின் படிப்படியான முன்னேற்றம்

இறைவன் தனது போதனைகளில் மனிதனின் இயல்பான நிலைகளுக்குரிய சீர்திருத்த விதிமுறைகளை வகுத்து பின்னர் அவனை படிப்படியாக எவ்வாறு உயர்த்துகின்றான்? மேலும் எவ்வாறு அவனை ஆன்மீக நிலைகளின் உயர்ந்த

படித்தரங்களை அடையச் செய்கின்றான்? என நான் இறைவனின் தூய வேதத்தை சீர்தூக்கி ஆராயும்போது, இறைஞானமிக்க அந்த சட்டதிட்டங்கள் இவ்வாறு தெரிய வருகின்றன. **முதலில்** மனிதனுக்கு சபை நாகரீகம், உண்ணுதல், பருகுதல், பேசுதல் போன்ற எல்லா சமூக நெறிமுறைகளையும் கற்றுக் கொடுத்து காட்டுமிராண்டித்-தனத்திலிருந்து அவனை தூய்மைப்படுத்த இறைவன் விரும்புகிறான். மிருகங்களுக்கு நிகரான நிலையிலிருந்து அவனை முழுமையாக வேற்றுமைப் படுத்தி நாகரீகம் மற்றும் மனிதத்துவம் என்று அழைக்கப்படக்கூடிய நல்லொழுக்க நிலைகளின் ஆரம்ப படித்தரத்தை கற்றுக் கொடுக்க இறைவன் விரும்புகிறான்.

**பின்னர் (இரண்டாவதாக)** பண்படாத பழக்க-வழக்கங்கள் என்றழைக்கப்படக் கூடிய மனிதனின் இயல்பான பழக்க வழக்கங்களை பக்குவமிக்கவையாக மாற்றி நல்லொழுக்க நிலைகளாக மாற்ற விரும்புகிறான். எவ்வாறிருப்பினும் இவ்விரண்டு வழிமுறைகளும் உண்மையில் ஒரே வழிமுறைதான். ஏனென்றால் இவை இயல்பான நிலைகளின் சீர்திருத்தத்துடன் தொடர்புடையவையாக உள்ளன. தாழ்ந்த நிலை மற்றும் உயர்ந்த நிலை என்ற வேறுபாடு மட்டுமே இரண்டு நிலைகளையும் இரண்டு வகைகளாகப் பிரிக்கின்றது. மனிதன் தாழ்ந்த ஒழுக்க நிலையிலிருந்து உயர்ந்த நிலைக்கு முன்னேறும் வகையில் நுட்பமான ஞானமிக்க எல்லாம் வல்ல இறைவன் ஒழுக்க அமைப்பை ஏற்படுத்தியுள்ளான்.

**அடுத்து, முன்னேற்றங்களின் மூன்றாவது படித்தரமாக இறைவன் வகுத்துள்ளது என்னவென்றால்** மனிதன் தனது உண்மையான படைப்பாளனாகிய இறைவனின் அன்பிலும், திருப்தியிலும் மூழ்கிவிட வேண்டும். தன்னை முழுமையாக இறைவனுக்காக ஆக்கிக் கொள்ள வேண்டும். இது எப்படிப்பட்ட நிலையென்றால் இதனை நினைவூட்டுவதற்காகவே முஸ்லிம்களின் மார்க்கத்திற்கு இஸ்லாம் எனப் பெயரிடப்பட்டுள்ளது. ஏனெனில் தனக்காக எதையும் மீதம் வைக்காமல் தன்னை முழுமையாக இறைவனிடம் அர்ப்பணித்து கொள்வதற்குப் பெயர்தான் இஸ்லாம் ஆகும்.

அல்லாஹ் இதுபற்றி இவ்வாறு கூறுகின்றான் : -

بَلٰى ۚ مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ فَلَهٗۤ اَجْرُهٗ عِنْدَ رَبِّهٖ ۖ وَلَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ ﴿١١٣﴾

قُلْ اِنَّ صَلَاتِیْ وَنُسُكِیْ وَمَحْيَایَ وَمَمَاتِیْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿١٦٣﴾

لَا شَرِيْكَ لَهٗ ۚ وَبِذٰلِكَ اُمِرْتُ وَاَنَا اَوَّلُ الْمُسْلِمِيْنَ ﴿١٦٤﴾

وَاَنَّ هٰذَا صِرَاطِیْ مُسْتَقِيْمًا فَاتَّبِعُوْهُ ۚ وَلَا تَتَّبِعُوا السُّبُلَ فَتَفَرَّقَ بِكُمْ عَنْ سَبِيْلِهٖ ؕ

قُلْ اِنْ كُنْتُمْ تُحِبُّوْنَ اللّٰهَ فَاتَّبِعُوْنِیْ يُحْبِبْكُمُ اللّٰهُ وَيَغْفِرْ لَكُمْ ذُنُوْبَكُمْ ؕ وَاللّٰهُ غَفُوْرٌ رَّحِيْمٌ ﴿٣١﴾

கருத்து மொழியாக்கம் :

அதாவது, எவர் தம்மை இறைவனுக்காக, இறை வழியில் பலியிடுவதைப் போன்று வைத்து விடுகிறாரோ அவரே இரட்சிப்பு பெற்றவராவார். மேலும் வெறும் எண்ணத்துடன் மட்டும் நின்றுவிடாமல் தனது நல்ல செயலின் மூலமாகவும் தனது உண்மையை வெளிப்படுத்த வேண்டும். எவர் அவ்வாறு செய்கின்றாரோ அவரின் கூலி இறைவனிடத்தில் நிர்ணயிக்கப்பட்டுவிட்டது. மேலும் அப்படிப்பட்டவர்களுக்கு எந்த அச்சமும் இல்லை. மேலும் அவர்கள் துக்கப்படவும் மாட்டார்கள்.(2:113) நீர் கூறுவீராக: என் தொழுகையும், என் தியாகமும், என் வாழ்வும், என் மரணமும் படைத்து பரிபாலித்தல் என்ற எந்த இறைவனது பண்பு எல்லா பொருட்களையும் சூழ்ந்துள்ளதோ அந்த இறைவனுக்காகவேயாகும். எந்தப் பொருளும், எந்த மனிதனும் அவனுக்கு நிகராக முடியாது. அவனுக்கு படைப்பினங்கள் எவ்வகையிலும் இணையாக முடியாது. மேலும் இஸ்லாத்தின் கருத்தை நிலைநாட்டுபவனாக அதாவது இறைவழியில் தம்மை முழுமையாக அர்ப்பணிப்பவர்களில் நான் முதன்மையானவனாக இருக்க வேண்டும் என எனக்கு கட்டளையிடப்பட்டுள்ளது.(6:163,164) இதுதான் எனது வழியாகும். எனவே நீங்கள் எனது வழியை மேற்கொள்ளுங்கள். இதற்கு மாற்றமாக வேறு எவ்வழியையும்

மேற்கொள்ளாதீர்கள். அவ்வாறு செய்தால் இறைவனிடமிருந்து வெகு தொலைவில் சென்று விடுவீர்கள்.(6:154) நீர் அவர்களிடம் கூறுவீராக: நீங்கள் இறைவனை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். என் வழியிலேயே செல்லுங்கள். அவ்வாறு செய்தால் இறைவனும் உங்களை நேசிப்பான். மேலும் உங்கள் பாவங்களை மன்னிப்பான். மேலும் அவன் மிக அதிகமாக மன்னிப்பவனும், மிக்க கருணையாளனும் ஆவான். (3:32)

## இயல்பான நிலைகளுக்கும் நல்லொழுக்கத்திற்கும் உள்ள வேறுபாடு மற்றும் உயிரை அழித்தல் என்ற கொள்கைக்கு மறுப்பு

என் தொழுகையும் என் தியாகமும் என் வாழ்வும் என் மரணமும் படைத்து காத்தோம்புகின்ற தனது பண்பினால் எல்லா பொருட்களையும் சூழ்ந்துள்ள அந்த இறைவனுக்காகவேயாகும்.

தற்போது மனிதனின் மூன்று நிலைகளை தனித்தனியாக நாம் எடுத்துரைப்போம். ஆனால் அதற்கு முன் இறைவனின் பரிசுத்த வேதம் சுட்டிக் காட்டுவதற்கேற்ப மனிதனின் இயல்பான நிலைகளின் ஊற்று மற்றும் பிறப்பிடமான நஃப்ஸே அம்மாரா (தீமையை தூண்டும் ஆன்மா) மனிதனின் ஒழுக்க நிலையிலிருந்து வேறுபட்ட ஒன்றல்ல என்பதை இங்கு நினைவூட்டுவது அவசியமாகும். ஏனென்றால் இறைவனின் தூய வேதம் மனிதனின் எல்லா இயற்கையான ஆற்றல், மற்றும் பௌதீக ஆசைகள் மற்றும் எதிர்பார்ப்புகளை இயல்பு நிலையின் வட்டத்தில்தான் வைத்துள்ளது. இந்த இயல்பான நிலைகள் நல்லெண்ணத்துடன் முறையாக ஒழுங்குபடுத்தி, சீரமைத்து நேரத்திற்கும், சந்தர்ப்பத்திற்கும் ஏற்றவாறு பயன்படுத்திய பிறகு அவை நல்லொழுக்கம் என்ற தன்மையை அடைந்து விடுகின்றன. அதே போன்று நல்லொழுக்க நிலைகளும் ஆன்மீக நிலைகளிலிருந்து வேறுபட்ட விஷயங்கள் அல்ல. இன்னும் கூறுவதென்றால் முழுமையாக அல்லாஹ்விடம் தம்மை மாய்த்துக் கொள்ளுதல், மனத்தூய்மை மற்றும் உலக பற்றுகளிலிருந்து அல்லாஹ்வின் பக்கம் முகம் திருப்புதல், முழுமையான அன்பு மற்றும் அர்ப்பணிப்பு மற்றும் முழுமையான சாந்தி, சமாதானம் மற்றும் அல்லாஹ் நாடும் வகையில் முழுமையாக ஆகிவிடுதல் போன்றவற்றின் மூலமாக

தோன்றுகின்ற நல்லொழுக்க நிலைகள்தான் ஆன்மீக நிலைகளாக மாறுகின்றன. மனிதனின் இயல்பான நிலைகள் நல்லொழுக்க நிலைகளாக மாறாதவரை அவை மனிதனை போற்றத்தக்க மனிதனாக ஆக்குவதில்லை. ஏனென்றால் அந்த இயல்பு நிலைகள் விலங்குகளிடமும் இன்னும் கூறப்போனால் ஜடப்பொருட்களிடமும் கூட காணப்படுகின்றன. அவ்வாறே நல்லொழுக்கங்களை மேற்கொள்வதால் மட்டும் மனிதனுக்கு ஆன்மீக வாழ்க்கை கிடைத்து விடாது. இன்னும் கூறுவதானால் ஒரு மனிதன் இறையிருப்பையே நிராகரித்தவனாக இருந்து கொண்டு நல்லொழுக்கத்தை வெளிப்படுத்த முடியும். தாழ்மை குணம் கொண்டவனாக அல்லது இரக்க குணம் உடையவனாக அல்லது சமாதானம் செய்கின்றவனாக அல்லது தீமையை கைவிட்டு விடுபவனாகவும், தீயவரை எதிர்க்காதவனாகவும் இருக்க முடியும். இது போன்ற இந்த அனைத்து நிலைகளும் மனிதனின் இயல்பான நிலைகளே ஆகும். இரட்சிப்பின் ஊற்றினை இழந்த மற்றும் அதற்கு தகுதியற்ற ஒருவனுக்கு கூட மேற்குறிப்பிட்ட பண்புகள் கிடைக்க முடியும். பல மிருகங்களும் சாதுவாக உள்ளன. அதனுடன் பழகிவிட்டால் அது பணிவை வெளிப்படுத்துகின்றது. அதனை தடியினால் அடித்துக் கொண்டேயிருந்தாலும் எதிர்ப்பதில்லை. அவ்வாறிருந்தும் கூட அதனை மனிதன் என கூற இயலாது. அப்படி இருக்கும்போது இந்த குணநலன்களால் மட்டும் ஒருவன் உயர்ந்த மனிதனாக எப்படி ஆகிவிடமுடியும்?

அதே போன்று மிகத் தீய மற்றும் தவறான கொள்கை கொண்டவனாலும் கூட இன்னும் சொல்லப்போனால் சில தீய நடத்தைகளை கொண்டவனாலும் கூட மேற்கண்ட பண்புகளை பேண முடியும். மனிதன் தனது புண்ணில் தோன்றும் கிருமிகளை கொல்லத் துணியாத அளவுக்கு இரக்க குணத்தை அடைந்து விடுவது கூட சாத்தியமானதாகும். மேலும் தலையில் தோன்றும் பேன்களுக்கும், வயிறு, குடல் மற்றும் மூளையில் உருவாகும் புழுக்களுக்கும் சேதம் ஏற்படா வண்ணம் அந்த உயிரினங்களை பாதுகாக்கும் அளவுக்கு மனிதன் இரக்க குணத்தை வெளிப்படுத்தலாம். மேலும் பல உயிர்களை கொன்றும், தேனீக்களை அதன் கூட்டிலிருந்து விரட்டியடித்தும்

தேன் பெறப்படுவதால் நான் தேன் அருந்தவே மாட்டேன் என்று கூறும் அளவுக்கு இரக்க குணமுள்ளவர்கள் உள்ளனர் என்பதை நான் ஒப்புக்கொள்கிறேன். மேலும் கஸ்தூரி என்பது பாவமறியாத மானின் இரத்தம் ஆகும். அந்த பாவப் பட்ட மானைக் கொன்று அதன் குட்டிகளிடமிருந்து அதை பிரித்த பிறகுதான் கஸ்தூரி கிடைக்கின்றது. எனவே நான் கஸ்தூரியை பயன்படுத்த மாட்டேன் எனக் கூறுபவர்களும் உள்ளனர் என்பதையும் நான் ஏற்றுக் கொள்கிறேன். அதே போன்று பாவமறியாத புழுக்களை கொன்ற பிறகு முத்துகளும், பட்டாடைகளும் கிடைப்பதால் அதனை பயன்படுத்தாத நபர்களும் உள்ளனர் என்பதையும் நான் மறுக்கவில்லை. இன்னும் கூறுவதானால் தன்னுடைய புண்ணைக் குணப்படுத்த இரத்தத்தை உறியும் அட்டைபூச்சியை, அது செத்துவிடும் என்பதற்காக பயன்படுத்தாதவர்களும் உள்ளனர். இந்த அளவுக்கு மனிதனிடம் இரக்க குணம் உள்ளது என்பதையும் நான் ஒப்புக்கொள்கிறேன். அதுமட்டுமல்ல தண்ணீரிலுள்ள கிருமிகள் செத்துவிடக் கூடாது என்பதற்காக தன்னை அழித்துக் கொண்டு தண்ணீரையே குடிக்காமல் இருக்கும் அளவுக்கு இரக்க குணத்தின் எல்லையை ஒரு மனிதன் எட்டி விடலாம். இதனை யார் ஏற்றுக் கொண்டாலும், ஏற்று கொள்ளாவிட்டாலும் நான் ஏற்றுக் கொள்கிறேன். இவை அனைத்தையும் நான் ஏற்றுக் கொள்கிறேன்.

ஆனால் மனிதனின் இந்த இயல்பான குணநலன்களை நல்லொழுக்க நிலைகள் என்று கூறுவதையோ அல்லது இதுபோன்ற குணநலன்களால் மட்டும் தான் இறைவனை சந்திக்க தடையாகயிருக்கும் உள்ளார்ந்த அழுக்குகளை சுத்தப்படுத்த முடியும் என்று கூறுவதையோ என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. இவ்வாறு சாதுவாக திகழ்வதிலும், பிறருக்கு தொல்லை தராமல் இருப்பதிலும், பறவைகளும், மிருகங்களும் கூட மனிதனை மிகைத்து நிற்கின்றன. எனவே இது போன்ற குணஇயல்புகள் உயர்ந்த மனிதத்தன்மையை பெறுவதற்குரிய காரணிகள் எனக் கூறுவதை என்னால் ஒருபோதும் ஏற்றுக் கொள்ள முடியாது. மாறாக என்னைப் பொருத்தவரை அவ்வாறு கூறுவது இயற்கைச் சட்டத்துடன் மோதுவதாகும். மேலும் அது இறைதிருப்தியை

பெறுவதற்குரிய நல்லொழுக்கத்திற்கெதிரானதும் இறை வல்லமை நமக்கு வழங்கியுள்ள அருளை மறுப்பதுமாகும். மாறாக, ஆன்மீக நிலை என்பது எல்லா நல்லொழுக்கங்களையும் இடம், பொருளுக்கேற்ப பயன்படுத்துவதன் விளைவாகவும், இறைவழியில் நன்றியுணர்வுடன் நடப்பதன் மூலமாகவும், இறைவனுக்காகவே ஆகிவிடுவதன் மூலமாகவும் மனிதனுக்கு கிடைக்கின்றது. இறைவனுக்காக ஆகிவிட்ட மனிதனின் அடையாளம் என்னவென்றால் இறைவனின்றி அவனால் உயிர் வாழ இயலாது. இறைஞானம் பெற்றவர் இறைவனின் கைகளால் பலியிடப்பட்ட மீன் ஆவார். அவருக்கு வாழ்வளிக்கும் தண்ணீர் இறைநேசமாகும்.

## சீர்திருத்தத்திற்கான மூன்று வழிமுறைகள்

இப்போது நான் முந்தைய கூற்றின் பக்கம் வருகின்றேன். நஃப்ஸே அம்மாரா (தீமையை தூண்டும் ஆன்மா), நஃப்ஸே லவ்வாமா (குற்றஞ்சாட்டும் ஆன்மா), நஃப்ஸே முத்மயின்னா (நிம்மதியடைந்த ஆன்மா) என மனித நிலைகளின் மூன்று ஊற்றுகளைப் பற்றி நான் ஏற்கனவே கூறி விட்டேன். அடுத்து மனிதனின் சீர்திருத்தத்திற்கும் மூன்று வழிமுறைகள் உள்ளன.

## முதல் வழிமுறை

நாகரீகமற்ற, காட்டுமிராண்டிகளை உண்ணுதல், பருகுதல், மற்றும் திருமணம் செய்தல் போன்ற சமூக நெறிகளில் மனிதனுக்குரிய வழிமுறைகளில் நடக்கச் செய்து, நல்லொழுக்கத்தின் ஆரம்ப படித்தரத்தில் அவனை நிலைபெறச் செய்வதாகும். நிர்வாணமாக சுற்றித் திரியாமல் தடுப்பது, நாய்களை போன்று இறந்துபோன பிணங்களை உண்ணாமல் தடுப்பது, இன்னும் இது போன்ற ஒழுக்கங்கெட்ட செயல்களைச் செய்யாமல் தடுப்பது போன்ற அனைத்து விஷயங்களும் இயல்பான நிலைகளின் சீர்திருத்தத்தில் முதல்கட்ட சீர்திருத்தமாகும். இது எவ்வகையான சீர்திருத்தம் என்றால் இதற்கு உதாரணமாக நாம் இதனை கூறலாம். அதாவது (அந்தமானைச் சார்ந்த) போர்ட்பிளேயரிலுள்ள காட்டுவாசிகளில் ஒருவனுக்கு மனிதத்துவத்தின் அடிப்படையான விஷயங்களை கற்றுக் கொடுப்பதாக இருந்தால், முதலில் அவனுக்கு ஆரம்ப கட்ட சிறிய நல்லொழுக்கங்களும், ஒழுங்கு முறைகளும் கற்றுக் கொடுக்கப்படும்.

**சீர்திருத்தத்திற்குரிய இரண்டாவது வழிமுறை** என்னவென்றால், ஒருவர் மனிதத்துவத்திற்குரிய வெளிப்படையான ஒழுங்குமுறைகளை பின்பற்ற தொடங்கி விட்டால் அவருக்கு மனிதத்துவத்தின் உயரிய நன்னடத்தைகளை கற்றுக்கொடுப்பதாகும். மனிதனிடத்தில் என்னென்ன ஆற்றல்கள் நிறைந்திருக்கின்றனவோ, அவற்றை உரிய இடத்தில், சந்தர்ப்பத்தில் பயன்படுத்த போதனை வழங்குவதாகும். எந்த மக்கள் நன்னடத்தைகளை கொண்டவர்களாகி விட்டார்களோ அப்படிப்பட்ட இறையடியார்களை இறைநேசத்தின் பானத்தையும், இறைசந்திப்பின் இன்பத்தையும் ருசிக்கச் செய்வதாகும். இவ்வாறாக, திருக்குர்ஆன் மூன்று வகை சீர்திருத்தங்களை எடுத்துரைக்கின்றது.

உலகம் எல்லா வகையிலும் **சீர்கெட்டு, அழிந்துபோன காலகட்டத்தில்தான் நமது தலைவரும், எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தோன்றினார்கள்.** இது தொடர்பாக திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

ظَهَرَ الْفَسَادُ فِي الْبَرِّ وَالْبَحْرِ

காடுகளும் சீர்கெட்டுப் போயிருந்தன; கடலும் சீர்கெட்டுப் போயிருந்தன.

( 30 : 42 - காண்க. )

வேதம் வழங்கப்பட்ட மக்களும், வேதம் கிடைக்கப் பெறாத மக்களும் இறை வெளிப்பாடு எனும் (ஆன்மீக) நீரைப் பெறாதவர்களும் சீர்கெட்டு போனதன் பக்கமே இவ்வசனம் சுட்டிக் காட்டுகின்றது. எனவே உண்மையில், மரணித்தவர்களை உயிர்ப்பிப்பதே திருக்குர்ஆனின் பணியாகும்.

திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

اِعْلَمُوْٓا اَنَّ اللّٰهَ يُحْيِ الْاَرْضَ بَعْدَ مَوْتِهَا ط

அதாவது, அல்லாஹ் பூமியை அதன் மரணத்திற்கு பிறகு புதிய வடிவில் உயிர்ப்பிக்கிறான் என்பதை அறிந்து கொள்ளுங்கள். (57:18)

அக்காலத்தில் அரபு மக்களின் நிலைமை மிக மோசமான மிருகத்தனத்தின் எல்லையை எட்டியிருந்தது. மேலும் மனிதத்துவத்திற்குரிய எந்த தன்மையும் அவர்களிடத்தில் எஞ்சியிருக்கவில்லை. எல்லா பாவங்களும் அவர்களது பார்வையில் பெருமைக்குரியவையாக இருந்தன. ஒவ்வொரு நபரும் நூற்றுக்கணக்கான திருமணங்களை செய்து வந்தனர். தடுக்கப்பட்டவற்றை அவர்கள் தயங்காமல் வேட்டையாடி உண்டு வந்தனர். தாயை திருமணம் செய்வதை ஆகுமானதாகக் கருதி வந்தனர்.

அதன் காரணமாகவே அல்லாஹ் இவ்வாறு கூறினான்:

حُرِّمَتْ عَلَيْكُمْ أُمَّهَٰتُكُمْ

அதாவது, இன்று முதல் உங்களின் தாய்மார்கள் உங்களுக்கு (திருமணத்திற்கு) விலக்கப்பட்டவர்களாவர். (4:24)

அதே போன்று அவர்கள் இறந்தவற்றை உண்டு வந்தனர். மனித பிணத்தையும் சாப்பிட்டனர். அவர்கள் செய்திராத பாவங்கள் எதுவுமே இல்லை. பெரும்பான்மையினர் மறுமையை நிராகரித்தவர்களாக இருந்தனர். அவர்களில் பலர் இறையிருப்பையும் ஏற்றுக் கொள்ளாதவர்களாக இருந்தனர். பெண்பிள்ளைகளை தமது கைகளால் கொலை செய்து வந்தனர். அனாதைகளை கொலை செய்து அவர்களின் செல்வங்களை அபகரித்து வந்தனர். வெளிப்படையில் அவர்கள் மனிதர்களாயிருந்தாலும் அவர்கள் அறிவற்றவர்களாக இருந்தனர். அவர்களிடம் வெட்கம், தன்மானம் எதுவும் இருக்கவில்லை. மதுவை தண்ணீரைப் போன்று குடித்து வந்தனர். எவர் விபச்சாரத்தில் முதலிடம் வகித்தாரோ அவரே சமுதாயத்தின் தலைவர் என்றழைக்கப்பட்டார். சுற்றியுள்ள எல்லா சமுதாயங்களும் அவர்களுக்கு உம்மீ (அறிவில்லாதவர்) எனப் பெயர் வைக்குமளவுக்கு அவர்களிடத்தில் அறிவின்மையிருந்தது. அந்த காலகட்டத்தில் தான் இதுபோன்ற சமுதாயங்களின் சீர்திருத்தத்திற்காக நம்முடைய தலைவரும், நமது எஜமானருமாகிய ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மக்காவில் அவதரித்தார்கள்.

எந்த மூன்று வகையான சீர்திருத்தங்களை பற்றி நாம் தற்போது குறிப்பிட்டிருந்தோமோ, அதனை செய்வதற்குரிய காலகட்டம் உண்மையில் இதுவாகவேயிருந்தது. எனவே இதே காரணத்தினால்தான், திருக்குர்ஆன் உலகத்தின் மற்றெல்லா போதனைகளையும் விட முழுமையானது மற்றும் நிறைவானது என்று வாதிக்கின்றது. ஏனென்றால் உலகத்தின் மற்ற வேதங்களுக்கு இந்த மூன்று வகையான சீர்திருத்தங்களை செய்வதற்குரிய சந்தர்ப்பம் கிடைக்கவில்லை. ஆனால் திருக்குர்ஆனுக்கு கிடைத்தது. காட்டுமிராண்டிகளை மனிதனாகவும், மனிதனை நல்லொழுக்கமுடைய மனிதனாகவும், பின்னர் நல்லொழுக்கமிக்க மனிதனை இறைதொடர்புடைய மனிதனாகவும் மாற்றுவதே திருக்குர்ஆனின் நோக்கமாகும். எனவேதான் இந்த மூன்று விஷயங்களையும் திருக்குர்ஆன் உள்ளடக்கியுள்ளது.

## திருக்குர்ஆனில் காணப்படும் போதனைகளின் உண்மையான நோக்கம் மூவகை சீர்திருத்தமாகும் இயல்பான குணங்கள் நடுநிலையை கைக் கொள்வதன் மூலமாக நல்லொழுக்க நிலைகளாக மாறிவிடுகின்றன

மூவகைச் சீர்திருத்தங்களை நாம் விரிவாக எடுத்துரைப்பதற்கு முன்னர் பலவந்தமாக ஏற்றுக் கொள்ளச் செய்யும் எந்தவொரு போதனையும் திருக்குர்ஆனில் இல்லை என்பதை குறிப்பிடுவதை அவசியமாக நாம் கருதுகிறோம். இன்னும் கூறுவதென்றால், இந்த மூவகைச் சீர்திருத்தங்களே திருக்குர்ஆனின் நோக்கமாகும். இந்த மூவகை சீர்திருத்தங்களே திருக்குர்ஆனின் எல்லா போதனைகளின் சாராம்சமாகும். மற்ற அனைத்து கட்டளைகளும் மேற்குறிப்பிட்ட சீர்திருத்தங்களுக்குரிய காரணிகளாக உள்ளன. எவ்வாறு சில நேரத்தில் மருத்துவருக்கு நோயாளியை குணப்படுத்த அறுவை சிகிச்சை செய்வதற்கும், சில நேரங்களில் களிம்பு போடுவதற்கும் அவசியம் ஏற்படுகிறதோ அது போன்று திருக்குர்ஆனின் போதனைகளும் மனித இனத்தின் மீது கொண்ட அனுதாபத்தின் காரணமாக அந்தக் காரணிகளை பொருத்தமான இடங்களில் பயன்படுத்தி உள்ளது. மனிதனின் இயல்பான நிலைகளில் உள்ள மிருகங்களுக்கு ஒப்பான பண்புகளை நல்லொழுக்க நிலைகளாக மாற்றுவதும்,

பின்னர் நல்லொழுக்க நிலைகளிலிருந்து ஆன்மீகத்தின் எல்லையற்ற நிலையை அடையச் செய்வதுமே திருக்குர்ஆனின் போதனைகள் மற்றும் கட்டளைகளின் சுருக்கமாகும்.

இயல்பான நிலைகள் நல்லொழுக்க நிலைகளிலிருந்து வேறுபட்ட ஒன்றல்ல. மாறாக நடுநிலையை கையாண்டு, உரிய இடம் மற்றும் சந்தர்ப்பத்தில் அறிவின் துணை மற்றும் வழிகாட்டலுடன் வெளிப்படும் பண்புகளின் நிலைகளே நல்லொழுக்க நிலைகளாக மாறுகின்றன என்பதை நாம் இதற்கு முன் எடுத்துரைத்துள்ளோம். அறிவு மற்றும் இறைஞானத்திற்கேற்ப வெளிப்படாத எந்த ஒரு செயலும் அது எவ்வளவுதான் நல்லொழுக்கத்திற்கு ஒப்பானதாயிருந்தாலும் உண்மையில் நல்லொழுக்கமாயிருப்பதில்லை. மாறாக அது இயல்பின் ஒரு நிதானமற்ற, தற்செயலான நிகழ்வே ஆகும். உதாரணமாக, ஒரு நாய் அல்லது ஒரு ஆடு தனது எஜமானனிடத்தில் அன்பையும், பணிவையும் வெளிப்படுத்தினால், அந்த நாயை நல்லொழுக்கமிக்கது என்று எவரும் கூறுவதில்லை. அதே போன்று அந்த ஆட்டிற்கு நல்லொழுக்கத்தில் சிறந்தது என்று எவரும் பெயர் வைப்பதில்லை. அதே போன்று ஓநாய் அல்லது சிங்கத்திடம் காணப்படும் முரட்டுத்தனத்தின் காரணமாக அதை ஒழுக்கம் கெட்டது என்றும் நாம் கூறுவதில்லை. மாறாக, ஏற்கனவே கூறப்பட்டது போன்று இயல்பான குணநலன்கள் சிந்தனைக்கு பிறகும், உரிய இடத்திலும், தகுந்த சந்தர்ப்பத்திலும் வெளிப்படும்போதுதான் அவை நல்லொழுக்க நிலைகளாக அமைகின்றன. மேலும் அறிவுடன் சிந்தித்து செயல்படாத மனிதன் அறிவாற்றல் முதிர்ச்சி பெறாத பால்குடி குழந்தையை போன்றவனாவான். அல்லது அறிவாற்றலையும், புத்திக் கூர்மையையும் இழந்துவிட்ட பைத்தியக்காரனைப் போன்றவனாவான். எனவே எந்த மனிதன் பால்குடி மறவா பாலகன் மற்றும் பைத்தியக்காரனுக்கு ஒப்பானவனாகயிருப்பானோ அவன் சில சந்தர்ப்பத்தில் நல்லொழுக்கத்துடன் ஒப்பிடக்கூடிய சில செயல்களை வெளிப்படுத்தலாம். ஆனால் அதற்காக, அறிவுடைய எவரும் அதனை நல்லொழுக்கமான செயல் என்று கூற மாட்டார்.

ஏனென்றால் அந்த செயல்கள் பகுத்தறிவு மற்றும் சந்தர்ப்ப சூழ்நிலையைப் புரிந்து செயல்படுதல் எனும் ஊற்றிலிருந்து வெளிப்படுவதில்லை. மாறாக அது இயற்கையான உணர்வினால் தற்செயலாக வெளிப்பட்ட பண்புகளாகும். அதற்கு உதாரணமாக இதனைக் கூறலாம்.

ஒரு குழந்தை பிறந்தவுடனேயே பால் அருந்த தாயின் மார்பகத்தை நோக்கித் திரும்புகிறது. அதே போன்று ஒரு கோழிக்குஞ்சு முட்டையிலிருந்து வெளிவந்ததும் தனது இரையை நோக்கி ஓடுகின்றது. அதே போன்று அட்டைக் குஞ்சும் அட்டைப் பூச்சியின் பழக்கவழக்கங்களை தன்னகத்தே கொண்டுள்ளது. பாம்புக் குட்டி பாம்பின் குணத்தை வெளிப்படுத்துகின்றது. சிங்கத்தின் குட்டி சிங்கத்தின் குணத்தை வெளிப்படுத்துகின்றது. மேலும் குறிப்பாக மனிதக் குழந்தைகள் மனிதனுக்குரிய குணநலன்களை வெளிப்படுத்த துவங்கி விடுவதை சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். மேலும் அக்குழந்தை ஒரு வயது ஒன்றரை வயதை எட்டியவுடன் தனது இயல்பான குணங்களை தெளிவாக வெளிப்படுத்துகின்றது. உதாரணமாக முன்பு எவ்வாறு அழுது வந்ததோ அதை விட அதிகமாக சத்தமிட்டு அழுகின்றது. அதே போன்று புன்முறுவல் பெருஞ் சிரிப்பாக மாறிவிடுகின்றது. கண்களிலும் தெரிந்து பார்ப்பதற்கான அடையாளங்கள் உருவாகி விடுகின்றன. மேலும் இந்த வயதில் தனது விருப்பு அல்லது வெறுப்பை அசைவுகளின் மூலமாக வெளிப்படுத்தும் இன்னொரு இயல்பான விஷயம் உருவாகின்றது. சிலரை அக்குழந்தை உதைக்கும், சிலரிடம் அன்பு காட்டும். ஆனால் இவ்வனைத்து செயல்களுமே இயல்பாக வெளிப்படுகின்ற குணங்கள் ஆகும். எனவே இது போன்ற குழந்தைகளை போன்று பகுத்தறிவை சற்றும் பயன்படுத்தாத ஒரு காட்டுவாசியும், தனது ஒவ்வொரு சொல்லிலும், செயலிலும், அசைவிலும், மௌனத்திலும் இயல்பான குணநலன்களையே வெளிப்படுத்துகின்றான். மேலும் அவன் தனது இயல்பின் உணர்வுகளையே பின்பற்றுகின்றான். அவனுடைய எந்தக் கூற்றும் உள்ளார்ந்த ஆற்றல்களான சிந்தனை மற்றும் பகுத்தறிவிற்கேற்ப வெளிப்படுவதில்லை. மாறாக அவனுக்குள் எழுகின்ற இயற்கையான உணர்வுகள் வெளிப்புற அசைவுகளுக்கேற்ப வெளிப்பட்டுக் கொண்டே

இருக்கின்றன. அவனது உள்ளார்ந்த தூண்டுதலினால் வெளிப்படுகின்ற அவனது இயல்பான உணர்வுகள் அனைத்தும் தீங்கற்றவையாகவும் இருக்கலாம். இன்னும் கூறப்போனால் அவற்றில் சில நல்லொழுக்கத்திற்கு ஒப்பானவையாகக் கூட இருக்கலாம். ஆனால் அச்செயல்களில் பகுத்தறிவிற்கும், சிந்தனை ஆற்றலுக்கும் எப்பங்கும் இருப்பதில்லை. அப்படியே அவற்றுள் ஓரளவுக்கு அதன் பங்கிருந்தாலும் இயல்பான உணர்ச்சிகள் மேலோங்கி நிற்பதால் அதனை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியாது. மாறாக பகுத்தறிவும், சிந்தனையாற்றலும் அவற்றில் மிகைத்திருந்தால் மட்டுமே அதனை நாம் கணக்கில் எடுத்துக் கொள்ள முடியும்.

## உண்மையான நல்லொழுக்கம்

சுருக்கமாக, எந்த மனிதனிடம் இயல்பான உணர்வுகள் விலங்குகளைப் போன்றும், குழந்தைகளைப் போன்றும் பைத்தியக்காரர்களைப் போன்றும் மேலோங்கி நிற்குமோ, மேலும் எவர் தமது வாழ்க்கையை ஏறக்குறைய காட்டுவாசிகளைப் போன்று கழிப்பாரோ அப்படிப்பட்ட மனிதனின் செயல்களை உண்மையான நல்லொழுக்கமான செயல்களாக கூற இயலாது. மாறாக எப்போது இறைவனால் வழங்கப்பட்ட மனிதனின் அறிவு பக்குவமடைந்து அதன் மூலமாக நன்மை எது? தீமை எது? என பிரித்தறிகின்றதோ அல்லது இரண்டு தீமைகளுக்கும், இரண்டு நன்மைகளுக்குமிடையேயுள்ள வித்தியாசத்தை எப்போது உணர்ந்து கொள்கின்றதோ அப்போதுதான் அவன் வாழ்க்கையில் உண்மையான நல்லொழுக்கம் அல்லது தீய ஒழுக்கத்திற்கான காலகட்டம் ஆரம்பமாகும். மேலும் நன்மைகளை கைவிட்டுவிடுவதால் உள்ளத்தில் வருத்தத்தையும், தீமை செய்தால் வெட்கமும், வேதனையும் அடைதலே உண்மையான நல்லொழுக்கத்தின் நிலைகளாகும். இது மனித வாழ்க்கையின் இரண்டாவது படித்தரமாகும். இதனை இறைவனின் பரிசுத்த வேதம் நஃப்ஸே லவ்வாமா என்ற பெயரால் விளக்கிக் கூறுகின்றது. ஆனால் ஒரு காட்டுவாசியை நஃப்ஸே லவ்வாமா (குற்றஞ்சாட்டும் உள்ளம்) என்ற நிலை வரை கொண்டு வருவதற்கு மேலோட்டமான அறிவுரைகள் மட்டும் போதுமானவையல்ல. மாறாக தனது பிறப்பின் நோக்கத்தை

வீணானதாகவும், பொருளற்றதாகவும் கருதாமல், இறைஞானத்தின் விளைவாக, உண்மையான நல்லொழுக்கங்கள் அவனிடம் தோன்றிவிடுமளவுக்கு அவன் இறைவனை கண்டு கொள்ளும் நிலை அவனிடம் தோன்றுவது அவசியமாகும். இதன் காரணமாகவே அல்லாஹ் உண்மையான இறைவனை கண்டறிதலின்பால் கவனமூட்டுவதோடு ஒவ்வொரு செயலும், ஒழுக்கமும் இவ்வுலகில் ஆன்மீக இன்பம் அல்லது ஆன்மீக தண்டனைக்குக் காரணமான விளைவைக் கொண்டுள்ளன என்றும் அது மறுமை வாழ்க்கையில் தெள்ளத் தெளிவான தனது விளைவை வெளிப்படுத்தும் என்றும் நம்பிக்கையூட்டுகிறான். சுருக்கமாக நஃப்ஸே லவ்வாமா என்ற இந்தப் படித்தரத்தில், மனிதனுக்கு அறிவு, ஞானம் மற்றும் மனசாட்சியின் பங்கு எந்த அளவுக்கு கிடைக்கிறதென்றால் மனிதன் தீமையின்போது தன்னை கடிந்து கொள்கிறான். மேலும் நன்மை செய்ய விருப்பம் கொண்டவனாகவும், பேரவா கொண்டவனாகவும் திகழ்கின்றான். மனிதன் உயர்ந்த நல்லொழுக்கங்களை பெறுகின்ற படித்தரம் இதுவாகவே உள்ளது.

### கல்க் (படைப்பு) மற்றும் குல்க் (நல்லொழுக்கம்)

'குல்க்' என்ற சொல்லை சற்று இங்கு விவரித்து கூறுவது பொருத்தமானதாக இருக்கும் என நான் கருதுகிறேன். கல்க் என்ற சொல்லில் ஹ ( خ - என்ற ) எழுத்தின் மேல் உள்ள ஃபதா என்ற குறியீடு வெளிப்படையான படைப்பினை குறிக்கின்றது. அதே போன்று குல்க் என்ற சொல்லில் ஹ ( خ - என்ற ) எழுத்தின் மேலே வந்துள்ள ழம்மா என்ற குறியீடு உள்ளார்ந்த படைப்பைக் குறிக்கின்றது. மேலும் உட்புறமான பிறப்பு என்பது நல்லொழுக்கங்கள் மூலமாகவே முழுமை பெறுகின்றதேயொழிய இயல்பான உணர்வுகளால் அல்ல. எனவே 'குல்க்' என்ற சொல் நல்லொழுக்கத்திற்காக மட்டுமே பயன்படுத்தப்பட்டுள்ளது. இயல்பான உணர்வுகளுக்கு கூறப்படவில்லை. அடுத்து இன்னொன்றையும் இங்கு விளக்குவது பொருத்தமானதாகும். அதாவது பொதுவாக மக்கள் சாந்தகுணம், மென்மை மற்றும் தன்னடக்கம் ஆகியவையே நல்லொழுக்கம் எனக் கருதுகின்றனர். இது அவர்களின் தவறான கருத்தாகும். மாறாக,

வெளிப்புறச் செயல்களுக்கேற்ப உட்புறத்தில் வைக்கப்பட்டுள்ள மனிதனின் மேன்மைகளின் அனைத்து நிலைமைகளுக்கும் நல்லொழுக்கம் என்று பெயர்.

உதாரணமாக, மனிதன் கண்களால் அழுகின்றான். அதற்கு இணக்கமாக உள்ளத்தில் உருக்கம் என்ற ஓர் ஆற்றல் உருவாகின்றது. மனிதன் இறைவனால் வழங்கப்பட்ட அறிவினை கொண்டு அந்த ஆற்றலை பொருத்தமான இடத்தில் பயன்படுத்தினால் அது ஒரு நல்லொழுக்கமாகும். அதே போன்று மனிதன் கைகளால் எதிரியுடன் சண்டையிடுகின்றான். இந்த செயலோடு தொடர்புடைய உள்ளத்தில் உள்ள ஆற்றலின் பெயர் வீரமாகும். எனவே மனிதன் தகுந்த இடம் மற்றும் சந்தர்ப்பத்தில் அந்த ஆற்றலை பயன்படுத்தும் போது அது நல்லொழுக்கமாகி விடும். அதே போன்று சிலநேரத்தில் மனிதன் கைகளால் அநீதியிழைப்பவர்களிடமிருந்து அநீதியிழைக்கப்பட்டவர்களை காப்பாற்ற முயற்சிக்கின்றான். அல்லது ஏழைகளுக்கும், பசித்தவர்களுக்கும் தருமம் செய்ய விரும்புகின்றான். அல்லது வேறு வகையில் மனிதயினத்திற்கு தொண்டாற்ற விழைகிறான். இந்த செயல்களோடு தொடர்புடைய உள்ளத்தில் உள்ள ஆற்றலினை நாம் கருணை எனக் கூறுகிறோம். மேலும் சில நேரத்தில் மனிதன் தனது கைகளால் அநீதியிழைப்பவருக்கு தண்டனை வழங்குகிறான். இச்செயலோடு தொடர்புடைய உள்ளத்தில் உள்ள ஆற்றலுக்குப் பெயர் பழிவாங்குதலாகும். அடுத்து சில சந்தர்ப்பத்தில் மனிதன் தன்னை தாக்குகின்ற ஒருவனை திருப்பித் தாக்குவதில்லை. அநீதியிழைப்பவனின் அநீதியை மன்னித்து விடுகிறான். இச்செயலோடு தொடர்புடைய உள்ளத்தில் உள்ள ஆற்றலின் பெயரை மன்னிப்பு மற்றும் பொறுமை என்று கூறுகிறோம். சில நேரத்தில் மனிதன், மனிதயினம் பயன்பெறும் வகையில் தனது கைகளால் பணி செய்கின்றான். அல்லது தனது கால்கள், இதயம் அல்லது மூளையை அதற்காக பயன்படுத்துகின்றான். அவர்களின் நலனுக்காக தனது செல்வத்தை செலவிடுகின்றான். இச்செயலுடன் தொடர்புடைய உள்ளத்தில் உள்ள ஆற்றலின் பெயர் தயாள குணமாகும்.

ஆக மனிதன் எப்போது இவ்வனைத்து ஆற்றல்களையும் தகுந்த சந்தர்ப்பத்திலும், இடத்திலும் பயன்படுத்துகின்றானோ அப்போது அவை நல்லொழுக்கங்கள் என அழைக்கப்படும். மகத்துவ மிக்க அல்லாஹ் நம்முடைய நபி (ஸல்) அவர்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றான் :

وَ اِنَّكَ لَعَلٰى خُلُقٍ عَظِيْمٍ ۝

நிச்சயமாக நீர் மிக மகத்தான நல்லொழுக்கத்தில் நிலை பெற்றுள்ளீர். (68:5)

எனவே, இதன் பொருளும் மேற்குறிப்பிட்ட விளக்கத்திற்கு ஏற்பவே ஆகும். அதாவது, தாராள மனப்பான்மை, வீரம், நியாய உணர்வு, இரக்கம், அதிகமாக நன்மை செய்தல், உண்மை ஆகிய எல்லா வகையான நல்லொழுக்கங்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம் காணப்பட்டன.

சுருக்கமாக, பிறரை மதித்தல், வெட்கம், நேர்மை, ஆண்மை, தன்மானம், உறுதிமிக்க மனப்பான்மை, கற்பு, இறையச்சம், நியாய உணர்வு, அனுதாபம், வீரம், தாராள மனப்பான்மை, மன்னித்தல், பொறுமை, நன்மை செய்தல், உண்மை, நன்றியுணர்வு போன்ற மனிதனின் உள்ளத்தில் காணப்படும் ஆற்றல்களாகிய இந்த அனைத்தும் இயல்பான குணநலன்கள் அறிவுப்பூர்வமாக அதற்குரிய பொருத்தமான இடம் மற்றும் தகுந்த சந்தர்ப்பத்தில் வெளிப்படுத்தப்படும்போது அந்த அனைத்து நிலைகளுக்கும் அஹ்லாக் அதாவது நல்லொழுக்கம் என்று பெயர். இந்த அனைத்து ஒழுக்கங்களும் உண்மையில் மனிதனின் இயல்பான நிலைகள் மற்றும் இயல்பான உணர்வுகளே ஆகும். எப்போது நல்ல எண்ணத்துடன் தகுந்த இடத்திலும் சந்தர்ப்பத்திலும் அவை பயன்படுத்தப்படுமோ அப்போதுதான் அவை நல்லொழுக்கங்கள் எனக் கூறப்படும். மேலும் மனித இயல்புகளின் சிறப்புகளில் ஒரு சிறப்பு என்னவென்றால் அவன் முன்னேற்றத்தை விரும்பக்கூடிய உயிரினமாக உள்ளான். எனவே அவன் உண்மையான மார்க்கத்தை பின்பற்றுதல் மற்றும் நல்லடியார்களுடனான நட்பு

மற்றும் நல்ல போதனைகளின் மூலமாக மேற்குறிப்பிட்ட இயல்பான குணங்களை அவன் நல்லொழுக்கப் பண்புகளாக மாற்றிக் கொள்கிறான். வேறு எந்த உயிரினத்திற்கும் இந்தச் சிறப்பு கிடைக்கவில்லை.

## முதல்வகை சீர்திருத்தம்,
## அதாவது இயல்பான நிலைகள்

திருக்குர்ஆன் கூறும் மூவகை சீர்திருத்தங்களில் இயல்பான நிலைகளோடு தொடர்புடைய ஆரம்பப் படித்தரமான முதல்வகை சீர்திருத்தத்தை நாம் இங்கு தற்போது எடுத்துக் கூறுகிறோம். இந்த முதல்வகை சீர்திருத்தம் நல்லொழுக்க வகைகளில் நாகரீகம் என்று கூறப்படும் விஷயங்களோடு தொடர்புடையதாகும். அதாவது எந்த ஒழுக்க நெறிகளை பின்பற்றுவதால் காட்டுவாசிகளின் இயல்பு நிலைகளான உண்ணுதல், பருகுதல் மற்றும் திருமணம் செய்தல் போன்ற சமூக நெறிமுறைகளில் நடுநிலை கையாளப்படுமோ அந்த ஒழுக்க வழிமுறைகள் தொடர்புடையதாகும். மேலும் இந்த முதல்வகை சீர்திருத்தம் காட்டுமிராண்டித்தனமான மற்றும் விலங்கினங்களுக்கு ஒப்பான வாழ்க்கையிலிருந்து மனிதனை விடுவிக்கின்றது. அப்படிப்பட்ட ஒழுக்கநெறிகள் தொடர்பாக மகத்துவமிக்க இறைவன் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான்.

حُرِّمَتْ عَلَيْكُمْ اُمَّهٰتُكُمْ وَبَنٰتُكُمْ وَاَخَوٰتُكُمْ وَعَمّٰتُكُمْ وَخٰلٰتُكُمْ وَبَنٰتُ
الْاَخِ وَبَنٰتُ الْاُخْتِ وَاُمَّهٰتُكُمُ الّٰتِيْٓ اَرْضَعْنَكُمْ وَاَخَوٰتُكُمْ مِّنَ الرَّضَاعَةِ
وَاُمَّهٰتُ نِسَآئِكُمْ وَرَبَآئِبُكُمُ الّٰتِيْ فِيْ حُجُوْرِكُمْ مِّنْ نِّسَآئِكُمُ الّٰتِيْ دَخَلْتُمْ
بِهِنَّ ۫ فَاِنْ لَّمْ تَكُوْنُوْا دَخَلْتُمْ بِهِنَّ فَلَا جُنَاحَ عَلَيْكُمْ ۫ وَحَلَآئِلُ اَبْنَآئِكُمُ
الَّذِيْنَ مِنْ اَصْلَابِكُمْ ۙ وَاَنْ تَجْمَعُوْا بَيْنَ الْاُخْتَيْنِ اِلَّا مَا قَدْ سَلَفَ ؕ

உங்களின் தாய்மார்கள் உங்களுக்கு விலக்கப்பட்டவர்–களாவர். அதே போன்று உங்களின் புதல்விகளும், உங்களின் சகோதரிகளும், உங்களின் தந்தையின் சகோதரிகளும், உங்கள் தாயின் சகோதரிகளும், உங்கள் சகோதரரின் மகள்களும்,

உங்கள் சகோதரியின் மகள்களும், உங்களுக்கு பாலூட்டிய தாய்களும், உங்கள் பால்குடி சகோதரிகளும், உங்களின் மனைவிகளின் தாய்களும், நீங்கள் வீடுகூடிய உங்கள் மனைவிகளின் முந்தைய கணவர் மூலமாக பிறந்த பெண்களும் உங்களுக்கு விலக்கப்பட்டவர்களாவர். ஆனால் நீங்கள் அவர்களுடைய தாய்களுடன் வீடுகூடவில்லையாயின், (முந்தைய கணவருக்குப் பிறந்த பெண்களை மணந்து கொள்வதில்) உங்கள் மீது எந்தக் குற்றமுமில்லை. உங்களின் சொந்த மகன்களின் மனைவிகளும், அதே போன்று இரண்டு சகோதரிகளை ஒரே நேரத்தில் திருமணம் செய்து கொள்வதும் உங்களுக்கு விலக்கப்பட்டதாகும். இதற்கு முன் இருந்து வந்த இந்த நடைமுறைகள் அனைத்தும் இன்று உங்களுக்கு விலக்கப்படுகின்றது (4:24)

لَا يَحِلُّ لَكُمْ اَنْ تَرِثُوا النِّسَآءَ كَرْهًا ؕ

وَلَا تَنْكِحُوْا مَا نَكَحَ اٰبَآؤُكُمْ مِّنَ النِّسَآءِ اِلَّا مَا قَدْ سَلَفَ ؕ

நீங்கள் பலவந்தமாக பெண்களுக்கு வாரிசுகளாவது உங்களுக்கு ஆகுமானதன்று. (4:20) அதே போன்று உங்கள் தந்தையர்கள் மணம் முடித்த எவரையும் நீங்கள் திருமணம் செய்து கொள்ளாதீர்கள். முன்னர் நிகழ்ந்து விட்டது போகட்டும் (4:23)

اُحِلَّ لَكُمُ الطَّيِّبٰتُ ؕ

وَالْمُحْصَنٰتُ مِنَ الْمُؤْمِنٰتِ وَالْمُحْصَنٰتُ مِنَ الَّذِيْنَ اُوْتُوا

الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ اِذَاۤ اٰتَيْتُمُوْهُنَّ اُجُوْرَهُنَّ مُحْصِنِيْنَ غَيْرَ مُسٰفِحِيْنَ

وَلَا مُتَّخِذِىْۤ اَخْدَانٍ ؕ

நம்பிக்கையாளர்களுள் கற்புள்ள பெண்களும், உங்களுக்கு முன்னர் வேதம் வழங்கப்பட்டவர்களுள் கற்புள்ள பெண்களும், நீங்கள் திருமணம் செய்து கொள்ள அனுமதிக்கப்பட்ட பெண்கள் ஆவர். ஆனால் முறையாக மஹ்ர் நிர்ணயித்து திருமணம் செய்ய வேண்டும். விபச்சாரமோ இரகசியமாக உறவு கொள்வதோ ஆகுமானதன்று. (5:6)

அரபு மக்களில் சில அறிவீனர்கள், எவர்களுக்கு பிள்ளைபேறு இல்லாமல் இருந்ததோ அவர்கள் தமது மனைவியை பிள்ளை பெறச் செய்ய மற்றவரிடம் அனுப்பும் பழக்கம் இருந்து வந்தது. இந்த தீய பழக்கத்திற்கு 'முஸாஃபிஹத்' என்பது பெயராகும். திருக்குர்ஆன் இந்த நடைமுறையை (மேற்கண்ட வசனம் மூலம்) தடை செய்து விட்டது.

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான் :

وَلَا تَقْتُلُوْٓا اَنْفُسَكُمْ ؕ

நீங்கள் தற்கொலை செய்யாதீர்கள். (4:30)

وَلَا تَقْتُلُوْٓا اَوْلَادَكُمْ

உங்கள் குழந்தைகளை கொலை செய்யாதீர்கள். (6:152)

அடுத்து அல்லாஹ் கூறுகின்றான் :

لَا تَدْخُلُوْا بُيُوْتًا غَيْرَ بُيُوْتِكُمْ حَتّٰى تَسْتَاْنِسُوْا وَتُسَلِّمُوْا عَلٰٓى اَهْلِهَا ؕ.........
فَاِنْ لَّمْ تَجِدُوْا فِيْهَآ اَحَدًا فَلَا تَدْخُلُوْهَا حَتّٰى يُؤْذَنَ لَكُمْ ۚ وَاِنْ قِيْلَ لَكُمُ
ارْجِعُوْا فَارْجِعُوْا هُوَ اَزْكٰى لَكُمْ ؕ

பிறருடைய வீடுகளில் காட்டுவாசிகளைப் போன்று அனுமதி பெறாமல் உங்கள் விருப்பப்படி நுழைந்து விடாதீர்கள். அனுமதி பெற்று செல்வது நிபந்தனையாகும். பிறரின் வீடுகளுக்குள் நுழையும் முன் 'அஸ்ஸலாமு அலைக்கும்' எனக் கூறுங்கள். அந்த வீடுகளில் யாருமில்லை என்றால், வீட்டின் உரிமையாளர் உங்களுக்கு அனுமதியளிக்காதவரை அந்த வீடுகளில் நுழையாதீர்கள். வீட்டிலுள்ளவர் உங்களிடம் திரும்பி சென்று விடுங்கள் என்று கூறினால், திரும்பி சென்று விடுங்கள் (24:28-29)

وَاْتُوا الْبُيُوْتَ مِنْ اَبْوَابِهَا ۖ

வீடுகளில் சுவரேறிக் குதித்துச் செல்லாதீர்கள். மாறாக, வீடுகளில் அந்த வீடுகளின் வாயில் வழியாகச் செல்லுங்கள். (2:190)

وَاِذَا حُيِّيْتُمْ بِتَحِيَّةٍ فَحَيُّوْا بِاَحْسَنَ مِنْهَآ اَوْ رُدُّوْهَا ؕ

உங்களுக்கு எவரேனும் ஸலாம் கூறினால் அதனை விட சிறந்த முறையில் ஸலாம் கூறுங்கள். (4:87)

اِنَّمَا الْخَمْرُ وَالْمَيْسِرُ وَالْاَنْصَابُ وَالْاَزْلَامُ رِجْسٌ مِّنْ عَمَلِ الشَّيْطٰنِ فَاجْتَنِبُوْهُ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿۹۱﴾

மது, சூதாட்டம், சிலைவணக்கம், குறிபார்க்கும் அம்புகள் ஆகிய இவ்வனைத்து வேலைகளும் அசுத்தமான மற்றும் ஷய்த்தானின் செயல்களாகும். இவற்றிலிருந்து விலகிக் கொள்ளுங்கள். (5:91)

حُرِّمَتْ عَلَيْكُمُ الْمَيْتَةُ وَالدَّمُ وَلَحْمُ الْخِنْزِيْرِ وَمَآ اُهِلَّ لِغَيْرِ اللّٰهِ بِهٖ وَالْمُنْخَنِقَةُ وَالْمَوْقُوْذَةُ وَالْمُتَرَدِّيَةُ وَالنَّطِيْحَةُ وَمَآ اَكَلَ السَّبُعُ اِلَّا مَا ذَكَّيْتُمْ ۗ وَمَا ذُبِحَ عَلَى النُّصُبِ

இறந்தவற்றை உண்ணாதீர்கள். பன்றி இறைச்சியை உண்ணாதீர்கள். சிலைகளுக்கு படைக்கப்பட்டவற்றை உண்ணாதீர்கள். தடியினால் அடித்து கொல்லப்பட்டவற்றை உண்ணாதீர்கள். உயரத்திலிருந்து விழுந்து மடிந்தவற்றையும் உண்ணாதீர்கள். கொம்பால் குத்தப்பட்டு இறந்தவற்றையும் உண்ணாதீர்கள். காட்டு விலங்குகள் அடித்து கொன்றவற்றையும் உண்ணாதீர்கள். சிலைகளின் பலிபீடத்தில் அறுக்கப்பட்டதையும் உண்ணாதீர்கள். ஏனென்றால் இவை யாவும் இறந்தவை என்ற சட்டத்தின் கீழ் வருகின்றன. அவற்றை உண்பது தடுக்கப்பட்டாகும். (5:4)

يَسْـَٔلُوْنَكَ مَاذَآ اُحِلَّ لَهُمْ ؕ قُلْ اُحِلَّ لَكُمُ الطَّيِّبٰتُ ۙ

பின்பு நாங்கள் எதனை உண்பது? என்று இம்மக்கள் கேட்டால் உலகில் உள்ள எல்லா தூய்மையானவற்றையும் உண்ணுங்கள். பிணங்களையும், பிணங்களுக்கு ஒப்பானவற்றையும் அசுத்தமானவற்றையும் மட்டும் உண்ணாதீர்கள் என நீர் அவர்களிடம் கூறுவீராக. (5:5)

................ اِذَاقِيْلَ لَكُمْ تَفَسَّحُوْا فِى الْمَجٰلِسِ فَافْسَحُوْا
وَاِذَا قِيْلَ انْشُزُوْا فَانْشُزُوْا

சபைகளில் அகன்று இருங்கள் என்று கூறப்பட்டால் மற்றவர்களும் அமர்வதற்கு ஏதுவாக விரைவாக அகன்று பிறருக்கு இடமளியுங்கள். நீங்கள் எழுந்து சென்று விடுங்கள் என்று கூறப்பட்டால் ஏன்? எதற்கு? என்று கேட்காமல் எழுந்து சென்று விடுங்கள். (58:12)

كُلُوْا وَاشْرَبُوْا وَلَا تُسْرِفُوْا ۚ

இறைச்சி, பருப்பு போன்ற எல்லா தூய உணவுகளையும் உண்ணுங்கள். ஆனால் ஒரு பக்கம் அதிகமாக சாய்ந்து விடாதீர்கள். வீண்விரயம் மற்றும் அளவுக்கதிகமாக உண்ணுவதை தவிர்த்துக் கொள்ளுங்கள். (7:32)

وَقُوْلُوْا قَوْلًا سَدِيْدًا ۙ﴿٧١﴾

வீண் விஷயங்களை பேசாதீர்கள். தகுந்த இடத்தில், தகுந்த சந்தர்ப்பத்தில் பேசுங்கள். (33:71).

وَثِيَابَكَ فَطَهِّرْ ۙ﴿٥﴾ وَالرُّجْزَ فَاهْجُرْ ۙ﴿٦﴾

உங்களுடைய ஆடையை சுத்தமாக வைத்துக் கொள்ளுங்கள். உடலையும், வீட்டையும், தெருவையும் நீங்கள் இருக்கும் எல்லா இடத்தையும் அசுத்தம், அழுக்கு, கறை ஆகியவற்றிலிருந்து விலக்கி வையுங்கள். (74:5,6) அதாவது குளித்து வாருங்கள். வீட்டை சுத்தமாக வைத்துக்கொள்ளும் பழக்கத்தை பேணுங்கள்.

وَاقْصِدْ فِىْ مَشْيِكَ وَاغْضُضْ مِنْ صَوْتِكَ ؕ

وَتَزَوَّدُوْا فَاِنَّ خَيْرَ الزَّادِ التَّقْوٰى ۡ

وَاِنْ كُنْتُمْ جُنُبًا فَاطَّهَّرُوْا ؕ

وَفِىْٓ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَالْمَحْرُوْمِ ﴿٢٠﴾

وَاِنْ خِفْتُمْ اَلَّا تُقْسِطُوْا فِى الْيَتٰمٰى فَانْكِحُوْا مَا طَابَ لَكُمْ مِّنَ النِّسَآءِ مَثْنٰى
وَثُلٰثَ وَرُبٰعَ ۚ فَاِنْ خِفْتُمْ اَلَّا تَعْدِلُوْا فَوَاحِدَةً اَوْ مَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ ذٰلِكَ
اَدْنٰٓى اَلَّا تَعُوْلُوْا ۝٣ وَاٰتُوا النِّسَآءَ صَدُقٰتِهِنَّ نِحْلَةً ؕ

உரத்த குரலிலும் அல்லாமல், மிக மெதுவாகவும் அல்லாமல் பேசுவதில் நடுநிலையை கையாளுங்கள். (31:20) தேவையான நேரத்திலும் மற்றும் விதிவிலக்கான சந்தர்ப்பங்களையும் தவிர மற்ற நேரங்களில் எப்பொழுதும் நடுநிலையை மேற்கொள்ளுங்கள். நடையில் மிக வேகமாக அல்லாமலும் மிக மெதுவாகவும் அல்லாமலும் நடுநிலையைப் பேணுங்கள். பயணம் மேற்கொள்ளும்போது பயணத்திற்கு தேவையான எல்லா ஏற்பாடுகளையும் செய்து கொள்ளுங்கள். பிறரிடம் யாசிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்ளும் வகையில் பயணத்திற்குப் போதுமான உணவினை எடுத்துக் கொள்ளுங்கள். (2:198)

மனைவியுடன் தாம்பத்ய உறவு கொண்டால் குளித்து விடுங்கள்.(5:7) உணவு உண்ணும்போது யாசிப்பவருக்கும் கொடுங்கள். சந்தர்ப்பம் கிடைத்தால் நாய்களுக்கும், மற்ற பறவைகளுக்கும் உணவளியுங்கள்.(51:20) நீங்கள் பராமரிக்கும் அனாதை பெண்களை திருமணம் செய்வதில் தவறில்லை. ஆனால் அவர்கள் அனாதை என்ற காரணத்தினால் அவர்கள் மீது நீங்கள் அநீதியிழைத்து விடுவீர்கள் எனக் கருதினால் பெற்றோர்கள் மற்றும் உறவினர்களை கொண்ட, உங்களுக்கு கண்ணியமாக இருக்கும் பெண்களில் இரண்டு, மூன்று, நான்கு வரை நீங்கள் திருமணம் செய்து கொள்ளலாம். ஆனால் அவர்களிடம் நீதியுடன் நடக்க வேண்டுமென்பது நிபந்தனையாகும்.(4:4,5) நீதியுடன் நடக்க முடியாதென்றால், பிறகு ஒன்றையே போதுமானதாகக் கொள்ளுங்கள். தேவை ஏற்பட்டாலும் சரியே! நீங்கள் உங்களின் பழைய பழக்கவழக்கத்தின்படி, கணக்கற்று திருமணம் செய்துவிடக் கூடாது என்பதற்காகத்தான் 4 என்ற வரையறை வகுக்கப்பட்டுள்ளது. அதாவது நூற்றுக்கணக்கான திருமணங்கள் செய்யக் கூடாது என்பதற்காகவும், அதேநேரத்தில் விபச்சாரத்தின்

பக்கம் சென்றுவிடக்கூடாது என்பதற்காகவுமே 4 திருமணங்களை செய்து கொள்ள வரையறை வகுக்கப்பட்டுள்ளது. ஆனால் மஹர் கொடுத்து முறையாக மணம் முடிக்க வேண்டும்.(4:5)

சுருக்கமாக, இதுவே திருக்குர்ஆன் போதிக்கும் சீர்திருத்தத்தின் முதல் கட்டமாகும். இதில் மனிதனின் இயல்பான நிலைகளை காட்டுமிராண்டித்தனமான வழிமுறைகளிலிருந்து வெளியேற்றி மனிதத்துவத்தின் அடிப்படை மற்றும் நாகரீகத்தின் பக்கம் கவனமூட்டப்பட்டிருக்கின்றது. முதல்வகை சீர்திருத்தத்திற்குரிய இந்த போதனைகளில் தற்போது உயரிய நல்லொழுக்கத்தைப் பற்றி எதுவும் குறிப்பிடப்படவில்லை. மனிதத்துவத்திற்குரிய ஒழுக்க நெறிமுறைகளே கூறப்பட்டுள்ளன. நம்முடைய நபி (ஸல்) அவர்கள் எந்த சமுதாயத்தின் சீர்திருத்தத்திற்காக தோன்றினார்களோ அந்த சமுதாயம் காட்டுமிராண்டித்தனத்தில் மற்ற எல்லா சமுதாயங்களை விடவும் முன்னேறியிருந்தது என்பதை நாம் ஏற்கனவே குறிப்பிட்டுள்ளோம். மனிதத்துவத்திற்குரிய வழிமுறையின் எந்தவோர் அம்சமும் அவர்களிடத்தில் இல்லாமல் இருந்தது. எனவே முதலில் மனிதத்துவத்திற்குரிய வெளிப்படையான ஒழுக்க நெறிகளை அவர்களுக்குக் கற்று கொடுப்பது அவசியமாயிருந்தது.

## பன்றி இறைச்சி விலக்கப்பட்டதாகும்

இங்கு நினைவில் கொள்ளத்தக்க ஒரு விஷயம் உள்ளது. அது என்னவென்றால், விலக்கப்பட்ட மாமிசமான பன்றியின் பெயரிலேயே விலக்கப்பட்டதற்குரிய காரணத்தை இறைவன் ஆரம்பம் முதலே குறிப்பிட்டுள்ளான். ஏனெனில் கின்ஸீர் (பன்றி) என்ற சொல் கின்ஸ் மற்றும் அர் என்ற இரண்டு சொற்கள் சேர்ந்ததாகும். அதாவது நான் அதனை மிக அசுத்தமானதாக காண்கிறேன் என்பது அதன் பொருளாகும். கின்ஸ் என்பதன் பொருள் மிக அசுத்தமானது என்பதாகும். அர் என்பதன் பொருள் நான் காண்கின்றேன் என்பதாகும். எனவே தொடக்கம் முதலே இறைவன் புறமிருந்து அந்த விலங்கிற்கு கிடைத்த பெயரே அதன் அசுத்தத்தை சுட்டிக் காட்டுகின்றது. ஆச்சரியத்திற்குரிய தற்செயலான விஷயம் என்னவென்றால், ஹிந்தி மொழியிலும் அந்த விலங்கினை ஸுவர் என்றே கூறுவர். மேலும் இந்த

சொல்லும் ஸூ மற்றும் அர் என்ற சொற்களால் இணைந்ததாகும். அதன் பொருள் நான் இதனை மிக அசிங்கமானதாக காண்கிறேன் என்பதாகும். 'சூ' என்ற அரபிச் சொல் ஹிந்தியில் எப்படி வந்தது? என ஆச்சரியம் கொள்ளத் தேவையில்லை.

ஏனெனில் 'அரபி மொழி' எல்லா மொழிகளின் தாயாகும் என்பதனை நான் 'மினனுர்ரஹ்மான்' என்ற எனது நூலில் நிரூபித்துள்ளேன். மேலும் அரபிச் சொல் ஒன்றல்ல, இரண்டல்ல மாறாக ஆயிரக்கணக்கான சொற்கள் மற்ற மொழிகளில் கலந்துள்ளன. எனவே 'சூ' என்பது அரபிச் சொல் ஆகும். எனவே ஹிந்தியில் சூ என்பதன் பொருள் 'பத்' அசிங்கமானது ஆகும். ஆக இந்த விலங்கினை 'பத்' (அசிங்கமானது) என்றும் கூறுகின்றனர். முழு உலகின் மொழியாக அரபி இருந்தபோது கின்ஸீர் என்று அரபியில் அழைக்கப்பட்ட அவ்விலங்கின் பெயரின் பொருளுக்கேற்ற சொல்லாலேயே இந்த நாட்டில் பிரபலமாகியுள்ளது என்பதில் எவ்வித சந்தேகமும் இல்லை. மேலும் தற்போது வரை அந்தச் சொல் நிலைபெற்றுள்ளது. சமஸ்கிருத மொழியில் இந்தச் சொல் உருமாறி அதற்கு இணக்கமான வேறு சொல்லாக மாறியிருக்கலாம். ஆனால் சரியான சொல் கின்ஸீர் என்பதே ஆகும். ஏனென்றால் அவ்விலங்கு கின்ஸீர் என்ற பெயருக்குரிய காரணத்தை தன்னகத்தே கொண்டு அதற்கு சாட்சி பகர்கின்றது. 'மிகவும் அசுத்தமானது' என்ற சொல்லிற்கான விளக்கத்திற்கு அவசியமேயில்லை. மேலும் அந்த விலங்கு (பன்றி) அசுத்தத்திலும் அசுத்தத்தை உண்ணக்கூடியது என்பதும் மிக வெட்கங்கெட்ட மிருகம் என்பதும் யாருக்குத்தான் தெரியாது?

இனி அவ்விலங்கு விலக்கப்பட்டதற்குரிய காரணத்தை பார்ப்போம். இது போன்ற அசுத்தமான விலங்கின் மாமிசத்தின் தாக்கம் உடலிலும் ஆன்மாவிலும் ஏற்படுவது இயற்கைச் சட்டமாகும். ஏனென்றால் உணவின் தாக்கமும் மனித ஆன்மாவின்மீது ஏற்படுகின்றது என்பதை நாம் ஏற்கனவே நிரூபித்துக் காட்டியுள்ளோம். எனவே இது போன்ற தீய உணவின் தாக்கமும் தீயதாகவே இருக்கும் என்பதில் என்ன சந்தேகம் உள்ளது? இந்த விலங்கின் மாமிசத்தை உண்பதால் மனிதனிடத்தில் குறிப்பாக வெட்க உணர்வு குறைந்து

வெட்கங்கெட்ட நிலை அதிகரித்து விடும் என்று இஸ்லாத்திற்கு முன்பாகவே யுனானி மருத்துவர்கள் கருத்துக் கூறியுள்ளனர். இறந்ததை உண்பதால் அதன் தாக்கமும் உண்பவர் மீது ஏற்படுகின்றது. மேலும் அது மனித உடல் ஆரோக்கியத்திற்கு தீங்கு விளைவிக்கக் கூடியது என்பதாலும்தான் ஷரீஅத் பிணத்தை உண்பதை தடுத்துள்ளது. கழுத்து நெறித்து கொல்லப்பட்ட அல்லது தடியால் அடித்துக் கொல்லப்பட்ட விலங்குகளின் இரத்தம் உடலுக்குள்ளேயே தேங்கி விடுவதால் அதற்கும் பிணத்திற்கு பொருந்தக்கூடிய கட்டளையே பொருந்துகின்றது. பிணத்தின் இரத்தம் உடலுக்குள்ளேயே தங்கிவிடும்போது அது தனது நிலையில் இருக்க முடியுமா? இருக்காது. மாறாக, அது உறைந்துபோகும் காரணத்தால் மிக விரைவில் கெட்டுப் போய்விடுகின்றது. மேலும் அது கெட்டுப்போவதால் முழு உடலையும் அழுகச் செய்கின்றது. மேலும் இரத்தத்தில் உள்ள அணுக்கள் இறந்து விஷத்தன்மையுள்ள, அழுகிய நிலையை உடலில் பரவச் செய்து விடுகிறது என தற்போதைய ஆராய்ச்சிகளினாலும் நிரூபிக்கப்பட்டுள்ளன.

## மனிதனின் நல்லொழுக்க நிலைகள்

மனிதனின் இயல்பான நிலைகளை தகுந்த ஒழுங்கு-முறைகளுக்குட்படுத்தி, நல்லொழுக்க நிலைகள் வரை சென்றடைச் செய்வது திருக்குர்ஆன் கூறும் சீர்திருத்தத்தின் இரண்டாவது அம்சமாகும். எனவே இது மிகப் பெரிய அம்சம் என்பதை தெரிந்து கொள்ளுங்கள். நாம் இந்த அம்சத்தை மிக விரிவாக எடுத்துரைத்தால் அதாவது திருக்குர்ஆன் கூறும் நல்லொழுக்கங்களையெல்லாம் எடுத்துக் கூற விரும்பினால் எனக்கு ஒதுக்கப்பட்டுள்ள நேரத்தில் பத்தில் ஒரு பங்கினை கூட எடுத்துரைக்க முடியாத அளவுக்கு கட்டுரை நீண்டு விடும். எனவே உயரிய நல்லொழுக்கப் பண்புகளில் சிலவற்றை உதாரணமாக எடுத்துரைக்கின்றோம். நல்லொழுக்கங்கள் இருவகைப்படும் என்பதை தெரிந்து கொள்ளவேண்டும். முதல்வகை, எந்த நல்லொழுக்கங்களின் மூலமாக, மனிதன் தீமையை விடுவதற்கான ஆற்றலைப் பெறுகின்றானோ அவை. இரண்டாவது, எந்த நல்லொழுக்கங்களின் மூலமாக மனிதன்

நன்மையை செய்வதற்கான ஆற்றலைப் பெறுகின்றானோ அவை. தனது நாவினாலோ கைகளினாலோ, கண்களாலோ அல்லது தனது வேறு எந்தவோர் உறுப்பின் மூலமாகவோ பிறருடைய பொருள், கண்ணியம் மற்றும் உயிருக்கு சேதம் ஏற்படுத்தா வண்ணம் அல்லது பிறருக்கு எவ்வித பாதிப்பையும், கண்ணியக் குறைவையும் ஏற்படுத்தும் எண்ணம் கொள்ளாத வகையில் மனிதன் எந்த நல்லொழுக்கங்கள் மூலமாக முயற்சி செய்கின்றானோ அவை அனைத்தும் தீமையை கைவிட மனிதனை தகுதிவாய்ந்ததாக்கும் நல்லொழுக்கங்களைச் சார்ந்தவையாகும்.

அதே போன்று மனிதன் தனது நாவினாலோ கைகளாலோ அல்லது தனது அறிவாலோ அல்லது வேறு ஏதாவதொரு வகையிலோ பிறருடைய செல்வம், மற்றும் கண்ணியத்திற்கு பயன்சேர்க்க எந்த நல்லொழுக்கங்கள் மூலமாக முயற்சி செய்வானோ, எந்த நல்லொழுக்கங்கள் மூலமாக அவர்களுடைய மகிமை மற்றும் கண்ணியத்தை வெளிப்படுத்தும் எண்ணம் கொள்வானோ அவையனைத்தும் மனிதனை நன்மை செய்ய தகுதியாக்கும் நல்லொழுக்கங்கள் ஆகும். அதே போன்று ஒருவர் தம் மீது அநீதியிழைக்கின்றார். அவ்வாறு தம் மீது அநீதியிழைத்த நபரை தண்டிக்கும் ஆற்றல் படைத்தவராக அவர் இருந்தாலும்கூட, அநீதியிழைத்த நபரை அவர் மன்னித்து விடவேண்டும். ஏனென்றால் இவ்வாறு மன்னித்து அந்த மனிதனை துன்பம் மற்றும் தண்டனை மற்றும் பொருள் நஷ்டம் போன்றவற்றிலிருந்து பாதுகாத்து அவர் நன்மை செய்கிறார். அல்லது தமக்கு அநீதியிழைத்தவருக்கு முற்றிலும் கருணையாக அமையும் தண்டனையை அவர் வழங்குகிறார் என்றால் இவையனைத்தும் நன்மைகள் செய்ய மனிதனை தகுதியாக்கும் நல்லொழுக்கங்கள் ஆகும்.

## தீமையை கைவிடச் செய்யும் நல்லொழுக்கங்கள்

தீமையை கைவிடுவதற்கு இறைவன் வகுத்துள்ள நல்லொழுக்கங்களுக்கு அரபி மொழியில் நான்கு பெயர்கள் உள்ளன. மேலும் மனிதனின் எண்ணங்கள், நடத்தைகள் மற்றும் ஒழுக்கங்களை சுட்டிக்காட்ட தனித்தனியான சொற்கள் உள்ளன. அந்த நான்கு பெயர்களைப் பார்ப்போம்.

முதலாவது நல்லொழுக்கத்தின் பெயர் 'இஹ்ஸான்' ஆகும். அதாவது ஆண் மற்றும் பெண்ணின் பாலுணர்வோடு தொடர்புடைய 'கற்புடைமை' என்பது இதன் பொருளாகும். எந்த ஆண் அல்லது பெண் விபச்சாரம் மற்றும் அதற்கு நிகரான செயல்களிலிருந்து தவிர்ந்துகொண்டு அந்த அசுத்தமான செயல்களிலிருந்து தம்மை பாதுகாத்து கொள்கின்றாரோ அப்படிப்பட்ட ஆண் அல்லது பெண் முறையே 'முஹ்ஸின்' மற்றும் 'முஹ்ஸினா' எனக் கூறப்படுவார். அதாவது விபச்சாரத்தின் விளைவாக இவ்வுலகில் இழிவும், சாபமும் மறுமையில் தண்டனையும் கிடைக்கின்றது. மேலும் அச்செயல்களோடு தொடர்புடையவர்கள் அவமானத்திற்குள்ளாவது மட்டுமல்லாமல் கடுமையான நஷ்டங்களும் (அவர்களுக்கு) ஏற்படுகின்றன. உதாரணமாக ஒரு நபர் வேறொருவரின் மனைவியுடன் இது போன்ற தடுக்கப்பட்ட செயல்களில் ஈடுபடும்போது அல்லது விபச்சாரம் செய்யாவிட்டாலும் அதற்கு முன்னோடியான செயல்கள் ஆண் பெண் இருவரிடமிருந்தும் வெளிப்படும்போது தன்மானம் கொண்ட அநீதியிழைக்கப்பட்ட கணவன் விபச்சாரம் செய்வதற்கு இணங்கிய மனைவியை அல்லது விபச்சாரம் செய்துவிட்ட தனது மனைவியை விவாகரத்து கொடுத்து விடுவார் என்பதில் எந்த சந்தேகமுமில்லை. அந்தப் பெண்ணின் வயிற்றில் பிறக்கும் குழந்தைகளுக்கும் பெரிய பாதிப்புகள் ஏற்படும். ஒரு தீய நடத்தை கொண்ட மனிதனின் காரணமாக இந்த எல்லா நஷ்டங்களையும் அக்கணவனுக்கு எதிர்கொள்ள நேரிடுகிறது.

இங்கு ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். தீய பார்வை மற்றும் விபச்சாரத்திற்குரிய ஆற்றலை ஒருவர் தன்னிடம் கொண்டிருந்தும் அதாவது இறைவல்லமை அந்த குற்றத்திற்கான செயலை செய்வதற்குரிய ஆற்றலை வழங்கியிருந்த பின்னரும் அவர் தீய செயல்களிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ளும்போதே கற்புடைமை என்ற ஒழுக்கம் நல்லொழுக்கமாக கருதப்படும். அவ்வாறின்றி குழந்தைப் பருவம், அல்லது ஆண்மையற்ற தன்மை அல்லது திருநங்கை அல்லது முதுமை ஆகிய காரணங்களால் அந்த ஆற்றல் அவரிடத்தில் இல்லாதிருக்கும் பட்சத்தில் அப்படிப்பட்டவரை நாம்

கற்புடையவர் எனக் கூற முடியாது. ஆயினும் அவரிடத்தில் கற்புடைமை என்பது இயல்பாகவே அமைந்துள்ளது எனக்கூறலாம். ஆனால் இயல்பான குணநலன்கள் நல்லொழுக்கங்கள் என்ற பெயரால் அழைக்கப்பட முடியாது. மாறாக அறிவின் துணைகொண்டு தகுந்த இடத்தில் அவற்றை வெளிப்படுத்தும்போது அல்லது வெளிப்படுத்தும் ஆற்றலை ஏற்படுத்திக் கொள்ளும்போதுதான் அவை நல்லொழுக்கங்கள் என்ற பட்டியலில் அடங்க முடியும் என்பதை நான் மீண்டும், மீண்டும் எழுதி வந்துள்ளேன். எனவே நான் குறிப்பிட்டது போன்று, குழந்தைகள் மற்றும் சில வழிமுறைகளால் தங்களை ஆண்தன்மையற்றவர்களாக மாற்றிக் கொண்டவர்கள் வெளிப்படையான முறையில் கற்புடைய வாழ்க்கை நடத்தினாலும் அவர்களுக்கு கற்புடமை என்ற நல்லொழுக்கம் பொருந்தாது. மாறாக, இந்த எல்லா நிலையிலும் அவர்களுடைய கற்புடைமை என்பது இயல்பானதே தவிர வேறொன்றுமில்லை. இந்த தூய்மையற்ற செயல்கள் மற்றும் அதற்கு முன்னோடியான செயல்கள் எவ்வாறு ஒரு ஆணிடம் வெளிப்பட முடியுமோ அதே போன்று பெண்ணிடமிருந்தும் வெளிப்பட முடியும். எனவே இறைவனின் தூய வேதம் ஆண், பெண் இருவருக்கும் கீழ்கண்ட போதனையை வழங்குகின்றது :

قُلْ لِّلْمُؤْمِنِيْنَ يَغُضُّوْا مِنْ اَبْصَارِهِمْ وَيَحْفَظُوْا فُرُوْجَهُمْ ؕ ذٰلِكَ اَزْكٰى لَهُمْ ؕ
وَقُلْ لِّلْمُؤْمِنٰتِ يَغْضُضْنَ مِنْ اَبْصَارِهِنَّ وَيَحْفَظْنَ فُرُوْجَهُنَّ وَلَا يُبْدِيْنَ
زِيْنَتَهُنَّ اِلَّا مَا ظَهَرَ مِنْهَا وَلْيَضْرِبْنَ بِخُمُرِهِنَّ عَلٰى جُيُوْبِهِنَّ ۖ
وَلَا يَضْرِبْنَ بِاَرْجُلِهِنَّ لِيُعْلَمَ مَا يُخْفِيْنَ مِنْ زِيْنَتِهِنَّ ؕ وَتُوْبُوْۤا اِلَى اللّٰهِ جَمِيْعًا
اَيُّهَ الْمُؤْمِنُوْنَ لَعَلَّكُمْ تُفْلِحُوْنَ ﴿٣٢﴾

وَلَا تَقْرَبُوا الزِّنٰۤى اِنَّهٗ كَانَ فَاحِشَةً ؕ وَسَآءَ سَبِيْلًا ﴿٣٣﴾

وَلْيَسْتَعْفِفِ الَّذِيْنَ لَا يَجِدُوْنَ نِكَاحًا ............

وَرَهْبَانِيَّةَ ۨ ابْتَدَعُوْهَا مَا كَتَبْنٰهَا عَلَيْهِمْ ............
فَمَا رَعَوْهَا حَقَّ رِعَايَتِهَا ۚ

அதாவது நம்பிக்கை கொண்ட ஆண்களிடம், அவர்கள் தம்முடைய கண்களை அந்நியப் பெண்களைப் பார்ப்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனக் கூறுவீராக: மேலும் பாலுணர்வை தூண்டும் பெண்களை உற்றுப் பார்க்கக் கூடாது. அதுபோன்ற சந்தர்ப்பங்களில் பார்வையை தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தை மேற்கொள்ளுங்கள். தங்களுடைய மறைக்க வேண்டிய இடங்களை முடிந்தவரை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். அதே போன்று தமது காதுகளை அந்நியப் பெண்களின் பாடல்கள் மற்றும் இனிய குரல்களை கேட்பதிலிருந்தும் பாதுகாத்துக் கொள்ளுங்கள். அவர்களின் அழகை வர்ணிக்கும் கதைகளை கேட்காதீர்கள். இது பார்வையும், உள்ளமும் தூயதாக இருப்பதற்குரிய சிறந்த வழிமுறைகளாகும்.

அதே போன்று நம்பிக்கை கொண்ட பெண்களிடம் கூறுவீராக: அவர்கள் அந்நிய ஆண்களை பார்ப்பதிலிருந்து தமது கண்களை பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் தமது காதுகளை பாலுணர்வைத் தூண்டும் ஆண்களின் குரல்களை கேட்பதிலிருந்து பாதுகாத்துக் கொள்ள வேண்டும். மேலும் மறைக்க வேண்டிய தமது இடங்களை மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் அந்நிய ஆண்களிடமிருந்து தங்களுடைய அழகினை வெளிப்படுத்தும் உறுப்புகளை மறைத்துக் கொள்ள வேண்டும். மேலும் தங்களின் முந்தானையால் மார்பை மறைத்து தலையில் போட வேண்டும். அதாவது மார்பும், இரு காதுகளும், தலையும், மற்றும் இரு கன்னங்களும் முந்தானையால் மறைக்கப்பட்டிருக்க வேண்டும். மேலும் நடனமாடுபவர்களைப் போன்று தமது கால்களை நிலத்திலடித்து நடக்கக் கூடாது. இவையாவற்றையும் பின்பற்றுவது தடுமாற்றங்களிலிருந்து பாதுகாக்கும் வழிமுறைகளாகும். (24:31,32)

மேலும் தடுமாற்றங்களிலிருந்து தப்பிப்பதற்குரிய இரண்டாவது வழிமுறை என்னவென்றால் இறைவன் பக்கம் திருப்புவதும் தடுமாற்றங்களிலிருந்து எங்களை பாதுகாப்பாயாக என துஆ செய்வதுமாகும்.

"விபச்சாரத்தின் பக்கமே நெருங்காதீர்கள்." (17:33) அதாவது, எந்த நிகழ்ச்சிகளினால் உள்ளத்தில் அந்த எண்ணம் தோன்றுமோ அதிலிருந்து தவிர்ந்து கொள்ளுங்கள். மேலும் இந்த பாவம் நேர்ந்துவிடும் என அச்சம் தரும் வழிமுறைகளிலிருந்தும் விலகி விடுங்கள். எவர் விபச்சாரம் செய்கின்றாரோ அவர் தீமையை அதன் எல்லைக்கே கொண்டு சென்று விடுகிறார். விபச்சாரத்தின் வழி மிகத் தீய வழியாகும். அதாவது அது தன் வாழ்வின் நோக்கத்தை அடைவதிலிருந்து மனிதனை தடுத்து நிறுத்துகின்றது. மேலும் அது உங்கள் வாழ்வின் இறுதி லட்சியத்திற்கு மிகவும் அபாயகரமானதாகும்.

திருமணம் புரியும் வாய்ப்பில்லாதவர்கள் மற்ற வழிமுறைகள் மூலமாக தமது கற்பை பாதுகாத்து கொள்ள வேண்டும். (24:34) உதாரணமாக, நோன்பு நோற்க வேண்டும்; அல்லது குறைவாக உண்ண வேண்டும். அல்லது தமது ஆற்றல்களின் மூலமாக உடல் உழைப்பை மேற்கொள்ள வேண்டும்.

திருமணமே வேண்டாமென்று நிரந்தரமாக தங்களை விலக்கிக் கொள்வது அல்லது சன்னியாசி ஆகி விடுவது அல்லது வேறு பல வழிமுறைகளை மேற்கொள்வது என்று மக்கள் (தங்களின் கற்பை பேணும்) சில வழிமுறைகளை ஏற்படுத்திக் கொண்டுள்ளார்கள். ஆனால் நாம் மனிதனுக்கு அவ்வாறு செய்யுமாறு கட்டளையிடவில்லை. ஏனென்றால் சுயமாக அவர்கள் உருவாக்கிக் கொண்ட இந்த வழிமுறைகளை அவர்களால் முழுமையாக நிறைவேற்ற முடியாது. (57:28-காண்க)

துறவறம் மேற்கொள்ளுங்கள் என்று நான் கட்டளையிடவில்லையென இறைவன் கூறுகின்றான். இறைவனின் இந்தக் கூற்று நமக்கு சுட்டிக்காட்டுவது என்னவென்றால், சன்னியாசி ஆகிவிடுங்கள் என்று இறைவன் கட்டடளையிட்டிருந்தால் எல்லா மக்களும் அதனை பின்பற்றியிருப்பார்கள். அந்த நிலையில் மனித சந்ததி முடிவடைந்து எப்பொழுதோ இந்த உலகம் அழிந்து போயிருக்கும். மேலும் பிறப்பு உறுப்பை துண்டித்தல் போன்ற தவறான வழிமுறையின் மூலமாக கற்பை

பேணுவதாகயிருந்தால், உண்மையில் அந்த உறுப்பை படைத்த இறைவனை மறைமுகமாக குறை கூறுவதாக அது அமையும்.

தீமை செய்வதற்கான ஆற்றல் இருந்து இறையச்சத்தின் காரணமாக மனிதன் அந்த ஆற்றலின் தீய உணர்வுகளை எதிர்த்துப் போராடிக் கொண்டிருக்க வேண்டும். அதே சமயம் அந்த ஆற்றலை நன்மையான வழிகளில் பயன்படுத்த வேண்டும். இவ்வாறு மனிதன் இரண்டு வகையான நற்கூலியைப் பெற முடியும். எனவே அந்த உறுப்பை துண்டிப்பதன் மூலம் இந்த இருவகை நற்கூலியிலிருந்தும் மனிதன் இழப்பிற்குரியவனாகி விடுவான் என்பது தெளிவாகிறது. எதிர்மறை உணர்வுகள் உருவாகி அதனை எதிர்த்து மனிதன் வெற்றி பெறும் பட்சத்தில்தான் நற்கூலி கிடைக்கும். ஆனால் எந்த மனிதனிடத்தில் குழந்தையை போன்று பாலுணர்வேயிருக்காதோ அவனுக்கு என்ன நற்கூலி கிடைக்கும்? கற்பில் தவறாதிருக்கும் குழந்தைகளுக்கு நற்கூலி கிடைக்க முடியுமா?

## தூயவர்களாக விளங்க ஐந்து சிகிச்சைகள்

மேற்கண்ட வசனங்களில் அல்லாஹ் 'இஹ்ஸான்' அதாவது கற்புடைமை என்ற நல்லொழுக்கத்தை பெறுவதற்குரிய உயரிய போதனைகளை மட்டும் வழங்கவில்லை. மாறாக மனிதன் தூயவனாக விளங்க ஐந்து சிகிச்சைகளையும் கூறியுள்ளான். அவை :

1) விலக்கப்பட்டவர்களை பார்ப்பதிலிருந்து கண்களை தடுத்தல்.

2) விலக்கப்பட்டவர்களின் குரலை கேட்பதிலிருந்து காதுகளை தடுத்தல்.

3) விலக்கப்பட்டவர்களைப் பற்றிய கதைகளை கேட்பதை தவிர்த்தல்.

4) தீய செயலை செய்யத் தூண்டும் அனைத்து நிகழ்ச்சிகளிலிருந்தும் தம்மை விலக்கிக் கொள்ளுதல்.

5) திருமணம் ஆகாத நிலையில் நோன்பு நோற்றல்.

திருக்குர்ஆன் எடுத்து வைத்திருக்கும் இந்த எல்லா வழிமுறைகளுடன் கூடிய உயரிய போதனை இஸ்லாத்திற்கு

மட்டுமே உரியதாகும் என்பதை நாம் இவ்விடத்தில் மிகவும் வாதிட்டுக் கூறுகின்றோம். இங்கு நினைவில் கொள்ளத்தக்க விஷயம் ஒன்று உள்ளது. அது என்னவென்றால் மனிதன் தம்மிடத்தில் முழுமையான மாற்றம் செய்து கொள்ளாமல் காம உணர்வின் ஊற்றான இயல்பு நிலையிலிருந்து விலகி நிற்க முடியாது. மேலும் அவனது காம உணர்வுகள் அதற்குரிய இடத்திலும், உரிய சந்தர்ப்பத்திலும் கிளர்ந்து எழவே செய்யும். அந்நிலையில் அவன் மாபெரும் அபாயத்தில் வீழ்ந்து விடுவான். அதன் காரணமாகவே இறைவன், நீங்கள் அந்நியப் பெண்களை தங்கு தடையின்றி பார்த்துக் கொள்ளலாம். அவர்களின் எல்லா அழகையும் கண்டு கொள்ளலாம். அவர்களின் நடனங்கள் போன்ற எல்லா நிகழ்ச்சிகளையும் பார்த்துக் கொள்ளலாம்; ஆனால் தூய பார்வையுடன் பார்க்க வேண்டும் என்று நமக்கு இறைவன் போதனை வழங்கவில்லை. மேலும் அதே போன்று நீங்கள் இந்த இளம் பெண்களின் பாடல்களை கேட்டுக் கொள்ளுங்கள். அவர்களின் அழகை வர்ணிக்கும் கதைகளை கேட்டுக் கொள்ளுங்கள். ஆனால் தூய எண்ணத்துடன் கேட்க வேண்டும் என்ற நிபந்தனையுடன் அவன் நமக்கு போதனை வழங்கவில்லை. மாறாக, நீங்கள் அந்நியப் பெண்களையும், அவர்களின் அழகு வெளிப்படும் இடங்களையும் நல்ல பார்வையுடனும் பார்க்க வேண்டாம்; கெட்ட பார்வையுடனும் பார்க்க வேண்டாம். மேலும் அவர்களின் அழகிய குரலையும், அவர்களின் அழகை வர்ணிக்கும் கதைகளையும் நல்ல எண்ணுத்துடனும் கேட்க வேண்டாம்; தீய எண்ணத்துடனும் கேட்க வேண்டாம் என மிக வலியுறுத்திக் கூறப்பட்டுள்ளது. தடுமாற்றங்கள் ஏற்படாமல் இருக்க, பிணங்களை வெறுப்பதைப் போன்று அந்நியப் பெண்களின் குரல்களை கேட்பதையும், அவர்களை பார்ப்பதையும் நாம் வெறுக்க வேண்டும். ஏனென்றால் கட்டுப்பாடற்ற பார்வைகள் நிச்சயமாக ஒரு நேரத்தில் மனிதனை தடுமாறச் செய்து விடும். எனவே நமது கண்களும், உள்ளமும், நமது அனைத்து அங்கங்களும் தூய்மையாக இருக்க வேண்டும் என இறைவன் நாடுகின்றான். அதன் காரணமாகவே அவன் நமக்கு இந்த உயரிய போதனையை நல்கியுள்ளான். கட்டுப்பாடற்ற தன்மை தடுமாற்றங்களுக்கு

காரணமாகும் என்பதில் என்ன சந்தேகம் உள்ளது? பசியுள்ள நாய்க்கு முன்பாக நாம் மென்மையான ரொட்டிகளை வைத்துவிட்டு அந்த நாயின் உள்ளத்தில் ரொட்டியை பற்றிய எண்ணமே எழக் கூடாது என்று நாம் எதிர்பார்த்தால் அது நமது எண்ணத்தின் தவறாகும். மனஇச்சைகளுக்கு இரகசியமாக செயல்படும் வாய்ப்பு கூட ஏற்படக் கூடாதென்றும், அபாயகரமான உணர்வுகள் தூண்டப்படும் எந்தவொரு நிகழ்வுகளும் ஏற்படவிடக் கூடாது என்றும் இறைவன் விரும்புகிறான்.

இதுதான் இஸ்லாமிய பர்தாவின் தத்துவமும், மார்க்க சட்டத்தின் வழிகாட்டலும் ஆகும். பெண்களை கைதிகளைப் போன்று அடைத்து வைப்பது இறை வேதம் கூறும் பர்தாவின் நோக்கமல்ல. அது இஸ்லாமிய போதனைகளை அறியாத முட்டாள்களின் எண்ணமாகும். இன்னும் கூறப்போனால் சுதந்திரமாக தமது பார்வையை அலைய விடுவதிலிருந்தும், தமது அழகை வெளிப்படுத்துவதிலிருந்தும் ஆண், பெண் இருபாலாரையும் தடுப்பதே இஸ்லாமிய பர்தாவின் நோக்கமாகும். ஏனெனில் இதனால் ஆண், பெண் இருவருக்கும் நன்மை உள்ளது. கடைசியாக மற்றொன்றையும் நினைவில் கொள்ள வேண்டும். பார்வையை அலைய விடாமல் பார்வையை தாழ்த்திக் கொண்டு தகாதவற்றை பார்ப்பதிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்வது மற்றும் பார்க்கத் தகுந்தவற்றை பார்ப்பது ஆகியவற்றிற்கு அரபியில் 'கஸ்ஸே பஸர்' என்று கூறப்படும்.

தமது உள்ளத்தை தூய்மையாக வைக்க விரும்பும் இறையடியார்கள் ஒவ்வொருவரும், மிருகங்களை போன்று தங்கு தடையின்றி அங்கும் இங்கும் கட்டுப்பாடின்றி பார்வையை அலைய விடக்கூடாது. இன்னும் கூறப்போனால் அவர் இந்த நாகரீக உலகில் பார்வையை தாழ்த்திக் கொள்ளும் பழக்கத்தை ஏற்படுத்திக் கொள்வது அவசியமாகும். இந்த அருளுக்குரிய பழக்கத்தின் மூலமாக மனிதனின் இயல்பான நிலை மிக உயர்ந்த நல்லொழுக்க நிலையாக மாறிவிடும். மேலும் அவரது சமூக வாழ்க்கையிலும் எவ்வித களங்கமும் ஏற்படாது. இந்த நல்லொழுக்கத்தைத்தான் நாம் இஹ்ஸான் மற்றும் இஃப்பத் (கற்புடைமை) எனக் கூறுகிறோம்.

**தீமையை கைவிடச் செய்யும் நல்லொழுக்க வகைகளில் இரண்டாவது வகை** நல்லொழுக்கத்தை நாம் நேர்மை மற்றும் நாணயம் என்று அழைக்கின்றோம். அதாவது பிறரின் செல்வத்தை அநியாயமாகவும் தீய எண்ணத்துடனும் அபகரித்து அவருக்கு துன்பம் கொடுக்காமல் இருப்பதற்கு பெயர்தான் நேர்மை ஆகும். ஆக, நேர்மை மற்றும் நாணயம் மனிதனின் இயல்பான நிலைகளில் ஒரு நிலையாகும். அந்த அடிப்படையில்தான் ஒரு பால்குடிக்கும் குழந்தை கூட வயதில் சிறியதாக இருக்கும் காரணத்தால் தனது இயல்பான, சாதுவான பண்பில் இருக்கிறது. மேலும் வயதில் சிறியதாக இருப்பதால் தீய பழக்கவழக்கங்கள் அதனிடம் இருப்பதில்லை. அக்குழந்தை எந்த அளவுக்கு பிறருடைய பொருளை வெறுக்கின்றதென்றால் தனது தாயை தவிர்த்து மற்ற பெண்களிடம் மிக கஷ்டப்பட்டுதான் அது பால் அருந்தும். விவரம் தெரிவதற்குமுன் அக்குழந்தைக்கு வேறொரு செவிலித்தாய் நியமிக்கப்படாமல் இருந்தால் பிறகு விவரம் அறிந்த பின்னர் அக்குழந்தைக்கு மற்றவர் பாலூட்டுவது மிக மிக கடினமாகி விடுகிறது. அக்குழந்தை தன்னை வருத்திக் கொள்ளும். எந்த அளவுக்கென்றால் மரணிக்கும் நிலைக்குச் சென்றுவிட்டாலும் கூட மற்ற பெண்களின் பாலை அருந்த இயல்பாகவே அது வெறுத்து விடுவது சாத்தியமாகும். இந்த அளவு வெறுப்பதில் என்ன இரகசியம் உள்ளது? அது என்னவென்றால், தனது தாயை தவிர்த்து பிறரின் பொருளின் பக்கம் கவனம் செலுத்துவதற்கு அக்குழந்தையின் இயல்பிலேயே ஒரு வெறுப்புணர்வு உள்ளது. இனி நாம் ஓர் ஆழ்ந்த சிந்தனையுடன் குழந்தையின் இந்த பழக்கத்தை சிந்திக்கும்போது, சீர்தூக்கிப் பார்க்கும்போது, சிந்தித்து, சிந்தித்து அதன் ஆழம் வரை செல்லும்போது தன்னை வருத்திக் கொண்டு பிறரின் பொருட்களை வெறுக்கின்ற இந்த பழக்கம்தான் நேர்மை மற்றும் நாணயத்தின் அடித்தளமாகும் என்பது நமக்குத் தெரிய வருகின்றது. எதுவரை ஒரு மனிதனுக்கு அக்குழந்தையை போன்று பிறரின் செல்வத்தின் மீது உள்ளத்தில் வெறுப்பு உருவாகாதோ அதுவரை தியானத் அதாவது நேர்மை என்ற நல்லொழுக்கமுள்ள இறையடியாராக அவர் திகழ முடியாது. குழந்தை இந்த குணத்தை தகுந்த இடத்தில் பயன்படுத்தவில்லை.

மேலும் அது தனது அறியாமையின் காரணமாக பல்வேறு துன்பங்களுக்கு ஆளாகின்றது. எனவே அதனுடைய இந்த பழக்கம் ஓர் இயல்பான நிலையாகும். அது அதனை தன்னையுமறியாமல் வெளிப்படுத்துகிறது. எனவே அந்தச் செயல் அக்குழந்தையின் நல்லொழுக்கத்தில் அடங்க முடியாது.

மனித இயல்பின் அடிப்படை அங்கமாக நீதி மற்றும் நேர்மை என்ற குணங்கள் இருந்தபோதிலும், குழந்தை இந்த குணத்தை சுயமாக அறியாமல் இயல்பாக வெளிப்படுத்துவதால் அது நல்லொழுக்கமாக ஆகிவிடாது. குழந்தை அறிவுடன் சிந்தித்து செய்யாத இந்த செயலால் அதனை நாணயமிக்கது என்றும், நேர்மையானது என்றும் எவ்வாறு நம்மால் கூற முடியாதோ அதே போன்று எந்த மனிதன் இயல்பான இந்த நிலையை தக்க தருணத்தில் பயன்படுத்துவதில்லையோ அவரும் மேற்குறிப்பிட்ட நற்குணத்தை பெற்றவராக முடியாது. நம்பிக்கைக்குரியவராகவும், நேர்மைமிக்கவராகவும் ஆகுவது என்பது மிக நுட்பமான விஷயமாகும். மனிதன் அதன் எல்லா அம்சங்களையும் கைகொள்ளாதவரை அவனால் நம்பிக்கைக்குரியவனாகவும், நேர்மையாளனாகவும் ஆக முடியாது. கீழ்க்கண்ட வசனங்களில் அல்லாஹ் நேர்மையின் வழிமுறைகளை விளக்கியுள்ளான்:

وَلَا تُؤْتُوا السُّفَهَاءَ أَمْوَالَكُمُ الَّتِي جَعَلَ اللَّهُ لَكُمْ قِيٰمًا وَّارْزُقُوهُمْ فِيهَا
وَاكْسُوهُمْ وَقُولُوا لَهُمْ قَوْلًا مَّعْرُوفًا ﴿٦﴾

وَابْتَلُوا الْيَتٰمٰى حَتّٰى إِذَا بَلَغُوا النِّكَاحَ ۚ فَإِنْ اٰنَسْتُمْ مِّنْهُمْ رُشْدًا فَادْفَعُوا
إِلَيْهِمْ أَمْوَالَهُمْ ۚ وَلَا تَأْكُلُوهَا إِسْرَافًا وَّبِدَارًا أَنْ يَّكْبَرُوا ۚ وَمَنْ كَانَ غَنِيًّا
فَلْيَسْتَعْفِفْ ۚ وَمَنْ كَانَ فَقِيرًا فَلْيَأْكُلْ بِالْمَعْرُوفِ ۚ فَإِذَا دَفَعْتُمْ إِلَيْهِمْ
أَمْوَالَهُمْ فَأَشْهِدُوا عَلَيْهِمْ ۚ وَكَفٰى بِاللَّهِ حَسِيبًا ﴿٧﴾

وَلْيَخْشَ الَّذِينَ لَوْ تَرَكُوا مِنْ خَلْفِهِمْ ذُرِّيَّةً ضِعٰفًا خَافُوا عَلَيْهِمْ ۖ فَلْيَتَّقُوا
اللَّهَ وَلْيَقُولُوا قَوْلًا سَدِيدًا ﴿١٠﴾

اِنَّ الَّذِيْنَ يَاْكُلُوْنَ اَمْوَالَ الْيَتٰمٰى ظُلْمًا اِنَّمَا يَاْكُلُوْنَ فِيْ بُطُوْنِهِمْ نَارًا ؕ
وَسَيَصْلَوْنَ سَعِيْرًا ﴿١١﴾

அதாவது உங்களில் செல்வந்தராகயிருப்பவர் குறைமதியுடையவராகயிருந்தால் உதாரணமாக அனாதையாகவோ அல்லது பருவ வயதை அடையாதவராகவோ இருந்து தமது அறிவின்மையின் காரணமாக தமது செல்வத்தை வீணாக்கி விடுவார் என்ற அச்சம் இருந்தால், நீங்கள் அவருடைய எல்லா செல்வத்தையும் பாதுகாவலன் என்ற முறையில் உங்களின் கட்டுப்பாட்டில் வைத்துக் கொள்ளுங்கள். வியாபாரமும், வாழ்க்கையும் நடத்துவதற்குரிய எந்த செல்வத்தையும் அந்த குறைமதியுடையவர்களிடத்தில் ஒப்படைக்க வேண்டாம். மேலும் அந்த செல்வத்திலிருந்து அவர்கள் உண்பதற்கும், பருகுவதற்கும், உடை உடுப்பதற்கும் தேவைக்கேற்ப கொடுத்து வாருங்கள். அவர்களிடம் நல்ல விஷயங்களை பேசி வாருங்கள். அதாவது எவ்விஷயங்களால் அவர்களின் அறிவும் பிரித்தறியும் ஆற்றலும் வளருமோ அதனை அவர்களிடம் பேசி வாருங்கள். அறிவீனராகவும், அனுபவமற்றவராகவும் ஆகிவிடாத அளவுக்கு அவர்களுக்கு தேவையான பயிற்சியை வழங்குங்கள். அவர்கள் வியாபாரியின் பிள்ளைகள் என்றால் அவர்களுக்கு வியாபாரத்திற்குரிய வழிமுறைகளை கற்றுக் கொடுங்கள். அவர்கள் வேறு ஏதேனும் தொழில் செய்யக் கூடியவராகயிருந்தால் அவர்களின் தொழில் துறையில் அவர்களை உறுதிப் படுத்தி விடுங்கள். சுருக்கமாக அவர்களுக்கு பொருத்தமான கல்வி கற்றுக் கொடுத்து வாருங்கள்.

நீங்கள் கற்றுக் கொடுத்தவற்றை அவர்கள் புரிந்து கொண்டார்களா? இல்லையா? என்பதை பரிசோதிக்க அவ்வப்போது தேர்வு நடத்துங்கள்.

பின்னர் திருமணத்திற்கு தகுதி வாய்ந்தவராக அவர்கள் ஆகிவிட்டால் அதாவது ஏறத்தாழ 18 வயதை அவர்கள் அடைந்து விட்டால் அவர்களிடத்தில் தமது செல்வத்தை நிர்வகிக்கும் ஆற்றல் வந்து விட்டதா என நீங்கள் பாருங்கள். அவ்வாறு அந்நிலையை

அடைந்து விட்டால் அவர்களிடத்தில் அவர்களின் செல்வங்களை ஒப்படைத்து விடுங்கள். அவர்களின் செல்வங்களை வீணாக்கும் வகையில் செலவு செய்யாதீர்கள். அவர்கள் பெரியவர்களாகி விட்டால் தமது செல்வங்களை திரும்பப் பெற்று விடுவார்கள் என்ற அச்சத்தின் காரணமாக அவர்களின் செல்வங்களுக்கு இழப்பை ஏற்படுத்தாதீர்கள். எவர் செல்வந்தராகயிருப்பாரோ அவர், அவர்களுக்கு செய்த தொண்டிற்கு கூலியாக அவர்களின் செல்வங்களிலிருந்து எதனையும் பெறுதல் கூடாது. ஆனால் தேவையுடைய ஏழையான ஒருவர் தகுந்த வழிமுறைகளில் அதனை பெற்றுக் கொள்ளலாம். (4:6,7காண்க)

அரபு நாட்டினரின் வழக்கப்படி, அனாதைகளின் செல்வங்களை நிர்வகிப்பவர் அனாதையின் செல்வத்திலிருந்து எதையாவது பெற்றுக் கொள்ள விரும்பினால், அனாதையின் செல்வத்தின் மூலமாக வியாபாரத்தில் எவ்வளவு லாபம் தங்களுக்கு கிடைத்ததோ அதனை மட்டுமே அவர்கள் எடுத்துக் கொள்வர். மூலதனத்தையே அழித்து விடமாட்டார்கள்.

அதே வழிமுறையை நீங்களும் பின்பற்றுங்கள் என்று திருக்குர்ஆன் சுட்டிக்காட்டுகின்றது.

பின்னர் நீங்கள் அனாதைகளின் செல்வங்களை அவர்களிடத்தில் திரும்ப ஒப்படைக்கும்போது சாட்சிகளின் முன்னிலையில் செல்வத்தை ஒப்படையுங்கள். மேலும் மரணதருவாயை அடைந்த ஒருவர் அவரது பிள்ளைகள் பலவீனமானவர்களாகவும், சிறுபிள்ளைகளாகவும் இருக்கும் நிலையில் அவர்களது உரிமையை பறிக்கும் வகையில் உயில் எழுதுதல் கூடாது. எவர் அனாதைகள் மீது அநீதியிழைக்கும் வகையில் அவர்களின் செல்வங்களை உண்கின்றாரோ அவர் செல்வத்தை அல்ல, நெருப்பையே உண்கின்றார். மேலும் இறுதியில் எரித்திடும் நெருப்பில் அவர் வீசப்படுவார். ( 4:10,11)

இப்போது பாருங்கள்! எந்த அளவுக்கு நேர்மையின் அம்சங்களை இறைவன் கூறியுள்ளான். எனவே நம்பிக்கை, நாணயம், நேர்மை என்பது மேற்கண்ட அனைத்து அம்சங்களின் அடிப்படையிலும் அமைந்திருந்தால்தான் அது உண்மையான நேர்மையாக அமையும்.

மேலும் முழுமையான மதிநுட்பத்துடன் செயல்பட்டு, நேர்மையின் எல்லா அம்சங்களின் அடிப்படையில் அமையாத அந்த செயல் பல வகையில் மறைமுகமான நம்பிக்கை துரோகத்திற்குரிய வழிகளை தன்னகத்தே கொண்டிருக்கும்.

அல்லாஹ் பிரிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான் :-

وَلَا تَأْكُلُوْٓا اَمْوَالَكُمْ بَيْنَكُمْ بِالْبَاطِلِ وَتُدْلُوْا بِهَآ اِلَى الْحُكَّامِ لِتَاْكُلُوْا فَرِيْقًا
مِّنْ اَمْوَالِ النَّاسِ بِالْاِثْمِ وَاَنْتُمْ تَعْلَمُوْنَ ﴿١٨٩﴾

اِنَّ اللّٰهَ يَاْمُرُكُمْ اَنْ تُؤَدُّوا الْاَمٰنٰتِ اِلٰٓى اَهْلِهَا

اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ الْخَآئِنِيْنَ ﴿٥٩﴾

அதாவது, உங்களுள் ஒருவர் மற்றொருவருடைய செல்வத்தை ஆகுமற்ற வழிமுறைகளில் விழுங்க வேண்டாம். பிறரின் செல்வத்தை பதுக்குவதற்காக அதிகாரிகளின் உதவியை பெறும் பொருட்டு அதிகாரிகளுக்கு கையூட்டு கொடுக்காதீர்கள். (2:189) நம்பி ஒப்படைக்கப்பட்ட அமானிதங்களை அதற்குரியவர்களிடம் திருப்பி ஒப்படைத்து விடுங்கள். (4:59) நம்பிக்கை துரோகம் செய்பவர்களை இறைவன் நண்பனாக்கி கொள்வதில்லை. (8:59)

وَاَوْفُوا الْكَيْلَ اِذَا كِلْتُمْ وَزِنُوْا بِالْقِسْطَاسِ الْمُسْتَقِيْمِ ﴿٣٦﴾

وَلَا تَبْخَسُوا النَّاسَ اَشْيَآءَهُمْ وَلَا تَعْثَوْا فِى الْاَرْضِ مُفْسِدِيْنَ ﴿١٨٤﴾

நீங்கள் அளந்து கொடுக்கும்போது முழுமையாக அளந்து கொடுங்கள். அதே போன்று நீங்கள் நிறுத்து கொடுக்கும்போதும் முழுமையாக நிறுத்துக் கொடுங்கள்.(17:36) சரியான தராசு கொண்டு நிறுத்துக் கொடுங்கள். மேலும் எவ்வகையிலும் மக்களின் பொருட்களுக்கு இழப்பை ஏற்படுத்தாதீர்கள். மேலும் குழப்பம் செய்யும் எண்ணத்துடன் பூமியில் சுற்றித் திரியாதீர்கள். (26:184). அதாவது திருட வேண்டும் அல்லது கொள்ளையடிக்க வேண்டும் அல்லது வழிப்பறி செய்ய வேண்டும் அல்லது தகாத வழிமுறைகளில் பிறரின் செல்வத்தை அபகரிக்க வேண்டும் என்ற எண்ணத்துடன் பூமியில் சுற்றித் திரியாதீர்கள்.

وَلَا تَتَبَدَّلُوا الْخَبِيْثَ بِالطَّيِّبِ

நீங்கள் நல்ல பொருட்களுக்கு பகரமாக தீய மற்றும் பயன்படாத பொருட்களை கொடுக்காதீர்கள்.(4:3) அதாவது எவ்வாறு பிறரின் செல்வங்களை பதுக்குவது ஆகுமானதில்லையோ அதே போன்று கெட்ட பொருட்களை விற்பதும், நல்ல பொருட்களுக்கு பகரமாக தீய பொருட்களை கொடுப்பதும் ஆகுமற்ற ஒன்றாகும்.

இவ்வனைத்து வசனங்களிலும் அல்லாஹ் நம்பிக்கை துரோகத்தின் எல்லா வழிமுறைகளையும் எடுத்துக் கூறி விட்டான். மேலும் நம்பிக்கை துரோகத்தின் எந்த ஒரு வழிமுறையையும் விட்டுவிடாத அளவுக்கு முழுமையாக இவ்வசனங்களில் அல்லாஹ் விளக்கி விட்டான். நீங்கள் திருடாதீர்கள் என்று மட்டும் கூறி இறைவன் முடித்து விடவில்லை. ஏனென்றால் திருடுவது மட்டும்தான் எனக்கு தடுக்கப் பட்டுள்ளது; மற்ற ஆகுமற்ற வழிமுறைகள் அனைத்தும் எனக்கு ஆகுமானதாகும் என குறைமதியுடைய ஒருவன் எண்ணிவிடாத அளவுக்கு நம்பிக்கை துரோகத்தின் முழு வழிமுறைகளையும் இறைவன் இங்கு விளக்கி விட்டான். இவ்வாறு முழுமையான கூற்றுகளுடன் ஆகுமற்ற எல்லா வழிமுறைகளையும் தடை செய்வதே ஞானம் நிறைந்த கூற்றாகும். சுருக்கமாக, ஒருவர் இந்த தெளிவுடன் நேர்மை மற்றும் நாணயம் என்ற குணங்களை தன்னகத்தே கொண்டிராவிட்டால், அதன் எல்லா அம்சங்களையும் பேணாவிட்டால் சில விஷயங்களில் மட்டுமே நேர்மை, மற்றும் நாணயத்தை வெளிப்படுத்துகின்றார் என்றால் அந்த எல்லா நிலையிலும் அவரின் செயல்களை நேர்மை என்ற நற்குணத்தை சேர்ந்ததாகக் கருத முடியாது. மாறாக பகுத்தறிவற்றதும், உள்ளார்ந்த தெளிவற்றதுமாகிய இயல்பான நிலையாக அந்த நிலை கருதப்படும்.

தீமையை கைவிட்டு விடுவதற்குரிய மூன்றாம் நல்லொழுக்க நிலைக்கு அரபி மொழியில் ஹுத்னா மற்றும் 'ஹவ்ன்' என்று கூறுவார்கள். அதாவது அநீதியான வழிமுறையில் பிறருக்கு உடல் ரீதியாக வேதனை கொடுக்காமல் இருப்பது மற்றும் தீங்களிக்காத மனிதனாக திகழ்வதாகும். மேலும் சமாதானத்துடன் வாழ்வை

கழிப்பதாகும். ஆக, சமாதானப் பண்பு என்பது சந்தேகத்திற்கு இடமின்றி ஓர் உயர்ந்த நற்குணமாகும். மனிதயினத்திற்கு மிகவும் தேவையானதாகும். இந்த நல்லொழுக்க பண்புக்கு இணக்கமான, இயல்பான ஆற்றல் குழந்தைகளிடத்தில் காணப்படுகின்றது. பாசம் எனப்படும் அந்த ஆற்றலை நடுநிலைப் பாங்கோடு கையாண்டால் அது நல்லொழுக்கமாக அமைந்து விடுகின்றது. மனிதன் தனது இயல்பான நிலையில் அதாவது அறிவு பண்படாத நிலையில் சமாதானம் மற்றும் சண்டையிடுதலின் தத்துவங்களை அவனால் புரிந்து கொள்ள முடியாது என்பது வெளிப்படையான ஒன்றாகும். இந்நிலையில் அவனிடத்தில் இயல்பான சுபாவமாக அமைந்து காணப்படும் பாசம் என்ற குணம்தான் சமாதானப் பண்பிற்கு அடித்தளமாக உள்ளது. ஆனால் பகுத்தறிந்து, சிந்தித்து குறிப்பான எண்ணத்துடன் அது வெளிப்படாததால் அதனை நற்குணமாக கருத இயலாது. எப்போது மனிதன் தன்னை தீங்கற்ற மனிதனாக ஆக்கிக் கொண்டு உறுதியான எண்ணத்துடன் சமாதானம் என்ற குணத்தை தகுந்த இடத்தில் வெளிப்படுத்துவானோ, எப்போது பொருத்தமற்ற இடத்தில் அதை வெளிப்படுத்துவதிலிருந்து விலகியிருப்பானோ அப்போதுதான் அது நல்லொழுக்கமாகக் கருதப்படும்.

இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :-

وَاَصۡلِحُوۡا ذَاتَ بَيۡنِكُمۡ ۖ

وَالصُّلۡحُ خَيۡرٌ ؕ

وَاِنۡ جَنَحُوۡا لِلسَّلۡمِ فَاجۡنَحۡ لَهَا

وَعِبَادُ الرَّحۡمٰنِ الَّذِيۡنَ يَمۡشُوۡنَ عَلَى الۡاَرۡضِ هَوۡنًا

وَ اِذَا مَرُّوۡا بِاللَّغۡوِ مَرُّوۡا كِرَامًا ﴿۷۳﴾

اِدۡفَعۡ بِالَّتِىۡ هِىَ اَحۡسَنُ فَاِذَا الَّذِىۡ بَيۡنَكَ وَبَيۡنَهٗ

عَدَاوَةٌ كَاَنَّهٗ وَلِىٌّ حَمِيۡمٌ ﴿۳۵﴾

நீங்கள் ஒருவருக்கொருவர் சமாதானத்துடன் நடந்து கொள்ளுங்கள்.(8:2) சமாதானத்தில் நன்மையுள்ளது.(4:129) அவர்கள் சமாதானத்தின் பக்கம் திரும்பினால் நீங்களும் அதன்

பக்கம் திரும்புங்கள். (8:62) இறைவனின் நல்லடியார்கள் பூமியில் பணிவுடன் நடப்பார்கள். (25:64) வீணான விவாதங்களையும், சண்டைகளையும் கண்டால் அவர்கள் கண்ணியத்துடன் தன்னை காத்துக் கொண்டு அங்கிருந்து சென்று விடுவார்கள். (25:73) சிறு, சிறு விஷயங்களுக்காக அவர்கள் சண்டையிட மாட்டார்கள்.

அதாவது அதிக துன்பம் தரப்படாதவரை அதனை பிரச்சனையாகக் கருத மாட்டார்கள். சின்னஞ்சிறு விஷயங்களைக் கண்டு கொள்ளாமலிருப்பதும், மன்னிப்பதும்தான் சமாதானத்தை அடையாளம் காண்பதற்குரிய அடிப்படையாகும். இவ்வசனத்தில் வந்துள்ள "லக்வ்" என்ற சொல் அரபி மொழியில் ஒருவன் தீங்கிழைக்கும் தன்மையுடன் வீணானவற்றை பேசுவதற்கு கூறப்படும். அல்லது தீங்கிழைக்கும் நோக்கத்தை கொண்ட, அதிக பாதிப்பையும், இழப்பையும் ஏற்படுத்தாத செயலுக்கு கூறப்படும். எனவே அது போன்ற வீணான, விஷமத்தனமான செயல்களை கண்டும், காணாதவாறு கண்ணியமான முறையில் கடந்துவிட வேண்டும். அவ்வாறு கடந்துவிடுவது சமாதான மனப்பாங்கிற்கான அடையாளமாகும். ஆனால் அச்செயல் "லக்வ்" எனும் வீணானதாக மட்டும் அமையாமல் உள்ளபடியே அது உயிர் அல்லது உடைமைக்கு பாதிப்பை ஏற்படுத்துகின்றபோது அவர் புறக்கணித்து நடந்தால் அதனை சமாதான நோக்கு என்று கூறமுடியாது. மாறாக அது போன்ற பாவச் செயலை மன்னிக்கின்ற நல்லொழுக்க பண்பிற்கு அஃப்வ் (சகிப்புத்தன்மை) என்று பெயர். அதனைப் பற்றி பின்னர் விரிவாக எடுத்துரைப்போம். இன்ஷா அல்லாஹ்.

அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :-

எவராவது உங்களிடம் விஷமத்தனமாக வீணானவற்றினை பேசினால் நீங்கள் அதற்கு அழகிய முறையில் சமாதானத்துடன் பதிலளியுங்கள். அப்போது இந்த நடத்தையினால் எதிரியும் நண்பனாகிவிடுவான். (41:35)

சுருக்கமாக எவ்வகையிலான தீமையினால் இழப்புகள் எதுவும் ஏற்படவில்லையோ மேலும் எதிரியின் தீய பேச்சுக்கள் மட்டுமே இருக்குமோ அதுவே சமாதானத்துடன் நடந்து கொண்டு கண்டும் காணாமல் நடந்து கொள்வதற்குரிய இடமாகும்.

தீமையை விட்டு விலகுவதற்கான ஒழுக்கங்களில் நான்காவது நற்குணம் மென்மை மற்றும் கனிவாக பேசுதல் ஆகும். மேலும் இது முகமலர்ச்சி என்ற இயல்பான நிலையிலிருந்து தோன்றும் பண்பாகும். எதுவரை குழந்தை பேசுவதற்கு தகுதி பெற்று விடுவதில்லையோ அதுவரை மென்மை மற்றும் கனிவாக பேசுதலுக்கு பகரமாக முகமலர்ச்சியை வெளிப்படுத்துகின்றது. முகமலர்ச்சி என்ற வேரிலிருந்துதான் மென்மை என்ற கிளை தோன்றுகின்றது என்பதற்கு இதுவே ஆதாரமாகும். முகமலர்ச்சி என்பது ஓர் ஆற்றல் ஆகும். அந்த ஆற்றலை தக்க தருணத்தில் வெளிப்படுத்துவதால் தோன்றும் நற்குணம் மென்மையாகும்.

இது பற்றி இறைவன் வழங்கும் போதனை இதுவாகும் :

وَقُوْلُوْا لِلنَّاسِ حُسْنًا

لَا يَسْخَرْ قَوْمٌ مِّنْ قَوْمٍ عَسٰٓى اَنْ يَّكُوْنُوْا خَيْرًا مِّنْهُمْ

وَلَا نِسَآءٌ مِّنْ نِّسَآءٍ عَسٰٓى اَنْ يَّكُنَّ خَيْرًا مِّنْهُنَّ ۚ وَلَا تَلْمِزُوْٓا اَنْفُسَكُمْ

وَلَا تَنَابَزُوْا بِالْاَلْقَابِ ؕ

اجْتَنِبُوْا كَثِيْرًا مِّنَ الظَّنِّ ۫ اِنَّ بَعْضَ الظَّنِّ اِثْمٌ وَّلَا

تَجَسَّسُوْا وَلَا يَغْتَبْ بَّعْضُكُمْ بَعْضًا ؕ ............

وَاتَّقُوا اللّٰهَ ؕ اِنَّ اللّٰهَ تَوَّابٌ رَّحِيْمٌ ﴿١٣﴾

وَلَا تَقْفُ مَا لَيْسَ لَكَ بِهٖ عِلْمٌ ؕ اِنَّ السَّمْعَ وَالْبَصَرَ وَالْفُؤَادَ كُلُّ اُولٰٓئِكَ

كَانَ عَنْهُ مَسْئُوْلًا ﴿٣٧﴾

அதாவது, நீங்கள் மக்களிடம் நன்மையான விஷயங்களையே பேசுங்கள் (2:84). ஒரு சமுதாயம் மற்றொரு சமுதாயத்தை ஏளனம் செய்ய வேண்டாம். எவர்கள் ஏளனம் செய்யப்படுகின்றார்களோ அவர்கள் மற்றவர்களை (ஏளனம் செய்பவர்களை) விட சிறந்தவர்களாக இருக்கலாம். பெண்களில் ஒரு பிரிவினர் மற்றொரு பிரிவினரை ஏளனம் செய்ய வேண்டாம். ஏனென்றால் ஏளனம் செய்யப்பட்டவர்கள் ஏளனம் செய்தவர்களை விட சிறந்தவர்களாகயிருக்கலாம். பிறர் மீது

குற்றம் சுமத்தாதீர்கள். பிறருக்கு பட்டப் பெயர் சூட்டாதீர்கள். தவறான எண்ணங்களின் அடிப்படையிலான கூற்றுக்களை பேசாதீர்கள். பிறரின் குறைகளை துருவி துருவி ஆராயாதீர்கள். ஒருவருக்கொருவர் புறம் பேசாதீர்கள். (49:12,13) உங்களிடத்தில் எவ்வித ஆதாரமுமின்றி பிறர் மீது குற்றம் சுமத்தாதீர்கள். நினைவில் கொள்ளுங்கள், காது, கண், இதயம் உள்ளிட்ட ஒவ்வோர் உறுப்பிடமும் கேள்வி கேட்கப்படும். (17:37)

## நன்மையை பெற்றுத் தரும் நல்லொழுக்கங்களின் வகைகள்

இத்துடன் தீமையை கைவிடுவதற்குரிய நற்பண்புகளின் வகைகள் முடிவடைந்து விட்டன. இனி நாம் நன்மையை பெற உதவும் நல்லொழுக்கங்களின் வகைகளை எடுத்துரைப்போம் :–

இந்த இரண்டாம் வகை என்பது நன்மையை பெறுவதற்குரிய நல்லொழுக்கங்களுடன் தொடர்புடையதாகும்.

இதில் முதலாவதாக உள்ள நற்குணம் என்பது 'மன்னித்தல்' என்பதாகும். அதாவது ஒருவரின் பாவத்தை மன்னித்து விடுதல் ஆகும். இதில் நன்மையை பெறுவதற்குரிய அம்சம் எவ்வாறென்றால், பாவம் செய்யும் நபர் ஒரு துன்பத்தை ஏற்படுத்துகிறார். பதிலுக்கு தீங்கிழைப்பதற்கும், தண்டனை பெற்றுத் தருவதற்கும், சிறையில் அடைக்கச் செய்வதற்கும், அல்லது அபராதம் விதிக்கச் செய்வதற்கும், அல்லது சுயமாக அவரை தண்டிப்பதற்கும் தகுதி படைத்தவராக ஒருவர் இருந்து, மன்னிப்பது பொருத்தமானதாக இருக்கும் நிலையில் தனக்கு தீங்கிழைத்தவரை அவர் மன்னித்து விட்டால் அந்த நற்பண்பு அவருக்கு நன்மையை பெற்றுத் தரக் கூடியதாகும். இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

وَالْكٰظِمِيْنَ الْغَيْظَ وَالْعَافِيْنَ عَنِ النَّاسِ ؕ

وَجَزٰٓؤُا سَيِّئَةٍ سَيِّئَةٌ مِّثْلُهَا ۚ فَمَنْ عَفَا وَاَصْلَحَ فَاَجْرُهٗ عَلَى اللّٰهِ ؕ

அதாவது, கோபத்தை அடக்கிக் கொள்ள வேண்டிய இடத்தில் அடக்கிக் கொள்பவர்களும் மன்னிக்க வேண்டிய தருணத்தில் மக்களை மன்னித்து விடுபவர்களும் நன்மக்கள்

ஆவர். (3:135) தீமைக்குரிய தண்டனை, செய்யப்பட்ட தீமைக்கேற்பவே இருக்க வேண்டும். ஆனால் குற்றத்தை மன்னிப்பதால் சீர்திருத்தம் ஏற்படும் என்ற நிலையிலும், அல்லது குற்றம் புரிந்தவனால் பிறருக்கு தீங்கேற்படாது என்ற நிலையிலும் மன்னிக்க வேண்டும்.(42:41) இன்னும் கூறப்போனால் எவர் மன்னிப்பதற்குரிய தருணத்தில் மன்னிப்பாரோ அவர் அதற்குரிய நற்கூலியை பெற்றுக் கொள்வார்.

எந்தவொரு சந்தர்ப்பத்திலும் தீமையை எதிர்க்கவே கூடாதென்பதும், குற்றவாளிகள் மற்றும் அநீதியிழைப்போருக்கு தண்டனையே வழங்கக் கூடாது என்பதும் திருக்குர்ஆனின் போதனையல்ல என்பது இவ்வசனத்திலிருந்து வெளிப்படுகின்றது. மாறாக, குற்றத்தை மன்னிப்பதற்குரிய இடம் மற்றும் தருணமா? அல்லது தண்டிப்பதற்குரிய இடமா? என்று சீர்தூக்கி பார்க்க வேண்டும் என திருக்குர்ஆன் போதிக்கின்றது. எனவே குற்றவாளி மற்றும் பொதுமக்களின் நலனுக்கு எந்த விஷயம் சிறந்ததாக இருக்குமோ அதனை சூழ்நிலைக்கேற்ப மேற்கொள்ள வேண்டும். சில வேளைகளில் ஒரு குற்றவாளி மன்னிப்பதால் திருந்தி குற்றம் புரிவதிலிருந்து விலகி விடுவான். சில வேளைகளில் குற்றவாளி மன்னிப்பு கிடைக்கப் பெற்று குற்றம் புரிய மேலும் துணிந்து விடுகிறான். எனவே அல்லாஹ் கூறுகின்றான். குருட்டுத்தனமாக குற்றங்களை மன்னிப்பதை மட்டுமே வழக்கமாகக் கொள்ளாதீர்கள். மாறாக, உண்மையில் நன்மையானது மன்னிப்பதிலா? அல்லது தண்டிப்பதிலா? என்பதைச் சீர்தூக்கிப் பார்க்க வேண்டும். எனவே எந்த விஷயம் இடம், மற்றும் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமானதாக அமையுமோ அதனையே செயல்படுத்த வேண்டும். சிலர் பழிவாங்கும் குணத்தில் மிகவும் தீவிரமாக உள்ளனர் என்பதை மனித சமூகத்தில் தெளிவாக காண முடிகின்றது. எந்த அளவுக்கென்றால் தலைமுறை தலைமுறையாக பகைமையை மனதில் வைத்து நடக்கின்றனர். அதே போன்று சிலர் மன்னித்தல் மற்றும் கருணை காட்டுதலில் அதன் எல்லையை தொட்டு விடுகின்றனர். இந்தப் பழக்கத்தில் அவர்கள் மிகைத்து விடுவதால் சில வேளைகளில் தன்மானம் இழந்தவர்களாக ஆகி விடுகின்றனர். இது போன்ற வெட்கங்கெட்ட

மென்மை மற்றும் மன்னித்தல் போன்ற செயல்கள் தன்மானம், ரோஷம் மற்றும் கற்புடைமைக்கு எதிரானவர்களிடமிருந்தே வெளிப்படுகின்றது.

எத்தகு வெட்கங்கெட்ட சகிப்புத்தன்மை, மன்னித்தல், கண்டும் காணாமல் இருத்தல் ஆகியவை அவர்களிடமிருந்து வெளிப்படுகின்றது என்றால் அது முழுக்க முழுக்க கௌரவம், தன்மானம் மற்றும் கற்புடைமைக்கு எதிரானவையாக இருக்கின்றன.

இன்னும் கூறப்போனால் இது போன்ற செயல்கள் நன்னடத்தையில் படிகின்ற கறைகளேயாகும். மேலும் இது போன்ற மன்னித்தல் மற்றும் கருணையின் விளைவாக எல்லா மக்களும் அதனை வெறுத்து விடுகின்றனர். இந்த பாதிப்புகளையெல்லாம் கருத்தில் கொண்டுதான் ஒவ்வொரு நல்லொழுக்கமும் உரிய இடம் மற்றும் சந்தர்ப்பத்தில் வெளிப்பட வேண்டும் என திருக்குர்ஆன் நிபந்தனை விதிக்கின்றது. மேலும் பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படும் ஒழுக்கங்களை திருக்குர்ஆன் நல்லொழுக்கமாக ஏற்றுக் கொள்வதில்லை. மன்னிக்கும் குணத்தை மட்டும் நல்லொழுக்கம் எனக் கூற இயலாது என்பதை நினைவில் கொள்ள வேண்டும். மாறாக, மன்னிக்கும் தன்மை என்பது குழந்தைகளிடம் கூட இயல்பாக காணப்படும் ஓர் ஆற்றல் ஆகும். ஒரு குழந்தை தனக்கு காயத்தை ஏற்படுத்தி துன்பமிழைத்த ஒருவரை அவர் வேண்டுமென்றே தீங்கிழைத்திருந்தாலும் கூட அதனை அக்குழந்தை சற்று நேரத்தில் மறந்து விடுகின்றது. மேலும் அவனிடத்தில் அன்புடன் சென்று விடுகின்றது. அப்படிப்பட்ட நபர் அதனை கொலை செய்வதற்கே எண்ணியிருந்தாலும் கூட அவனின் இனிமையான கூற்றைக் கேட்டு குழந்தை மகிழ்கின்றது. எனவே இதுபோன்ற மன்னித்தல் எவ்வாறு உயர்ந்த நல்லொழுக்கமாக இருக்க முடியும்? நாம் தகுந்த இடத்திலும், சந்தர்ப்பத்திலும் அதனை வெளிப்படுத்தும்போதுதான் அது நல்லொழுக்கமாக திகழும். இல்லையென்றால் அது இயல்பான ஆற்றலாக அமையும். உலகில் மிக குறைந்த மக்களே இயல்பான குணம் மற்றும் நல்லொழுக்கத்தை பிரித்தறிகின்றனர். நாம் மீண்டும், மீண்டும் கூறி வந்துள்ளோம்.

உண்மையான நல்லொழுக்கம் மற்றும் இயல்பான நிலைகளுக்கும் உள்ள வேறுபாடு என்னவென்றால் நல்லொழுக்கம் என்பது எப்பொழுதும் பொருத்தமான இடம் மற்றும் தருணத்தை நிபந்தனையாகக் கொண்டுள்ளது. ஆனால் இயல்பான நிலை என்பது பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படுகின்றது. பொதுவாக பார்த்தால் பசுவும் கூட தீங்கற்ற விலங்குதான். மேலும் ஆடும் கூட சாதுவான விலங்குதான். ஆனால் பொருத்தமான இடத்திலும், தருணத்திலும் பயன்படுத்தும் அறிவு அவ்விலங்குகளுக்கு தரப்படாத காரணத்தால் அவ்விலங்குகளை நல்லொழுக்க மிக்கது என எவரும் கூறுவதில்லை. இறைவனின் நுட்பமான ஞானம் மற்றும் அவனது உண்மையான மற்றும் முழுமையான வேதம் ஒவ்வொரு நல்லொழுக்கமும் பொருத்தமான இடம், மற்றும் தருணத்தில் வெளிப்படுத்துவதை நிபந்தனையாக வைத்துள்ளது.

நன்மையை பெறுவதற்குரிய **இரண்டாவது**, நல்லொழுக்கம் அத்ல் (நீதி) ஆகும். **மூன்றாவது**, இஹ்ஸான் (அதிகமான நன்மை செய்தல்) **நான்காவது**, ஈத்தாயிதில் குர்பா (உறவினர்களுக்கு பேருதவி செய்வது போன்று உதவி செய்தல்) ஆகும். இது தொடர்பாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :

إِنَّ اللَّهَ يَأْمُرُ بِالْعَدْلِ وَالْإِحْسَانِ وَإِيتَاءِ ذِي الْقُرْبَىٰ وَيَنْهَىٰ عَنِ الْفَحْشَاءِ وَالْمُنكَرِ وَالْبَغْيِ ۚ

அதாவது, நன்மைக்கு பகரமாக நன்மை செய்யுங்கள். மேலும் நீதியை கடந்து அதிகமாக நன்மை செய்வதற்குரிய இடம் மற்றும் சந்தர்ப்பம் அமைந்தால், அங்கு அதிக நன்மையை வெளிப்படுத்துங்கள். மேலும் அதிக நன்மை செய்வதற்குரிய சந்தர்ப்பத்தையும் கடந்து நன்மை செய்வதற்குரிய சந்தர்ப்பம் என்றால் அங்கு உறவினர்களைப் போன்று இயல்பான பாச உணர்வுடன் நன்மை செய்யுங்கள் என்பதே இறைவனின் கட்டளையாகும். மேலும் பகுத்தறிவுக்கு மாற்றமான நடுநிலையின் வரம்புகளை மீறுவதையும், அல்லது நன்மைக்கு எதிரான நிலைப்பாட்டை மேற்கொள்வதையும் இறைவன் தடை செய்துள்ளான். (16:91) அதாவது பொருத்தமற்ற இடத்தில்

நன்மையை வெளிப்படுத்துவது அல்லது தகுந்த சந்தர்ப்பத்தில் நன்மையை வெளிப்படுத்தாமல் இருப்பது அல்லது தகுந்த இடத்தில் உறவினர்கள் மீது காட்டுகின்ற பாசம் என்ற நல்லொழுக்கத்தை குறைத்து வெளிப்படுத்துவது அல்லது அளவு கடந்து கருணை காட்டுவது இவை அனைத்தையும் இறைவன் தடுத்துள்ளான்.

மேற்கண்ட வசனத்தில் நன்மையை பெறுவதற்குரிய மூன்று படித்தரங்கள் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. முதல் படித்தரம் என்பது நன்மைக்கு பகரமாக நன்மை செய்தல் என்பதாகும். இது குறைந்த படித்தரமாகும். தமக்கு நன்மை செய்த ஒருவருக்கு அதற்கு பகரமாக நன்மை செய்வது என்பது ஒரு சாதாரண மனிதன் கூட மேற்கொள்கின்ற நல்லொழுக்கமாகும்.

இரண்டாம் படித்தரம் : இது முதல் படித்தரத்தை விட கடினமானதாகும். தாமாக முன் வந்து பிறருக்கு நன்மை செய்வது, மற்றும் எவருடைய நன்மைக்கும் பகரமாக அல்லாமல், சுயமாக பிறருக்கு நன்மை பயப்பது இரண்டாம் படித்தரம் ஆகும். இந்த நல்லொழுக்க நிலை என்பது முதல் மற்றும் மூன்றாம் படித்தரத்திற்கு இடைப்பட்ட படித்தரமாகும். ஏராளமான மக்கள் ஏழைகள் மீது நன்மை செய்கின்றார்கள். இந்நிலையில் மறைமுகமாக உள்ள குறைபாடு என்னவென்றால் நன்மை செய்கின்ற ஒருவர், தான் செய்த நன்மையை மனதில் கொள்கிறார். மேலும் தான் செய்த நன்மைக்குப் பகரமாக குறைந்தபட்சம் நன்றியை அல்லது பிரார்த்தனையை எதிர்பார்க்கின்றார். இவ்வாறு நன்மை செய்யப்பட்ட ஒருவர் தமக்கு எதிராக மாறிவிட்டால் அவரை நன்றி மறந்தவன் எனக் கூறுகிறார். சில வேளையில் தான் செய்த நன்மையின் காரணமாக அவரது சக்திக்கு அப்பாற்பட்ட சுமையை சுமத்தி தான் செய்த நன்மையை நினைவூட்டுகிறார். இது பற்றி நன்மை செய்கின்றவர்களை எச்சரிக்கை செய்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ بِالْمَنِّ وَالْاَذٰى

பிறருக்கு நன்மை செய்பவர்களே! நீங்கள் உண்மையின் அடிப்படையில் செய்ய வேண்டிய தான தருமங்களை, உங்களின்

உபகாரங்களை நினைவுபடுத்தியும், துன்பமிழைத்தும் வீணடித்து விடாதீர்கள். (2:265)

அதாவது 'ஸதகா' (தான தருமங்கள்) என்பதன் மூலச் சொல் ஸித்க் (உண்மை) ஆகும். எனவே உண்மையுடனும், பரிசுத்த தன்மையுடனும் ஸதகா (தான தருமங்கள்) செய்யப்படவில்லையென்றால் அது உண்மையான பொருளில் 'ஸதகா'வாக (தான தர்மமாக) அமையாது. மாறாக, அது பகட்டிற்காக செய்யப்பட்ட ஒரு செயலாக அமையும். சுருக்கமாக, நன்மை செய்பவர்களிடம் ஒரு குறைபாடு ஏற்படலாம். சில நேரத்தில் அவர்கள் கோபத்திற்குள்ளாகி தமது நன்மையை நினைவூட்டி விடுகின்றார்கள். இதன் காரணமாகவே இறைவன் நன்மை செய்கின்றவர்களை எச்சரித்துள்ளான்.

நன்மையை பெறுவதற்குரிய மூன்றாம் நிலை என்பது, தான் செய்த நன்மை பற்றிய எந்த எண்ணமும், நன்றியுணர்விற்கான எவ்வித எதிர்பார்ப்பும் இல்லாத நிலையாகும் என்று இறைவன் கூறுகின்றான். இன்னும் கூறப்போனால் மிகவும் நெருங்கிய உறவு போன்று உதாரணமாக ஒரு தாய் தனது அனுதாப உணர்வின் காரணமாக மட்டுமே தனது பிள்ளைகளுடன் நன்மை புரிவதைப் போன்று அனுதாப உணர்வுடன் பிறருக்கு நன்மை செய்தல் வேண்டும். இந்த நிலைதான் நன்மையை பெறுவதற்குரிய இறுதி படித்தரமாகும். இதனைக் கடந்து முன்னேற்றம் காண்பது இயலாத ஒன்றாகும். ஆனால் இறைவன் இந்த நன்மையை பெறுவதற்குரிய எல்லா வகைகளையும் தகுந்த இடம் மற்றும் காலத்தோடு தொடர்புபடுத்தியுள்ளான். இந்த நன்மைகள் தகுந்த இடம் மற்றும் தருணத்தில் வெளிப்படவில்லையென்றால் அவை அனைத்தும் தீமைகளாகி விடும் என்று மேற்குறிப்பிட்ட வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறி விட்டான்.

(அத்ல்) நீதி என்ற பண்பில் அசுத்தமான நிலை உருவாகும் அளவுக்கு வரம்பு மீறி செயல்பட்டால் அது வெட்கக்கேடான செயலாக மாறிவிடும். மேலும் அதே போன்று நன்மை என்ற நல்லொழுக்கத்தை பொருத்தமற்ற இடம் மற்றும் தருணத்தில் வரம்பு மீறி வெளிப்படுத்தினால் அது வெறுக்கத்தக்க நிலையை உருவாக்கிவிடும். அதாவது அந்த நிலை பகுத்தறிவும்,

உள்ளமும் நிராகரிக்கக் கூடியதாக இருக்கும். மேலும் அதே போன்று ஈதாயிதில் குர்பா (உறவினர்களிடம் காட்டப்படுவது போன்ற பாச உணர்வும்) பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படுமானால் அது பகீ என்ற வரம்பு மீறலாகி விடும். அதாவது பொருத்தமற்ற இடத்தில் வெளிப்படும் அந்த கருணை உணர்வு தீய சூழலை உருவாக்கும். உண்மையில் 'பகீ' என்ற அரபிச் சொல் அளவுக்கு அதிகமாக பொழிந்து வயல்களை நாசமாக்கும் மழைக்கு கூறப்படும். கடமையை செலுத்துவதில் நிகழும் குறைக்கும் 'பகீ' என்று கூறப்படும். சுருக்கமாக இந்த மூன்று நிலைகளிலும் எவை பொருத்தமற்ற தருணத்தில் வெளிப்படுமோ அவை தீய ஒழுக்கமாக கருதப்படும். எனவேதான் இந்த மூன்று படித்தரங்களுடனும் தகுந்த இடம் மற்றும் தருணம் நிபந்தனையாக வைக்கப்பட்டுள்ளது. நீதி, நன்மை செய்தல் மற்றும் உறவினர்கள் மீது காட்டப்படுவது போன்ற அனுதாபம் இவையனைத்தும் தனித்து நல்லொழுக்கமாக அமைந்து விடாது என்பதனை இங்கு நினைவில் கொள்ள வேண்டும். இன்னும் கூறப்போனால் இவையனைத்தும் மனிதனின் இயல்பான நிலைகளும், இயல்பான ஆற்றல்களுமாகும். அறிவு முதிர்ச்சி பெறாத குழந்தைப் பருவம் முதலே இந்நிலைகள் மனிதனிடத்தில் காணப்படுகின்றன. ஆனால் இந்த பண்புகள் நல்லொழுக்கமாக அமைய பகுத்தறிவு நிபந்தனையாகும். மேலும் ஒவ்வோர் இயல்பான பண்புகளும் நல்லொழுக்கமாக அமைய தகுந்த இடம் மற்றும் தருணத்தில் அவை பயன்படுத்தப்பட வேண்டும் என்ற நிபந்தனையும் உள்ளது.

அடுத்து 'நன்மை' தொடர்பாக மேலும் பல வழிகாட்டுதல்கள் திருக்குர்ஆனில் இடம் பெற்றுள்ளன. அவை தகுந்த இடம் மற்றும் தருணத்தில் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதை சுட்டிக் காட்டுவதற்காக, அலிஃப், லாம் (அல்) என்ற சொல்லுடன் இணைத்துக் கூறப்பட்டுள்ளது.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :-

يَاَيُّهَاالَّذِيْنَ اٰمَنُوْٓا اَنْفِقُوْا مِنْ طَيِّبٰتِ مَا كَسَبْتُمْ .................

وَلَا تَيَمَّمُوا الْخَبِيْثَ مِنْهُ

لَا تُبْطِلُوْا صَدَقٰتِكُمْ بِالْمَنِّ وَالْاَذٰى ۙ كَالَّذِىْ يُنْفِقُ مَالَهٗ رِئَآءَ النَّاسِ

وَاَحْسِنُوْا ۛ اِنَّ اللّٰهَ يُحِبُّ الْمُحْسِنِيْنَ ﴿١٩٦﴾

اِنَّ الْاَبْرَارَ يَشْرَبُوْنَ مِنْ كَاْسٍ كَانَ مِزَاجُهَا كَافُوْرًا ﴿٦﴾ ۚ

عَيْنًا يَّشْرَبُ بِهَا عِبَادُ اللّٰهِ يُفَجِّرُوْنَهَا تَفْجِيْرًا ﴿٧﴾

وَيُطْعِمُوْنَ الطَّعَامَ عَلٰى حُبِّهٖ مِسْكِيْنًا وَّيَتِيْمًا وَّاَسِيْرًا ﴿٩﴾

اِنَّمَا نُطْعِمُكُمْ لِوَجْهِ اللّٰهِ لَا نُرِيْدُ مِنْكُمْ جَزَآءً وَّلَا شُكُوْرًا ﴿١٠﴾

நம்பிக்கையாளர்களே! நீங்கள் தூய வழியில் சம்பாதித்த உங்களின் செல்வங்களிலிருந்து வாரி வழங்குதல் மற்றும் பேருபகாரம் செய்தல் மற்றும் சதகா ஆகிய வழிகளில் மக்களுக்கு வழங்குங்கள். அதாவது திருட்டு, கையூட்டு, நம்பிக்கை துரோகம் அல்லது அபகரித்த செல்வங்கள் அல்லது அநியாயமாக பெறப்பட்ட பணம் ஆகியவற்றின் கலப்படம் அதில் இருக்கக் கூடாது.(2:268 காண்க) தூய்மையற்ற செல்வங்களை மக்களுக்கு வழங்க வேண்டும் என்ற எண்ணம் உங்கள் உள்ளங்களில் எழவே கூடாது.

இரண்டாவதாக, நீங்கள் செய்த பேருதவியை சுட்டிக்காட்டியும் காயப்படுத்தியும் உங்கள் தான தருமங்களை வீணடித்து விடாதீர்கள். அதாவது நீங்கள் எவருக்கு பேருதவி செய்தீர்களோ, அவர்களிடத்தில் நாம் உமக்கு இதை வழங்கினோம். அதை வழங்கினோம் என சுட்டிக்காட்டி அவரை துன்பப்படுத்தாதீர்கள். மேலும் பகட்டிற்காக உங்களின் செல்வங்களை செலவிடுகின்ற வழிமுறைகளிலிருந்தும் விலகிக் கொள்ளுங்கள்.(2:265) இறைபடைப்பினங்களுக்கு பேருதவி செய்யுங்கள். இறைவன் நன்மை செய்கின்றவர்களை நண்பனாக்கிக் கொள்கின்றான். (2:196 காண்க) உண்மையிலேயே நன்மைகளை செய்கின்றவர்களுக்கு காஃபூர் (கற்பூரம்) கலந்த பானம் அருந்தக் கொடுக்கப்படும். (76:6)

அதாவது உலகத்தின் ஆசாபாசங்கள், ஏக்கங்கள் மற்றும் தீய விருப்பங்கள் அவர்களின் உள்ளங்களிலிருந்து அகற்றப்படும். 'காஃபூர்' என்ற அரபிச் சொல் 'கஃபர' என்ற மூலச் சொல்லிலிருந்து வெளிப்பட்டது. கஃபர என்பதற்கு அரபி அகராதியில் அடக்குதல் மற்றும் மூடி மறைத்தல் என்று பொருள்படும். இதன் விளக்கம் என்னவென்றால், அவர்களின் தீய இச்சைகள் அடக்கப்பட்டு களையப்படும். மேலும் அவர்கள் தூய உள்ளம் கொண்டவர்களாகி விடுவார்கள். மேலும் இறைஞானம் என்னும் குளுமை அவர்களை வந்தடையும்.

அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:

மறுமை நாளன்று தமது கைகளால் பிளக்கின்ற அந்த நீரூற்றிலிருந்து அம்மக்கள் தண்ணீர் அருந்துவார்கள். (76:7) இவ்விடத்தில் சொர்க்கத்தின் தத்துவம் தொடர்பாக ஓர் ஆழ்ந்த இரகசியம் கூறப்பட்டுள்ளது. எவர் புரிந்து கொள்ள விரும்புகிறாரோ அவர் புரிந்து கொள்ளட்டும்.

மேலும் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :-

உண்மையில் நன்மை செய்யக் கூடியவர்களின் இயல்பு என்னவென்றால் அவர்கள் இறை நேசத்தை பெறும் பொருட்டு தாம் விரும்பிய உணவையே ஏழைகள், அனாதைகள் மற்றும் கைதிகளுக்கு வழங்குவார்கள். மேலும் நாங்கள் இவ்வாறு செய்து உம் மீது எவ்வித உபகாரமும் செய்து விடவில்லை. மாறாக இறைவன் எம்மிடத்தில் திருப்தி கொள்ள வேண்டும் என்பதற்காகவே செய்கின்றோம். இந்த தொண்டிற்காக நாங்கள் உம்மிடத்தில் எந்த பிரதிபலனையோ அல்லது நீங்கள் எங்களுக்கு நன்றி கூறித் திரிய வேண்டும் என்றோ நாங்கள் எதிர்பார்க்கவில்லை என்றும் கூறுவார்கள். (76:9,10) நன்மை செய்வதற்குரிய இந்த மூன்றாம் படித்தரம் என்பது அனுதாப உணர்வின் மிகுதியின் காரணமாக மட்டுமே அமைய வேண்டும் என்பதையே மேற்குறிப்பிட்ட விஷயம் நமக்குச் சுட்டிக் காட்டுகின்றது.

وَاٰتَى الْمَالَ عَلٰى حُبِّهٖ ذَوِى الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنَ وَابْنَ
السَّبِيْلِ ۙ وَالسَّآئِلِيْنَ وَفِى الرِّقَابِ ۚ

اِذَآ اَنْفَقُوْا لَمْ يُسْرِفُوْا وَلَمْ يَقْتُرُوْا وَكَانَ بَيْنَ ذٰلِكَ قَوَامًا ﴿٦٨﴾

وَالَّذِيْنَ يَصِلُوْنَ مَآ اَمَرَ اللّٰهُ بِهٖٓ اَنْ يُّوْصَلَ وَيَخْشَوْنَ رَبَّهُمْ وَيَخَافُوْنَ
سُوْٓءَ الْحِسَابِ ﴿٢٢﴾

وَفِيْٓ اَمْوَالِهِمْ حَقٌّ لِّلسَّآئِلِ وَالْمَحْرُوْمِ ﴿٢٠﴾

الَّذِيْنَ يُنْفِقُوْنَ فِي السَّرَّآءِ وَالضَّرَّآءِ

وَاَنْفَقُوْا مِمَّا رَزَقْنٰهُمْ سِرًّا وَّعَلَانِيَةً

اِنَّمَا الصَّدَقٰتُ لِلْفُقَرَآءِ وَالْمَسٰكِيْنِ وَالْعٰمِلِيْنَ عَلَيْهَا وَالْمُؤَلَّفَةِ قُلُوْبُهُمْ وَفِي
الرِّقَابِ وَالْغٰرِمِيْنَ وَفِيْ سَبِيْلِ اللّٰهِ وَابْنِ السَّبِيْلِ ۭ فَرِيْضَةً مِّنَ اللّٰهِ ۭ وَاللّٰهُ
عَلِيْمٌ حَكِيْمٌ ﴿٦٠﴾

لَنْ تَنَالُوا الْبِرَّ حَتّٰى تُنْفِقُوْا مِمَّا تُحِبُّوْنَ ۆ

وَاٰتِ ذَا الْقُرْبٰى حَقَّهٗ وَالْمِسْكِيْنَ وَابْنَ السَّبِيْلِ وَلَا تُبَذِّرْ تَبْذِيْرًا ﴿٢٦﴾

உண்மையில் நன்மையை செய்பவர்களின் பண்பு என்னவென்றால், அவர்கள் இறை திருப்திக்காகவே தமது உறவினர்களுக்கு தமது செல்வத்திலிருந்து உதவி செய்கின்றனர். மேலும் அந்த செல்வத்திலிருந்து அனாதைகளை பேணுவதற்கும், பராமரிப்பதற்கும், அவர்களுக்கு கல்வி வழங்குவதற்கும் செலவு செய்கின்றனர். மேலும் ஏழைகளை ஏழ்மை மற்றும் பட்டினியிலிருந்து பாதுகாக்கின்றனர். மேலும் பயணிகள் மற்றும் யாசிப்பவர்களுக்கு தொண்டாற்றுகின்றனர். மேலும் அந்த செல்வங்களை கொண்டு அடிமைகளை விடுதலை செய்வதற்கும், கடன்பட்டவர்களை கடன் சுமையிலிருந்து விடுவிக்கவும் செலவிடுகின்றனர். (2:178) மேலும் அவர்கள் தமது செலவீனங்களில் வரம்பு மீறவும் மாட்டார்கள்; கருமித்தனத்துடனும் செயல்பட மாட்டார்கள். மாறாக நடுநிலையை மேற்கொள்வார்கள். (25:68) ஒன்று சேர்க்க வேண்டிய இடத்தில் ஒன்று சேர்ப்பார்கள். மேலும் இறைவனுக்கு அஞ்சுவார்கள்.(13:22) அவர்களின் செல்வங்களில் யாசிப்பவர்களுக்கும், வாய்விட்டு கேட்க இயலாதவருக்கும் பங்குள்ளது. (51:20)

நாய்கள், பூனைகள், குருவிகள், காளை, கழுதைகள், ஆடுகள் மற்றும் பிற பிராணிகள் அனைத்தும் வாய்விட்டு கேட்க இயலாதவை ஆகும்.

அவர்கள் துன்ப வேளைகளிலும், குறைந்த வருவாயின் தருணத்திலும் மற்றும் வறட்சிக்குரிய நாட்களிலும் தான தருமங்கள் செய்வதில் குறுகிய மனமுடையவராகிவிட மாட்டார்கள். மாறாக பஞ்சத்தின் நிலையிலும் தமது ஆற்றலுக்கேற்றவாறு தருமங்கள் செய்து வருவார்கள். (3:135)

அவர்கள் சில வேளைகளில் மறைவாகவும், சில வேளைகளில் வெளிப்படையாகவும் நன்மைகள் செய்கின்றனர். பகட்டிலிருந்து தன்னை பாதுகாத்துக் கொள்ள மறைமுகமாகவும், மற்றவர்களுக்கு அந்த நன்மையில் ஆர்வமூட்டுவதற்கு வெளிப்படையாகவும் நன்மைகள் செய்கின்றனர்.(13:23) தான தருமங்களாக பொருட்கள் வழங்கும் போது ஒன்றை கவனத்தில் கொள்ள வேண்டும். அதாவது எந்த அளவுக்கு ஏழைகள் இருப்பார்களோ அவர்களுக்கு முதலில் கொடுத்தல் வேண்டும். அதன் பின்னர் எவர்கள் தான தருமங்களுக்குரிய செல்வங்களை பராமரித்தார்களோ மற்றும் அதனை நிர்வகித்தார்களோ அவர்களுக்கும் அந்த செல்வங்களிலிருந்து சிறிது பங்கு கொடுக்கலாம். மேலும் ஒருவரை தீமையிலிருந்து பாதுகாக்கவும் அந்த செல்வத்திலிருந்து கொடுக்கலாம். அதே போன்று அடிமைகளை விடுதலை செய்யவும், மற்றும் தேவையுடையவர்கள், கடனாளிகள், மற்றும் துன்பத்திற்குள்ளான மக்களின் உதவிக்காகவும் மற்றும் இறைவனுக்காகவே உள்ள மற்ற வழிகளிலும் அந்த செல்வத்தை செலவிட வேண்டும்.(9:60)

உங்களுக்கு விருப்பமான செல்வத்தை மனித இனத்தின் மீதான அனுதாபத்தின் காரணமாக செலவிடாதவரை நீங்கள் உண்மையான நன்மையை ஒருபோதும் பெற இயலாது.(3:93) ஏழைகளுக்குரிய உரிமையை வழங்குங்கள். வறியவர்களுக்கு உதவுங்கள். பயணிகளுக்கு தொண்டாற்றுங்கள். வீணான செலவினங்களிலிருந்து உங்களை பாதுகாத்துக் கொள்ளுங்கள்.(17:27) அதாவது திருமணம் போன்ற வைபவங்களில் பலதரப்பட்ட ஆடம்பர செலவுகள் மற்றும் பிள்ளைப்பேறு கால சடங்குகள் போன்றவற்றில் செய்யப்படும்

வீணான மற்றும் வரம்பு மீறிய செலவீனங்களிலிருந்து உங்களை விலக்கிக் கொள்ளுங்கள்.

وَّبِالْوَالِدَيْنِ اِحْسَانًا وَّ بِذِی الْقُرْبٰى وَالْيَتٰمٰى وَالْمَسٰكِيْنِ وَالْجَارِ ذِی الْقُرْبٰى
وَالْجَارِ الْجُنُبِ وَالصَّاحِبِ بِالْجَنْۢبِ وَابْنِ السَّبِيْلِ ۙ وَمَا مَلَكَتْ اَيْمَانُكُمْ ؕ
اِنَّ اللّٰهَ لَا يُحِبُّ مَنْ كَانَ مُخْتَالًا فَخُوْرَا ۙ ﴿٣٧﴾
الَّذِيْنَ يَبْخَلُوْنَ وَيَاْمُرُوْنَ النَّاسَ بِالْبُخْلِ وَيَكْتُمُوْنَ مَاۤ اٰتٰهُمُ اللّٰهُ مِنْ فَضْلِهٖ ؕ

நீங்கள் பெற்றோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் உறவினர்கள், அனாதைகள், ஏழைகள் மற்றும் உங்களின் உறவினர்களான அண்டை வீட்டுக்காரர் மற்றும் உறவினரல்லாத அண்டை வீட்டுக்காரர் மற்றும் பயணிகள் மற்றும் வேலைக்காரர்கள் மற்றும் அடிமைகள் ஆகியோருடன் நல்ல முறையில் நடந்து கொள்ளுங்கள். மேலும் குதிரைகள், ஆடு, மாடுகள் மற்றும் பசுக்கள் மற்றும் உமது கட்டுப்பாட்டிலுள்ள ஏனைய பிராணிகளுக்கும் நன்மை செய்யுங்கள். ஏனென்றால் உங்களின் இறைவனுக்கு இந்தப் பண்புகள்தான் பிடித்தமானவையாகும். அவன் அலட்சியப்படுத்துபவர்களையும் சுயநலவாதிகளையும் நேசிப்பதில்லை.

மேலும் அவன் கருமிகளையும் மக்களுக்குக் கருமித்தனத்தைப் போதிப்பவர்களையும் நேசிப்பதில்லை. மேலும் அவர்கள் தனது செல்வத்தையும் மறைக்கின்றனர். அதாவது எங்களிடம் ஒன்றுமில்லை என அவர்கள் ஏழைகளிடம் கூறுகின்றனர். (4:37,38)

## **உண்மையான வீரம்**

வீரம் என்ற நற்குணத்துடன் ஒப்புமை கொண்ட நிலை மனிதனின் இயல்பான நிலைகளிலேயே காணப்படுகின்றது. உதாரணமாக பால்குடி குழந்தை கூட இந்த ஆற்றலின் காரணமாக சில வேளைகளில் நெருப்பை தொடுவதற்கு முயல்கின்றது. ஏனென்றால் ஒரு குழந்தையிடம் பயமின்மை என்ற இயல்பான பண்பு மேலோங்கி நிற்பதாலும், அச்சத்தின் அனுபவம் இல்லாததாலும் அது எதனையும் கண்டு அஞ்சுவதில்லை. மேலும் மனிதன் மிகவும் துணிச்சலாக

அச்சமின்றி சிங்கத்தையும், மற்ற காட்டு விலங்குகளையும் எதிர்கொள்கின்றான். மேலும் தன்னந்தனியாக, பல மனிதர்களுடன் சண்டையிடுவதற்கும் துணிந்து விடுகின்றான். அப்போது மக்கள் அவனை மாவீரனாகக் கருதுவார்கள். ஆனால் உண்மையென்னவென்றால் இது விலங்குகளிடம் கூட காணப்படும் இயல்பான நிலையே ஆகும். மாறாக இந்நிலை நாய்களிடம் கூட காணப்படுகின்றது. உண்மையான வீரம் என்பது தகுந்த தருணம் மற்றும் சந்தர்ப்பத்துடன் குறிப்பாக சார்ந்திருப்பதாகும். அது நற்பண்புகளில் ஒரு நற்பண்பாகும். அது எந்த இடத்திலும், சந்தர்ப்பத்திலும் பயன்படுத்தப்பட வேண்டும் என்பதைப் பற்றி இறைவனின் தூய மறை இவ்வாறு கூறுகிறது.

وَالصّٰبِرِيْنَ فِى الْبَاْسَآءِ وَالضَّرَّآءِ وَحِيْنَ الْبَاْسِ ؕ

அதாவது, போருக்கான சந்தர்ப்பம் வந்துவிடும் போதோ அல்லது ஏதாவது துன்பம் வந்துவிடும்போதோ அதனைக் கண்டு ஓடிவிடாதவரே வீரராவார். (2:178)

وَالَّذِيْنَ صَبَرُوا ابْتِغَآءَ وَجْهِ رَبِّهِمْ

اَلَّذِيْنَ قَالَ لَهُمُ النَّاسُ اِنَّ النَّاسَ قَدْ جَمَعُوْا لَكُمْ فَاخْشَوْهُمْ فَزَادَهُمْ اِيْمَانًا ۖۗ وَّقَالُوْا حَسْبُنَا اللّٰهُ وَنِعْمَ الْوَكِيْلُ ۝١٧٣

وَلَا تَكُوْنُوْا كَالَّذِيْنَ خَرَجُوْا مِنْ دِيَارِهِمْ بَطَرًا وَّرِئَآءَ النَّاسِ

போர் மற்றும் துன்பங்களுக்கான நேரத்தில் இறைதிருப்தியைப் பெறும் பொருட்டே அவர்கள் பொறுமையை மேற்கொள்கின்றனர். தனது வீரத்தைக் காட்டுவதற்காக அல்லாமல் இறைதிருப்தியின் தேடுதலே அவர்களின் நோக்கமாக இருக்கின்றது.(13:23) மக்கள் உங்களுக்கு தண்டனை வழங்குவதற்கு ஒன்றுகூடி விட்டார்கள். எனவே நீங்கள் மக்களுக்கு அஞ்சுங்கள் என அவர்கள் அச்சமூட்டப்படுகின்றனர். அவ்வாறு பயமுறுத்தப்படும்போது அவர்களின் நம்பிக்கை இன்னும் அதிகரித்து விடுகின்றது. மேலும் இறைவன் எங்களுக்கு போதுமானவன் என்று அவர்கள் கூறுகின்றனர்.(3:174)

அவர்களின் வீரமென்பது இயல்பான உணர்ச்சிகளைச் சார்ந்து நிற்கின்ற நாய்கள் மற்றும் மிருகங்களின் வீரத்தைப் போன்றதல்ல. மிருகங்களின் வீரம் ஓர் அம்சத்தையே சார்ந்து நிற்கும். ஆனால், அவர்களின் வீரம் இரண்டு அம்சங்களைக் கொண்டிருக்கும். சில வேளைகளில் தமது மன இச்சைகளை தமது வீரத்தால் எதிர்கொள்கின்றனர். மேலும் அதில் வெற்றியும் பெறுகின்றனர். மேலும், சில வேளைகளில் எதிரிகளுடன் போரிடுவது அவசியம் என கருதும்போது மன உணர்ச்சியினால் அல்லாமல் உண்மையின் உதவிக்காக எதிரிகளை எதிர்த்து நிற்கின்றனர். ஆயினும் தனது ஆற்றலின் மீது நம்பிக்கை கொள்ளாமல் இறைவன் மீது நம்பிக்கைக் கொண்டு வீரத்தை வெளிப்படுத்துகின்றனர். அவர்களின் வீரத்தில் எவ்விதப் பகட்டும் சுயநலமும் மனஇச்சைகளுக்கு செவிசாய்ப்பதும் இருப்பதில்லை.(8:48) மாறாக, எல்லா வகையிலும் இறைதிருப்தியே முன்னுரிமையாக இருக்கின்றது. உண்மையான வீரத்தின் ஆணிவேரென்பது பொறுமை மற்றும் உறுதிப்பாடு ஆகும் என்பது இவ்வசனங்களில் விளக்கப்பட்டுள்ளது. மனஇச்சைகள் அல்லது துன்பம் எதிரிகளைப் போன்று தாக்குதல் நடத்தும்போது அதனை உறுதிப்பாட்டுடன் எதிர்கொண்டு நிற்பதும் கோழையைப் போன்று ஓடிவிடாமல் இருப்பதும்தான் உண்மையான வீரம் ஆகும். எனவே, மனிதனின் வீரத்திலும் ஒரு மிருகத்தின் வீரத்திலும் பெரிய வித்தியாசம் உள்ளது. மிருகம் ஓர் அம்சத்தின் அடிப்படையிலேயே உணர்ச்சியையும் கோபத்தையும் வெளிப்படுத்துகின்றது. ஆனால், உண்மையான வீரம் படைத்த மனிதன் சந்தர்ப்பத்தின் நன்மைக்கேற்ப எதிர்ப்பதையோ அல்லது எதிர்ப்பைக் கைவிடுவதையோ மேற்கொள்கின்றான்.

## உண்மை

மனிதனின் இயல்பு நிலைகளின் ஒரு சிறப்பான இயல்புதான் உண்மை ஆகும். மனிதன் மன இச்சையின் தூண்டுதல் நிகழாதவரை ‘பொய்’ பேச விழைவதில்லை. மேலும் பொய்யுரைப்பதில் ஒரு வகையான வெறுப்பையும் நெருடலையும் தன் உள்ளத்தில் உணர்கின்றான். இதன் காரணமாகவே, எந்த நபரின் பொய் தெளிவாக நிரூபணம் ஆகிவிடுமோ அவரிடத்தில் மனிதன் மகிழ்ச்சியடைவதில்லை. மேலும் அவரை இழிவாக

பார்க்கின்றான். ஆனால் மனிதனின் இந்த இயல்பான நிலை மட்டுமே நல்லொழுக்க நிலையாக ஆகிவிடாது. ஏனென்றால், குழந்தைகள் மற்றும் பைத்தியக்காரர்கள் கூட இந்நிலையினை கொண்டவர்களாக இருக்க முடியும். எனவே உண்மையான விஷயம் என்னவென்றால், மனிதன் உண்மையிலிருந்து தடுக்கின்ற மன இச்சைகளிலிருந்து வெளியேறாதவரை அவனால் உண்மையான பொருளில் உண்மை பேசுபவனாக ஆக முடியாது. ஏனென்றால், மனிதன் தனக்கு எவ்வகையிலும் பாதகமில்லாத விஷயங்களில் மட்டும் உண்மை பேசுவான் என்றால், மேலும் தனது கண்ணியத்திற்கோ அல்லது உயிருக்கோ அல்லது தனது செல்வத்திற்கோ நஷ்டம் ஏற்படும் நேரத்தில் பொய்யுரைத்து, உண்மை பேசாமல் மௌனமாகி விடுவான் என்றால், பைத்தியக்காரர்கள் மற்றும் குழந்தைகளை விட அவனுக்கு என்ன சிறப்பு, மேன்மை இருக்க முடியும்? பைத்தியமும், பருவமடையாத சிறு பிள்ளைகளும் அது போன்ற உண்மையை பேசுவதில்லையா? உலகில் எந்த தூண்டுதலும் இல்லாமல் தேவையின்றி பொய்யுரைப்பவர் எவரும் இருக்க முடியாது. எனவே இழப்பை ஏற்படுத்துகின்ற தருணத்தில் உண்மை கைவிடப்படும் என்றால் அது எவ்வகையிலும் உண்மையான நல்லொழுக்கமாகாது. எந்த தருணத்தில், உண்மை பேசுவதனால் உயிர் அல்லது செல்வம் அல்லது கண்ணியம் கேள்விகுறியாகிவிடுமோ அந்த தருணமும் சந்தர்ப்பமும்தான் உண்மை பேசுவதற்கு மிக அவசியமான இடம் ஆகும். இதில் இறைவனது போதனை இவ்வாறாகும். அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :

فَاجْتَنِبُوا الرِّجْسَ مِنَ الْاَوْثَانِ وَاجْتَنِبُوْا قَوْلَ الزُّوْرِ ﴿٣١﴾

وَلَا يَاْبَ الشُّهَدَآءُ اِذَا مَا دُعُوْا

وَلَا تَكْتُمُوا الشَّهَادَةَ وَمَنْ يَّكْتُمْهَا فَاِنَّهٗٓ اٰثِمٌ قَلْبُهٗ

وَاِذَا قُلْتُمْ فَاعْدِلُوْا وَلَوْ كَانَ ذَا قُرْبٰى

كُوْنُوْا قَوّٰمِيْنَ بِالْقِسْطِ شُهَدَآءَ لِلّٰهِ وَلَوْ عَلٰٓى اَنْفُسِكُمْ اَوِ

الْوَالِدَيْنِ وَالْاَقْرَبِيْنَ

وَلَا يَجْرِمَنَّكُمْ شَنَاٰنُ قَوْمٍ عَلٰٓى اَلَّا تَعْدِلُوْا ؕ

وَالصّٰدِقِيْنَ وَالصّٰدِقٰتِ

وَتَوَاصَوْا بِالْحَقِّ ۙ وَتَوَاصَوْا بِالصَّبْرِ ۝٤

وَالَّذِيْنَ لَا يَشْهَدُوْنَ الزُّوْرَ ۙ

அதாவது, சிலைவணக்கம் மற்றும் பொய் பேசுவதிலிருந்து விலகிக் கொள்ளுங்கள்.(22:31) அதாவது 'பொய்யும்' கூட ஒரு சிலை ஆகும். அதனை நம்புகின்ற ஒருவர் இறைவன் மீதான நம்பிக்கையை விட்டு விடுகிறார். எனவே பொய்யுரைப்பதனால் இறைவனும் கையை விட்டு அகன்று விடுகிறான். மேலும் இறைவன் கூறுகின்றான். நீங்கள் உண்மையான சாட்சி கூற அழைக்கப்பட்டால் செல்வதற்கு மறுக்காதீர்கள்.(2:283) உண்மை சாட்சியினை மறைக்காதீர்கள். மேலும் எவர் மறைப்பாரோ அவரது உள்ளம் பாவம் செய்கின்றது.(2:284) நீங்கள் மிகவும் சரியான மற்றும் நீதியான விஷயங்களை மட்டுமே பேசுங்கள். நீங்கள் உங்களது நெருங்கிய உறவினர்களுக்கெதிராக சாட்சி கூற நேரிட்டாலும், உண்மை மற்றும் நீதியில் நிலைநில்லுங்கள்.(6:153) மேலும் உங்களுடைய ஒவ்வொரு சாட்சியும் இறைவனுக்காகவே இருக்க வேண்டும். மேலும், பொய்யுரைக்காதீர்கள். உண்மை பேசுவதனால் உங்களின் உயிருக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் அல்லது உங்களது தாய், தந்தையருக்கு துன்பம் ஏற்பட்டாலும் அல்லது பிள்ளைகள் போன்ற நெருங்கிய உறவினர்களுக்கு நஷ்டம் ஏற்பட்டாலும் கூட நீங்கள் உண்மையில் நிலைத்திருங்கள்.(4:136) எந்தவொரு சமுதாயத்தின் மீதான பகைமையும், உங்களை உண்மையான சாட்சி கூறுவதிலிருந்து தடுக்க வேண்டாம்.(5:9) உண்மையாளர்களான ஆணும், பெண்ணும் மகத்தான நற்கூலிகளைப் பெறுவர். (33:36) பிறருக்கு உண்மைக்கான அறிவுரை செய்வதும், பொய்யர்களின் சபைகளிலிருந்து விலகியிருப்பதும் அவர்களின் நடைமுறையாகும். (103:4 , 25:73)

## பொறுமை

மனிதனுக்கு எப்போதும் வந்து கொண்டிருக்கும் கஷ்டங்கள், நோய்கள் மற்றும் துன்பங்களின்போது இயல்பாக மனிதன் மேற்கொள்கின்ற ஒரு விஷயம்தான் பொறுமை ஆகும். மனிதன் மிக அதிகமான அழுகை மற்றும் மன்றாடுதலுக்குப் பிறகு பொறுமையை மேற்கொள்கிறான். ஆனால் இறைவனின் தூய வேதத்தின் அடிப்படையில் இந்தப் பொறுமை நல்லொழுக்கத்தை சார்ந்திருக்க முடியாது. மாறாக, அது சோர்வடைந்த பிறகு தேவைக்கேற்ப வெளிப்படுகின்ற நிலையாகும். அதாவது மனிதன் கஷ்டங்கள் வெளிப்படுகின்ற போது முதலில் அழுது புலம்புகின்றான். இது மனிதனின் இயல்பான நிலைகளில் ஒரு நிலையாகும். இறுதியில் வெப்பம் வெளியேறி உணர்வு தணிந்து விடுகின்றது. (இயலாமையின்) எல்லைவரை சென்றடைந்து பின்னர் பின்வாங்குகின்றான்.

எனவே இவ்விரு செயல்களும் இயல்பான நிலைகளே ஆகும். அவற்றிற்கு நல்லொழுக்கத்தோடு எவ்வித தொடர்பும் இல்லை. மாறாக ஒரு பொருள் கைநழுவி சென்றுவிடும்போது அதனை இறைவனின் அமானிதமாக கருதி நாவிலிருந்து எவ்வித முறையீடும் வெளிப்படாமல் இருக்கும்போதுதான் அது நல்லொழுக்க நிலையாகும். மேலும் அது இறைவனுடையதாக இருந்தது; இறைவனே அதனை எடுத்துக் கொண்டான்; நாங்கள் அவனது நாட்டத்தில் திருப்தி கொள்கிறோம் எனவும் கூற வேண்டும். இந்த நல்லொழுக்கம் தொடர்பாக இறைவனின் தூய வேதம் திருக்குர்ஆன் நமக்கு இவ்வாறு போதனை நல்குகின்றது:–

وَلَنَبْلُوَنَّكُمْ بِشَيْءٍ مِّنَ الْخَوْفِ وَالْجُوْعِ وَنَقْصٍ مِّنَ الْاَمْوَالِ وَالْاَنْفُسِ وَالثَّمَرٰتِ ؕ وَبَشِّرِ الصّٰبِرِيْنَ ﴿۱۵۶﴾

الَّذِيْنَ اِذَاۤ اَصَابَتْهُمْ مُّصِيْبَةٌ ۙ قَالُوْۤا اِنَّا لِلّٰهِ وَاِنَّاۤ اِلَيْهِ رٰجِعُوْنَ ﴿۱۵۷﴾

اُولٰٓئِكَ عَلَيْهِمْ صَلَوٰتٌ مِّنْ رَّبِّهِمْ وَرَحْمَةٌ ۚ وَاُولٰٓئِكَ هُمُ الْمُهْتَدُوْنَ ﴿۱۵۸﴾

அதாவது, நம்பிக்கை கொண்டவர்களே! நாம் உங்களை இவ்வாறு சோதித்து கொண்டேயிருப்போம். அதாவது சில

நேரத்தில் மிக அச்சத்திற்குரிய சூழல் உங்களுக்கு ஏற்படும். சில சமயம், பசியும், பட்டினியும் உங்களுக்கு ஏற்படும். இன்னும் சில நேரத்தில் பொருள் இழப்பு உங்களுக்கு ஏற்படும். சில நேரத்தில் உயிரிழப்பும் ஏற்படும். சில சமயம் உங்களது முயற்சிகளில் நீங்கள் தோல்வி அடைவீர்கள். முயற்சிகளுக்கேற்ற நல்ல விளைவு ஏற்படாமல் போகும். மேலும் ஒருவேளை உங்களின் பாசத்திற்குரிய பிள்ளைகள் இறந்து விடுவர். ஆனால் இது போன்ற துன்பங்கள் நேரிடும்போது நாங்கள் இறைவனுக்குரியவர்கள். இவை அவனுடைய அமானிதங்கள். இவை அவனுக்குரியவைகள் என்று எவர்கள் கூறுவார்களோ அவர்களுக்கு நற்செய்தியுள்ளது. எனவே அமானிதம் எவனுக்குரியதோ அவன்பக்கம் முகம் திருப்புவதே உகந்ததாகும். இறைவனின் அருளுக்குரிய மக்கள் இவர்களே ஆவர். மேலும் இத்தகைய மக்களே இறைவனின் வழியை பெற்றவர்கள் ஆவர். (2:156-158)

சுருக்கமாக, இந்த நல்லொழுக்கத்தின் பெயர்தான் பொறுமை மற்றும் இறைதிருப்தியில் திருப்தி கொள்ளுதல் ஆகும். ஒருவகையில் இந்த நல்லொழுக்கத்திற்கு பெயர் ‘நீதி’ என்பதும் ஆகும். ஏனென்றால் இறைவன் மனிதனின் முழு வாழ்க்கையிலும் அவனது விருப்பத்திற்கேற்ப செயல்படுகின்றான். மேலும் அவனது விருப்பத்திற்கேற்றவாறு ஆயிரக்கணக்கான விஷயங்களை வெளிப்படுத்துகின்றான். மேலும் மனித விருப்பதற்கேற்றவாறு எந்த அளவுக்கு இறைவன் அவனுக்கு அருட்கொடைகளை வழங்கியுள்ளான் என்றால் அவற்றை மனிதனால் கணக்கிட முடியாது. அவ்வாறிருக்கும் போது அந்த இறைவன் சில வேளைகளில் தனது விருப்பத்தை ஏற்றுக்கொள்ளும்படி செய்யும்போது மனிதன் அப்போது முகம் திருப்பி விடுவதும், இறைதிருப்தியில் திருப்தியடையாதிருப்பதும், குறைபட்டுக் கொள்வதும், மார்க்கத்தை புறக்கணித்து வழிதவறிவிடுவதும், நீதி ஆகாது.

## படைப்பினங்களிடம் அனுதாபம் கொள்ளுதல்

‘படைப்பினங்களின் மீதான அனுதாபம் என்பது’ மனித இயல்புகளில் காணப்படும் கட்டாய நிலைகளின் ஓர் உணர்வு ஆகும். சமூக உதவிக்கான உணர்வென்பது

இயல்பாகவே அனைத்து மார்க்கங்களைச் சார்ந்த மக்களிடமும் காணப்படுகின்றது. மேலும் பெரும்பான்மை மக்கள் இயல்பான இந்த உணர்வின் காரணமாக, தமது சமுதாயத்தின் மீது அனுதாபம் கொண்டு அந்நியர்கள் மீது அநீதியிழைத்து விடுகின்றனர். எந்த அளவுக்கென்றால் அவர்களை மனிதர்களாகக் கூட கருதுவதில்லை. எனவே இந்த நிலையை நல்லொழுக்க நிலை என்று கூற முடியாது. இது வெறும் ஓர் இயல்பான உணர்வாகும். கொஞ்சம் சிந்தித்துப் பார்த்தால், இந்த நிலை காக்கைகள் போன்ற பறவைகளிடம் கூட காணப்படுகிறது. ஒரு காகம் இறந்துபோனால் ஆயிரக்கணக்கான காகங்கள் ஒன்று கூடிவிடும். ஆனால் இந்த அனுதாபத்துடன் நடந்து கொள்ளும் குணத்தை நீதி மற்றும் நேர்மையின் அடிப்படையில் தகுந்த இடத்திலும் சந்தர்ப்பத்திலும் வெளிப்படுத்தும்போதுதான் அது மனிதனின் நல்லொழுக்க நிலைகளாக திகழும். அவ்வேளையில் அது ஒரு மகத்துவமிக்க குணமாக திகழும். அதன் பெயர் அரபி மொழியில் மவாஸாத் என்பதாகும். பாரசீக மொழியில் ஹம்தர்த் என்பதாகும். அதாவது அனுதாபம் என்பதாகும்.

அது பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு சுட்டிக்காட்டுகிறான் :

وَتَعَاوَنُوا عَلَى الْبِرِّ وَالتَّقْوَىٰ ۖ وَلَا تَعَاوَنُوا عَلَى الْإِثْمِ وَالْعُدْوَانِ ۚ

وَلَا تَهِنُوا فِي ابْتِغَاءِ الْقَوْمِ ۖ

وَلَا تَكُن لِّلْخَائِنِينَ خَصِيمًا ﴿١٠٦﴾

وَلَا تُجَادِلْ عَنِ الَّذِينَ يَخْتَانُونَ أَنفُسَهُمْ ۚ إِنَّ اللَّهَ لَا يُحِبُّ مَن كَانَ خَوَّانًا أَثِيمًا ﴿١٠٨﴾

அதாவது தமது சமுதாயத்தின் மீதான அனுதாபம் மற்றும் உதவி என்பது நன்மையான காரியங்களில் மட்டுமே இருக்க வேண்டும். அநீதி மற்றும் வரம்புமீறுதலான விவகாரங்களில் ஒருபோதும் அவர்களுக்கு உதவி செய்தல் கூடாது. (5:3) சமுதாயத்தின் மீது அனுதாபம் கொள்வதில் சுறுசுறுப்பாக இருங்கள். நம்பிக்கை துரோகம் செய்வதிலிருந்து எவர்கள்

விலகிக் கொள்வதில்லையோ அவர்களுக்கு ஆதரவாக பரிந்து பேசாதீர்கள். (4:105) இறைவன் நம்பிக்கை துரோகம் செய்பவர்களை நண்பனாக்கிக் கொள்வதில்லை. (4:108)

## மேன்மைமிக்க ஓர் இறைவனை தேடுதல்

மேன்மைமிக்க ஓர் இறைவனை தேடுதல் என்பது மனிதனின் இயல்பான நிலைகளில், அவனது இயல்பில் கட்டாயமாக்கப்பட்டுள்ள ஒன்றாகும். அதற்காக, மனிதனுக்குள்ளேயே அவனது உள்ளத்தில் ஓர் ஈர்ப்பு சக்தி உள்ளது. தாயின் வயிற்றிலிருந்து ஒரு குழந்தை வெளியில் வந்த தருணம் முதலே அந்த தேடுதலின் தாக்கம் இருப்பதை உணர முடிகிறது. ஏனென்றால் ஒரு குழந்தை பிறந்தவுடன் முதலில் வெளிப்படுகின்ற ஆன்மீக தன்மை என்னவென்றால் அது தாயினை சார்ந்திருப்பதேயாகும். இயல்பாகவே தனது தாயின் மீது அது அன்பு கொள்கின்றது. மேலும் அதனுடைய புலன்கள் வளர வளர அதனுடைய இயல்புகள் வெளிப்பட்டு கொண்டு செல்கின்றன. அதனுள் மறைந்திருந்த அந்த அன்பின் ஈர்ப்பு சக்தி தனது முழுமையான நிறத்தையும், தோற்றத்தையும் வெளிப்படுத்திக் கொண்டே செல்கின்றது. அதன் பிறகு அக்குழந்தைக்கு தனது தாயின் மடியை தவிர்த்து வேறெங்கும் அமைதி கிடைப்பதில்லை. மேலும் அதற்கு முழுமையான அமைதி அவளுடைய கருணையிலேயே கிடைக்கின்றது. மேலும் அதனை அதன் தாயிடமிருந்து பிரித்து, தூரத்தில் விலக்கி வைத்தால் எல்லா சுகபோகங்களும் அதற்கு கசப்பாகி விடுகின்றது. அதற்கு முன்னால் அருட்கொடைகளின் ஒரு குவியலை குவித்தாலும், அது தாயின் மடியிலேயே தனது உண்மையான மகிழ்ச்சியை உணர்கின்றது. அதனை தவிர்த்து வேறெங்கும் அது நிம்மதி பெறுவதில்லை. எனவே தனது தாயின் பக்கம் அதற்கு ஏற்படுகின்ற அந்த அன்பின் ஈர்ப்பு சக்தி என்பது என்ன?

உண்மையில், அதுதான் குழந்தையின் இயல்பில் உண்மையான இறைவனுக்காக வைக்கப்பட்ட ஈர்ப்பு சக்தியாகும். இன்னும் கூறப்போனால், மனிதன் அன்பின் தொடர்பை ஏற்படுத்திக் கொள்ளும் இடத்திலெல்லாம் இந்த ஈர்ப்பு சக்திதான் செயல்படுகின்றது. உண்மையில் இதே அன்பின் ஒரு

பிம்பமாகத்தான் மனிதன் வெளிப்படுத்துகின்ற அன்பின் உணர்வு அமைகின்றது. தொலைத்த பொருளின் பெயரை மறந்த ஒருவர் ஒவ்வொரு பொருளாக எடுத்துப் பார்த்து அதனை தேடுவது போன்றது இந்நிலையாகும். எனவே செல்வம், பிள்ளைகள், மனைவி மீது மனிதன் அன்பு கொள்வதென்பது அல்லது ஒரு இனிமையான குரலில் பாடப்படும் பாடலின் பக்கம் அவனது ஆன்மா ஈர்க்கப்படுவது என்பது உண்மையில் தவறவிட்ட அந்த அன்பிற்குரிய இறைவனை தேடும் நிகழ்வாகும். நெருப்பினைப் போன்று எல்லாவற்றிலும் உள்ளூரைந்தும், எல்லாரையும்விட்டு மறைந்தும் இருக்கின்ற அந்த நுட்பத்திலும் நுட்பமான இறைவனை மனிதன் தனது புறக்கண்களால் காண முடியாது. மேலும் அவன் தனது முழுமை பெறாத அறிவினால் அவனை அடையவும் முடியாது. எனவேதான் இறைஞானம் தொடர்பான விஷயங்களில் மனிதன் பெரும் பெரும் தவறிழைத்து விடுகின்றான். மேலும் தவறுதலாக இறைவனுக்குரிய உரிமைகளை மற்றவற்றிற்கு கொடுத்து விடுகிறான். இறைவன் திருக்குர்ஆனில் இதற்கு மிக அழகிய உதாரணத்தை எடுத்துரைக்கின்றான். உலகம் என்பது கண்ணாடி மாளிகையை போன்றதாகும். மேலும் அதன் தரையானது மிகவும் தூய கண்ணாடியால் அமைக்கப்பட்டுள்ளது. மேலும் அந்த கண்ணாடிகளுக்கடியில் நீர் பாய்ச்சப்பட்டுள்ளது. அது மிகவும் வேகமாக செல்கின்றது. அதனால் அந்தக் கண்ணாடிகளின் மீது படுகின்ற ஒவ்வொரு பார்வையும் தவறுதலாக அந்த கண்ணாடிகளை தண்ணீராகவே காண்கின்றது. பிறகு மனிதன் தண்ணீரில் நடப்பதற்கு அஞ்சுவது போன்று அந்த கண்ணாடிகளில் நடப்பதற்கு அஞ்சுகின்றான். ஆனால் அது, உண்மையில் தூய மற்றும் வழுவழுப்பான கண்ணாடி–களேயாகும். ஆக, கண்ணுக்கு தென்படுகின்ற சூரியன், சந்திரன் போன்ற இந்தப் பெரிய, பெரிய கோள்கள் அனைத்தும் அந்தக் கண்ணாடிகளை போன்றவையாகும். அவை தவறுதலாக (இறைவனாக) வணங்கப்படுகின்றன. அந்த கண்ணாடிகளுக்கு கீழே மிக வேகமாக நீர் பாய்ந்தோடுவது போன்று, அந்த கோள்களுக்கு பின்னால் மிக உயர்ந்த சக்தி ஒன்று வேலை செய்கின்றது. அந்த மிக உயர்ந்த சக்தியின் ஆற்றல்களை அந்த

கண்ணாடிகளின் ஆற்றலாகவே கருதியதுதான் படைக்கப்பட்டவற்றை வணங்குபவர் இழைத்த தவறாகும். இதுவே கீழ்க்கண்ட வசனத்திற்குரிய விளக்கமாகும்.

اِنَّهٗ صَرۡحٌ مُّمَرَّدٌ مِّنۡ قَوَارِيۡرَ ۙ

நிச்சயமாக அது வழுவழுப்பான கண்ணாடித் தகடுகளால் தளம் அமைக்கப்பட்ட ஒரு மாளிகையாகும். (27:45)

சுருக்கமாக, இறைவனின் இருப்பு, மிகவும் ஒளிமயமானதாக இருந்தபோதிலும், மிகவும் மறைவானதாகவே உள்ளது. எனவே அவனை அடையாளம் கண்டு கொள்ள நம் கண்களுக்கு தென்படும் இந்த பௌதீக அமைப்பு மட்டும் போதுமானதல்ல. இதன் காரணமாகவே, நூற்றுக்கணக்கான அற்புதங்களை உள்ளடக்கிய இந்த உலக அமைப்பின் முழுமையான ஒழுங்கமைப்பு மற்றும் சீரமைப்பை மிகவும் ஆராய்ந்து பார்த்த போதிலும், இன்னும் கூறப்போனால் விண்ணையும், பூமியையும் துளைத்து உள்ளே சென்றுவிடுமளவுக்கு விண்ணியல், இயற்பியல் மற்றும் தத்துவத்தில் திறமைகளை பெற்றிருந்த போதிலும், இந்த உலக அமைப்பினை அடிப்படையாக கொண்டவர்கள் சந்தேகங்கள் மற்றும் ஐயங்கள் என்ற இருளிலிருந்து இன்னும் வெளிவர முடியவில்லை. அவர்களில் பெரும்பாலார் பலவிதமான தவறுகளுக்கு ஆளாகி விட்டனர். மேலும் வீணான சந்தேகங்களுக்காளாகி வழிதவறி விட்டனர். அவர்களுக்கு ஒருவேளை படைத்தவனின் இருப்பு பற்றிய எண்ணம் கொஞ்சம் வந்தாலும் கூட இந்த உயரிய மற்றும் அழகிய அமைப்பை பார்த்து நுட்பங்களால் நிறைந்த மகத்துவமிக்க இந்த அமைப்பை படைத்த ஒருவன் இருக்க வேண்டும் என்ற அளவில் மட்டுமே அவர்களுக்கு அந்த எண்ணம் தோன்றுகிறது. ஆனால் இந்த எண்ணம் முழுமையற்றதும் குறைபாடான ஞானமுமேயாகும் என்பது வெளிப்படையானதாகும். ஏனென்றால், இப்படைப்பிற்காக ஓர் இறைவனின் அவசியம் இருக்கின்றது என்று கூறுவதும், அந்த இறைவன் உண்மையிலேயே இருக்கின்றான் என்று கூறுவதும் ஒன்றாகி விடாது.

ஆக, அவர்களின் இந்த கற்பனையான இறைஞானம் அவர்களின் உள்ளத்திற்கு சாந்தியையும், அமைதியையும் தந்து விடாது. மேலும் உள்ளத்திலிருந்து முற்றிலுமாக சந்தேகங்களை அகற்றி விடாது. மேலும் மனிதனின் இயல்பிலேயே வைக்கப்பட்டுள்ள முழுமையான இறைஞானத்தை பெற வேண்டும் என்ற தாகத்தை தணித்துவிடும் பானமாகவும் அது திகழாது. மாறாக அது போன்ற குறைபாடுகளை கொண்ட இறைஞானம் அபாயங்கள் நிறைந்ததாகும். ஏனென்றால் அதனால் மிகவும் கூச்சல் ஏற்பட்டு இறுதியில் வீணானதாகவும், விளைவற்றதாகவுமே அது அமைகின்றது.

சுருக்கமாக, இறைவன் தனது பணிகளால் தன்னை வெளிப்படுத்தியிருப்பது போன்று தனது பேச்சால் வெளிப்படுத்தாதவரை, அவனது பணிகளை மட்டும் ஆராய்வது என்பது மனிதனுக்கு திருப்தியை தராது. உதாரணமாக, உட்புறமாக தாழிடப்பட்ட ஓர் அடைபட்ட வீட்டை நாம் கண்டால் முதலில் நாம் அந்த வீட்டினுள் ஒரு மனிதன் இருக்கிறான். அவன் உள்ளிருந்து தாழிட்டு இருக்கிறான் என்றே நாம் நிச்சயமாக எண்ணுவோம். ஏனென்றால் வெளியிலிருந்து ஒருவர் வீட்டினுள் தாழிடுவது இயலாத காரியமாகும். ஆனால் நேரம் ஆனபிறகும், இன்னும் கூறப்போனால் பல ஆண்டுகளாக மீண்டும், மீண்டும் குரல் கொடுத்த பிறகும் அந்த மனிதனிடமிருந்து எவ்வித பதிலும் வரவில்லையென்றால், வீட்டினுள் ஒருவர் இருக்கின்றார் என்ற நமது எண்ணம் மாறிவிடும். மேலும் உள்ளே எவரும் இல்லை என்றே நினைப்போம். இன்னும் கூறப்போனால் ஏதேனும் நுட்பமான செயல் திட்டத்தால் உள்ளிருந்து தாழிடப்பட்டிருக்கும் என்றே கருதுவோம். செயல்களை மட்டும் கண்டு தனது அகப்பார்வையை நிறைவானதாக கருதும் அந்த தத்துவஞானிகளின் நிலையும் இதைப் போன்றதேயாகும். இறைவனை மண்ணில் புதையுண்ட பிணமாகவும், அதனை தோண்டி எடுக்கும் பணி மனிதனுடையது என்றும் கருதுவது மாபெரும் தவறாகும். இறைவன் என்பவன் மனிதனின் முயற்சியால் மட்டுமே காணக்கிடைப்பவன் என்றால் அத்தகைய இறைவனைப் பற்றிய நமது நம்பிக்கை அனைத்தும் வீணானவையாகும். மாறாக என்றென்றும், தொன்றுதொட்டு 'நான் இருக்கின்றேன்' எனக் கூறி மக்களை தன் பக்கம்

அழைக்கின்றவனே இறைவன் ஆவான். இறைவனை அறிந்து கொள்வது மனிதனின் உபகாரம் என எண்ணுவது மாபெரும் அவமரியாதையாகும். மேலும் தத்துவஞானிகள் இல்லாது போயிருந்தால், இறைவன் புதையுண்டேயிருந்திருப்பான் எனவும் நாம் எண்ணினால் அது இறைவனுக்கு செய்யப்படுகின்ற மாபெரும் அவமதிப்பாகும். அதே போன்று இறைவனால் எவ்வாறு பேசமுடியும்? அவனுக்கு என்ன நாவா உள்ளது? என்று கூறுவதும் அறிவீனமாகும். பௌதீக கைகளின்றி விண்ணிலுள்ள கோள்களையும், பூமியையும் அவன் படைக்கவில்லையா என்ன? பௌதீக கண்களின்றி முழு உலகத்தையும் அவன் பார்ப்பதில்லையா என்ன? அவன் பௌதீக காதுகளின்றி நமது அழைப்பை கேட்பதில்லையா என்ன? அதேபோன்று அவன் நம்முடன் பேசுவதும் அவசியமானதில்லையா? மேலும் இறைவன் இனி பேச மாட்டான். மாறாக முன்னொரு காலத்திலேயே பேசினான் என்று கூறுவதும் ஒருபோதும் உண்மையல்ல. நாம் அவனது பேச்சு மற்றும் உரையாடல்களுக்கு ஒரு காலவரையறை நிர்ணயிப்பதில்லை. முன்பை போன்று, இன்றும் தன்னை தேடுகின்றவர்களை இல்ஹாம் (இறையறிப்பு) என்ற நீரூற்றினால் நிறைப்பதற்கு அவன் தயாராகவே உள்ளான். மேலும் அவனது அருட்களின் வாயில்கள் முன்னரைப் போன்றே தற்போதும் திறந்தே உள்ளன. எனினும் தேவைகள் நிறைவடைந்து விட்டதால் மார்க்க சட்டங்களும் எல்லைகளும் முற்று பெற்று விட்டன. மேலும் நமது தலைவரும், எஜமானருமாகிய நபி (ஸல்) அவர்கள் மூலமாக எல்லா நபித்துவமும், இறுதி எல்லையை சென்றடைந்து அதன் முழுமையை அடைந்து விட்டது.

## ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அரேபியாவில் தோன்றியதிலுள்ள நுட்பமான ஞானம்

அந்த முழுமையான ஒளி (ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள்) எவ்வித நுட்பமான ஞானமுமில்லாமல் அரபு நாட்டில் வெளிப்படவில்லை. இஸ்ராயீல் இனத்திலிருந்து தொடர்புகள் துண்டிக்கப்பட்டு, ஃபாரான் என்னும் பாலைவனத்தில் இறைவனின் நுட்பமான ஞானத்தின் அடிப்படையில் தனித்துவிடப்பட்ட இஸ்மாயீலின் சந்ததியினர்தான் அரபு சமுதாயமாகும். ஃபாரான் என்ற அரபிச் சொல்லுக்கு ஓடிப்போன இருவர் என்பதுதான் பொருளாகும். எனவே ஹஸ்ரத் இப்ராஹீம் (அலை) அவர்களே

இஸ்மாயீலின் சந்ததியினரை பிரித்து வைத்தார்கள். இஸ்ஹாக்கை போன்று இஸ்மாயீலின் சந்ததியினர் பங்கினை பெற மாட்டார்கள் என்று தவ்ராத் வேதத்தில் எழுதப்பட்டிருப்பது போன்று, அவர்களுக்கு தவ்ராத் வேதத்தில் எவ்வித உரிமையும் இருக்கவில்லை.

எனவே அவர்களின் உறவினர்கள் அவர்களை கைவிட்டு விட்டனர். வேறெந்த கூட்டத்தினருடனும் அவர்களுக்கு தொடர்பும், உறவும் இருந்ததில்லை. மற்றெல்லா நாடுகளிலும் சில, சில இறைவணக்க சடங்குகளும், போதனைகளும் காணப்பட்டன. அதிலிருந்து ஏதேனுமொரு காலக்கட்டத்தில் அவர்களுக்கு நபிமார்களின் போதனை வந்தடைந்தது என்று தெரிய வருகின்றது. ஆனால் அரபு நாடு மட்டுமே அந்த போதனைகளை முற்றிலும் அறியாத நாடாகவும் திகழ்ந்தது. முழு உலக மக்களுக்கும் இறைஅருட்களில் பங்கை வழங்கவும், அவர்களிடையே ஏற்பட்ட தவறுகளை அகற்றவும் அங்கு இறைதூதுச் செய்தி அருளப்பட்டது. இறுதியில் அரபு சமுதாயம்தான் நபித்துவத்தின் தேவையுடையதாக இருந்தது என்பதும் வெளிப்பட்டது. எனவே முழு மனித சமுதாயத்தையும் சீர்திருத்தும் பொறுப்பை ஏற்றுக் கொண்ட முழுமையான வேதம் (திருக்குர்ஆன்) அருளப்பட்ட பிறகு வேறொரு வேதத்தை மனிதன் ஏன் எதிர்பார்க்க வேண்டும்? மேலும் அது முந்தைய வேதங்களைப் போன்று குறிப்பிட்ட ஒரு சமுதாயத்திற்கானதாக மட்டும் திகழவில்லை. மாறாக முழு உலக சமுதாய மக்களின் சீர்திருத்தத்தை அது விரும்புகின்றது. மனிதனின் மார்க்கப் பயிற்சிக்கு தேவையான அனைத்து படித்தரங்களையும் அது எடுத்துரைக்கின்றது. அது காட்டுமிராண்டிகளுக்கு மனித தன்மைக்குரிய ஒழுங்குமுறைகளை கற்றுத் தருகின்றது. மேலும் அது மனிதத் தன்மையை உருவாக்கி நல்லொழுக்கங்களுக்குரிய பாடங்களை கற்பிக்கின்றது.

## உலகத்தின் மீது திருக்குர்ஆன் செய்த அருள்

மனிதனின் இயல்பான நிலைகளையும், நல்லொழுக்க நிலைகளையும் வேறுபடுத்திக் காட்டி, திருக்குர்ஆன் மட்டுமே உலக மக்கள் மீது அருள் செய்துள்ளது. மனிதனை இயற்கையான நிலைகளிலிருந்து வெளியேற்றி, அவனை மிக உயர்ந்த அந்தஸ்தை எட்டச் செய்வதோடு மட்டும் அது நின்று

விடவில்லை. மாறாக மீதமிருக்கும் படித்தரங்களையும் அதாவது ஆன்மீக நிலைகளின் மிக உன்னத இடத்தை அடைவதற்கான தூய இறைஞானத்தின் கதவுகளை திருக்குர்ஆன் திறந்து கொடுத்துள்ளது. இன்னும் கூறப்போனால் இறைஞானத்தின் கதவுகளை திறந்து கொடுத்துவிட்டு நின்று விடவில்லை. மாறாக இலட்சக்கணக்கான மனிதர்களை ஆன்மீக நிலைகளின் அந்த உயரிய அந்தஸ்தை அடையச் செய்துள்ளது. இவ்வாறாக நான் மேலே குறிப்பிட்ட மூன்று வகை போதனைகளையும் மிகவும் சிறப்பாக திருக்குர்ஆன் எடுத்துரைத்துள்ளது. ஆக, மார்க்கப் பயிற்சிக்குத் தேவையான அடிப்படையான எல்லா போதனைகளையும் அது முழுமையாக தன்னகத்தே பெற்றுள்ளது. எனவேதான் மார்க்க போதனைகளின் வட்டத்தை அதன் எல்லை வரை சென்றடையச் செய்துள்ளதாக திருக்குர்ஆன் வாதிக்கின்றது. அல்லாஹ் கூறுகின்றான் :

اَلْيَوْمَ اَكْمَلْتُ لَكُمْ دِيْنَكُمْ وَاَتْمَمْتُ عَلَيْكُمْ نِعْمَتِيْ وَرَضِيْتُ
لَكُمُ الْاِسْلَامَ دِيْنًا

அதாவது இன்று நான் உங்கள் மார்க்கத்தை முழுமை செய்துவிட்டேன். மேலும் எனது அருளை உங்கள் மீது முழுமை செய்துள்ளேன். மேலும் உங்கள் மார்க்கமாக இஸ்லாத்தை ஆக்கி நான் மகிழ்ச்சியடைந்துள்ளேன்.(5:4) அதாவது மார்க்கத்தின் மிக உயர்நிலை என்பது இஸ்லாத்தின் சொற்பொருளிலேயே அடங்கியுள்ளது. இறைவனுக்காகவே ஆகிவிடுவது. மேலும் தன்னை இறைவழியில் தியாகம் செய்து ஈடேற்றத்தை விரும்புவது. மேலும் இந்த எண்ணத்தை செயல் ரீதியாகவும் வெளிப்படுத்திக் காட்டுவது போன்ற இந்த நிலைகளில்தான் எல்லா சிறப்புகளும் அதன் உச்சத்தை அடைகின்றன. ஆக, விஞ்ஞானிகள் காணாத மெய்யான இறைவனை திருக்குர்ஆன் காட்டித் தந்துள்ளது. திருக்குர்ஆன் இறைஞானத்தை பெற்றுக் கொள்வதற்கு இரண்டு வழிகளை வகுத்துள்ளது. முதலாவது வழிமுறை, மனிதனின் அறிவை, பகுத்தறிவு சான்றுகள் மூலமாக வலிமையாகவும், ஒளிமயமானதாகவும் ஆக்கி மனிதனை தவறுகளிலிருந்து

பாதுகாக்கும் வழிமுறையாகும். இரண்டாவது வழிமுறை, ஆன்மீக வழிமுறைகள் ஆகும். அதனை நாம் மூன்றாவது கேள்விக்குரிய பதிலின் போது எடுத்துரைப்போம். இன்ஷா அல்லாஹ்.

## இறை இருப்பிற்கான சான்றுகள்

திருக்குர்ஆன் பகுத்தறிவு ரீதியாக இறை இருப்பிற்கு என்ன என்ன அழகிய மற்றும் தன்னிகரற்ற சான்றுகளை எடுத்துரைக்கின்றது என இனி பார்ப்போம்.

رَبُّنَا الَّذِيٓ اَعْطٰى كُلَّ شَيْءٍ خَلْقَهٗ ثُمَّ هَدٰى ﴿٥١﴾

அதாவது, இறைவன் ஒவ்வொரு பொருளையும் அதன் தன்மைகளுக்கேற்ப படைத்து, அதன் சிறப்புகளின் தேட்டங்களை பெறுவதற்கான வழியையும் காட்டித் தந்தவன் ஆவான். (20:51)

இனி, இந்த வசனத்தின் கருத்தினை அடிப்படையாகக் கொண்டு, மனிதன் முதல் கடல் மற்றும் நிலத்தில் வாழும் விலங்குகள் மற்றும் பறவைகளின் உருவ அமைப்பு வரை சீர்தூக்கிப் பார்த்தால் ஒவ்வொன்றின் உருவ அமைப்பும் அதன் சூழலுக்கேற்ப படைக்கப்பட்டிருப்பது நமக்குத் தெரிய வரும். மேலும் அது இறை வல்லமையை நமக்கு நினைவூட்டும். வாசகர்கள் சுயமாக இதனை சிந்தித்து பார்க்க வேண்டும். ஏனென்றால் இக்கட்டுரை மிகவும் பரந்ததாகும்.

இறைஇருப்பிற்கான இரண்டாவது ஆதாரமாக, எல்லாக் காரியங்களின் காரண கர்த்தாவாக இறைவன் விளங்குகின்றான் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது.

وَاَنَّ اِلٰى رَبِّكَ الْمُنْتَهٰى ﴿٤٣﴾

எல்லா காரண காரியங்களும் இறுதியில் உமது இறைவனிடமே சென்று முடிவடைகின்றன.(53:43) இந்த ஆதாரத்திற்குரிய விளக்கம் இவ்வாறாகும். அதாவது ஆழ்ந்து சிந்தித்து பார்த்தால், எல்லா பொருட்களும், காரண, காரியம் என்ற தொடரினால் பின்னிப் பிணைக்கப்பட்டுள்ளது தெரிய

வரும். அதன் காரணமாகவே உலகில் பலவிதமான ஞானங்கள் வெளிப்பட்டுள்ளன. ஏனென்றால் எந்த ஒரு படைப்பின் அம்சமும் இந்த அமைப்பிற்கு அப்பாற்பட்டதாக இல்லை. சில காரியங்கள், வேறு சில காரியங்களுக்கு வேராகவும், மேலும் சில காரியங்கள் கிளையாகவும் விளங்குகின்றன. சுயமாக நிலைத்து நிற்கும் மூல காரணத்தை தவிர எஞ்சியுள்ள ஒவ்வொரு காரணமும், மற்றொரு காரியத்திற்கு அடிப்படையாகவும், அக்காரணம் மற்றொரு காரியத்திற்கு ஆணி வேராகவும் இருக்கும். இவ்வாறே இந்தக் காரண, காரிய தொடர் எல்லையற்று நீண்டு கொண்டே செல்கின்றது. இந்த எல்லைக்குட்பட்ட உலகில் காரண, காரியத் தொடர் முற்றுப் பெறாமல் இருப்பது உகந்ததல்ல. மேலும் அது எல்லையற்றதாகவும் இருக்க முடியாது. எனவே இறுதியாக ஒரு காரணத்தில் சென்று முடிவடைகின்றது என்பதை ஒப்புக் கொள்வது அவசியமானதாகின்றது. எனவே இந்தத் தொடரின் இறுதி எல்லையாக இருப்பவனே இறைவன் ஆவான். எல்லா காரண காரியங்களும் இறுதியில் உமது இறைவனிடமே போய் முடிவடைகின்றன என்ற வசனம் எவ்வாறு தனது குறுகிய சொற்களில் மேற்குறிப்பிட்ட ஆதாரத்தை எடுத்துரைக்கின்றது என்பதை கண்களை திறந்து பாருங்கள். அடுத்து, தனது இருப்பிற்கான சான்று ஒன்றை அல்லாஹ் வழங்கியவாறு இவ்வாறு கூறுகின்றான் :

لَا الشَّمْسُ يَنْۢبَغِيْ لَهَاۤ اَنْ تُدْرِكَ الْقَمَرَ وَلَا الَّيْلُ سَابِقُ النَّهَارِ ؕ وَكُلٌّ فِيْ فَلَكٍ يَّسْبَحُوْنَ ﴿٤١﴾

அதாவது, சூரியன் சந்திரனை பிடிக்க முடியாது. நிலவு தோன்றும் இரவானது, சூரியன் தோன்றும் பகலின் மீது ஆதிக்கம் செலுத்த முடியாது. (36:41) அதாவது இவற்றில் எதுவும் அதற்கென்று நிர்ணயிக்கப்பட்ட பாதையிலிருந்து வெளியேற முடியாது. இவற்றிற்கு பின்னால் ஓர் இயக்குனர் இல்லையென்றால், இந்த எல்லா அமைப்பும் தகர்ந்து போயிருக்கும். இது விண்ணியல் அறிஞர்களுக்கு மிகவும் பயனளிக்கத்தக்க ஓர் ஆதாரமாகும். ஏனென்றால், விண்வெளி மண்டலத்தில் எவ்வளவு மகத்துவமிக்க, மற்றும் எண்ணற்ற கோளங்கள் இருக்கின்றனவென்றால், அதில் சிறிதளவு

சீர்குலைவு ஏற்பட்டால், முழு உலகமும் அழிந்து விடும். இது எவ்வளவு மகத்துவமிக்க இறைவல்லமையாகும். அது ஒன்றோடொன்று மோதுவதில்லை. அவற்றின் வேகத்தில் கடுகளவும் மாறுதல் ஏற்படுவதில்லை. மேலும் இத்தனை காலங்களாக பணி செய்ததன் விளைவாக தேய்ந்தும் விடவில்லை. அவற்றின் (உதிரி) பாகங்களில் எந்த மாற்றமும் ஏற்படவில்லை. இவற்றிற்கு பாதுகாவலன் ஒருவன் இல்லையென்றால், இத்தனை பெரிய இயக்கங்களைக் கொண்ட ஆலைகள் எண்ணற்ற ஆண்டுகளாக சுயமாக எவ்வாறு இயங்க முடியும்? இந்த நுட்பமான ஞானத்தின் பக்கம் கவனமூட்டியவாறு இறைவன் பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான் :

اَفِى اللّٰهِ شَكٌّ فَاطِرِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ

இதுபோன்ற விண்வெளியையும், பூமியையும் படைத்த அல்லாஹ்வின் இருப்பில் ஏதேனும் சந்தேகம் இருக்கமுடியுமா? (14:11)

அடுத்து, இறையிருப்பிற்கு சான்றாக மற்றொரு நுட்பமான ஆதாரம் தொடர்பாக அல்லாஹ் கூறுகின்றான் :

كُلُّ مَنْ عَلَيْهَا فَانٍ ۝٢٧ وَّيَبْقٰى وَجْهُ رَبِّكَ ذُو الْجَلٰلِ وَالْاِكْرَامِ ۝٢٨

எல்லா பொருட்களும் அழிந்து போகக்கூடியவையே. என்றென்றும் நிலைத்திருப்பவன் கண்ணியத்திற்கும், புகழுக்குமுரிய உமது இறைவனே. (55 : 27, 28)

இனி பாருங்கள். பூமி தூள், தூளாகி போனாலும், விண்வெளி மண்டலங்கள் துண்டுகளாக சிதறி போனாலும், மேலும் அழித்துவிடும் ஒரு காற்று வீசி அவற்றின் எல்லா அடையாளங்களையும் அழித்து விட்டாலும் கூட அழிவற்ற ஒரு மாபெரும் சக்தி எஞ்சி இருக்கும் என்பதனை மனிதனின் மூளையும், மனசாட்சியும் ஒப்புக் கொள்கிறது. மேலும் அந்த சக்தி மாற்றங்களுக்குரியது என்பதை ஏற்றுக் கொள்ள முடியாது. மேலும் அந்த சக்திக்கு அழிவு இல்லை என்பதையும் அது மாற்றங்களுக்கு அப்பாற்பட்டது என்பதையும், தனது முந்தைய நிலையிலேயே அது நிலைத்திருக்கும் என்பதையும் பகுத்தறிவு

அவசியமானதாகக் கருதுகிறது. எனவே அவனே அழிந்துபோகும் உருவங்களை படைத்தவன் ஆவான். ஆனால் சுயமே அழிவிலிருந்து அவன் பாதுகாப்பாக இருக்கின்றான். தனது இருப்பிற்கு ஒரு சான்றாக அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :-

اَلَسْتُ بِرَبِّكُمْ ۗ قَالُوْا بَلٰى ۛ

அதாவது, நான் உங்களின் இறைவன் இல்லையா? என ஆன்மாக்களிடம் கேட்டேன். அதற்கு ஏனில்லை? என பதிலளித்தன.(7:173) இறைவன் இவ்வசனத்தில் ஆன்மாக்களின் இயல்பில் வைக்கப்பட்டுள்ள அதன் தன்மையை கேள்வி பதில் வடிவில் எடுத்துரைத்துள்ளான். அது எப்படியென்றால் எந்த ஓர் ஆன்மாவும் இயல்பாகவே இறைவனை நிராகரிக்க முடியாது. நிராகரிப்பாளர்களின் எண்ணங்களுக்கேற்ற ஆதாரங்கள் கிடைக்காததனாலேயே (இறைவனை) அவர்கள் நிராகரிக்கின்றனர். இவ்வாறு அவர்கள் நிராகரித்த போதிலும், படைப்பினங்கள் அனைத்தையும் படைத்த ஒருவன் இருக்கவே செய்கின்றான் என்பதை அவர்கள் ஒப்புக் கொள்ளவே செய்கின்றனர்.

உடலில் ஒரு நோய் தோன்றினால், அந்த நோய் தோன்றுவதற்கு திரைமறைவில் காரணங்களே இல்லை எனக் கூறும் அறிவிலி எவரும் உலகில் இல்லை. இந்த உலகத்தின் அமைப்பு காரண காரியங்களோடு பின்னி பிணையப்படவில்லையென்றால், முன்கூட்டியே இன்ன நேரத்தில் புயல்வரும் அல்லது சூறாவளிக் காற்று வீசும் அல்லது இந்த நாட்களில் சூரிய, சந்திர கிரகணம் ஏற்படும் எனக் கூற முடியாது. அல்லது ஒருவருக்கு இன்ன நோய் தோன்றும் அல்லது குறிப்பிட்ட நேரத்திற்குள் அந்த நோயுடன் சேர்ந்து வேறொரு நோயும் ஏற்படும் என்று முன்னதாகவே கூற முடியாது. மேற்கண்ட நிலையில் இவ்விஷயங்கள் அனைத்தும் சாத்தியமற்ற ஒன்றாகிவிடும். எனவே இறைவனை நம்பாத ஆராய்ச்சியாளர் நம்மைப் போன்று அவரும் ஒருவகையில் காரண காரியங்களின் ஆய்வில் இருக்கின்றார் என்பதை ஏற்றுக் கொண்டுள்ளார். எனவே இதுவும் ஒருவகையில் இறைவனின் இருப்பிற்கான ஒப்புதலாகும். ஆனால் அது முழுமையான ஒப்புதலாகாது.

இறைவனின் இருப்பினை நிராகரிக்கும் ஒரு நாத்திகரை ஏதாவதொரு வழிமுறையின் மூலமாக அவரது கடந்த கால வாழ்க்கையின் எண்ணங்களிலிருந்து முற்றிலும் வெளியேறச் செய்யும் வகையிலும், அவரது எல்லா எண்ணங்களையும் இழந்து உயர்வான சக்தியின் கட்டுப்பாட்டுக்குள் வந்துவிடும் அளவிற்கு அவரது சுய நினைவை இழக்கச் செய்துவிட்டால், அந்நிலையில் அவர் இறைவனின் இருப்பை நிராகரிக்காமல் அதனை ஒப்புக் கொள்வார். இது உண்மையென்பதற்கு மாபெரும் நிபுணர்களின் ஆய்வு சாட்சி பகர்கின்றது. ஆக, இந்த நிலையை பற்றியே மேற்குறிப்பிட்ட வசனம் சுட்டிக் காட்டுகின்றது. மேலும் இவ்வுலக இச்சைகளில் மனிதன் மூழ்கியிருக்கும் நிலையிலேயே இறைவனை நிராகரிக்கின்றான். இல்லையென்றால் அவனது உண்மையான இயல்பு இறைவனின் இருப்பை ஏற்றுக் கொள்ளவே செய்கின்றது என்பதுதான் மேற்கண்ட வசனத்தின் பொருளாகும்.

## இறைவனின் பண்புகள்

இறைவனின் இருப்பு நிரூபணமாகும் சில ஆதாரங்களை உதாரணமாக நாம் இங்கு குறிப்பிட்டுள்ளோம். அதன் பிறகு திருக்குர்ஆன் எந்த இறைவனின் பக்கம் நம்மை அழைக்கின்றதோ அந்த இறைவனின் பண்புகளை இவ்வாறு விவரிக்கின்றது என்பதையும் நாம் அறிந்து வேண்டும்.

هُوَ اللّٰهُ الَّذِىْ لَاۤ اِلٰهَ اِلَّا هُوَ ۚ عٰلِمُ الْغَيْبِ وَالشَّهَادَةِ ۚ هُوَ الرَّحْمٰنُ الرَّحِيْمُ ﴿٢٣﴾

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ؕ ﴿٤﴾

اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ؕ

هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى ؕ

يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَ الْاَرْضِ ۚ وَ هُوَ الْعَزِيْزُ الْحَكِيْمُ ﴿٢٤﴾

اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿١٤٩﴾

رَبِّ الْعٰلَمِيْنَ ۙ ﴿٢﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ۙ ﴿٣﴾ مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ؕ ﴿٤﴾

اُجِيْبُ دَعْوَةَ الدَّاعِ اِذَا دَعَانِ ۙ

الْحَىُّ الْقَيُّوْمُ ؕ ﴿٣﴾

قُلۡ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ﴿۱﴾ اَللّٰهُ الصَّمَدُ ۚ﴿۲﴾
لَمۡ يَلِدۡ ۙ وَلَمۡ يُوۡلَدۡ ۙ﴿۳﴾ وَلَمۡ يَكُنۡ لَّهٗ كُفُوًا اَحَدٌ ﴿۴﴾

அதவாது, எந்த ஓர் இணையுமற்ற, அந்த ஏக இறைவனைத் தவிர வணக்கத்திற்கும், கட்டுப்படுதலுக்கும் தகுதியானவன் வேறெவனுமில்லை. (59:23) ஏனெனில், ஒருவேளை அவன் இணையற்றவனாக இல்லாதிருந்தால், அவனது ஆற்றலை விட எதிரியின் ஆற்றல் மேலோங்கியிருக்கும். அந்நிலையில் அவனது இறைத்தன்மைக்கு ஆபத்து நேரிட்டுவிடும். அவனைத் தவிர வணக்கத்திற்குரியவன் வேறெவனுமில்லை என்பதன் பொருள் என்னவென்றால், அவன் தனது பண்புகளிலும் சிறப்புகளிலும் முழுமையானவன் மற்றும் மிகவும் உன்னதமானவன் ஆவான். அவன் பண்புகளிலும், சிறப்புகளிலும் எவ்வளவு உன்னதமானவன் மற்றும் முழுமையானவன் என்றால் அவனைவிட உயர்ந்த ஒன்று கிடையவே கிடையாது. அப்படிப்பட்ட அந்த இறைவனை வணங்குவதில் தாழ்ந்த ஒன்றை அவனுக்கு இணையாக்குவது அநீதியாகும். அடுத்து, அவன் மறைவானவற்றை நன்கறிந்தவன் எனக் கூறப்பட்டுள்ளது. (59:23) அதாவது அவனைப் பற்றி அவனே நன்கறிந்தவன் ஆவான். அவனைப் பற்றிய ஞானத்தையும் வேறெவராலும் பெற்றிட முடியாது. நாம் சூரியனையும், சந்திரனையும் கோளங்களையும் மற்றும் ஒவ்வொரு படைப்பினத்தையும் முழுமையாகப் பார்த்துவிட முடியும். ஆனால் நம்மால் இறைவனை அதுபோன்று பார்க்க இயலாது.

அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

عٰلِمُ الۡغَيۡبِ وَالشَّهَادَةِ ۚ

அதாவது, எந்தவொன்றும் அவனது பார்வையிலிருந்து மறைந்திருக்கவில்லை. (59:23) படைப்புகளைப் பற்றி அறியாதிருப்பது இறைத்தன்மைக்கு எதிரானதாகும். இந்த பிரபஞ்சத்தின் ஒவ்வோர் அணுவின் மீதும் அவனது பார்வை உள்ளது. ஆனால் மனிதனால் அது போன்று முடியாது.

இந்த பிரபஞ்சத்தின் இயக்கம் எப்போது நிறுத்தப்படும்? மற்றும் எப்போது பேரழிவு (கியாமத்) வரும்? என்று அவனே அறிவான். அது எப்போது நிகழும் என்பது அவனைத் தவிர வேறெவருக்கும் தெரியாது. ஆக, இந்த எல்லாவற்றின் நேரங்களையும் அறிந்தவனே இறைவனாவான்.

அடுத்து அவன் 'அர்ரஹ்மான்' ஆவான். அதாவது அவன் எல்லா உயிரினங்களும் உயிர் பெறுவதற்கும், செயல்படுவதற்கும் முன்பாகவே, எவறொருவரின் விருப்பம் மற்றும் நடத்தைக்கும் பகரமாக அல்லாமல், சுயமாக தனது அருளினால் படைப்பினங்களின் சுகவாழ்விற்கான பொருட்களை அவன் தந்தருளியுள்ளான். (59:23) உதாரணமாக, நம்மை படைப்பதற்கும், நமது நடத்தைகள் வெளிப்படுவதற்கும் முன்பாகவே அவன் சூரியன், சந்திரன் மற்றும் பிற அனைத்து பொருட்களையும் நமக்காக படைத்து விட்டான். இந்த நன்கொடைக்கு பெயர் திருமறையில் 'ரஹ்மானிய்யத்' ஆகும். எனவே இறைவனின் இந்த செயலின் காரணமாக அவன் 'ரஹ்மான்' என்றழைக்கப்படுகின்றான்.

அடுத்து அவன் 'ரஹீம்' ஆவான். (59:23) அதாவது அவன் நற்செயல்களுக்கு நற்கூலி வழங்குகின்றான். அவன் எவரது உழைப்பையும் வீணாக்குவதில்லை. இந்த பணியின் காரணமாக அவன் 'ரஹீம்' என அழைக்கப்படுகின்றான். இந்தப் பண்பு ரஹீமிய்யத் என்ற பெயரால் அழைக்கப்படுகின்றது.

مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ۝٤

அடுத்து அவன் 'மாலிக்கி யவ்மித்தீன்' எனக் கூறுகின்றான். (1:4) அதாவது இறைவன் அனைத்து (நன்மை, தீமைகளுக்கும்) கூலி வழங்கும் அதிகாரத்தை தன்னிடம் வைத்துள்ளான். வானம் மற்றும் பூமியின் ஆட்சி அதிகாரத்தை எவரிடமும் ஒப்படைத்துவிட்டு அவன் ஒதுங்கி, செயல் இழந்து விடவில்லை. அவனே நற்கூலியும், தண்டனையும் வழங்குபவனாக திகழ்கின்றான்.

اَلْمَلِكُ الْقُدُّوْسُ

அடுத்து இறைவன் 'அல்மலிகுல் குத்தூஸ்' எனக் கூறப்பட்டுள்ளது. (59:24) அதாவது அந்த இறைவன் எவ்வித அப்பழுக்கற்ற, குற்றங்குறைகளற்ற மன்னன் ஆவான். மனித அரசாட்சி குறைகளுக்கு அப்பாற்பட்டது இல்லை என்பது வெளிப்படையாகும். உதாரணமாக ஒரு நாட்டின் குடிமக்கள் அனைவரும் அந்நாட்டினை விட்டு வெறியேறி வேறொரு நாட்டிற்கு குடியேறிவிட்டால் அந்நாட்டில் அரசாட்சி நிலைபெற முடியாது. அல்லது அந்த நாட்டு குடி மக்கள் அனைவரும் பஞ்சத்தால் பாதிக்கப்பட்டு விட்டால் அரசன் எங்கே செல்வான்? அல்லது அந்நாட்டு குடிமக்கள் அனைவரும் அரசனிடம் சென்று எங்களைவிட நீ எந்த வகையில் உயர்ந்தவன்? என சண்டையிட்டால் அவன் தனது மக்களிடம் என்ன சிறப்பை வெளிப்படுத்திக் காட்ட முடியும்? ஆனால் இறைவனின் அரசாட்சி என்பது இது போன்றதல்ல. அவனால் ஒரு கணத்தில் முழு உலகையும் அழித்துவிட்டு வேறொரு படைப்பினை படைக்க முடியும். அவன் இதுபோன்று படைக்கும் ஆற்றல் பெற்றவனாகவும், அனைத்து வல்லமை கொண்டவனாகவும் இல்லாதிருப்பின், அநீதியின் துணை கொண்டே தனது அரசாட்சியை உலகில் நிலைநிறுத்த நேரிடும். ஏனென்றால் அவனுக்கு படைக்கும் ஆற்றல் இல்லாத நிலையில் உலக மக்களுக்கு ஒரு முறை மன்னிப்பும், விடுதலையும் வழங்கி, பின்னர் புதிய உலகினை எங்கிருந்து கொண்டு வருவான்? இரட்சிப்பு பெற்ற மக்களை பிடித்து மீண்டும் உலகிற்கு அனுப்பி வைப்பானா என்ன? மேலும் அவன் மக்களுக்கு முன்பு வழங்கிய மன்னிப்பையும், விடுதலையையும் அநீதியான வழிவகைகளில் திரும்பப் பெற்றுக் கொள்வானா என்ன? அவ்வாறு செய்தால், அந்நிலையில் அவனது இறைத் தன்மைக்கு பங்கம் வந்து விடும். மேலும் அந்நிலையில் நாட்டிற்காக சட்டங்களை தாமே இயற்றி, பின்னர் சின்ன, சின்ன விஷயங்களுக்காக தாமே அந்தச் சட்டங்களை உடைக்கின்ற உலக அரசர்களைப் போன்றும் தமது சுயநலனைப் பாதுகாத்துக் கொள்வதற்கு அநீதிகளையும், அக்கிரமங்களையும் மேற்கொள்ளும் உலக அரசர்களை போன்றும் இறைவனும் கறைபடிந்த அரசனாகி விடுவான் அல்லவா?

உதாரணமாக, ஒரு கப்பலை காப்பாற்றும் பொருட்டு ஒரு படகின் பயணிகளை கொன்று விடுவதை அரசாங்க சட்டங்கள் அங்கீகரிக்கலாம். ஆனால் இறைவனுக்கு அந்த நிர்பந்தம் நேரிடக் கூடாது. எனவே இறைவன் முழு வல்லமை படைத்தவனாகவும், ஒன்றுமற்ற நிலையிலிருந்து படைப்பவனாகவும் இல்லையென்றால், ஒன்று அவன் திராணியற்ற காரணத்தால் பலவீனமான அரசர்களைப் போன்று தனது வல்லமையை வெளிப்படுத்த வேண்டிய இடத்தில் அநீதியாக நடந்து கொள்ள வேண்டியது வரும். அல்லது நீதிமானாக திகழ்ந்து இறைத்தன்மைக்கு பிரியாவிடை கொடுத்துவிட நேரிடும். ஆனால் உண்மையென்னவென்றால் இறைவனின் கப்பல் எல்லா வல்லமைகளுடனும் உண்மையான நீதி என்ற பெருங்கடலில் பயணித்துக் கொண்டிருக்கின்றது. அடுத்து அவன் 'அஸ்ஸலாம்' ஆவான். (59:24)

அதாவது எல்லாவிதமான குறைபாடுகளுக்கும், துன்பங்களுக்கும், கடினங்களுக்கும் அப்பாற்பட்டவன் அந்த இறைவன் ஆவான் என்பதும், இன்னும் கூறப்போனால் அவன் சாந்தி, சமாதானத்தை வழங்கக் கூடியவன் ஆவான் என்பதும் அதன் சொற்பொருள் ஆகும். அதன் பொருள் வெளிப்படையானதாகும். ஏனென்றால் இறைவனும் துன்பங்களுக்கு ஆளாகி மக்களின் கைகளினாலேயே அழிக்கப்பட்டு, தனது நோக்கங்களில் தோல்வி கண்டிருந்தால் பின்னர் (அந்நிலைகளில்) இந்த இழிவான நிலைகளைக் கண்டு அவன் நம்மை துன்பங்களிலிருந்து நிச்சயமாக காப்பாற்றி விடுவான் என்ற நம்பிக்கை இறைவன் மீது மனித உள்ளங்களுக்கு எப்படி ஏற்பட முடியும்? எனவேதான் இறைவன் பொய்த்தெய்வங்கள் பற்றி திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

اِنَّ الَّذِيْنَ تَدْعُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ لَنْ يَّخْلُقُوْا ذُبَابًا وَّلَوِ اجْتَمَعُوْا لَهٗ ؕ وَاِنْ
يَّسْلُبْهُمُ الذُّبَابُ شَيْـًٔا لَّا يَسْتَنْقِذُوْهُ مِنْهُ ؕ ضَعُفَ الطَّالِبُ وَالْمَطْلُوْبُ ﴿٧٤﴾
مَا قَدَرُوا اللّٰهَ حَقَّ قَدْرِهٖ ؕ اِنَّ اللّٰهَ لَقَوِىٌّ عَزِيْزٌ ﴿٧٥﴾

அல்லாஹ்வையன்றி நீங்கள் எவர்களை இறைவனாக ஆக்கிக் கொண்டீர்களோ, அவர்கள் அனைவரும் ஒன்று சேர்ந்து

ஒரு ஈயைப் படைக்க விரும்பி அதில் ஒருவருக்கொருவர் உதவி செய்தாலும் கூட அவர்களால் அதனைப் படைக்க முடியாது. இன்னும் கூறப்போனால், அவர்களிடமிருந்து ஒரு பொருளை ஈ பறித்து சென்றுவிட்டால் அதனைக் கூட அந்த ஈயிடமிருந்து திரும்ப பெற்று வர இயலாது. அதனை வணங்குபவர்கள் குறைமதி கொண்டவர்களாகவும், அந்த பொய்த் தெய்வங்கள் திராணியற்றவர்களாகவும் உள்ளனர். இறைவன் என்ன இப்படிப்பட்டவனா? இல்லை. இறைவன் என்பவன் வல்லமை மிக்க எல்லாரையும்விட மிக வல்லமை படைத்தவன். எல்லாவற்றையும் அவன் வெற்றி கொண்டவன் ஆவான். அவனை எவரும் பிடிக்கவோ, அழித்துவிடவோ ஒருபோதும் முடியாது. இதற்கு மாற்றமாக இறைவனைப் பற்றிய எண்ணம் படைத்தவர்கள் தவறிழைக்கின்றனர். அவர்கள் இறைவனின் கண்ணியத்தை அறியவில்லை. மேலும் இறைவன் என்பவன் எப்படிப்பட்டவனாக இருக்க வேண்டும் என்பதையும் அவர்கள் அறியாத மக்களாக உள்ளனர். (22:74-75)

அடுத்து திருக்குர்ஆன் கூறுகின்றது. இறைவன் அமைதியை வழங்கக்கூடியவன் ஆவான். (59:24) மேலும் அவன் தனது சிறப்புகளுக்கும், ஏகத்துவத்திற்கும் தேவையான சான்றுகளை நிலைநிறுத்தக் கூடியவன் ஆவான். உண்மையான இறைவனை ஏற்றுக்கொண்ட ஒருவருக்கு எந்த ஒரு சபையிலும் தலைகுனியும் நிலை ஏற்படாது. மேலும் இறைவனின் முன்னிலையிலும் வெட்கப்படவேண்டிய அவசியம் ஏற்படாது என்பதையே மேற்கண்ட பண்பு சுட்டிக் காட்டுகின்றது. ஏனென்றால் அவரிடம் மிக அற்புதமான ஆதாரங்கள் இருக்கும். ஆனால் பொய்த் தெய்வங்களை ஏற்றுக் கொண்டவர் கஷ்டங்கள் பலவற்றிற்கு ஆளாகி விடுவார். அவர் ஆதாரங்களை எடுத்துரைக்க இயலாததால், கேலி, கிண்டலுக்கு அஞ்சி அறிவீனமான விஷயங்களை இரகசியம் எனக் கூறிவிடுவார். மேலும் நிரூபணமான தவறுகளை மறைக்க விரும்புவார்.

அடுத்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

اَلْمَلِكُ الْقُدُّوْسُ السَّلٰمُ الْمُؤْمِنُ الْمُهَيْمِنُ الْعَزِيْزُ الْجَبَّارُ الْمُتَكَبِّرُ ؕ

அதாவது அவன் அனைவரையும் பாதுகாப்பவன்.

அனைத்தையும் வெற்றி கொண்டவன். மேலும் சீர்கெட்ட பணிகளை சீர் செய்பவன் ஆவான். (59:24)

அடுத்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

هُوَ اللّٰهُ الْخَالِقُ الْبَارِئُ الْمُصَوِّرُ لَهُ الْاَسْمَآءُ الْحُسْنٰى

அதாவது, அவனே உடலையும், ஆன்மாவையும் படைப்பவன் ஆவான். தாயின் கருப்பையில் வடிவம் கொடுப்பவனும் அவனே ஆவான். நம்மால் அனுமானிக்க முடிகின்ற எல்லா நற்பண்புகளும் அவனுக்கே உரியன. (59:25)

அடுத்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

يُسَبِّحُ لَهٗ مَا فِى السَّمٰوٰتِ وَ الْاَرْضِ

விண்ணில் உள்ளவர்களும், பூமியில் உள்ளவர்களும் அவனது தூய்மையை எடுத்துரைக்கின்றனர் (59:25). விண்வெளி மண்டலங்களிலும் வசிப்பவர்கள் உள்ளனர். அவர்களும் இறைவனின் கட்டளைகளுக்கு கட்டுப்பட்டவர்கள் என இவ்வசனத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது. மேலும் திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது :

اِنَّ اللّٰهَ عَلٰى كُلِّ شَىْءٍ قَدِيْرٌ ﴿١٤٩﴾

அதாவது இறைவன் மிக வல்லமை படைத்தவன் ஆவான். (2:149) அவன் தன்னை வணங்குபவர்களுக்கு மனநிறைவை அளிக்கின்றான். ஏனென்றால் இறைவன் பலவீனமானவனாகவும், வல்லமையற்றவனாகவும் இருந்தால் அப்படிப்பட்ட இறைவனிடம் என்ன எதிர்பார்க்க முடியும்? மேலும் திருக்குர்ஆன் இறைவனைக் குறித்து இவ்வாறு கூறுகின்றது :

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ﴿٢﴾ الرَّحْمٰنِ الرَّحِيْمِ ﴿٣﴾
مٰلِكِ يَوْمِ الدِّيْنِ ﴿٤﴾

அதாவது, இறைவன் அகில உலகங்களையும் பரிபாலிக்கின்றவனும், அர்ரஹ்மானாகவும், அர்ரஹீமாகவும் மற்றும் தீர்ப்பு நாளின் எஜமானனாகவும் இருக்கின்றான். (1:2-4)

தனக்கே உரிய இவ்வதிகாரத்தை வேறெவருக்கும் வழங்கவில்லை. அவன் ஒவ்வொரு அழைப்பாளரின் அழைப்பையும் கேட்கக்கூடியவனும் மற்றும் பதிலளிப்பவனும் ஆவான்.

أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۖ

அதாவது பிரார்த்தனைகளை ஒப்புக்கொள்பவன் ஆவான். (2:187) அடுத்து அவன் ( اَلْحَيُّ الْقَيُّوْمُ ) அல்ஹய்யுல் கய்யூம் - ஆவான் எனத் திருமறை கூறுகின்றது. அவன் என்றென்றும் நிலைநிற்பவன் மற்றும் எல்லா உயிர்களின் உயிராகவும், அனைத்து படைப்பினங்களின் உதவியாளனாகவும் இறைவன் உள்ளான். (2:256) ஆதியும், அந்தமுமாக இறைவன் இல்லையென்றால் ஒருவேளை அவன் நமக்கு முன்னரே மரணமடைந்துவிடுவானோ என்ற ஐயம் எழலாம். அதனைத் தெளிவுபடுத்தியவாறு இவ்வசனத்தில் இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ اَللّٰهُ الصَّمَدُ ۚ

لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۚ

இறைவன் ஏகனாவான். அவனை யாரும் பெற்றெடுக்கவில்லை. அவனுக்கு மகன் எவரும் இல்லை. மேலும் அவனுக்கு இணையும், நிகரும் எவருமில்லை. (112:2-5)

இறைவனின் ஏகத்துவத்தை சரியான முறையில் ஏற்றுக் கொள்வதும், அதில் எவ்வித கூடுதலும், குறைவும் செய்யாமலிருப்பதும் மனிதனின் கடமையாகும். மேலும் இதுவே மனிதன் தனது உண்மையான எஜமானனுக்கு செய்கின்ற நீதியாகும். இவையனைத்தும் திருக்குர்ஆனில் கூறப்பட்டுள்ள நல்லொழுக்கப் போதனைகளாகும். இறைவன் அனைத்து நல்லொழுக்கங்களிலும் கூடுதல், குறைவு செய்வதை தடுத்திருக்கின்றான். இதுவே நல்லொழுக்கங்களுக்கான அடிப்படை விதிமுறை ஆகும். ஒவ்வொரு நற்பண்பும் அதற்குரிய இடத்திலும், தனக்கென நிர்ணயிக்கப்பட்ட எல்லைகளுக்குட்பட்டு கூடுதல், குறைவின்றி வெளிப்படும்போதுதான் அது நல்லொழுக்கமாகக் கருதப்படும்.

உண்மையில், கூடுதல், குறைவு என்ற இரண்டு எல்லை கோடுகளுக்குட்பட்டு எவ்வித வரம்பு மீறுதலுமின்றி

வெளிப்படுவதே உண்மையான நற்செயல் ஆகும். நடுநிலையை பேணுகின்ற, நடுநிலையில் நிலைநிற்கின்ற நற்பண்புகளே நல்லொழுக்கங்களாக மாறுகின்றன. அந்த நற்பண்பு வெளிப்படுவதற்குரிய இடத்தையும், தகுந்த சந்தர்ப்பத்தையும் கண்டுகொள்வதே நடுநிலை பாங்காகும். உதாரணமாக, ஒரு விவசாயி பயிரிடுவதற்குரிய காலத்திற்கு முன்பாகவோ அல்லது பின்னரோ பயிரிட்டால் அவர் இந்த இரண்டு நிலைகளிலும் நடுநிலை பாங்கினை கைவிட்டு விடுகின்றார். நற்பண்பு, உண்மை மற்றும் ஞானம் இவையனைத்தும் நடுநிலையைக் கொண்டதாகும். மேலும் நடுநிலை என்பது தகுந்த தருணத்தின் அடிப்படையில் அமைந்துள்ளது. இதனை வேறுவிதமாகக் கூறுவதென்றால், உண்மை என்பது எப்பொழுதும் ஒன்றையொன்று எதிர்த்து நிற்கும் இரண்டு பொய்களுக்கு மத்தியில் அமைந்ததாகும். எனவே தகுந்த சந்தர்ப்பத்தை கைக்கொள்ளும்போது அது மனிதனை நடுநிலையை பேணச் செய்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. மேலும் இறைவனை அடையாளம் காண்பதில் மனிதன் காட்ட வேண்டிய நடுநிலை என்பது என்னவென்றால், இறைபண்புகளை எடுத்துரைக்கும்போது எதிர்மறை பண்புகளின் பக்கம் சார்ந்துவிடாமலிருப்பதும், இறைவனை பௌதீக பொருட்களுடன் ஒப்பிட்டு கூறாமல் இருப்பதுமேயாகும். திருக்குர்ஆனும் இறைப் பண்புகளை எடுத்துரைப்பதில் இந்த வழியைத்தான் கையாண்டுள்ளது. இறைவன் பார்க்கின்றான்; கேட்கின்றான்; அறிகின்றான்; பேசுகின்றான் என்று திருக்குர்ஆன் கூறுகின்றது. ஆனால் அதேவேளையில் இந்த பண்புகளை படைப்பினங்களோடு ஒப்புமைப்படுத்துவதை தடுக்கும்விதமாக திருக்குர்ஆன் கீழ்வருமாறும் கூறுகின்றது :

لَيْسَ كَمِثْلِهِ شَيْءٌ

அதாவது, இறைவனின் இயல்பிலும், பண்புகளிலும் அவனுக்கு இணை எவருமில்லை. (42:12)

فَلَا تَضْرِبُوا لِلَّهِ الْأَمْثَالَ

படைப்பினங்களை அவனோடு ஒப்புமை செய்யாதீர்கள். (16:75)

சுருக்கமாக இஸ்லாத்தின் போதனைகள் அனைத்தும் நடுநிலையை பேணச் செய்யும் போதனைகளாகும். சூரா ஃபாத்திஹாவும் கூட நடுநிலையை பேணுமாறு போதிக்கின்றது. எவ்வாறென்றால் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ
غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ ۝٧

அதாவது உன் கோபத்திற்கு ஆளானவர்கள், வழிதவறியவர்கள் ஆகியோரின் வழியில் அல்லாமல் நீ அருள்புரிந்தவர்களின் வழியில் நீ எங்களை நடத்துவாயாக. (1:6,7)

இங்கு கூறப்பட்டுள்ள கோபத்திற்காளானவர்கள் யாரென்றால், இறைவனுக்கெதிராக கோபத்தின் ஆற்றலை வெளிப்படுத்தி முரட்டு சுபாவங்களை பின்பற்றுபவர்கள் ஆவர். மேலும் வழிதவறியவர்கள் யாரென்றால், விலங்குகளின் குணஇயல்புகளை பின்பற்றுவோர் ஆவர். இங்கு ‘நடுநிலை பாங்கினை’ பேணுபவர்களை ‘அன்அம்த அலைஹிம்’ என்ற சொற்களால் இறைவன் நினைவு கூர்ந்துள்ளான். சுருக்கமாக, இந்த அருளுக்குரிய சமுதாயம் நடுநிலை பாங்கினை பேணவேண்டுமென திருக்குர்ஆன் போதிக்கின்றது. ‘தவ்ராத்தில்’ இறைவன் ‘பழிக்குப்பழி’ வாங்குவதற்கு அழுத்தம் கொடுத்திருந்தான். இன்ஜீலில் (சுவிசேஷங்களில்) கருணை, மற்றும் மன்னித்தலுக்கு அழுத்தம் கொடுத்தான். ஆனால் இந்த (முஸ்லிம்) சமுதாயத்திற்கு இறைவன் உகந்த இடம் மற்றும் தருணத்தையும், நடுநிலையையும் பேணும்படி போதித்துள்ளான். இதைப்பற்றி அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

وَكَذٰلِكَ جَعَلْنٰكُمْ اُمَّةً وَّسَطًا

அதாவது நாம் உங்களை நடுநிலையாக செயல்படும் சமுதாயமாக ஆக்கியுள்ளோம். மேலும் நடுநிலையை பேணும்படி போதனை வழங்கினோம். (திருக்குர்ஆன்-2:144 காண்க) எனவே நடுநிலையை பேணுபவர் அருளுக்குரியவர் ஆவார். நடுநிலை மார்க்கமே மிகச் சிறந்த மார்க்கமாகும்.

## ஆன்மீக நிலைகள்

ஆன்மீக நிலைகள் என்ன என்பது தான் இக்கட்டுரையின் மூன்றாவது பகுதியாகும். திருக்குர்ஆனின் போதனையின்படி ஆன்மீக நிலைகளின் உறைவிடம் மற்றும் மூல ஊற்று 'சாந்தியடைந்த ஆன்மா' ஆகும் என்று நாம் முன்னரே விளக்கியுள்ளோம். அது மனிதனை நல்லொழுக்க நிலையிலிருந்து இறைதொடர்பு மிக்க அந்தஸ்தை அடையச் செய்கின்றது. இது பற்றி அல்லாஹ் கூறுகின்றான் :

يَاَيَّتُهَا النَّفْسُ الْمُطْمَئِنَّةُ ﴿٢٨﴾ ارْجِعِىٓ اِلٰى رَبِّكِ رَاضِيَةً مَّرْضِيَّةً ﴿٢٩﴾

فَادْخُلِىْ فِىْ عِبٰدِىْ ﴿٣٠﴾ وَادْخُلِىْ جَنَّتِىْ ﴿٣١﴾

அதாவது இறைவனால் நிம்மதியடைந்துள்ள ஆன்மாவே, நீ உனது இறைவனிடம் திருப்தி அடைந்த நிலையிலும் அவன் உன்னிடத்தில் திருப்தியடைந்தவாறும் உனது இறைவனிடத்தில் திரும்பி வந்து விடு. மேலும் எனது நல்லடியார்களோடு சேர்ந்து விடு. மேலும் எனது சொர்க்கத்தினுள் நுழைந்து விடு. (89:28-31)

ஆன்மீக நிலைகளை விளக்குவதற்காக மேற்கண்ட திருவசனத்தின் விளக்கங்களை சற்று எடுத்துரைப்பது இங்கு பொருத்தமானதாக இருக்கும் என நான் கருதுகின்றேன்.

இவ்வுலகில் மனிதனுக்கு கிடைக்கும் மிக உயர்ந்த ஆன்மீக அந்தஸ்து என்பது இறைவனால் அவனுக்கு வழங்கப்படும் மனநிறைவே ஆகும். மேலும் இறைவனிடத்தில் மட்டுமே மனிதன் பெறுகின்ற முழு மனஅமைதியும், மகிழ்ச்சியும், இன்பமுமேயாகும். இந்நிலையையே வேறுசொற்களில் 'சொர்க்க வாழ்வு' எனக் கூறப்படுகின்றது. இந்நிலையில் மனிதன் தனது முழுமையான உண்மை, தூய்மை மற்றும் விசுவாசத்திற்கு பிரதிபலனாக சொர்க்கத்தை பெற்றுக் கொள்கிறான். ஏனைய மக்கள் வாக்களிக்கப்பட்ட சொர்க்கத்திற்காக காத்திருக்கும்போது இவனோ இவ்வுலக வாழ்க்கையிலேயே சொர்க்கத்தில் நுழைந்து விடுகின்றான். இந்நிலையை அடைந்த மனிதன் தன்மீது கடமையாக்கப்பட்ட இறைவணக்கங்களை ஒரு சுமையாகக் கருதாமல் அவற்றை தனது ஆன்மாவின் வளர்ச்சிக்கு

தேவையான உணவாகக் கருதுகின்றான். அதுவே அவனது ஆன்மீக வாழ்விற்கு தேவையான ஆதாரமாகும். அதற்குரிய கூலி என்பது வேறோர் உலகத்தை சார்ந்தது இல்லை. மாறாக இவ்வுலகிலேயே அவனுக்கு கிடைக்கும். அதாவது, நஃப்ஸே லவ்வாமா என்ற நிலையில் அவனது தூய்மையற்ற வாழ்க்கையைப் பற்றி செய்யப்பட்ட எச்சரிக்கைகள், மேலும் நல்விருப்பங்களை முழுமையாக கிளர்ந்தெழச் செய்ய முடியாத நிலை மற்றும் தீய எண்ணங்களின் மீது உண்மையான வெறுப்பு கொள்ள முடியாத நிலை, மற்றும் நன்மையில் முழுமையாக நிலைநிற்க முடியாத ஆற்றல் ஆகிய இவையனைத்தும் பரிசுத்தமான தூண்டுதலினால் மாற்றம் பெறுகின்றது. இதுவே சாந்தியடைந்த ஆன்மாவின் முன்னேற்றத்தின் துவக்கமாகும். மனிதன் முழு வெற்றியை பெறுவதற்குரிய நேரம் இந்நிலையை வந்தடைந்த பிறகு வந்து விடுகின்றது. இந்நிலையில் அனைத்து மன இச்சைகளும் சுயமாகவே அழிந்துவிடுகின்றன. மேலும் இந்நிலையில் முந்தைய பலவீனங்களை வெட்கத்தோடு மனிதனை பார்க்கச் செய்யும் வகையில் சக்தி வாய்ந்த காற்றொன்று அவனது ஆன்மாவின் மீது வீசத் தொடங்குகின்றது. அந்நேரத்தில் மனிதனின் இயல்புத் தன்மையில் ஒரு புரட்சி ஏற்படுகின்றது. மேலும் அவனது பழக்கவழக்கங்களில் மிகப் பெரிய மாறுதல்கள் வெளிப்படுகின்றன. மேலும் மனிதன் தனது முந்தைய நிலைகளிலிருந்து வெகு தொலைவிற்கு சென்று விடுகின்றான். அவன் இந்நிலையில் கழுவி சுத்தம் செய்யப்படுகின்றான். மேலும் இறைவன் தன் கரங்களால் அவனது இதயத்தில் இறைநேசத்தை பதியச் செய்து விடுகிறான். மேலும் தீமையின் அசுத்தத்தை அவனது உள்ளத்திலிருந்து தனது கரங்களாலேயே எடுத்து எறிந்து விடுகின்றான். இதயம் எனும் கோட்டைக்குள் உண்மையின் படைகள் அனைத்தும் நுழைந்து விடுகின்றன. இயல்பின் அனைத்து கொத்தளங்களிலும் நேர்மையுணர்வு ஆக்கிரமித்துக் கொள்கின்றன. மேலும் உண்மை வெற்றி பெறுகின்றது. பொய் தனது ஆயுதங்களை கீழே வீசி விட்டு ஓடி விடுகின்றது. அப்படிப்பட்ட அந்த மனிதனின் இதயம் இறைவனின் பாதுகாப்பில் வந்துவிடும். அவனது ஒவ்வொரு

காலடியும் இறைவனின் கருணையின் நிழல்களின் கீழே தடம் பதிக்கும். கீழ்க்கண்ட வசனங்களில் இதைக் குறித்தே இறைவன் சுட்டிக் காட்டுகின்றான் :

أُولَٰٓئِكَ كَتَبَ فِي قُلُوبِهِمُ الْإِيمَانَ وَأَيَّدَهُم بِرُوحٍ مِّنْهُ

அதாவது, இறைவன் நம்பிக்கையாளர்களின் உள்ளங்களில் நன்னம்பிக்கையை பதியச் செய்துவிடுகின்றான். மேலும் பரிசுத்த ஆவியின் மூலமாக அதற்கு உதவியளிக்கின்றான். (58:23)

وَزَيَّنَهُ فِي قُلُوبِكُمْ وَكَرَّهَ إِلَيْكُمُ
الْكُفْرَ وَالْفُسُوقَ وَالْعِصْيَانَ ۚ أُولَٰٓئِكَ هُمُ الرَّاشِدُونَ ﴿٨﴾
فَضْلًا مِّنَ اللَّهِ وَنِعْمَةً ۚ وَاللَّهُ عَلِيمٌ حَكِيمٌ ﴿٩﴾

நம்பிக்கையாளர்களே! அவன் ஈமானை உங்களுக்கு பிரியமானதாக ஆக்கி விட்டான். மேலும் ஈமானின் அழகையும் உங்கள் உள்ளங்களில் ஏற்படுத்தி விட்டான். மேலும் நிராகரிப்பு, தீமை மற்றும் பாவத்திற்க்கெதிராக உங்களின் உள்ளங்களில் வெறுப்பினை உண்டாக்கி வைத்துள்ளான். தீமையான வழிகளை உங்கள் உள்ளங்களுக்கு வெறுக்கத்தக்கதாக ஆக்கி விட்டான். இவையனைத்தும் இறைவனின் அருள் மற்றும் கருணையினாலேயே நிகழ்ந்தது. (49:8,9)

وَقُلْ جَآءَ الْحَقُّ وَزَهَقَ الْبَاطِلُ ۚ إِنَّ الْبَاطِلَ كَانَ زَهُوقًا ﴿٨١﴾

உண்மை வந்துவிட்டது. பொய் ஓடிவிட்டது. பொய் ஒருபோதும் உண்மைக்கெதிரில் நிற்க இயலாது.(17:82)

சுருக்கமாக மூன்றாவது நிலையில், மனிதனுக்கு கிடைக்கும் ஆன்மீக நிலைகளின் அடையாளங்களே இங்கு சுட்டிக் காட்டப்பட்டுள்ளன. இந்நிலையை மனிதன் அடையாதவரை அவனுக்கு உண்மையான அகப்பார்வை கிடைக்காது. மேலும் நான் அவர்களின் உள்ளங்களில் ஈமானை பதிய வைத்தேன் என்றும், நான் பரிசுத்த ஆவியின் மூலமாக அவர்களுக்கு உதவி செய்கின்றேன் என்றும் இறைவன் கூறுவதன் பொருள் என்னவென்றால் மனிதனுக்கு

விண்ணிலிருந்து உதவி கிடைக்காதவரை அவனால் உண்மையான தூய்மை மற்றும் பரிசுத்தத்தை பெற இயலாது என்பதாகும்.

நஃப்ஸே லவ்வாமா என்ற நிலையில் மனிதன் மீண்டும், மீண்டும் பாவமன்னிப்பு கோருவான். மேலும் மீண்டும், மீண்டும் தவறிழைத்து விடுவான். இன்னும் கூறப்போனால் சில நேரத்தில் தனது ஆற்றலின் மீது நம்பிக்கையிழந்து, தனது (ஆன்மீக) நோயினை சிகிச்சையற்ற நோயாகக் கருதி விடுவான். ஒரு குறிப்பிட்ட காலம் வரை அந்நிலையிலேயே இருப்பான். பின்னர் நிர்ணயிக்கப்பட்ட காலம் கடந்ததும் இரவிலோ அல்லது பகலிலோ திடீரென ஓர் ஒளி அவன் மீது இறங்கும்.

அந்த ஒளி தெய்வீக சக்தி கொண்டதாக இருக்கும். அந்த ஒளி அவன் மீது இறங்கிய அந்த தருணத்திலேயே ஒரு வியக்கத்தக்க மாறுதல் அவனிடத்தில் ஏற்பட்டு விடும். மறைமுகமான கரம் ஒன்றின் பலம் வாய்ந்த இயக்கத்தை அவன் உணர்ந்து கொள்வான். ஓர் அற்புதமான உலகம் அவனுக்கு முன் வந்துவிடும். அப்போதுதான் இறைவன் இருக்கின்றான் என்பதை மனிதன் அறிந்து கொள்கிறான். கண்களில் முன்பில்லாத ஒளி வந்து விடுகின்றது. ஆனால் அந்த வழியை எப்படி அடைவது? எவ்வாறு அந்த ஒளியைப் பெறுவது? என்பதுதான் இங்கு எழுகின்ற கேள்வியாகும்.

அதற்கு காரண காரியத் தொடர்புடன் ஒவ்வொன்றும் இணைக்கப்பட்டிருக்கும் இவ்வுலகில் ஒவ்வொரு காரியத்திற்கும் ஒரு காரணமும், ஒவ்வோர் இயக்கத்தையும் இயக்குகின்ற ஓர் இயக்குனரும் இருக்கின்றான் என்பதை நாம் தெரிந்து கொள்ள வேண்டும். எனவே ஒவ்வொரு ஞானத்தை பெறுவதற்கும் ஒரு வழி உள்ளது. அதற்கு நேரிய வழி என்று பெயர். இறைவன் ஆதிகாலம் முதலே இயற்கையில் நிர்ணயித்துள்ள சட்டதிட்டங்களுக்கு கட்டுப்பட்டு நடக்காமல் உலகில் எந்த ஒரு பொருளையும் மனிதனால் பெற முடியாது. ஒவ்வொன்றையும் அடைவதற்கு ஒரு குறிப்பிட்ட வழி உள்ளது என இயற்கைச் சட்டம் உணர்த்துகின்றது. அதனை பெறுவது கூட இயற்கையை சார்ந்தே உள்ளது. உதாரணமாக, நாம் ஒரு இருள் சூழ்ந்த அறையில் இருக்கும்போது சூரிய வெளிச்சம் தேவையென்றால்,

அந்த அறையில் சூரியவெளிச்சம் வரும்வகையில் அமைக்கப்பட்டிருக்கும் ஜன்னலைத் திறப்பதுதான் அதற்குரிய நேர்வழியாகும்.

அவ்வாறு செய்யும்பட்சத்தில் உடனடியாக சூரிய ஒளி அறையினுள் புகுந்து நம்மை ஒளிமயமாக்கி விடும். எனவே அதே போன்று இறைவனின் உண்மையான அருட்களை பெறுவதற்கும், தூய ஆன்மீக நிலைகளை அடைவதற்கும் ஒரு குறிப்பிட்ட வழி இருக்கும் என்பதும் வெளிப்படையாகும். அது என்னவென்றால், எவ்வாறு அனைத்து உலக விஷயங்களிலும் நமது வெற்றிக்குரிய தனிப்பட்ட வழிகளை நாம் தேடி அலைகின்றோமோ அதே போன்று ஆன்மீக விஷயங்களுக்குரிய தனிப்பட்ட வழிகளையும் நாம் தேட வேண்டும். நாம் நமது அறிவின் ஆதிக்கத்தாலும், நாமே உருவாக்கிக் கொண்ட வழிமுறைகளாலும் இறைவனை சந்திப்பதற்குரிய வழியை பெற்றுக் கொள்ள முடியுமா என்ன? இறைவனின் வல்லமையினால் மட்டுமே திறக்கும் அந்த கதவுகளை நாம் நமது தர்க்க சாஸ்திரங்களாலும், நமது தத்துவ ஞானத்தாலும் திறந்திட முடியுமா? அது ஒருபோதும் முடியாது என்பதை நன்றாக தெரிந்து கொள்ளுங்கள். என்றென்றும் உயிர் வாழக்கூடிய மற்றும் என்றென்றும் நிலைத்து நிற்கும் அந்த இறைவனை நமது திட்டங்களால் மட்டும் நம்மால் ஒருபோதும் அடைந்துவிட முடியாது. மாறாக இறைவனை அடைவதற்குரிய நேரிய வழி என்னவென்றால், இறைவழியில் நம்மை அர்ப்பணம் செய்துவிட்டு, அவனை சந்திப்பதற்கு பிரார்த்தனைகளில் ஈடுபட்டிருக்க வேண்டும். அப்போதுதான் இறைவனை, இறைவன் மூலமாக அடையமுடியும்.

## ஓர் அழகிய பிரார்த்தனை

இறைவனிடம் வேண்டுதல் புரிவதற்கு மிகவும் சிறப்பு வாய்ந்த மற்றும் மனித இயல்பின் ஆன்மீக உணர்வினை நமது கண்முன் நிறுத்துகின்ற துஆவினை கண்ணியமிக்க இறைவன் தனது திருமறையில் சூரா ஃபாத்திஹாவில் நமக்கு கற்றுத் தந்துள்ளான். அது இதுவாகும்.

بِسۡمِ اللّٰهِ الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝١ اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَ ۝٢

அளவற்ற அருளாளனும், மேன்மேலும் கருணை காட்டுபவனுமான அல்லாஹ்வின் திருப்பெயரால் (ஆரம்பிக்கின்றேன்). எல்லா உலகங்களையும் படைத்து, அதனை நிலைநிற்கச் செய்யக்கூடிய அல்லாஹ்விற்கே எல்லா புகழ்களும் ஆகும். (1:1,2)

الرَّحۡمٰنِ الرَّحِيۡمِ ۝٣

அவன் நாம் செயலாற்றுவதற்கு முன்னரே நமது சுகபோகங்களுக்கான பொருட்களை ஆயத்தப்படுத்தி வைத்தவன் ஆவான். மேலும் நாம் செயல்பட்ட பின்னர் கருணையுடன் அதற்குரிய கூலியை வழங்குபவன் ஆவான். (1:3)

مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِ ۝٤

அவன் மாலிகி யவ்மித்தீன் ஆவான். நீதித் தீர்ப்பு நாளன்று அவன் ஒருவனே அந்நாளின் எஜமானனாவான். அவன் அந்நாளினை வேறெவரிடமும் ஒப்படைக்கவில்லை. (1:4)

اِيَّاكَ نَعۡبُدُ وَ اِيَّاكَ نَسۡتَعِيۡنُ ۝٥

இந்தப் புகழ் அனைத்திற்கும் உரியவனே! நாங்கள் உன்னையே வணங்குகின்றோம். நாங்கள் எல்லா காரியங்களிலும் உன்னிடமே உதவியை நாடுகின்றோம்.(1:5) எங்களுடைய எல்லா ஆற்றல்களும் உன்னை வணங்குவதில் ஈடுபட்டுள்ளன. மேலும் அவை இறைவனின் முன்னிலையில் சிரம்பணிந்திருக்கின்றன என்பதை சுட்டிக்காட்டவே இங்கு 'நாங்கள்' என்ற சொல்லின் மூலமாக இறைவணக்கம் குறிப்பிடப்பட்டுள்ளது. (நாங்கள் உன்னையே வணங்குகின்றோம்–1:5).

ஏனென்றால் மனிதன் என்பவன் அவனது உள்ளார்ந்த ஆற்றல்களின் அடிப்படையில் ஒரு திரட்டாகவும், உள்ளார்ந்த சக்திகளின் ஒரு சமுதாயமாகவும் திகழ்கின்றான். இவ்வாறாக மனிதனது ஆற்றல்கள் அனைத்தும் இறைவன் முன்னிலையில் செய்கின்ற சிரம்பணிதலின் நிலைதான் 'இஸ்லாம்' என்றழைக்கப்படுகிறது.

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ‏ ﴿۶﴾

எங்களுக்கு நீ நேரான வழியினை காட்டுவாயாக! மேலும் அவ்வழியில் எங்களை நிலைநிறுத்தி, உனது அருட்களும், கருணையும் கிடைக்கப் பெற்ற கூட்டத்தினரின் வழியில் எங்களை வழிநடத்துவாயாக. (1:6)

صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ
غَيۡرِ الۡمَغۡضُوۡبِ عَلَيۡهِمۡ وَلَا الضَّآلِّيۡنَ ﴿۷﴾

மேலும் எவர்களின்மீது உனது கோபம் இறங்கியதோ, மேலும் எவர்கள் உன்னை வந்தடைய முடியாமல் உனது வழியினை மறந்து விட்டார்களோ அவர்களின் வழியிலிருந்து எங்களை காப்பாற்றுவாயாக! இறைவா! நீ அவ்வாறே செய்வாயாக! (1:7)

எவர்கள் தமது வாழ்வினை இறைவழியில் தியாகம் செய்து தன்னை முழுமையாக அவனது வழியில் அர்ப்பணித்து, அவனது திருப்தியில் மூழ்கி விடுவார்களோ அவர்களின் மீதே இறைவனின் அருட்களும் வளங்களும் இறங்கிக் கொண்டிருக்கும் என மேற்குறிப்பிட்ட வசனம் நமக்கு விளக்குகின்றது. மேலும் இப்படிப்பட்ட மக்கள் மனிதனுக்கு என்னென்ன ஆன்மீக அருட்கள் கிடைக்க முடியுமோ அதனை பெறுவதற்கும், இறைநெருக்கம் இறைசந்திப்பு மற்றும் இறைவனோடு உரையாடுவதற்கும் இறைவனிடத்தில் பிரார்த்தனை செய்வதில் மூழ்கியிருப்பர். மேலும் அவர்கள் இந்த பிரார்த்தனையுடன் தனது முழு ஆற்றல்களுடனும் இறைவணக்கங்களில் ஈடுபட்டிருப்பர். மேலும் பாவங்களிலிருந்து தம்மை பாதுகாத்துக் கொண்டு இறைவன் முன்னிலையில் வீழ்ந்து கிடப்பர். மேலும் தம்மால் இயன்றவரை முழுமையாக தன்னை தீமைகளிலிருந்து தடுத்து நிறுத்தி, இறைவனின் கோபத்திற்குரிய வழிகளிலிருந்தும் விலகியிருப்பர்.

இவ்வாறு அவர்கள் மிகவும் தைரியத்துடனும், உண்மையுடனும் இறைவனைத் தேடிக் கொண்டிருப்பர். இது போன்ற அவர்களின் செயல்களின் காரணமாக அவர்கள்

இறைவனை அடைந்து விடுகின்றனர். மேலும் இறைவனின் தூய ஞானமென்னும் பானத்தை அருந்தி மனநிறைவும் பெறுகின்றனர். உண்மையான மற்றும் முழுமையான அருட்களே மனிதனை ஆன்மீக உலகம் வரை சென்றடையச் செய்கின்றது. இந்த நிலையை அடைவது முழுமையான மன உறுதிப்பாட்டினைச் சார்ந்ததாகும். இதைத்தான் மேற்குறிப்பிட்ட வசனத்தில் உறுதிப்பாடு என்ற விஷயம் சுட்டிக்காட்டுகின்றது. மேலும் முழுமையான உறுதிப்பாடு என்பதன் பொருள் என்னவென்றால் எவ்வித சோதனையாலும் சேதப்படுத்த முடியாத உண்மை மற்றும் நன்றியுணர்வுமிக்க இறைபக்தி ஆகும். அதாவது எந்த வாளாலும் துண்டித்து விட முடியாத, எந்த நெருப்பாலும் எரிக்க முடியாத, மற்றும் எந்த ஒரு துன்பத்தாலும் பாதிப்பை ஏற்படுத்த முடியாத இறை தொடர்பில் நிலைநிற்பதாகும். தனது பிரியமானவர்களின் மரணமோ, அன்பர்களின் பிரிவோ அவர்களுடைய இறைத் தொடர்பில் எந்த தடுமாற்றத்தையும் ஏற்படுத்த முடியாது. கௌரவத்தை இழந்து விடுவோம் என்ற அச்சமோ, பயங்கரமான துக்கம் நிறைந்த மரண தண்டனையோ அவர்களின் உள்ளத்தில் கடுகளவு கூட அச்சத்தை ஏற்படுத்த முடியாது. எனவே இந்த வாயில் மிகவும் குறுகலானது. மேலும் மிகவும் கடினங்கள் நிறைந்ததாகும். இது மிகக் கடினமான வழியாகும்.

இந்த கடினமிகு வழியைப் பற்றியே இறைவன் கீழ்வரும் வசனத்தில் இவ்வாறு சுட்டிக் காட்டுகின்றான் :

قُلْ اِنْ كَانَ اٰبَآؤُكُمْ وَاَبْنَآؤُكُمْ وَاِخْوَانُكُمْ وَاَزْوَاجُكُمْ وَعَشِيْرَتُكُمْ
وَاَمْوَالُ ۣاقْتَرَفْتُمُوْهَا وَتِجَارَةٌ تَخْشَوْنَ كَسَادَهَا وَمَسٰكِنُ تَرْضَوْنَهَآ اَحَبَّ
اِلَيْكُمْ مِّنَ اللّٰهِ وَرَسُوْلِهٖ وَجِهَادٍ فِيْ سَبِيْلِهٖ فَتَرَبَّصُوْا حَتّٰى يَاْتِيَ اللّٰهُ بِاَمْرِهٖ ؕ
وَاللّٰهُ لَا يَهْدِى الْقَوْمَ الْفٰسِقِيْنَ ﴿٢٤﴾

அதாவது நீர் கூறுவீராக: உங்களுடைய தந்தையும் உங்களின் மகன்களும், உங்களின் சகோதரர்களும், உங்களுடைய மனைவியர்களும், உங்களின் குடும்பத்தாரும்,

நீங்கள் உழைத்து சம்பாதித்த செல்வங்களும், நஷ்டம் ஏற்பட்டு விடுமோ என்று நீங்கள் அச்சப்பட்டுக் கொண்டிருக்கும் வியாபாரமும், உங்களின் உள்ளம் கவர்ந்த வீடுகளும், அல்லாஹ்வையும், அவனது திருத்தூதரையும், இறைவழியில் போராடுவதையும் விட உங்களுக்கு மிக விருப்பமானதென்றால் இறைவன் புறமிருந்து கட்டளை வெளிப்படும் வரை நீங்கள் எதிர்பார்த்துக் காத்திருங்கள். அல்லாஹ் தீயவர்களுக்கு தன்னை அணுகும் வழியைக் காட்டுவதில்லை. (9:24)

எவர்கள் இறைதிருப்திக்கு மாற்றமாக தமது உறவினர்கள் மீதும், தமது செல்வத்தின் மீதும் அன்பு செலுத்துகின்றார்களோ அவர்கள் இறைவனின் பார்வையில் தீயவர்கள். அவர்களுக்கு நிச்சயமாக அழிவே ஏற்படும் என்று மேற்கண்ட வசனத்திலிருந்து தெளிவாகின்றது. ஏனென்றால் அவர்கள் இறைவனை விட ஏனையவற்றிற்கு முக்கியத்துவம் கொடுத்தனர்.

இதுவே ஆன்மீக நிலையின் மூன்றாவது படித்தரமாகும். இந்நிலையில் மனிதன் இறைதொடர்பு மிக்கவனாக மாறுகின்றான். அவன் இறைவனுக்காக ஆயிரக்கணக்கான துன்பங்களையும் சகித்துக்கொண்டு, இறைவனைத் தவிர்த்து தமக்கு வேறு எவரும் இல்லை என்றும் மற்ற அனைவரும் மரணித்து விட்டனர் என்பதைப் போன்றும் இறைவனின் பக்கம் உண்மையுடனும் கலப்பற்ற தன்மையுடனும் குனிந்து விடுகின்றான்.

எனவே நாம் நம்மில் ஒரு மரணத்தை கைக் கொள்ளாதவரை நம்மால் உயிருள்ள இறைவனை காண இயலாது என்பதே உண்மையாகும். உலக இச்சைகளை அழித்து வாழ்க்கையில் நாம் ஒரு மரணத்தை ஏற்படுத்திக் கொள்ளும் அந்நாளே இறைவன் நம்மிடத்தில் வெளிப்படும் நாளாகும். இறைவனைத் தவிர ஏனையவற்றை பார்ப்பதில் நாம் குருடர்களாகாத வரை நாம் குருடர்களே! நாம் இறைவனின் திருக்கரங்களில் பிணத்தைப் போன்று ஆகி விடாதவரை நாம் மரித்தவர்களே! நமது முகம் முழுமையாக இறைவன் பால் சார்ந்திருக்கும்போதுதான் எல்லா மனஇச்சைகளையும் வெல்லக்கூடிய உண்மையான மனஉறுதி நமக்கு கிடைக்கும். அதற்கு முன்னர் உண்மையான உறுதிப்பாடு கிடைக்க இயலாது.

அந்த உறுதிப்பாடுதான் உலக இச்சைகளை அழித்து ஒரு மரணத்தை ஏற்படுத்துகின்றது. நம்மிடம் ஏற்பட வேண்டிய அந்த உறுதிப்பாட்டைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

بَلٰى ۚ مَنْ اَسْلَمَ وَجْهَهٗ لِلّٰهِ وَهُوَ مُحْسِنٌ

அதாவது எவர் அல்லாஹ்விற்காக தன்னை முற்றிலும் அர்ப்பணம் செய்து நன்மைகளைச் செய்வாரோ அவருக்கு அவரின் இறைவனிடம் நற்பலன் உண்டு. (2:113)

பலியிடப்படுவதைப் போன்று நாம் இறை சன்னிதானத்தில் நமது கழுத்தை வைத்துவிட வேண்டும். அதாவது நமது வெளிப்படையான அங்கங்களையும், அந்தரங்களையும், ஆற்றல்களையும், நமது வாழ்வையும், மரணத்தையும் இறை திருப்திக்காக ஆக்கிக் கொள்ளும்போதுதான் மேற்குறிப்பிட்ட உறுதிப்பாடு நமக்குக் கிடைக்கும்.

இதைப்பற்றி அல்லாஹ் திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :

قُلْ اِنَّ صَلَاتِىْ وَنُسُكِىْ وَمَحْيَاىَ وَمَمَاتِىْ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ ۙ۝١٦٣

அதாவது நீர் கூறுவீராக: எனது தொழுகையும், எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும் அனைத்தும் இறைவனுக்கே உரியதாகும். (6:163)

எப்போது ஒரு மனிதன் தனது மரணத்தையும், தான் உயிர் வாழ்வதையும் தனக்காக அல்லாமல் இறைவனுக்காகவே ஆக்கிக் கொள்வானோ அப்போது தன்னை நேசிப்பர்களை என்றென்னும் நேசிக்கும் இறைவன் அப்படிப்பட்ட மனிதன் மீது தனது அன்பை அருளுகின்றான். இந்த இரண்டு அன்பும் ஒன்று சேரும்போது அத்தகைய மனிதனுக்குள் ஓர் ஒளி நுழைகின்றது. அதனை உலகத்தால் கண்டு கொள்ளவோ, அறிந்து கொள்ளவோ முடியாது. அத்தகைய மக்களை உலகம் கண்டு கொள்ளாததன் விளைவாகவே ஆயிரக்கணக்கான உண்மையாளர்களும், நல்லடியார்களும் கொலை செய்யப்பட்டுள்ளனர். அத்தகையோரை அடையாளம் காணாத மக்கள் அவர்களை சுயநலவாதிகள் என்றும், சதிகாரர்கள்

என்றும் கூறினர். ஏனென்றால் அவர்கள் நல்லடியார்களின் ஒளிமயமான முகத்தைக் காண முடியாத குருடர்களாக இருந்தனர். இதைப் பற்றியே திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

يَنْظُرُوْنَ اِلَيْكَ وَهُمْ لَا يُبْصِرُوْنَ ﴿١٩٩﴾

அதாவது நிராகரிப்போர் உம்மை பார்க்கின்றனர். ஆனாலும் அவர்களுக்கு நீர் தென்படுவதில்லை. (7:199)

சுருக்கமாக, அந்த மனிதரிடத்தில் மேற்குறிப்பிட்ட ஒளி நுழைந்த நாள் முதல் அந்த மனிதன் விண்ணுலக மனிதனாகி விடுகிறான். எல்லாப் படைப்புகளின் எஜமானனாகிய அந்த இறைவன் அந்த மனிதனின் அகத்திலிருந்து பேசுவான். மேலும் தனது இறைவல்லமையின் ஒளியையும் காட்டுகின்றான். மேலும் தூய அன்பினால் நிறைந்த அந்த மனிதனின் இதயத்தை இறைவன் தனது அரியணையாக ஆக்கிக் கொள்கிறான். அத்தகைய மனிதனுக்கு இறைவன் புதுப் பொலிவுடன் காட்சியளிக்கின்றான். அவருக்காக இறைவன் புதுப்புது பரிமாற்றங்களையும், நடைமுறைகளையும் வெளிப்படுத்துகின்றான். உண்மையில் இறைவனிடத்திலோ, அல்லது இறைவனின் பரிமாற்றங்களிலோ எந்த புது மாற்றமும் ஏற்படுவதில்லை. ஆனால் இறைவனின் வழக்கமான பரிமாற்றங்களிலிருந்து தனித்த மற்றும் உலக தத்துவ ஞானிகளால் கண்டுணர முடியாத பரிமாற்றங்களாக அவை அமைகின்றன.

அந்த மனிதர்களைப் பற்றி அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

وَمِنَ النَّاسِ مَنْ يَّشْرِىْ نَفْسَهُ ابْتِغَآءَ مَرْضَاتِ اللّٰهِ ۭ وَاللّٰهُ رَءُوْفٌۢ بِالْعِبَادِ ﴿٢٠٨﴾

அதாவது இறை திருப்தியில் தன்னை மாய்த்துக் கொள்கின்ற மனிதன் மனிதர்களிலேயே மிகவும் உன்னத அந்தஸ்தை அடைந்த மனிதன் ஆவான். அவர்கள் இறைதிருப்தியை பெறும் பொருட்டு தமது உயிரையே அர்ப்பணித்து விடுகின்றனர். இத்தகைய மக்களுக்கே இறைவனின் கருணை கிடைக்கின்றது.

அதே போன்று ஆன்மீக நிலையின் உயர் அந்தஸ்தை அடைந்தவர்கள் இறைவழியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்துக் கொள்கின்றனர். (2:208)

இறைவன் இவ்வசனத்தில் கூறுகின்றான். எனது வழியில் எனது திருப்தியை பெறும் பொருட்டு தனது உயிரையே அர்ப்பணித்து விடுகின்ற மனிதர் எல்லா துன்பங்களிலிருந்தும் இரட்சிப்பைப் பெறுகின்றார். மேலும் அத்தகைய நபர் தனது அனைத்து வகையான தியாகங்களின் மூலமாகவும் தன்னை இறைவனுக்குரியவர் என்பதை நிரூபணம் செய்கிறார்.

மேலும் படைத்தவனை வணங்குவதற்கும், படைப்பின சேவைக்காகவுமே, தான் படைக்கப்பட்டிருப்பதாக அவர் கருதுவார். அனைத்து ஆற்றல்களுடனும் தொடர்புடைய நற்செயல்கள் அனைத்தையும் முழு மனதுடனும், தன்னார்வத்துடனும் மேற்கொள்வார். இறைவனுக்குக் கீழ்ப்படிதல் என்ற கண்ணாடியில் தனது உண்மையான அன்பிற்குரிய எஜமானனைக் கண்டு கொண்டிருப்பது போன்று நற்செயல்களை மேற்கொள்வார். அதன் விளைவாக அவரது எண்ணங்கள் இறைவனது எண்ணங்களுக்கு இணக்கமாகி விடுகின்றன. இறைவனுக்கு கீழ்ப்படிவதிலேயே அனைத்து இன்பங்களும் இருப்பதை அவர் கண்டு கொள்வார். அவர் அனைத்து நற்செயல்களையும், சுமையாக கருதாமல் மகிழ்ச்சியுடனும், முழுமனதுடனும் மேற்கொள்வார். ஓர் ஆன்மீக மனிதனுக்கு இவ்வுலகில் கிடைக்கும் சொர்க்கம் இதுவேயாகும். மறுஉலகில் அவருக்கு கிடைக்கவிருக்கும் சொர்க்கம் என்பது உண்மையில் இந்த சொர்க்கத்தின் நிழலாகவும், தாக்கமாவும் இருக்கும். அவருக்கு இவ்வுலகத்தில் கிடைத்த இந்த சொர்க்கத்தை இறைவனின் வல்லமை மறுவுலகில் வெளிப்படையாக காட்சியளிக்கச் செய்யும். அதனை எடுத்துரைத்தவாறு அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்.

وَلِمَنْ خَافَ مَقَامَ رَبِّهِۦ جَنَّتَانِ ﴿٤٧﴾

وَسَقَىٰهُمْ رَبُّهُمْ شَرَابًا طَهُورًا ﴿٢٢﴾

إِنَّ الْأَبْرَارَ يَشْرَبُونَ مِن كَأْسٍ كَانَ مِزَاجُهَا كَافُورًا ﴿٦﴾
عَيْنًا يَشْرَبُ بِهَا عِبَادُ اللَّهِ يُفَجِّرُونَهَا تَفْجِيرًا ﴿٧﴾

அதாவது இறைவனின் மகத்துவம் மற்றும் கம்பீரத்திற்கும் அஞ்சி நிற்கும் மனிதருக்கு இரண்டு சொர்க்கங்கள் உள்ளன. ஒன்று இவ்வுலகில் கிடைக்கும் (மேற்குறிப்பிட்ட) சொர்க்கம். மற்றொன்று மறுவுலகில் கிடைக்கும் சொர்க்கம். (55:47)

எவர்கள் இறைதிருப்தியில் மூழ்கி விடுவார்களோ அவர்களுக்கு இறைவன் அவர்களுடைய இதயத்தையும், சிந்தனைகளையும், விருப்பங்களையும், தூய்மைப்படுத்தும் ஒரு பானத்தை அவர்கள் அருந்தும்படி செய்கின்றான். (76:22) நல்லடியார்கள் கற்பூரம் கலந்த அந்த பானத்தை அருந்துகின்றனர். அவர்கள் தாமாகவே பெருக்கெடுத்த நீரூற்றிலிருந்து நீர் அருந்துவார்கள். (76:6,7)

**கற்பூரம் மற்றும் இஞ்சி பானத்தின் உண்மை நிலை**

முன்னரே நான் கூறியது போன்று அடக்குதல், மூடுதல் என்று பொருள் தரும் கஃபர என்ற அரபி சொல்லிலிருந்து 'காஃபூர்' என்ற சொல் வந்துள்ளது, மேற்கண்ட திருவசனத்தில் இச்சொல் பயன்படுத்தப்பட்டிருப்பதன் நோக்கம் என்னவென்றால், இறைவனின் நல்லடியார்கள் உலக இச்சைகளிலிருந்து பற்றற்று போகுதல் மற்றும் இறைவன் பக்கம் முழுமையாக குனிதல் என்ற பானத்தை எந்தளவுக்கு மனத்தூய்மையுடன் அருந்தினார்களென்றால் அதன் காரணமாக உலகத்தின் மீதான அன்பு தணிந்து விடுகின்றது. எல்லா எண்ணங்களும் உள்ளத்திலிருந்தே தோன்றுகின்றது என்பது பொது விதியாகும். எனவே எப்போது உள்ளம் அசுத்தமான எண்ணங்களிலிருந்து விலகிச் சென்றுவிடுமோ, அந்த எண்ணங்களுடன் உள்ளத்திற்கு எந்தத் தொடர்பும் இல்லாமல் போகுமோ அப்போது தீய உணர்வுகளும் உள்ளத்திலிருந்து படிப்படியாக குறைந்து முழுமையாக அழிந்து போய்விடும். மேற்கண்ட வசனத்தில் இதனையே இறைவன் நமக்குக் கூறுகின்றான்.

எவர் அல்லாஹ்வின் பக்கம் முழுமையாக குனிந்து விடுவாரோ, அவர் மன உணர்ச்சிகளிலிருந்து விலகி வெகுதூரம் சென்று விடுவார். உலக காரியங்களில் அவரது உள்ளம்

குளிர்ந்து போய்விடும் அளவிற்கு அவர் இறைவன் பக்கம் குனிய வேண்டும். மேலும் கற்பூரம் விஷக்கிருமிகளை அழித்து விடுவதைப் போன்று அவர்களின் மன இச்சைகள் அடங்கிவிடுகின்றன என்றும் இறைவன் மேற்கண்ட வசனத்தில் நமக்கு அறிவுறுத்துகின்றான்.

وَيُسْقَوْنَ فِيهَا كَأْسًا كَانَ مِزَاجُهَا زَنْجَبِيلًا ﴿١٨﴾ عَيْنًا فِيهَا تُسَمَّىٰ سَلْسَبِيلًا ﴿١٩﴾

அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்: இறைஅடியார்கள், இந்த கற்பூர பானத்தை அருந்திய பிறகு ஸன்ஜபீல் (இஞ்சி) கலந்த பானத்தை அருந்துவார்கள். (76:18,19) ஸன்ஜபீல் என்ற அரபிச் சொல் இரண்டு சொற்களால் உருவானதாகும். ஸனா மற்றும் ஜபல் என்ற சொற்களால் ஆனதாகும். 'ஸனா' என்பதற்கு அரபி அகராதியில் ஏறுதல் என்றும், ஜபல் என்பதற்கு மலை என்றும் பொருள்படும். எனவே, ஸன்ஜபீல் என்ற சொல்லின் நேரடியான பொருள் மலை மீது ஏறினான் என்பதாகும். விஷக்கிருமிகளால் நோயாளியான மனிதன் ஒருவன் இரண்டு நிலைகளை கடந்த பிறகுதான் முழுமையான உடல் நலம் பெறுகின்றான். முதல் நிலையில் நச்சுத்தன்மை கொண்ட கிருமிகளின் தாக்கம் முற்றிலும் செயலிழந்து போகின்றது. மேலோட்டமாக நோயின் தீவிரத்திலிருந்து மனிதன் வெளிவந்து விடுகின்றான். உடலையே அழிக்க எழுந்த அந்த நோயின் தீவிரம் தணிந்து விடுகின்றது. எனினும் உடல் உறுப்புகளில் பலவீனம் எஞ்சியிருக்கவே செய்யும். கடினமான வேலை எதையும் அவனால் செய்ய இயலாது. மேலும் உயிரற்ற மனிதனைப் போன்று செயலற்றவனாகவே அவன் காட்சியளிப்பான். இரண்டாம் நிலையில் மீண்டும் பழைய உடல் ஆரோக்கியம் வந்துவிடும்போது, உடலில் ஆற்றல் சீரானதன் விளைவாக எவ்வித கடினமுமின்றி மலைமீது ஏறுவதற்கும் அதன் சிகரத்தில் ஓடி, நடப்பதற்கும் அவனிடத்தில் துணிச்சல் வந்துவிடும். ஆக, ஆன்மீகத்தின் மூன்றாம் கட்டத்தில், இத்தகைய நிலையே மனிதனுக்கு ஏற்படுகின்றது. இறைவனின் மிக உயர்ந்த நல்லடியார்களே இஞ்சி கலந்த இந்த பானத்தை அருந்துகின்றனர் என மேற்கண்ட நிலையைப் பற்றியே

இறைவன் இத்திருவசனத்தில் சுட்டிக் காட்டுகின்றான். அதாவது அந்த இறையடியார்கள், ஆன்மீக நிலையின் முழுமையான ஆற்றலைப் பெற்று பெரும், பெரும் மலைகள் மீது ஏறி விடுகின்றனர். மேலும் மிகக் கடினமான பணிகளைக் கூட செய்து முடித்து விடுவர். மேலும் இறைவழியில் வியக்கத்தக்க உயிர்த் தியாகங்களை செய்கின்றனர்.

## இஞ்சியின் தாக்கம்

மருத்தவத் துறையில் 'ஸன்ஜபீல்' (இஞ்சி) உடலில் வெப்பத்தை உருவாக்குவதற்கும், வயிற்றுப்போக்கை நிறுத்துவதற்குமுரிய மருந்தாகும். ஹிந்தி மொழியில் ஸன்ஜபீலை 'ஸோன்ட்' என்று கூறுவார்கள். பலவீனமான ஒருவனை மலை மீது ஏறச் செய்யும் அளவிற்கான ஆற்றலையும், வெப்பத்தையும் அது உடலுக்கு வழங்குவதால்தான் அதற்கு 'ஸன்ஜபீல்' எனப் பெயர் வந்துள்ளது. மேற்கண்ட இரு திருவசனங்களில் ஒன்றில் கற்பூரத்தைப் பற்றியும், மற்றொன்றில் இஞ்சியைப் பற்றியும் அல்லாஹ் கூறியிருக்கின்றான். அதன் வாயிலாக மனிதன் தனது மனஇச்சை நிறைந்த வாழ்விலிருந்து விலகி நல்லொழுக்க நிலையின் பக்கம் பயணம் மேற்கொள்வதற்கு இரண்டு படித்தரங்கள் இருப்பதாக அல்லாஹ் நமக்கு அறிவுறுத்துகின்றான். கற்பூரத்தின் வாயிலாக விஷக்கிருமிகள் அமுக்கப்பட்டு, அழிக்கப்படுகின்றன. அதன் காரணமாகவே கற்பூரம் வாந்திபேதி, டைபாய்டு காய்ச்சல் போன்ற நோய்க்கான அருமருந்தாக திகழ்கின்றது. அதைப் போன்று முதல் படித்தரத்தில், மனஇச்சைகளும் தீய உணர்ச்சிகளும் அமுக்கப்பட்டு செயலிழந்து விடுகின்றன. ஆக, இவ்வாறு விஷத்தன்மையின் தாக்கம் முற்றிலும் மறைந்து, கொஞ்சம் பலவீனமான உடல்நிலையை எட்டிய அந்த பலவீனமான நோயாளி, இரண்டாவது கட்டத்தில் இஞ்சி பானத்தின் மூலமாக ஆற்றலைப் பெறுகின்றார். இஞ்சி பானம் என்பது இறைவனின் அழகு மற்றும் மேன்மையின் வெளிப்பாடாகும். அதுதான் மனித ஆன்மாவிற்கான உணவாகும்.

இந்த வெளிப்பாட்டின் மூலம் மனிதன் ஆற்றல் பெற்று, மிகவும் உயர்ந்த மலைகளின்மீது ஏறுவதற்கு தகுதி

வாய்ந்தவனாகி விடுகின்றான். மேலும் இறைவழியில் கடினமான பணிகளை வியக்கத்தக்க வகையில் செய்து காட்டுகின்றான். மேலும் மனிதனின் உள்ளத்தில் 'இறைநேசம்' என்ற நெருப்பு தோன்றாதவரை இது போன்ற பணிகளை செய்து முடிப்பது இயலாத ஒன்றாகும். இறைவன் இவ்விடத்தில் மேற்கண்ட இரண்டு நிலைகளை விளக்குவதற்காக, இரண்டு அரபிச் சொற்களை பயன்படுத்தியிருக்கின்றான். ஒன்று காஃபூர் என்ற சொல். அதன் பொருள் முற்றிலும் கட்டுப்படுத்துதல் என்பதாகும். மற்றொரு சொல் 'ஸன்ஜபீல்' என்பதாகும். அதன்பொருள் உயரே ஏறுதல் என்பதாகும். இவ்வழியில் இறைவனை தேடுகின்றவர்கள் இந்த இரண்டு நிலைகளையே எதிர்கொள்கின்றனர். மேற்கண்ட வசனத்தின் அடுத்த பகுதி இவ்வாறாகும்.

إِنَّآ أَعْتَدْنَا لِلْكَٰفِرِينَ سَلَٰسِلَا۠ وَأَغْلَٰلًا وَسَعِيرًا ۝

அதாவது நாம் உண்மையை ஏற்றுக்கொள்ள விரும்பாத நிராகரிப்பாளர்களுக்கு சங்கிலிகளையும், கழுத்து விலங்குகளையும், சுடர்விட்டெரியும் நெருப்பையும் ஆயத்தப்படுத்தியுள்ளோம். (76:5)

எவர்கள் உண்மையான உள்ளத்துடன் இறைவனை தேடவில்லையோ, அவர்கள் மீது இறைவன் அதிருப்தி கொள்கின்றான். மேலும் அவர்களின் கால்கள் சங்கிலிகளால் கட்டப்பட்டிருப்பதைப் போன்று அவர்கள் உலக விவகாரங்களில் மூழ்கி விடுவர். கழுத்தில் சுமைமிகு விலங்குகள் போடப்பட்ட மனிதனால் எவ்வாறு வானத்தை நிமிர்ந்து பார்க்க முடியாதோ அதே போன்று அவர்கள் உலக பணிகளிலேயே மெய் மறந்து விடுகின்றனர். மேலும் பணம் சம்பாதிக்க வேண்டும்; சொத்து சேர்க்க வேண்டும். நாட்டின் ஆட்சி, அதிகாரங்களை கைப்பற்ற வேண்டும்; தனது எதிரியை வெற்றி கொள்ள வேண்டும்; பெருமளவில் பணமும், செல்வமும் தமக்கு கிடைத்துவிட வேண்டும் என்பன போன்ற பலவித பேராசைகள் என்ற நெருப்பு அவர்களின் உள்ளங்களில் சுடர் விட்டெரியும். அதன் காரணமாக அவர்கள் உலக இச்சைகளிலேயே மூழ்கிக் கிடப்பர். இதுவே மேற்கண்ட வசனத்தின் பொருளாகும். மேலும் இறைவன் அவர்களை தகுதியற்றவர்களாகவும், தீய வேலைகளில் அவர்கள்

மும்முரமாக ஈடுபடுவதையும் கண்டு மேற்குறிப்பிட்ட மூன்று துன்பங்களில் அவர்களை ஆழ்த்தி விடுகிறான். இதில் மற்றொரு விஷயமும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது. அது என்னவென்றால் மனிதனிடமிருந்து ஒருசெயல் வெளிப்படும்போது இறைவனும் தன் புறமிருந்து அந்த செயலுக்கேற்ற ஒரு செயலை வெளிப்படுத்துகின்றான். உதாரணமாக, மனிதன் தனது வீட்டின் எல்லாக் கதவுகளையும் அடைத்துவிடும் பட்சத்தில், அம்மனிதனின் இந்தச் செயலுக்குப் பிறகு, இறைவன் அந்த வீட்டினுள் இருள் சூழும்படி செய்து விடுகிறான். ஏனென்றால் நமது செயல்களுக்கு பகரமாக எந்த விஷயங்களை இறைவனின் இயற்கைச் சட்டம் கட்டாய விளைவுகளாக நிர்ணயித்துள்ளதோ அவையனைத்தும் இறைவனின் பணிகளேயாகும். ஏனெனில் இறைவனே காரண, காரிய கர்த்தா ஆவான். அதற்கு மேலும் ஓர் உதாரணம் என்னவென்றால் ஒருவன் விஷம் சாப்பிட்டுவிட்டால் அவனது இந்தச் செயலுக்குப் பிறகு அவன் இறந்து போவது இறைவன் புறமிருந்து வெளிப்படும் செயலாகும். அதே போன்று ஒருவன் தொற்று நோய் வரும் வகையிலான தேவையற்ற பணி ஒன்றை செய்தால் அவனுக்கு தொற்று நோய் வருவது இறைவனின் செயலாகும். எனவே நமது ஒவ்வொரு செயலுக்கும் ஒரு கட்டாய விளைவு உள்ளது. அந்த ‘கட்டாய விளைவு’ இறைவனின் செயலாக இருப்பதை எவ்வாறு இவ்வுலக வாழ்வில் நாம் தெளிவாக காண்கின்றோமோ அதைப் போன்றே ஆன்மீக விஷயங்களுக்கும் மார்க்கத்திற்கும் சட்டங்கள் உள்ளன.

அல்லாஹ் கீழ்க்கண்ட இரண்டு வசனங்களில் அதனைத் தெளிவாக விளக்குகின்றான் :

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ط

அதவாது எவர்கள் இறைவனைத் தேடுவதில் முழு முயற்சி செய்தார்களோ அவர்களின் அந்தச் செயலுக்கு பகரமாக நாம் அவர்களுக்கு நம்மை அடைவதற்குரிய வழியை காட்டுவோம். (29:70) மனித செயலின் விளைவாக இறைவனின் செயல் அமைகின்றது.

فَلَمَّا زَاغُوْٓا اَزَاغَ اللّٰهُ قُلُوْبَهُمْ ط

மேலும் எவர்கள் கோணலான வழிகளில் செல்ல விரும்பினார்களோ, அப்படிப்பட்டவர்களின் செயலுக்கு பகரமாக அவர்களின் உள்ளங்களை இறைவன் கோணலாக்கிவிடுவது இறைவனின் செயலாக அமைகின்றது. (61:6 காண்க) அடுத்து, இந்த நிலையை இன்னும் அதிக தெளிவுடன் இறைவன் இவ்வாறு விளக்குகின்றான்.

وَمَنْ كَانَ فِىْ هٰذِهٖۤ اَعْمٰى فَهُوَ فِى الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا ۝٧٢

அதாவது எவர் இவ்வுலகில் குருடராகயிருப்பாரோ, அவர் மறுவுலகிலும் குருடராகவேயிருப்பார்.(17:73)

இன்னும் கூறப்போனால் மறுமையில் மிக மோசமான குருடராகயிருப்பார். இவ்வசனம் சுட்டிக் காட்டுகின்ற விஷயம் என்னவென்றால் இறையடியார்கள் இறைவனை இவ்வுலகிலேயே தரிசனம் செய்து கொள்கின்றனர். அவர்கள் எந்த இறைவனுக்காக தம்முடைய அனைத்தையும் தியாகம் செய்தார்களோ அந்த அன்பிற்குரிய இறைவனின் தரிசனத்தை அவர்கள் இவ்வுலகில் பெற்றுக் கொள்கின்றனர்.

மேற்கண்ட வசனத்தின் மையக் கருத்து என்னவென்றால், சொர்க்க வாழ்விற்குரிய அடித்தளம் இவ்வுலகில் அமைக்கப்படுகின்றது. மேலும் நரகவாழ்க்கையின் குருட்டுத்தன்மைக்கும் இவ்வுலக தீங்குகளும், அசுத்தங்களுமே அடித்தளமாக அமைகின்றன.

மேலும் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

وَبَشِّرِ الَّذِيْنَ اٰمَنُوْا وَعَمِلُوا الصّٰلِحٰتِ اَنَّ لَهُمْ جَنّٰتٍ تَجْرِىْ مِنْ تَحْتِهَا الْاَنْهٰرُ ؕ

அதாவது எவர்கள் நம்பிக்கைக் கொண்டு, நற்செயல் ஆற்றினார்களோ அவர்கள் அத்தோட்டங்களின் வாரிசாக இருப்பர். அவற்றின் கீழ் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும். (2:26) இந்த வசனத்தில் இறைவன் ஈமானை (நன்னம்பிக்கையை) ஆறுகள் ஓடுகின்ற தோட்டத்தோடு ஒப்புமைப்படுத்தியுள்ளான்.

எனவே ஆறுகளுக்கும், தோட்டங்களுக்குமிடையில் எத்தகைய தொடர்பு உள்ளதோ அதே தொடர்புதான் ஈமானிற்கும் (நம்பிக்கைக்கும்), நற்செயல்களுக்குமிடையில் இருக்கின்றது

என்ற மிக உயர்ந்த தத்துவம் மேற்கண்ட வசனத்தில் அழகிய முறையில் எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறு ஒரு தோட்டம் தண்ணீரின்றி பசுமையாக இருக்க முடியாதோ அதே போன்று எவருடைய ஈமானும் நற்செயல்களின்றி உயிரோட்டமான ஈமானாக திகழ முடியாது. வெறும் ஈமான் (நம்பிக்கை) மட்டும் இருந்து, நற்செயல்கள் இல்லையென்றால் அந்த ஈமான் பொருளற்றதாகும். மேலும் நற்செயல்கள் இருந்து ஈமான் இல்லையென்றால் அந்த நற்செயல்கள் பகட்டானவையாகும். இஸ்லாம் கூறுகின்ற சொர்க்கத்தின் உண்மைநிலை என்னவென்றால் அது இவ்வுலக வாழ்வில் மனிதன் மேற்கொண்ட ஈமான் (நம்பிக்கை) மற்றும் நற்செயல்களின் பிரதிபிம்பமேயன்றி வேறெங்கிருந்தோ கிடைக்கும் புதிய பொருள் ஒன்றும் அல்ல. இன்னும் கூறப்போனால் மனிதனுக்குரிய சொர்க்கம் அவனுள்ளிருந்தே வெளிப்படுகின்றது. ஒவ்வொரு மனிதனின் ஈமானும், நற்செயலுமே அவரவருக்குரிய சொர்க்கமாக வெளிப்படுகின்றது. இவ்வாறாக இவ்வுலகிலேயே அந்த சொர்க்கத்தின் பேரின்பம் மனிதனுக்கு கிடைக்கத் துவங்குகின்றது. மேலும் மறைமுகமாக ஈமான் மற்றும் நற்செயல்களின் தோட்டம் தென்படுகின்றது. அதே போன்று ஆறுகளும் காணக் கிடைக்கின்றன. ஆனால் மறுவுலகில் இதே தோட்டங்களை வெளிப்படையாகவே கண்டுணர முடியும். இறைவனின் பண்புகள் மற்றும் எண்ணங்கள் தொடர்பாக மனிதன் கொள்கின்ற உண்மையான, தூய்மையான, உறுதியான, முழுமையான ஈமான் (நம்பிக்கை) என்பது ஓர் அழகான மற்றும் கனிகள் நிறைந்த மரங்களை கொண்ட தோட்டமாகும். நற்செயல்களே அந்தத் தோட்டத்தின் ஆறுகளாகும். இறைவன் இது தொடர்பாக கூறுகின்றான்.

ضَرَبَ اللّٰهُ مَثَلًا كَلِمَةً طَيِّبَةً كَشَجَرَةٍ طَيِّبَةٍ اَصْلُهَا ثَابِتٌ
وَّفَرْعُهَا فِى السَّمَآءِ ﴿٢٥﴾
تُؤْتِىْٓ اُكُلَهَا كُلَّ حِيْنٍ

அதாவது எவ்விதக் கூடுதல், குறைவோ, குறைபாடோ, களங்கமோ, பொய்யோ இல்லாத, நன்னம்பிக்கையைக் கொண்ட வார்த்தை என்பது, எவ்வித குறையும் இல்லாத ஒரு தூய

மரத்தைப் போன்றதாகும். அதன் வேர் பூமியில் உறுதியாக நிலைபெற்றுள்ளது. அதன் கிளைகள் வானத்தை எட்டியுள்ளது. அது எப்போதும் கனிகளை தந்து கொண்டிருக்கும். அதன் கிளைகளில் கனியில்லாத காலமே வருவதில்லை.(14:25,26)

இவ்வசனத்தில் இறைவன் ஈமான் (நம்பிக்கை) என்னும் வார்த்தையை எப்போதும் கனி தரும் மரத்துடன் ஒப்பிட்டுக் கூறி அதற்குரிய மூன்று அடையாளங்களை எடுத்துரைத்துள்ளான்.

1. நன்னம்பிக்கை என்னும் வார்த்தையின் வேர் மனிதனுடைய உள்ளம் என்ற பூமியில் நிலைநிற்கின்றது. அதாவது மனிதனின் இயல்பும், மனசாட்சியும் ஈமானின் உண்மைத்துவத்தையும், அதன் முழுமைத்தன்மையையும் ஏற்றுக் கொள்ளும்.

2. இரண்டாவது அடையாளம் என்பது அந்த ஈமானிய வார்த்தை என்ற மரத்தின் கிளைகள் விண்ணில் படர்ந்திருக்கும். அதாவது அது பகுத்தறிவிற்குட்பட்டதாகும். மேலும், இறைவனின் செயலாக திகழும் தெய்வீக இயற்கைச் சட்டங்களுக்கேற்பவுமே அது அமைந்திருக்கும். அதன் பொருள் என்னவென்றால், அதன் உண்மைத்துவத்திற்கான ஆதாரங்கள் இயற்கைச் சட்டங்களுக்கேற்ப அமைந்திருக்கும்.

3. உண்பதற்கு தகுதி வாய்ந்த மற்றும் எக்காலத்திலும் கனி தரக் கூடியதாக இருக்கும் என்பது அம்மரத்தின் மூன்றாவது அடையாளமாகும். அதாவது நன்னம்பிக்கைக்கேற்ப செயலாற்றிய பிறகு அதன் அருட்களும், பயன்களும், எல்லா காலக்கட்டங்களிலும் அனுபவிக்கக்கூடியவையாகவும், கண்டுணரக்கூடியவையாகவும் இருக்கும். அவ்வருட்களும், பயன்களும் ஒரு குறிப்பிட்ட காலத்தில் மட்டுமே வெளிப்பட்டு முடிவடைந்து போவதாக இருக்காது.

அடுத்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

وَمَثَلُ كَلِمَةٍ خَبِيْثَةٍ كَشَجَرَةٍ خَبِيْثَةِ ۨ اجْتُثَّتْ مِنْ فَوْقِ الْاَرْضِ مَا لَهَا مِنْ قَرَارٍ ﴿٢٧﴾

அதாவது தீய சொல்லானது பூமியிலிருந்து பிடுங்கி எறியப்பட்ட மரத்தைப் போன்றதாகும். (14:27) அதாவது மனித இயல்பு தீயவற்றை சொல்வதை அங்கீகரிகரிக்காது. மேலும் எந்த வகையிலும் அதனை ஏற்றுக் கொள்ளாது. அறிவுப்பூர்வமான

ஆதாரங்களிலோ இயற்கைச் சட்டத்திலோ, மனித மனசாட்சியின் ஒளியிலோ தீய சொல்லிற்கு எந்த முகாந்திரமும் இல்லை. வெறும் கற்பனைக் கதைகளில்தான் அதற்கு முகாந்திரம் உள்ளது. திருக்குர்ஆன் மறுமையைப் பற்றிக் கூறுகையில், ஈமான் (நம்பிக்கை) எனும் தூய மரங்களை திராட்சை மற்றும் மாதுளை போன்ற இனிய கனிகளுக்கு உவமையாகக் கூறியுள்ளது. மேலும் மறுமை நாளன்று, அவை அந்தக் கனிகளின் வடிவில் தென்படும் என்றும் கூறுகின்றது. அதே போன்று 'நம்பிக்கையின்மை' என்ற தீய மரத்திற்கு மறுமையில் ஸக்கூம் (கள்ளி) மரம் என திருக்குர்ஆன் பெயரிட்டுள்ளது. அதுபற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

اَذٰلِكَ خَيْرٌ نُّزُلًا اَمْ شَجَرَةُ الزَّقُّوْمِ ﴿٦٣﴾ اِنَّا جَعَلْنٰهَا فِتْنَةً لِّلظّٰلِمِيْنَ ﴿٦٤﴾
اِنَّهَا شَجَرَةٌ تَخْرُجُ فِيْۤ اَصْلِ الْجَحِيْمِ ﴿٦٥﴾
طَلْعُهَا كَاَنَّهٗ رُءُوْسُ الشَّيٰطِيْنِ ﴿٦٦﴾

அதாவது சொர்க்கத்தின் தோட்டம் நல்லதா? அக்கிரமக்காரர்களைச் சோதிப்பதற்குரிய கள்ளிமரம் நல்லதா? என்று நீங்களே கூறுங்கள். (கள்ளிமரமாகிய) அது நரகத்தின் அடித்தளத்திலிருந்து முளைக்கும் ஒரு மரமாகும். அதாவது ஆணவம் மற்றும் அகந்தையால் விளைகின்றதாகும். அதுவே நரகத்தின் அடித்தளமாகும். அதன் கனிகள் ஷைத்தானின் தலையைப் போன்றிருக்கும். (37:63-66) 'ஷைத்தான் என்ற சொல்லின் பொருள் நாசத்திற்குரியவன் என்பதாகும். அது 'ஷய்த்' என்ற சொல்லிலிருந்நது வெளிப்பட்டதாகும். எனவே, அக்கனியை உண்பதால் நாசம் ஏற்படும் என்பதே அதன் கருத்தாகும். அடுத்து இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

اِنَّ شَجَرَتَ الزَّقُّوْمِ ﴿٤٤﴾ طَعَامُ الْاَثِيْمِ ﴿٤٥﴾
كَالْمُهْلِ ۚ يَغْلِيْ فِي الْبُطُوْنِ ﴿٤٦﴾ كَغَلْيِ الْحَمِيْمِ ﴿٤٧﴾

அறிந்தே பாவங்கள் செய்து, நரகில் நுழையும் மக்களின் உணவே கள்ளி மரம் ஆகும். அந்த உணவு எப்படிப்பட்டதென்றால் உருகிய செம்பு கொதிப்பதைப் போல

அவர்களின் வயிற்றில் கொதித்துக் கொண்டிருக்கும் உணவாகும். (44:44-47) தொடர்ந்து இறைவன் நரகவாசிகளை நோக்கி இவ்வாறு கூறுகின்றான் :

ذُقْ ۚ اِنَّكَ اَنْتَ الْعَزِيْزُ الْكَرِيْمُ ۝٥٠

இந்த மரத்தின் கனியை ருசித்துப்பார். நீ மிகவும் கண்ணியத்திற்கும், மரியாதைக்குரியவனுமாயிற்றே! (44:50)

இது இறைவனின் கோபமிக்க வார்த்தையாகும்.

மேற்கண்ட வசனங்களில் நரகவாசியை நோக்கி இறைவன் கூறுவதன் உட்கருத்து என்னவென்றால், நரகவாசியே! நீ ஆணவம் கொள்ளாமலும், உனது கௌரவத்தையும், மரியாதையையும் பெரிதாக எண்ணி, உண்மையை நீ புறந்தள்ளாமலும் இருந்திருந்தால் இன்று நீ இந்த கஷ்டங்களுக்கு ஆளாகியிருக்க மாட்டாய். மேற்கண்ட வசனம் மற்றுமொரு விஷயத்தையும் சுட்டிக்காட்டுகின்றது. அதாவது 'ஸக்கூம்' என்ற சொல் ஸுக் மற்றும் அம் என்ற இரு சொற்களின் பிணைப்பாகும். மேலும் 'அம்' என்பது (இன்னக்க அன்தல் அஸீஸுல் ஹகீம்) என்ற இறைவசனத்தின் சுருக்கமாகும். அதாவது அந்த வசனத்தின் முதல் எழுத்தும் (அலிஃப்), கடைசி எழுத்தும் (மீம்) அம் என்ற சொல்லில் வந்துள்ளது.

சுருக்கமாக, இறைவன் எவ்வாறு இவ்வுலக நம்பிக்கையின் கூற்றுகளை சொர்க்கத்தோடு ஒப்புமைப்படுத்தி-யுள்ளானோ அதே போன்று இவ்வுலகின் நம்பிக்கைக்கெதிரான கூற்றுகளை கள்ளி மரத்தோடு உவமையாக்கியுள்ளான். மேலும் அதனை நரகத்தின் மரமாகவும் உவமையாகக் கூறியுள்ளான். இவ்வாறு சொர்க்கம் மற்றும் நரக வாழ்வு இவ்வுலகிலிருந்தே ஆரம்பமாகின்றது என்பதையும் இறைவன் வெளிப்படுத்தியுள்ளான். இறைவன் நரகத்தைப்பற்றி திருக்குர்ஆனில் இவ்வாறு கூறுகின்றான் :

نَارُ اللّٰهِ الْمُوْقَدَةُ ۝٧ الَّتِيْ تَطَّلِعُ عَلَى الْاَفْـِٕدَةِ ۝٨

அதாவது நரகம் என்பது அல்லாஹ்வின் கோபத்திலிருந்து உற்பத்தியாகும் ஒருவகை நெருப்பாகும். அது பாவத்தால் பற்றி எரிகின்றது. அதன் தீச்சுவாலை முதலில்

இதயத்தையே பாதிக்கின்றது. (104:7,8) நரக நெருப்பின் உண்மையான அடித்தளம் என்பது உள்ளத்தை தாக்குகின்ற துன்பங்களும், ஏக்கங்களும், வேதனையுமாகும் என்று மேற்கண்ட வசனம் சுட்டிக்காட்டுகின்றது. ஏனென்றால் எல்லா ஆன்மீக தண்டனையும் முதலில் உள்ளத்திலிருந்தே ஆரம்பமாகின்றது. பின்னர் அது முழு உடலையும் சூழ்ந்து கொள்கிறது. அடுத்து இறைவன் ஓரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:-

وَقُوْدُهَا النَّاسُ وَالْحِجَارَةُ

அதாவது நரகத்தின் நெருப்பு எப்போதும் எரிந்து கொண்டிருப்பதற்கு தேவையான விறகு இரண்டு பொருட்களாகும். ஒன்று வணக்கத்திற்குரிய ஏக இறைவனை விட்டுவிட்டு ஏனையவற்றை வணங்கி வரும் மனிதன் அல்லது தங்களை வணங்குவதற்கு அனுமதியளித்தவர்கள். (2:25- காண்க.) இதனை பிறிதோரிடத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

اِنَّكُمْ وَمَا تَعْبُدُوْنَ مِنْ دُوْنِ اللّٰهِ حَصَبُ جَهَنَّمَ

அதாவது நீங்களும், மனிதனாக இருந்தும் இறைவன் என்று அழைக்கப்பட்ட உங்களின் பொய் தெய்வங்களும் நரகத்தின் விறகுகளே. நீங்கள் அனைவரும் அதில் நுழைவீர்கள்.(21:99)

நரகத்தின் இரண்டாவது விறகு என்பது சிலையாகும். அதன் பொருள் என்னவென்றால் இவ்விரண்டு விஷயங்களும் இல்லாதிருப்பின் நரகம் இல்லாமல் போயிருக்கும். எனவே திருக்குர்ஆன் எடுத்துரைக்கும் சொர்க்கம், நரகம் என்பது இவ்வுலக ஜடப்பொருட்களைப் போன்றது அல்ல; மாறாக அவ்விரண்டின் தொடக்கமும், உறைவிடமும் ஆன்மீக நிலைகளே ஆகும் என்பது மேற்கண்ட வசனங்களிலிருந்து தெளிவாகின்றது இருப்பினும் (சொர்க்கம், நரகம் ஆகிய) அவ்விரண்டும் மறுமையில் இவ்வுலக பொருட்களின் வடிவில் தென்பட்டாலும் இவ்வுலகை சார்ந்தவையாக அவை இருக்காது.

## இறைவனுடன் முழுமையான ஆன்மீகத் தொடர்பினை ஏற்படுத்துவதற்கான வழிமுறை

தற்போது நாம் மூலக் கருத்தின் பக்கம் வருகின்றோம். இறைவனிடம் முழுமையான ஆன்மீக உறவினை ஏற்படுத்தவற்கு திருக்குர்ஆன் நமக்கு கற்றுத் தந்த வழிமுறை இஸ்லாம் ஆகும். மேலும் சூரா ஃபாத்திஹாவில் கூறப்பட்டுள்ள துஆவும் (பிரார்த்தனையும்) ஆகும். முதலில் தனது முழு வாழ்வையும் இறைவழியில் அர்ப்பணம் செய்துவிட வேண்டும்.

பின்னர் அதைத் தொடர்ந்து (திருக்குர்ஆனின் முதல் அதிகாரமாகிய) சூரா ஃபாத்திஹாவில் முஸ்லிம்களுக்கு கற்றுத் தரப்பட்டுள்ள பிரார்த்தனையை தொடர்ந்து செய்து வர வேண்டும். முழு இஸ்லாத்தின் சாராம்சமும் இவ்விரண்டு விஷயங்களே ஆகும். இஸ்லாம் (அதாவது இறைவழியில் தன்னை முழுமையாக அர்ப்பணித்தல்) மற்றும் சூரா ஃபாத்திஹாவில் கற்றுத் தரப்பட்டுள்ள பிரார்த்தனை ஆகிய இவ்விரு காரியங்களே இவ்வுலகில் இறைவனை அடைவதற்கும், உண்மையான இரட்சிப்பின் நீரை அருந்துவதற்கும் உரிய வழிமுறையாகும். இன்னும் கூறப்போனால் மனிதனின் உயர்வான முன்னேற்றத்திற்கும், இறைவனை சந்திப்பதற்கும் இயற்கைச் சட்டம் இந்த ஒரேயொரு வழிமுறையைத்தான் வகுத்துத் தந்துள்ளது. இஸ்லாம் எனும் கருத்தின் ஆன்மீக நெருப்பில் நுழைந்து சூராஃபாத்திஹா கற்றுத் தரும் பிரார்த்தனைகளை செய்து வருபவர்களே இறைவனை அடைக்கின்றனர்.

இஸ்லாம் என்பது என்ன? இஸ்லாம் என்பது நமது தரம் தாழ்ந்த வாழ்வினையும் நமது பொய்த் தெய்வங்களையும் எரித்து சாம்பலாக்கி தூய இறைவனின் முன்னிலையில் நமது உயிர், பொருள், கண்ணித்தையும் தியாகம் செய்வதை முன்னிலைப்படுத்தும் ஆன்மீக நெருப்பாகும். அந்த நீருற்றில் நுழைந்து நாம் புதியதொரு வாழ்விற்கான நீரை அருந்துகின்றோம். மேலும் எவ்வாறு ஓர் உறவு மற்றோர் உறவுடன் இணைக்கின்றதோ அதே போன்று நமது அனைத்து ஆன்மீக ஆற்றல்களும் இறைவனுடன் தொடர்பை ஏற்படுத்திக் கொள்கின்றன. மின்னொளியைப் போன்று நம்முள்ளிலிருந்து ஒரு தீச்சுடர் வெளிவருகின்றது. மேலும் மற்றொரு தீச்சுடர்

மேலிருந்து நம் மீது இறங்குகின்றது. இவ்விரண்டு தீச்சுடர்களும் இணைவதால் நமது எல்லா உலக இச்சைகளும், இறைவன் அல்லாதவற்றின் மீதான அன்பும், நேசமும் எரிந்து சாம்பலாகி விடுகின்றது. இவ்வாறாக நமது கடந்த கால வாழ்க்கை மரணித்து விடுகின்றது. இந்த நிலையின் பெயர் திருக்குர்ஆனின் ஒளியில் 'இஸ்லாம்' என்பதாகும். இஸ்லாத்தின் வாயிலாக நமது மன இச்சைகளுக்கு மரணம் நிகழ்கின்றது. பின்னர் பிரார்த்தனையின் வாயிலாக நாம் முழுமையாக புத்துயிர் பெறுகின்றோம். இந்த இரண்டாவது வாழ்வில் இறை வெளிப்பாடு (வஹி) கிடைக்கப் பெறுவது அவசியமாகும். அந்த அந்தஸ்தை அடைதலின் பெயர் லிகாயே இலாஹி ஆகும். அதாவது இறைவனை சந்தித்தல் மற்றும் தரிசித்தல் என்பதாகும். இந்த அந்தஸ்தை அடைந்த மனிதன் இறைவனிடம் எவ்வாறு தொடர்பை ஏற்படுத்திக் கொள்கிறார் என்றால் அம்மனிதன் ஒரு வகையில் தனது கண்களாலேயே இறைவனை காண்கிறார். மேலும் அவருக்கு ஆற்றல் வழங்கப்படுகின்றது. மேலும் அவரது அனைத்து புலன்களும், உள்ளார்ந்த ஆற்றல்களும் ஒளிமயமாகி விடுகின்றன. மேலும் அவரிடம் தூய வாழ்விற்கான துடிப்பு மிக அழுத்தமாக ஆரம்பமாகி விடுகின்றது. இந்நிலையை அந்த அடியார் அடைந்த பிறகு இறைவன் அவர் பார்க்கும் கண்ணாகவும், அவர் பேசும் நாவாகவும், அவர் செயலாற்றும் அவரது கரமாகவும், அவர் கேட்கும் அவரது செவியாகவும், நடமாடும் அவரது பாதமாகவும் மாறிவிடுகின்றான். இந்த அந்தஸ்தைப் பற்றியே கீழ்க்கண்ட வசனத்தில் இறைவன் இவ்வாறு சுட்டிக்காட்டுகின்றான்.

يَدُ اللّٰهِ فَوْقَ اَيْدِيْهِمْ ۚ

அல்லாஹ்வின் கை அவர்களின் கைகளின் மேல் இருக்கின்றது. (48:11) மேலும் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

وَمَا رَمَيْتَ اِذْ رَمَيْتَ وَلٰكِنَّ اللّٰهَ رَمٰى ۚ

அதாவது நீர் எறிந்தபோது நீர் எறியவில்லை; மாறாக அல்லாஹ்வே எறிந்தான். (8:18)

சுருக்கமாக, இந்த அந்தஸ்தை அடைந்த ஒரு மனிதனுக்கு இறைவனுடன் முழுமையான ஐக்கியம் ஏற்படுகின்றது. இறைதிருப்தி அவரது ஆன்மாவின் நாளங்களில் நிறைந்து விடுகின்றது.

இதற்கு முன்னர் பலவீனமாயிருந்த அவரது நல்லொழுக்க ஆற்றல்கள் இந்நிலையில் உறுதிவாய்ந்த மலைகளைப் போன்று தென்படுகின்றன. அவரது அறிவும், பிரித்தறியும் ஆற்றலும் மிகவும் சிறப்பு வாய்ந்ததாக ஆகிவிடுகின்றன. இந்த உன்னத நிலை குறித்து இறைவன் கீழ்க்கண்ட வசனத்தில் மேலும் விளக்குகின்றான்.

وَاَيَّدَهُمۡ بِرُوۡحٍ مِّنۡهُ‌ؕ

இறைவன் அவர்களை தனது ஆவியினால் வலிமைப்படுத்தியுள்ளான். (58:23)

மேற்கண்ட நிலையை அடைந்த ஓர் அடியாரின் உள்ளத்தில் இறைநேசம் எந்த அளவுக்கு அலைமோதிக் கொண்டிருக்கும் என்றால் அந்த அடியாருக்கு இறைவழியில் தன் உயிரைத் தியாகம் செய்வதையும், இறைவனுக்காக ஆயிரக்கணக்கான துன்பங்களையும், அவமானங்களையும் சகித்துக் கொள்வதையும், ஒரு துரும்பைக் கிள்ளியெறிவது போன்று மிக இலகுவான காரியமாகி விடும். அவர் இறைவன் பக்கம் ஈர்க்கப்பட்டுக் கொண்டிருப்பார். மறைமுகமான கரமொன்று எப்போதும் அவரைத் தாங்கிப் பிடித்திருக்கும். மேலும் இறைதிருப்தியை நிறைவேற்றுவதே அவரது வாழ்வின் உண்மையான குறிக்கோளாகி விடும். இந்நிலையில் இறைவன் மிக அருகில் காட்சியளிப்பான். இதைக் குறித்து இறைவன் கீழ்க்கண்ட வசனத்தில் இவ்வாறு கூறுகின்றான் :-

وَنَحۡنُ اَقۡرَبُ اِلَيۡهِ مِنۡ حَبۡلِ الۡوَرِيۡدِ‏ ﴿۱۷﴾

நாம் அவருக்கு (அவரது) உயிர்நாடியை விட மிக அருகில் உள்ளோம். (50:17)

எவ்வாறு மரத்திலிருந்து பழுத்த பழம் சுயமாகவே கீழே விழுந்து விடுகின்றதோ அதே போன்று மேற்கண்ட அந்தஸ்தை அடைந்த மனிதரின் தரம் தாழ்ந்த மன இச்சைகளுடனான தொடர்புகள் முற்றிலும் செயலிழந்துவிடும். அந்த அடியாருக்கு

தமது இறைவனுடன் மிக ஆழமான தொடர்பு ஏற்பட்டு விடும். மேலும் மற்ற படைப்பினங்களிலிருந்து விலகிச் சென்று இறைவனுடன் உரையாடும் நற்பேற்றைப் பெறுவார். இந்த அந்தஸ்தை அடைவதற்குரிய வாசல்கள் முந்தைய காலத்தில் எவ்வாறு திறந்திருந்தனவோ அதே போன்று தற்போதும் திறந்தேயிருக்கின்றன. இந்த அருட்கொடையை தேடியவர்களுக்கு முன்னர் வழங்கப்பட்டது போன்று தற்போதும் இறையருளால் அந்த அருட்கொடையை தேடுபவர்களுக்கு வழங்கப்படுகின்றது. ஆனால் வெற்றுப் பேச்சுகளால் மட்டும் அது கிடைத்து விடாது. மேலும் உண்மைக்கு மாற்றமான விஷயங்களினாலும், அகந்தையினாலும் அதற்குரிய வாசல்கள் திறந்து விடாது. ஏராளமானவர்கள் அதை பெற விரும்பினாலும் மிகக் குறைவானவர்களே அதனை பெற்றுக் கொள்கின்றனர். அதற்கு என்ன காரணம் என்றால் மேற்கண்ட நிலை உண்மையான துடிப்பு மற்றும் உளப்பூர்வமான தியாகங்கள் மூலமாக மட்டுமே கிடைக்க முடியுமே தவிர வெறும் வாய்ப் பேச்சுகளால் இறுதி காலம் வரை எதுவும் கிடைக்காது. எந்த நெருப்பைக் கண்டு மற்றவர்கள் அஞ்சி ஓடுகிறார்களோ அந்த நெருப்பில் உண்மையுடன் அடியெடுத்து வைப்பதே இவ்வழியை அடைவதற்குரிய முதல் நிபந்தனையாகும். செயலில் உத்வேகம் இல்லையென்றால் நாவளவிலான வாதங்கள் வீணானதாகும்.

இதனைப் பற்றியே இறைவன் இவ்வாறு கூறுகிறான்:-

وَإِذَا سَأَلَكَ عِبَادِي عَنِّي فَإِنِّي قَرِيبٌ ۖ أُجِيبُ دَعْوَةَ الدَّاعِ إِذَا دَعَانِ ۖ
فَلْيَسْتَجِيبُوا لِي وَلْيُؤْمِنُوا بِي لَعَلَّهُمْ يَرْشُدُونَ ﴿١٨٧﴾

அதாவது என் அடியார்கள் என்னைப் பற்றி நான் எங்கே இருக்கிறேன்? என்று உம்மிடம் கேட்டால், நான் அவர்களுக்கு மிக அருகில் உள்ளேன் என நீர் கூறுவீராக: மேலும் நான் பிரார்த்தனை செய்பவர்களின் பிரார்த்தனையை ஒப்புக் கொள்கிறேன் என்றும் அவர்களிடம் கூறுவீராக. ஆனால் நிபந்தனையென்னவென்றால் அவர்கள் பிரார்த்தனையின் மூலம் எனது சந்திப்பைத் தேடிக்கொண்டிருக்க வேண்டும். மேலும் அவர்கள் வெற்றி பெற என் மீது நம்பிக்கை கொள்ள வேண்டும். (2:187)

# இரண்டாவது கேள்வி

## மரணத்திற்கு பிறகு மனிதனின் நிலை என்னவாகும்?

மேற்கண்ட கேள்விக்குரிய பதில் என்னவென்றால், மரணத்திற்கு பிறகு மனிதனுக்கு ஏற்படும் நிலை அனைத்தும் உண்மையில் ஒரு புதிய நிலையாக இருப்பதில்லை. மாறாக இவ்வுலக வாழ்வில் மனிதன் கொண்டிருந்த கொள்கைகள் மற்றும் அவனது நற்செயல்களின் தன்மைகளோ அல்லது தீய செயல்களின் தன்மைகளோதான் மறுமையில் மிகத் தெளிவுடன் அவனுக்கு வெளிப்படுத்தப்படும். அது இவ்வுலகில் மனிதனின் அந்தரங்கத்தில் ஒளிந்திருக்கும். மேலும் அது தனது நல்ல அல்லது தீய தாக்கத்தை மறைமுகமாக மனிதனிடத்தில் ஏற்படுத்திக் கொண்டிருக்கும். ஆனால் மறுவுலகின் நிலை இவ்வாறிருக்காது. மாறாக அனைத்து தன்மைகளும் தெள்ளத் தெளிவாக தத்தமது வடிவத்தை வெளிப்படுத்தும். இதற்குரிய உதாரணத்தை நம்மால் கனவுலகிலிருந்து பெற முடியும். அதாவது மனிதனின் உடல் நிலை எத்தகையதாக அமையுமோ அதற்கேற்றவாறு கனவில் அவனுக்கு பௌதீக காட்சிகள் தோன்றும். உதாரணமாக மிக கடுமையான காய்ச்சலால் பாதிக்கப்பட்டவர் கனவில் தீயையும், தீச்சுடரையும் அடிக்கடி காண்கின்றார். அவனுக்கு சளிக் காய்ச்சலும், ஜலதோசமும் பாதித்திருந்தால் மனிதன் தன்னை தண்ணீரில் இருப்பதைப் போன்று கனவில் காண்கிறான். சுருக்கமாக, நோயின் தாக்கத்திற்கேற்ப மனித உடல் எத்தகைய பாதிப்பிற்குள்ளாகியிருக்குமோ அதன் தன்மைகள் கனவில் தோன்றுகின்றன. எனவே கனவைப் பற்றி ஆராயும் ஒரு மனிதனால் மறுமையிலும் இறைவனின் நடைமுறை இதைப் போன்றே அமையும் என்பதை புரிந்து கொள்ள முடியும். ஏனென்றால் எவ்வாறு கனவு நம்மிடத்தில் குறிப்பிட்ட ஒரு மாற்றத்தை உருவாக்கி, நமது ஆன்மீக நிலையை பௌதீக நிலையாக மாற்றி விடுகின்றதோ மறுவுலகிலும் அவ்வாறே நடைபெறும். அந்நாளில் நமது செயல்களும், செயல்களின் விளைவுகளும் வெளிப்படையாக தோற்றமளிக்கும். நாம்

இவ்வுலகிலிருந்து மறைமுகமாக எவற்றை எடுத்துச் செல்வோமோ அவை அந்நாளில் நமது கண்களுக்கு முன்னால் வெளிப்படையாக தோற்றமளிக்கும். எவ்வாறு மனிதன் கனவில் பலவகை உருவங்களை காண்கின்றபோது அவற்றை வெறும் உருவங்களாக கருதாமல் உண்மையானதாகவே கருதுகின்றானோ அவ்வாறே மறுமையிலும் நிகழும். இன்னும் கூறப்போனால் இறைவன் இதுபோன்ற காட்சிகள் மூலமாக தனது புத்தம் புது வல்லமைகளை வெளிப்படுத்திக் காட்டுவான். ஏனென்றால் அவன் முழுமையான வல்லமையின் தோற்றம் ஆவான். எனவே நாம் உருவத் தோற்றங்களின் பெயரைக் குறிப்பிடாமல் அவற்றை இறை வல்லமையினால் உருவான ஒரு புதிய படைப்பு எனக் கூறினால் அந்தக் கூற்று முற்றிலும் சரியானதாகவும், பொருத்தமானதாகவும் அமையும்.

இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

فَلَا تَعۡلَمُ نَفۡسٌ مَّآ أُخۡفِيَ لَهُم مِّن قُرَّةِ أَعۡيُنٖ

அதாவது நற்செயல் ஆற்றுபவர்கள் எவரும் அவர்களின் நற்செயல்களுக்குப் பகரமாக இறைவன் என்னென்ன அருட்கொடைகளை மறைத்து வைத்துள்ளான் என அறிய மாட்டார். (32:18) மேலும் அந்த அருட்கொடைகள் அனைத்தும் இவ்வுலகைச் சார்ந்தவையாக இருக்காது. எனவேதான் இறைவன் அவற்றை மறைவாக வைக்கப்பட்டவை எனக் குறிப்பிடுகின்றான். இவ்வுலக அருட்கொடைகள் நமக்கு மறைமுகமானவையல்ல. பால், மாதுளை, திராட்சை போன்ற அருட்கொடைகளை நாம் அறிவோம். பலமுறை அவற்றை உண்டு சுவைத்துள்ளோம். எனவே இதிலிருந்து மறுமையில் கிடைக்கவிருக்கும் அருட்கொடைகள் வேறு வகையானவை என அறிய முடிகின்றது. இவ்வுலக பொருட்களோடு வெறும் பெயரளவிலேயே அவற்றிற்கு ஒப்புமை உள்ளது. எவர் சொர்க்கத்தை இவ்வுலக அருட்கொடைகளின் கருவூலமாக கருதுவாரோ அவர் திருக்குர்ஆனை அறவே அறியாதவர் ஆவார்.

மேற்கண்ட வசனத்திற்கு நான் தற்போது கொடுத்துள்ள விளக்கத்திற்கு ஆதாரமாக நமது தலைவர் ஹஸ்ரத் நபிகள்

நாயகம் (ஸல்) அவர்களின் நபிமொழியும் உள்ளது. அதில் சொர்க்கம் மற்றும் அதன் அருட்கொடைகள் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்தக் காதும் கேட்டிராத, எந்த உள்ளமும் கண்டுணராதவையாகும் என அன்னார் கூறுகின்றார்கள். ஆனால் நாம் உலக அருட்கொடைகளை கண்களாலும் காண்கின்றோம்; காதுகளாலும் கேட்கின்றோம்; அந்த அருட்கொடைகள் உள்ளத்திலும் தோன்றுகின்றன.

எனவே இறைவனும், அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களும் மறுவுலக அருட்கொடைகளை இவ்வுலக பொருட்களிலிருந்து முற்றிலும் தனித்த ஒன்றாகக் கூறும்போது பசுக்களிலிருந்தும், எருமைகளிலிருந்தும் இங்கு கிடைக்கும் பால் போன்றுதான் நமக்கு சொர்க்கத்திலும் பால் கிடைக்கும் என்றும் ஆடு, மாடுகளின் சந்தைகள் சொர்க்கத்தில் இருக்குமென்றும், சொர்க்கத்தின் மரங்களில் ஏராளமான தேன் கூடுகள் இருக்குமென்றும், தேவ தூதர்கள் அவற்றிலிருந்து தேனை எடுத்து ஆற்றில் கலப்பார்கள் என்றும் நாம் நம்பினால் நாம் திருக்குர்ஆனின் போதனைகளிலிருந்து வெகு தொலைவில் சென்று விடுவோம். இதுபோன்ற சிந்தனைகள் இறைவன் மற்றும் அவனது திருத்தூதர் (ஸல்) அவர்களின் போதனைகளுக்கு ஏற்றதாக இருக்க முடியுமா? சொர்க்கத்தின் அருட்கொடைகள் இவ்வுலகம் கண்டிராத அருட்கொடைகளாக இருக்கும்; அவை ஆன்மாவை ஒளிமயமாக்கும்; இறைஞானத்தை அதிகரித்து ஆன்மாவிற்கான உணவாக அது அமையும் என்றே இறை வசனங்கள் கூறுகின்றன. சொர்க்கத்தில் கிடைக்கவிருக்கும் உணவு குறித்து வெளிப்படையில் இவ்வுலக பொருட்களோடு ஒப்புமைப்படுத்தி உவமையாக கூறப்பட்டுள்ளன. ஆயினும் அதன் உறைவிடம் ஆன்மா மற்றும் உண்மை ஆகும் என்றே கூறப்பட்டுள்ளது.

சொர்க்கத்தில் வழங்கப்படும் அருட்கொடைகளைக் கண்டு அவை இதற்கு முன்பும் தங்களுக்கு கிடைக்கப் பெற்றவையாக சொர்க்கவாசிகள் கூறுவார்கள் என கீழ்க்காணும் திருவசனங்களில் கூறப்பட்டிருப்பதால், அந்த அருட்கொடைகள் இவ்வுலகைச் சார்ந்த பொருட்களாகவேயிருக்கும் என எவரும் எண்ணிவிடக் கூடாது.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

وَبَشِّرِ الَّذِينَ آمَنُوا وَعَمِلُوا الصَّالِحَاتِ أَنَّ لَهُمْ جَنَّاتٍ تَجْرِي مِن تَحْتِهَا الْأَنْهَارُ ۖ
كُلَّمَا رُزِقُوا مِنْهَا مِن ثَمَرَةٍ رِّزْقًا ۙ قَالُوا هَٰذَا الَّذِي رُزِقْنَا مِن قَبْلُ ۖ وَأُتُوا بِهِ مُتَشَابِهًا ۖ

அதாவது எவர்கள் நன்னம்பிக்கைக் கொண்டு, நற்செயல்கள் ஆற்றினார்களோ மேலும் எவர்கள் அணுஅளவுகூட குழப்பங்களில் பங்கு பெறவில்லையோ அவர்கள் ஆறுகள் ஓடிக்கொண்டிருக்கும் தோட்டத்தின் வாரிசுகளாவார்கள் என நற்செய்தியை வழங்குவீராக: அவர்களுக்கு அதன் மரங்களிலிருந்து உண்பதற்கு கனிகள் வழங்கப்படும் போதெல்லாம், அவை தமக்கு ஏற்கனவே கிடைத்தவையே என்று சொர்க்கவாசிகள் கூறுவார்கள். ஏனென்றால் சொர்க்கத்தில் தரப்படும் கனிகளை முன்னர் வழங்கப்பட்ட கனிகளுக்கு ஒப்பானவையாக அவர்கள் காண்பார்கள். (2:26)

இவ்விடத்தில் ஏற்கனவே வழங்கப்பட்ட கனிகள் என்பதற்கு உலகில் கிடைத்த பௌதீக அருட்கொடைகள் என பொருள் கொள்வது முற்றிலும் தவறாகும். மேலும் அவ்வாறு பொருள் கொள்வது திருக்குர்ஆனின் ஏனைய வசனங்களின் கருத்துக்களுக்கும் முற்றிலும் எதிரானதாகும். இன்னும் கூறப்போனால் மேற்கொண்ட வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்: எவர்கள் நம்பிக்கை கொண்டு, நற்செயல்கள் ஆற்றினார்களோ, அவர்கள் தமது கைகளினாலேயே ஒரு சொர்க்கத்தை உருவாக்குகின்றார்கள். அதன் மரங்கள் ஈமான் எனும் நன்னம்பிக்கையாகும். அதன் ஆறுகள் அமலே ஸாலிஹ் எனும் நற்செயல் ஆகும். அதே சொர்க்கத்தின் கனிகளைத்தான் அவர்கள் மறுமையிலும் உண்பார்கள். அந்நிலையில் அந்தக் கனி மிகவும் வெளிப்படையாகவும், மிகவும் இனிமையானதாகவும் இருக்கும். அவர்கள் ஆன்மீகமான முறையில் ஏற்கனவே அதனை உலகில் சுவைத்திருந்தன் விளைவாக மறுமையிலும் அக்கனியை கண்டறிந்து விடுவர். மேலும் இவை முதலில் உண்ணக் கிடைத்ததை போன்றிருப்பதாகக் கூறுவர்.

எனவே இவ்வசனம் மிகத் தெள்ளத் தெளிவாக கூறுகின்றது. எவர்கள் இவ்வுலகில் இறை நேசம் எனும் ஆன்மீக உணவை உண்டு வந்தார்களோ அவர்களுக்கு மறுமையில் அதே உணவு தொட்டு உணரப்பட்ட வடிவில் உண்ணக் கிடைக்கும். அவர்கள் உலகில் இறை நேசத்தின் இன்பத்தை ருசித்திருந்தார்கள். அதன் தன்மையை உணர்ந்திருந்தார்கள். எனவே அவர்கள் உலகில் இருள் சூழ்ந்த இரவுகளில் தனிமையில் தனது உண்மையான அன்பிற்குரிய இறைவனை அன்புடன் நினைவு கூர்ந்து பேரின்பம் கண்ட காலங்களை அவர்களின் ஆன்மா எண்ணிப் பார்க்கும்.

சுருக்கமாக இவ்வசனம் பௌதீக உணவுகளைப் பற்றி எதுவும் கூறவில்லை. மேலும் இவ்வுலகில் இறை அடியார்களுக்கு ஆன்மீகமான முறையில் அவ்வுணவு கிடைத்திருக்கும் போது, சொர்க்கத்தின் அருட்கொடைகளை உலகில் எந்தக் கண்ணும் கண்டிராத, எந்த உள்ளமும் உணர்ந்திராத அருட்கொடைகள் என்று கூறுவது எவ்வாறு பொருத்தமானதாக இருக்கும்? மேலும் அந்நிலையில் மேற்கண்ட இரண்டு இறைவசனங்களும் முரண்பட்டுவிடாதா? என்ற ஐயம் ஒருவரின் உள்ளத்தில் எழலாம். அதற்குரிய பதில் என்னவென்றால் மேற்கண்ட வசனத்திற்கு உலக அருட்கொடைகள் எனப் பொருள் கொள்ளும்போதுதான் முரண்பாடு தோன்றும். ஆனால் இங்கு இவ்வுலக அருட்கொடைகள் என்று கூறப்படவில்லை. இறையடியார்களுக்கு இவ்வுலகில் இறைஞானத்தின் வடிவில் கிடைக்கும் அனைத்தும் உண்மையில் மறுவுலகிற்குரிய அருட்கொடைகளாகும். அதன் மாதிரியாக அவை மனிதனுக்கு ஆர்வமூட்டும் வகையில் ஆன்மீகமான முறையில் முன்பே வழங்கப்படுகின்றன. இங்கு மற்றொன்றையும் நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இறையடியார் இவ்வுலகைச் சார்ந்தவராக இருப்பதில்லை. அதன் காரணமாகவே உலகம் அவர் மீது பகைமை பாராட்டுகின்றது. இன்னும் கூறப்போனால் அவர் விண்ணுலகை சார்ந்தவராவார். எனவேதான் அவருக்கு விண்ணுலக அருட்கொடைகள் கிடைக்கின்றன. உலகவாதி உலகின் அருட்கொடைகளை பெற்றுக் கொள்கின்றார். விண்ணுலகைச் சார்ந்தவர் விண்ணுலக அருட்கொடைகளைப் பெற்றுக் கொள்கிறார். எனவே

சுவர்க்கத்தின் அருட்கொடைகள் உலகின் காதுகள், இதயங்கள் மற்றும் கண்களுக்கு மறைத்து வைக்கப்பட்டிருந்தன என்ற கூற்று முற்றிலும் உண்மையாகும். ஆனால் மன இச்சைகள் நிறைந்த வாழ்க்கை முறையில் எவர் ஒருவகை மரணத்தை ஏற்படுத்திக் கொள்வாரோ அவருக்கு மறுமையில் வெளிப்படையான முறையில் கொடுக்கப்படவிருக்கும் பானம் இவ்வுலகில் ஆன்மீக ரீதியாக பருகத் தரப்படும். ஆனால் அதே நேரத்தில் உலகக் கண்கள் கண்டிராத உலக காதுகள் கேட்டிராத ஒன்றாகவே அந்த அருட்கொடைகளை அவர் கருதுவார் என்பதும் உண்மையாகும். உலகத்தைச் சேர்ந்தவராக இல்லாதிருப்பினும் இவ்வுலகிலேயே அவர் வாழ்ந்து வந்தார். அதன் காரணமாக சொர்க்கத்தின் அருட்கொடைகள் இவ்வுலகைச் சேர்ந்தவையல்ல என்றும், உலகில் எந்தக் கண்ணும் அதனைக் கண்டதில்லை; உலகில் எந்தக் காதும் அதனைக் கேட்டதில்லை; உலகின் எந்த உள்ளமும் அதனை உணர்ந்ததில்லை எனவும் அவர் சாட்சி கூறுவார். ஆனால் அவர் மறுவுலக வாழ்வின் சில மாதிரிகளைக் கண்டார். அவை இவ்வுலகைச் சார்ந்தவையல்ல. மாறாக அவை மறுவுலக வாழ்வின் ஒரு தகவலாகயிருந்தது. அந்த அருட்கொடைகளுக்கு மறுமையுடன் மட்டுமே உறவும், தொடர்பும் உள்ளது. இவ்வுலகத்துடன் அதற்கு எவ்வித சம்பந்தமும் இல்லை.

## மறுவுலகைப் பற்றி திருக்குர்ஆன் கூறும் மூன்று நுட்பமிகு ஞானங்கள்

மரணத்திற்குப் பிறகு மனிதனுக்கு ஏற்படும் நிலைகளை திருக்குர்ஆன் மூன்று வகைகளாக வகைப்படுத்தியுள்ளது என்பதனை பொது விதியாக நினைவிற் கொள்ள வேண்டும். மறுமை தொடர்பாக திருக்குர்ஆனின் மூன்று நுட்பமான ஞானங்களை இங்கு தனித்தனியாக எடுத்துரைப்போம்.

### முதலாவது நுட்பமான ஞானம்

மறுவுலக வாழ்க்கை என்பது ஒரு புதிய விஷயமல்ல என்று திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் கூறுகின்றது. இன்னும் கூறப்போனால் இவ்வுலக வாழ்வின் பிரதிபிம்பமாகவும், தாக்கமாகவுமே மறுவுலகின் அனைத்துக் காட்சிகளும் அமையும். இது முதலாவது நுட்பமான ஞானம் ஆகும்.

இதைப்பற்றி திருக்குர்ஆனில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:

وَكُلَّ إِنسَانٍ أَلْزَمْنَاهُ طَائِرَهُ فِي عُنُقِهِ ۖ
وَنُخْرِجُ لَهُ يَوْمَ الْقِيَامَةِ كِتَابًا يَلْقَاهُ مَنشُورًا ﴿١٤﴾

அதாவது நாம் இவ்வுலகில் ஒவ்வொரு மனிதனின் செயல்களின் பிரதிபலன்களை அவனது கழுத்தில் பிணைத்திருக்கின்றோம். மறைமுகமான அந்த பிரதிபலன்களையே நாம் மறுமை நாளன்று வெளிப்படுத்துவோம். அதனை ஒரு திறந்த புத்தக வடிவில் நாம் தோன்றச் செய்வோம். (17:14)

இத்திருவசனத்தில் 'தாயிர்' என்ற சொல் வந்துள்ளது. 'பறவை' என்பது அதன் நேரடிப் பொருளாகும். ஆனால் இங்கு அந்தச் சொல் 'செயல்' என்ற பொருளில் உவமையாக பயன்படுத்தப்பட்டுள்ளது. ஏனென்றால் ஒவ்வொரு செயலும் அது நல்லதாகயிருந்தாலும், தீயதாகயிருந்தாலும் அது செய்யப்பட்டதற்குப் பிறகு பறவையைப் போன்று பறந்து விடுகின்றது.

அதனால் விளையும் துன்பமும், இன்பமும் மறைந்து விடுகின்றது. மனித உள்ளத்தில் அச்செயலின் நல்ல அல்லது கெட்ட தாக்கம் மட்டுமே எஞ்சியிருக்கும். ஒவ்வொரு செயலும் மறைமுகமாக மனிதனின் உள்ளத்தில் தனது பிம்பங்களை பதிய வைக்கின்றது என்பது திருக்குர்ஆனின் கூற்றாகும். மனிதன் எத்தகைய வினையை செய்வானோ அதற்கேற்ற எதிர்வினையை இறைவன் வெளிப்படுத்துகின்றான். இறைவனின் அவ்வினையானது மனிதன் செய்த நல்ல அல்லது தீய வினையை வீணாக்குவதில்லை. இன்னும் கூறப்போனால் அவ்வினையின் தாக்கம் அம்மனிதனின் உள்ளத்திலும், முகத்திலும், கண்களிலும், காதுகளிலும், கைகளிலும், பாதங்களிலும் எழுதப்படுகின்றது. இவ்வாறு இவ்வுலகில் மறைமுகமாக அமைக்கப்பட்ட இந்த செயல் பதிவேடுகளே மறுவுலகில் வெளிப்படையாக தோற்றமளிக்கும்.

மேலும் மற்றோரிடத்தில் சுவர்க்கவாசிகளைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

يَوْمَ تَرَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ يَسْعٰى نُوْرُهُمْ بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ

அதாவது நம்பிக்கையாளர்களுக்கு இவ்வுலகில் மறைமுகமாக கிடைத்திருந்த ஆன்மீக ஒளி மறுமை நாளன்று அவர்களுக்கு முன்னும், அவர்களின் வலப் பக்கமும், ஓடிக் கொண்டிருப்பதை வெளிப்படையாகக் காணவியலும். (57:13)

அடுத்து மற்றுமோரிடத்தில் இறைவன் தீயவர்களை நோக்கி இவ்வாறு கூறுகின்றான் :

اَلْهٰكُمُ التَّكَاثُرُ ﴿٢﴾ حَتّٰى زُرْتُمُ الْمَقَابِرَ ﴿٣﴾
كَلَّا سَوْفَ تَعْلَمُوْنَ ﴿٤﴾ ثُمَّ كَلَّا سَوْفَ تَعْلَمُوْنَ ﴿٥﴾
كَلَّا لَوْ تَعْلَمُوْنَ عِلْمَ الْيَقِيْنِ ﴿٦﴾ لَتَرَوُنَّ الْجَحِيْمَ ﴿٧﴾
ثُمَّ لَتَرَوُنَّهَا عَيْنَ الْيَقِيْنِ ﴿٨﴾ ثُمَّ لَتُسْئَلُنَّ يَوْمَئِذٍ عَنِ النَّعِيْمِ ﴿٩﴾

அதாவது, உலக பேராசையின் தாக்கம், கல்லறை செல்லும் வரை உங்களை மறுமையை தேடுவதிலிருந்து கவனமற்றவர்களாய் ஆக்கி விடுகின்றது. உலகத்தின் மீது பற்று கொள்ளாதீர்கள். ஏனெனில் உலகின் மீது பற்று கொள்வது நல்லதல்ல என்பதை விரைவில் தெரிந்து கொள்வீர்கள். உங்களுக்கு உண்மையான அறிவு கிடைத்திருக்குமாயின், நீங்கள் இவ்வுலகிலேயே நரகத்தை கண்டு கொள்வீர்கள். அடுத்து மரணத்திற்குப் பிறகு, மறுவுலகிற்கு முன்னர் ‘பர்ஸக்கின்’ நிலையில் உறுதியான கண்களால் அதனைக் கண்டு கொள்வீர்கள். பின்னர் இறுதியில் அனைவரும் ஒன்று திரட்டப்படும் நியாயத் தீர்ப்பு நாளன்று நீங்கள் விசாரணைக்கு உட்படுத்தப்படுவீர்கள். மேலும் அந்த நரக தண்டனை உங்களை முழுமையாக சூழ்ந்து கொள்ளும். அப்போது வெறும் வார்த்தைகளால் அல்லாமல் அனுபவத்தினால் நரகத்தைப் பற்றிய அறிவு உங்களுக்குக் கிடைத்துவிடும்.(102:2-9)

## அறிவின் மூன்று வகை

தீயவர்களுக்கு இவ்வுலகிலேயே மறைமுகமாக நரக வாழ்க்கை இருக்கிறது என மேற்கண்ட வசனத்தில் இறைவன் தெளிவாகக் கூறியுள்ளான். மேலும் சிந்தித்துப் பார்த்தால் தமது நரகத்தை இவ்வுலகிலேயே தீயவர்கள் கண்டு கொள்ளலாம். இத்திருவசனத்தில் இறைவன் கீழ்க்கண்ட மூன்று படித்தரங்களாக அறிவை வகைப்படுத்தியுள்ளான் :

1. இல்முல்யகீன்–அனுமான அறிவு.
2. அய்னுல் யகீன்–கண்டுணருதல், பார்வை அறிவு.
3. ஹக்குல் யகீன்–அனுபவ அறிவு.

இந்த மூன்று வகை அறிவைப் பற்றி பாமரரும் புரிந்து கொள்வதற்காக உதாரணங்களைக் கூறுகின்றேன். ஒரு நபர் ஓரிடத்தில் அதிகமான புகையை தொலைவிலிருந்து கண்டால் அவரது கவனம் புகையிலிருந்து விலகி நெருப்பின் பக்கம் செல்லும். ஏனெனில் புகைக்கும், நெருப்பிற்கும் ஒரு நெருங்கிய தொடர்பு இருக்கின்றது என்ற அறிவினால் புகை இருக்குமிடத்தில் நெருப்பு இருக்கும் என்ற முடிவிற்கு அவர் வருவார். ஆக, இந்த அறிவிற்குப் பெயர்தான் ‘இல்முல் யகீன்’ என்ற அனுமான அறிவு ஆகும். மேலும் அவர் நெருப்பின் ஜுவாலையை கண்களால் கண்டு கொண்டால் அந்த அறிவிற்குப் பெயர் ‘அய்னுல் யகீன்’ என்ற பார்வை அறிவு ஆகும். மேலும் அந்த நெருப்பினை அவர் சுயமாக தொட்டுணர்ந்து கொண்டால் அது ஹக்குல் யகீன் என்ற அனுபவ அறிவாகும். மனிதன் இல்முல் யகீன் என்ற அனுமான அறிவினால் இவ்வுலகிலேயே நரகம் இருப்பதை அறிந்து கொள்ள முடியும். அடுத்து மரணத்திற்குப் பின்னர் நியாயத் தீர்ப்பு நாளிற்கு முன்னர் பர்ஸக் என்ற காலக் கட்டத்தில் மனிதன் அய்னுல் யகீன் என்ற பார்வை அறிவினால் நரகத்தை கண்டுகொள்ள முடியும். அடுத்து அனைவரும் ஒன்று திரட்டப்படும் நாளில் பார்வை அறிவானது ஹக்குல் யகீன் அதாவது அனுபவ அறிவின் முழுமையான நிலையை அடைகின்றது.

## மூன்று உலகம்

திருக்குர்ஆனின் போதனையின் அடிப்படையில் மூன்று உலகங்கள் இருப்பது நிரூபணமாகின்றது என்பதை இவ்விடத்தில் விளக்கிட விரும்புகிறேன்.

### முதலாவது உலகம் இப்பூவுலகமாகும்

அதற்கு செயலாற்றும் இடம் மற்றும் முதல் படைப்பு என்று கூறப்படுகின்றது. இவ்வுலகில்தான் மனிதன் நன்மை அல்லது தீமையை சம்பாதிக்கின்றான். நியாயாத் தீர்ப்பு நாள் என்ற அனைவரும் எழுப்படும் உலகில் நல்லடியார்களுக்கு முன்னேற்றங்கள் நிகழ்ந்து கொண்டிருக்கும் என்ற போதிலும் அது அவர்களுக்கு இறையருளால் மட்டுமே கிடைக்கும். அதில் மனித முயற்சியின் எவ்வித பங்களிப்பும் இருக்காது.

### இரண்டாம் உலகின் பெயர்
### பர்ஸக் எனும் இடைக்கால உலகமாகும்

அரபி அகாரதியில் இரண்டு பொருட்களுக்கும் இடையில் உள்ள பொருளை குறிப்பதற்கு பர்ஸக் என்ற சொல் கூறப்படுகின்றது. இந்த உலகம் மறுவுலகிற்கும், இவ்வுலகிற்கும் இடைப்பட்ட காலத்தில் அமைவதால் இதற்கு பர்ஸக் அதாவது இடைக்கால உலகம் எனப்பெயர். உலகம் படைக்கப்பட்ட காலம் முதல் தொன்றுதொட்டு இடைக்கால உலகத்திற்காக பர்ஸக் என்ற சொல் பயன்படுத்தப்பட்டுள்ளது. எனவே இடைக்கால உலகின் உண்மைக்கு இச்சொல்லில் ஒரு மகத்துவமிக்க சான்று மறைந்துள்ளது. அரபி மொழியின் சொற்கள் இறைவனின் திருவாயிலிருந்து மலர்ந்த சொற்கள் என்பதையும், உலகில் இந்த ஒரேயொரு மொழி மட்டும்தான் இறைவனின் தூய மொழி என்பதையும், எல்லா ஞானங்களின் உறைவிடமாகவும், எல்லா மொழிகளின் தாயாகவும், இறையறிவிப்பின் முதல் மொழியாகவும், இறுதி மொழியாகவும் அரபி மொழி திகழ்கின்றது என்பதையும் நான் ‘மினருர்ரஹ்மான்’ என்ற நூலில் நிரூபணம் செய்துள்ளேன். இறையறிவிப்பின் (வஹியின்) முதல் மொழியாக அரபி மொழி இருந்ததன் காரணம், முழு அரபி மொழியும் ஆதியிலிருந்தே இறைமொழியாக இறைவனிடமிருந்தது. பின்னர் அதே மொழி உலகில் இறங்கியது. பின்னர் உலகம் அதிலிருந்தே தத்தமது மொழிகளை உருவாக்கிக் கொண்டது. அடுத்து இறையறிவிப்பின்

இறுதி மொழியாக அரபி திகழ்வதன் காரணம் என்னவென்றால் இறைவனின் இறுதி வேதமாகிய திருக்குர்ஆன் அரபி மொழியில் இறங்கியுள்ளது.

ஆக, பர்ஸக் என்பது அரபிச் சொல் ஆகும். அது ஸக்க மற்றும் பர்ர என்ற இரு அரபிச் சொற்களின் பிணைப்பாகும். செயல்களை சம்பாத்திக்கும் வழிமுறை முற்றுப் பெற்று ஒரு மறைவான நிலையில் வீழ்ந்து விட்டது என்பது அச்சொல்லின் பொருளாகும். அழியக்கூடிய மனித கட்டமைப்பானது பிரிந்து ஆன்மா தனியாகவும், உடல் தனியாகவும் ஆகிவிடும்போது ஏற்படுகின்ற நிலையே பர்ஸக் எனும் இடைக்கால உலகமாகும். நடைமுறையில் காண்பது போன்று உடல் ஒரு குழியில் புதைக்கப்படுகிறது. ஆன்மாவும் ஒரு வகையான குழியை சென்றடைகிறது. 'ஸக்' என்றச் சொல் இக்கருத்தையே வெளிப்படுத்துகின்றது. ஏனென்றால் ஆன்மாவானது உடலை விட்டு தனியாகப் பிரிந்து சென்றதனால் அது உடலின் தொடர்புகளினால் முன்பு சம்பாதித்து வந்த நல்ல அல்லது தீய செயல்களை செய்வதற்கு 'பர்ஸக்' எனும் இடைக்கால உலகில் சக்தியற்றதாக ஆகிவிடுகின்றது. நமது ஆன்மாவின் சிறப்பு என்பது உடல் ஆரோக்கித்தைச் சார்ந்தே உள்ளது. இது வெளிப்படையான விஷயமாகும். மூளையில் ஒரு குறிப்பிட்ட பகுதியில் காயம் ஏற்பட்டால் நினைவாற்றல் குறையத் தொடங்குகின்றது. அதன் மற்றொரு பகுதியில் ஏதாவதொரு பாதிப்பு ஏற்பட்டால் அம்மனிதனின் சிந்தனையாற்றல் செயலற்றுப் போய் விடுகின்றது. மேலும் அவன் ஒட்டுமொத்த சுயநினைவையும் இழந்து விடுகிறான். அடுத்து மூளையில் ஒருவகையான வலிப்பு நோய் தாக்கினால் அல்லது வீக்கம் தோன்றினால், இரத்தம் அல்லது வேறொரு பொருள் தேங்கிவிட்டால் அல்லது இரத்த ஓட்டம் முழுமையாகவோ அரைகுறையாகவோ தடைபட்டு விட்டால் அம்மனிதனுக்கு மயக்கம் அல்லது வலிப்பு நோய் ஏற்படும். அல்லது அவன் அசைவற்ற கோமா நிலைக்குச் சென்று விடுகின்றான். எனவே நமது ஆன்மா உடலுடன் தொடர்பிழந்த நிலையில் முற்றிலும் செயலற்றதாகி விடும் என்பதையே நமது நீண்ட கால அனுபவம் நமக்கு உறுதியாக உணர்த்துகின்றது.

எனவே உடலிலிருந்து பிரிந்து சென்ற மனித ஆன்மா சுயமாக தனித்து ஏதேனும் ஒரு தருணத்தில் ஓர் இன்பத்தை பெற முடியும் என நாம் கருதினால் அது முற்றிலும் தவறாகும். அக்கருத்தினை கற்பனைக் கதையாக வேண்டுமென்றால் ஏற்றுக் கொள்ள முடியுமே தவிர பகுத்தறிவு ரீதியாக பார்க்கும் போது அதற்கு எவ்வித சான்றும் இல்லை. உடல் ஆன்மாவுடன் சேர்ந்திருக்கும்போது உடலில் சின்னச் சின்ன பாதிப்புகள் ஏற்பட்டால் கூட நமது ஆன்மா செயலற்றுப் போய்விடுகின்றது. அவ்வாறிருக்க, உடலுடனான தொடர்புகள் முற்றிலும் முறிந்துபோன பிறகு ஆன்மா முழுமையான நிலையில் இயங்கும் என்பதை நம்மால் எவ்வகையிலும் ஏற்றுக் கொள்வதற்கில்லை. ஆன்மா நலமுடன் இயங்க உடல் நலமாக இருப்பது அவசியம் என்பதை அன்றாட நடைமுறைகள் நமக்கு உணர்த்தவில்லையா? நம்மில் ஒருவர் முதுமையை எய்தி விட்டால் அத்துடன் அவருடைய ஆன்மாவும் முதுமையை அடைந்து விடுகின்றது. அவருடைய அனைத்து அறிவுச் செல்வங்களையும் முதுமை அபகரித்து விடுகின்றது. இது குறித்து இறைவனும் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

لِكَيْلَا يَعْلَمَ مِنْۢ بَعْدِ عِلْمٍ شَيْـًٔا ۗ

அதாவது மனிதன் முதுமையை எய்திவிடும்போது, கற்ற அறிவையிழந்து அறிவிலியாக மாறும் நிலையை அவன் அடைகின்றான். (22:6)

எனவே உடலின்றி ஆன்மா இயங்காது என்பதற்கு நாம் கண்கூடாகக் காணும் இவையனைத்தும் போதுமான சான்றுகள் ஆகும். அடுத்து உடலின்றி ஆன்மாவால் இயங்க முடியுமென்றால் அதனை அழிந்துவிடக் கூடிய உடலுடன் இணைத்து வைக்கும் இறைவனின் செயல் வீண் வேலையாகிவிடும். இந்த கண்ணோட்டத்துடன் சிந்தித்துப் பார்த்தால் அது உண்மையின் பக்கம் நம்மை வழி நடத்தும். அடுத்து இன்னொரு விஷயமும் சிந்திக்கத் தகுந்ததாகும். அது என்னவென்றால், மனிதன் எல்லையில்லா முன்னேற்றங்களைப் பெற வேண்டும் என்பதற்காகவே இறைவன் அவனைப் படைத்துள்ளான்.

எனவே இந்த குறுகிய கால உலக வாழ்வின் முன்னேற்றங்களை உடலுடன் இணைந்திராமல் மனித ஆன்மா பெற முடியாதபோது மறுமையின் கரைகாணாத, எல்லையற்ற முன்னேற்றங்களை அது உடலின் இணைப்பின்றி பெற்றுக் கொள்ளும் என நாம் எவ்வாறு நம்ப முடியும்?

ஆகையால், இஸ்லாமிய போதனைகளின்படி ஆன்மாவின் முழுமையான செயல்பாடுகள் வெளிப்படுவதற்கு உடல் ஆன்மாவுடன் நிரந்தரமாக இணைந்திருப்பது அவசியம் ஆகும். இது மேற்கண்ட அனைத்து ஆதாரங்கள் மூலம் நிரூபணமாகின்றது. மரணத்திற்குப் பிறகு இந்த அழியக் கூடிய உடல் ஆன்மாவை விட்டு பிரிந்து விடுகின்றது என்றபோதிலும் பர்ஸக் என்ற இடைக்கால உலகில் ஒவ்வோர் ஆன்மாவும் தத்தமது செயல்களின் விளைவை ஓரளவிற்கு அனுபவித்து உணரும் வகையில் தற்காலிகமான ஒருவகையான உடல் வழங்கப்படும். அந்த உடல் இவ்வுலகின் பூத உடலைப் போன்றதாக இருக்காது. மாறாக மனிதனின் செயல்களுக்கேற்றவாறு, ஒருவகை ஒளியினாலோ அல்லது இருளினாலோ அந்த உடல் ஆயத்தமாகும். அதாவது இவ்வுலகில் மனிதன் ஆற்றிய செயல் நிலைகள் அங்கு உடலாக வெளிப்படும். இதனைப் பற்றி இறைவேதமாகிய திருக்குர்ஆனில் மீண்டும் மீண்டும் கூறப்பட்டுள்ளது. அந்நாளில் சில உடல்கள் ஒளிமயமானவையாகவும், சில உடல்கள் இருள் நிறைந்தவையாகவும் இருக்கும். அவை நற்செயல்களின் ஒளி அல்லது தீய செயல்களின் இருள் ஆகியவற்றால் ஆயத்தம் செய்யப்பட்டதாக இருக்கும். இது ஒருவகையில் மிகவும் நுட்பமான இரகசியமாக இருந்தபோதிலும், எவ்வகையிலும் பகுத்தறிவிற்கு முரணானதல்ல.

முழுமையான மனிதர் இவ்வுலகிலேயே இந்த பூத உடலைத் தவிர ஒருவகையான ஒளியின் வடிவத்தை தன்னகத்தே கொண்டிருப்பார். மேலும் ஆன்மீக காட்சிகளின் நிலைகளிலும் இதற்கு நிறைய உதாரணங்கள் உள்ளன. வெளிப்படையான அறிவை மட்டுமே சார்ந்து நிற்கும் ஒருவருக்கு இவ்விஷயங்களை புரிய வைப்பது கடினமென்றாலும், எவர் ஆன்மீகக் காட்சிகளில் ஓரளவிற்கு பங்கு பெற்றிருப்பாரோ அவர் செயல்களினால்

ஆயத்தமாகும் அத்தகு உடலைக் குறித்து வியப்படையவும் மாட்டார். அதனை பயனற்றதாகவும் கருத மாட்டார். மாறாக அதனை அறிந்து மகிழ்ச்சி அடைவார்.

சுருக்கமாக, செயல்களின் தன்மைகளினால் கிடைக்கின்ற உடலே 'பர்ஸக்' எனும் இடைக்கால உலகில் நன்மை, தீமைகளின் பிரதிபலன்களுக்கு காரணியாக அமைகின்றது. மேற்கண்ட விஷயத்தில் நான் அனுபவம் பெற்றவன் ஆவேன். முழுமையாக கண் விழித்திருக்கும் தருணத்தில் ஆன்மீகக் காட்சியில் எனக்கு பலமுறை இறந்துபோன சிலரை சந்திக்கும் வாய்ப்பு கிடைத்துள்ளது. மேலும் சில தீயவர்கள் மற்றும் வழிதவறியவர்களின் உடல்களை புகையால் உருவானதைப் போன்று கருமையாக இருப்பதையும் நான் கண்டுள்ளேன். சுருக்கமாக இத்துறையில் எனக்கு சொந்த அனுபவம் உள்ளது. எனவே மரணத்திற்குப் பின்னர் ஒவ்வொருவருக்கும் ஒளிமயமான அல்லது இருளாலான உடல் வழங்கப்படும் என இறைவன் கூறியதை நான் அழுத்தமாகக் கூறிக் கொள்கிறேன். இந்த நுட்பமான ஞானங்களை வெறும் அறிவினால் மட்டுமே நிரூபணம் செய்ய விரும்பினால், அது அம்மனிதனின் தவறாகும். ஏனென்றால் இனிப்பான பொருளின் சுவையை கண்ணால் கூற முடியாது. நாவினால் எந்தப் பொருளையும் பார்க்க இயலாது. அதைப் போன்றுதான் மறுமை வாழ்வின் ஞானங்களை தூய ஆன்மீகக் காட்சிகளின் மூலமாக மட்டுமே பெற முடியுமே ஒழிய, வெறும் அறிவின் துணை கொண்டு அந்தப் புதிருக்கு விடை கண்டு விட முடியாது. இறைவன் உலகில் அறியாதவற்றை அறிந்து கொள்வதற்கென தனித்தனி வழிமுறைகளை வைத்துள்ளான். எனவே ஒவ்வொரு விஷயத்தையும் அதற்குரிய வழிமுறைகளில் தேடுங்கள். அந்நிலையில் அதனை நீங்கள் பெற்றுக் கொள்வீர்கள்.

இன்னொரு விஷயமும் நினைவிற் கொள்ளத்தக்கதாகும். அதாவது எவர்கள் தீய செயல்களிலும், வழிகேட்டிலும் தங்களை ஈடுபடுத்திக் கொண்டார்களோ, அவர்களுக்கு இறைவன் தனது வேதத்தில் மரணித்தவர்கள் எனப் பெயர் சூட்டியுள்ளான். மேலும் நல்லடியார்களை உயிருள்ளவர்கள் எனக் கூறியுள்ளான். அதன் இதிலுள்ள இரகசியம் என்னவென்றால், எவர்கள் இறைவனை

அலட்சியம் செய்தவர்களாய் மரணிக்கின்றார்களோ அவர்களின் வாழ்க்கைக்குக் காரணிகளாய் இருந்து வந்த உண்பதும், குடிப்பதும், மன இச்சைகளை பின்பற்றுவதும் முடிந்து போய்விடுகின்றது. அவர்களுக்கு ஆன்மீக உணவில் எந்தப் பங்கும் இருந்திருக்காது. எனவே அவர்கள் உள்ளபடியே மரணித்துவிட்டனர். தண்டனையை அனுபவிப்பதற்காக மட்டுமே அவர்கள் உயிர் பெறுவார்கள். இந்த இரகசியத்தை சுட்டிக் காட்டியவாறு இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

اِنَّهٗ مَنْ يَّاْتِ رَبَّهٗ مُجْرِمًا فَاِنَّ لَهٗ جَهَنَّمَ ؕ لَا يَمُوْتُ فِيْهَا وَلَا يَحْيٰى ۝٧٥

அதாவது எவர் குற்றவாளியாக இறைவனிடத்தில் வருவாரோ அவரது தங்குமிடம் நரகமாகும். அவர் அதில் மரணிக்கவும் மாட்டார்; உயிருடன் இருக்கவும் மாட்டார். (20:75) ஆனால் இறையன்பர்களுக்கு ஏற்படும் மரணத்தால் அவர்கள் மரணிப்பதில்லை. ஏனென்றால் அவர்களுக்குரிய தண்ணீரும், உணவும் அவர்களிடமிருக்கும். அடுத்து பர்ஸக் எனும் இடைக்கால உலகிற்கு பிறகு அடுத்து வரும் உலகின் பெயர் ஆலமே பஅஸ் (மீண்டும் உயிர்த் தெழுப்பப்படும் உலகம்) ஆகும். ஒவ்வோர் ஆன்மாவும் அது நல்ல ஆன்மாவாக இருந்தாலும், தீய ஆன்மாவாக இருந்தாலும் இக்காலக் கட்டத்தில் அது மிகவும் வெளிப்படையான ஓர் உடலைப் பெறும். அந்நாள் இறைவனின் முழுமையான வெளிப்பாட்டிற்குரிய நாளாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது. அந்நாளில் ஒவ்வொரு மனிதனும், தனது இறைவனின் இருப்பை முழுமையாக கண்டறிந்து கொள்வான். ஒவ்வொரு மனிதனும் தான் பெற்றுக் கொள்ள வேண்டிய கூலியின் இறுதி எல்லையை அடைந்து விடுவான். இறைவனிடமிருந்து இந்நிகழ்வு எவ்வாறு நிகழ முடியும்? என வியப்படைய வேண்டாம். ஏனென்றால் அவன் எல்லாவற்றிற்கும் வல்லமை படைத்துள்ளான். அவன் தான் நாடுகின்றவற்றைச் செய்கின்றான். இது பற்றி அவனே இவ்வாறு கூறுகின்றான் :

اَوَلَمْ يَرَ الْاِنْسَانُ اَنَّا خَلَقْنٰهُ مِنْ نُّطْفَةٍ فَاِذَا هُوَ خَصِيْمٌ مُّبِيْنٌ ۝٧٨
وَضَرَبَ لَنَا مَثَلًا وَّنَسِيَ خَلْقَهٗ ؕ قَالَ مَنْ يُّحْيِ الْعِظَامَ وَهِيَ رَمِيْمٌ ۝٧٩
قُلْ يُحْيِيْهَا الَّذِيْۤ اَنْشَاَهَاۤ اَوَّلَ مَرَّةٍ ؕ وَهُوَ بِكُلِّ خَلْقٍ عَلِيْمُ ۝٨٠ ۙ

أَوَلَيْسَ الَّذِيْ خَلَقَ السَّمٰوٰتِ وَالْاَرْضَ بِقٰدِرٍ عَلٰٓى اَنْ يَّخْلُقَ مِثْلَهُمْ ۬ۚ
بَلٰى ۗ وَهُوَ الْخَلّٰقُ الْعَلِيْمُ ﴿٨٢﴾
اِنَّمَآ اَمْرُهٗٓ اِذَآ اَرَادَ شَيْئًا اَنْ يَّقُوْلَ لَهٗ كُنْ فَيَكُوْنُ ﴿٨٣﴾
فَسُبْحٰنَ الَّذِيْ بِيَدِهٖ مَلَكُوْتُ كُلِّ شَيْءٍ وَّ اِلَيْهِ تُرْجَعُوْنَ ﴿٨٤﴾

அதாவது நாம் மனிதனை கருப்பையில் இடப்பட்ட ஒரு துளி நீரிலிருந்து படைத்தோம். அதனை அவன் பார்ப்பதில்லையா? பின்னர் அவன் சண்டை சச்சரவு செய்பவனாகி விட்டான். மேலும் எமக்கெதிராக பேசத் தொடங்கி விட்டான். மேலும் எலும்புகள் கூட மக்கி மாயமாகிவிடும் போது மீண்டும் மனிதன் உயிர் பெற்று எழுவது எவ்வாறு சாத்தியமாகும்? எனவும், அவ்வாறு அவனை உயிர் பெறச் செய்யும் வல்லமை படைத்தவன் யார்? எனவும் மனிதன் தனது பிறப்பை மறந்து கேள்வி கேட்கத் தொடங்குகின்றான். நீர் அவர்களிடம் கூறுவீராக: எவன் அவர்களை முதலில் படைத்தானோ அவனே உயிர்ப்பிப்பான். அவனுக்கு எல்லா வகையிலும், எல்லா வழியிலும் உயிர்ப்பிக்கத் தெரியும். அவனது கட்டளையைப் பற்றிய மகத்துவம் எத்தகையதென்றால், ஒரு பொருள் உருவாக வேண்டும் என அவன் நாடினால் ஆகி விடு என்று மட்டுமே கூறுகின்றான். அவ்வளவுதான். அப்பொருள் உருவாகி விடுகின்றது. எல்லாவற்றின் மீதும் ஆளுமை உள்ள அவன் தூயவன். மேலும் நீங்கள் அனைவரும் அவன் பக்கமே திரும்பிச் செல்வீர்கள். (36:78-84)

எனவே இறைவனால் முடியாதது எதுவும் இல்லை என்று இத்திருவசனங்களில் அல்லாஹ் கூறியுள்ளான். எந்த இறைவன் மனிதனை ஒரு அற்பமான துளியிலிருந்து படைத்தானோ, அவனால் இரண்டாவது முறையாகப் படைக்க முடியாமல் போகுமா என்ன? இங்கு அறியாதவர்கள் புறமிருந்து ஒரு கேள்வி எழலாம். அதாவது ஆலமே பஅஸ் (மீண்டும் எழுப்பப்படும் உலகம்) என்ற மூன்றாம் உலகம் ஒரு நீண்ட காலத்திற்குப் பிறகு எந்த நிலையில் வரவுள்ளதோ அந்நிலையைக் கவனத்திற் கொள்ளும்போது ஆலமே பர்ஸக்

எனும் இடைக்கால உலகம் ஒவ்வொரு நல்ல ஆன்மாவுக்கும், தீய ஆன்மாவுக்கும் ஒரு சிறைச்சாலை போன்றும், அது ஒரு வீணான செயலாகவும் அல்லவா தோன்றுகிறது? எனக் கேட்கலாம். அதற்குரிய பதில் என்னவென்றால் இவ்வாறு புரிந்திருப்பது முற்றிலும் தவறாகும். சரியாக புரிந்து கொள்ளாததால் இக்கருத்து உருவாகியுள்ளது. ஏனென்றால் நன்மை, தீமைகளுக்குரிய கூலியை பெற்றுக் கொள்வதற்கு இரண்டு இடங்கள் இருப்பதாக இறைவேதம் கூறுகின்றது. அவற்றுள் ஒன்று 'ஆலமே பர்ஸக்' எனும் இடைக்கால உலகம். அங்கு ஒவ்வொரு மனிதனும் தத்தமது கூலியை மறைமுகமாகப் பெற்றுக் கொள்கிறான். தீய மக்கள் மரணித்த உடனே நரகத்தில் நுழைந்து விடுவர். நல்லடியார்கள் மரணித்தவுடனே சொர்க்கத்தில் நிம்மதியடைவார்கள். ஒவ்வொரு மனிதனும் மரணித்தவுடன் தனது செயல்களுக்குரிய பிரதிபலன்களைக் கண்டு கொள்வான். இது போன்ற வசனங்கள் திருக்குர்ஆனில் பல்வேறு இடங்களில் வருகின்றன. உதாரணமாக ஒரு சொர்க்கவாசியைப் பற்றி இறைவன் ஓர் இடத்தில் இவ்வாறு கூறுகின்றான்:-

قِيْلَ ادْخُلِ الْجَنَّةَ ؕ

அதாவது நீ சுவர்க்கத்தில் நுழைந்து விடு என்று அவனுக்கு கூறப்பட்டது. (36:27) அதைப் போன்றே ஒரு நரகவாசியைப் பற்றி இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

فَرَاٰهُ فِىْ سَوَآءِ الْجَحِيْمِ ۝٥٦

அதாவது ஒரு சுவர்க்கவாசியின் நண்பனாக ஒரு நரகவாசியிருந்தான். இருவரும் மரணமடைந்தபோது சொர்க்கவாசி தன் நண்பனை காணாமல் எங்கே சென்றான்? என ஆச்சரியம் கொண்டார். அவரது நண்பன் நரகத்திற்கு நடுவில் இருப்பதாக அவருக்கு காட்டப்பட்டது. (37:56) ஆகவே, நற்கூலி மற்றும் தண்டனைக்குரிய நடவடிக்கை தாமதமின்றி ஆரம்பமாகி விடுகின்றது. நரகத்திற்குரியவர்கள் நரகத்திற்கும், சொர்க்கத்திற்குரியவர்கள் சொர்க்கத்திற்கும் செல்கின்றனர்.

ஆனால் இதன் பிறகு ஓர் உயரிய தோற்றத்திற்கான நாள் ஒன்று உள்ளது. இறைவனின் மிகப்பெரும் ஒரு ஞானம் அந்த நாளை வெளிப்படுத்த விரும்பியது. ஏனென்றால் அவன் தனது படைக்கும் பண்பின் மூலமாக தான் அறியப்பட வேண்டுமென்று மனிதனைப் படைத்தான். பின்னர் அவன் தனது ஆளுமைப் பண்பின் மூலம் அறியப்பட வேண்டுமென்பதற்காக அனைவரையும் அழித்து விடுவான். அதன் பிறகு அவன் தனது வல்லமையுடன் தான் அறியப்பட வேண்டுமென்பதற்காக அனைவருக்கும் ஒரு நாள் முழுமையான வாழ்வளித்து ஒரு களத்தில் அவர்களை ஒன்று திரட்டுவான்.

மேற்கூறப்பட்ட நுட்பங்களுள் முதலாவது நுட்பமான ஞானம் இங்கு விளக்கப்பட்டது என்பதை அறிந்து கொள்ளுங்கள்.

## இரண்டாவது நுட்பமான ஞானம்

மறுவுலகம் குறித்து திருக்குர்ஆன் கூறுகின்ற இரண்டாவது நுட்பமான ஞானம் என்னவென்றால், இவ்வுலகில் ஆன்மீகமாக இருந்த அனைத்து விஷயங்களும் அது ஆலமே பர்ஸக் (எனும் இடைக்கால உலகின்) நிலையிலும் சரி அல்லது ஆலமே பஅஸ் (என்ற நியாயத் தீர்ப்பு நாளின்) நிலையிலும் சரி பௌதீகத் தோற்றங்களாக வெளிப்படும். இது பற்றி இறைவன் கூறிய திருவசனங்களில் ஒன்று இதுவாகும்.

وَمَنْ كَانَ فِيْ هٰذِهٖٓ اَعْمٰى فَهُوَ فِي الْاٰخِرَةِ اَعْمٰى وَاَضَلُّ سَبِيْلًا ﴿٧٣﴾

அதாவது எவர் இவ்வுலகில் குருடராகயிருப்பாரோ அவர் மறுவுலகிலும் குருடராகவே இருப்பார். (17:73) இவ்வுலகில் நிலவிய (மனிதனின்) ஆன்மீகக் குருட்டுத்தன்மை மறுவுலகில் பௌதீகமான முறையில் கண்கூடாக உணர்ந்து கொள்ளும் வகையில் அமையும் என்பதே இவ்வசனத்தின் கருத்தாகும். இவ்வாறே மற்றொரு வசனத்தில் இறைவன் கூறுகின்றான்:-

خُذُوْهُ فَغُلُّوْهُ ﴿٣١﴾ ثُمَّ الْجَحِيْمَ صَلُّوْهُ ﴿٣٢﴾

ثُمَّ فِيْ سِلْسِلَةٍ ذَرْعُهَا سَبْعُوْنَ ذِرَاعًا فَاسْلُكُوْهُ ﴿٣٣﴾

அதாவது அந்த நரகவாசியைப் பிடியுங்கள். அவனது கழுத்தில் பட்டையை மாட்டுங்கள். பின்னர் அவனை நரகத்தில் போட்டு எரியுங்கள். அதன் பின்னர் எழுபது முழ நீளமுள்ள சங்கிலியால் அவனைக் கட்டுங்கள். (69:31-33)

மேற்கண்ட இத்திருவசனங்களில் இறைவன் இவ்வுலகின் ஆன்மீகத் தண்டனையானது மறுவுலகில் பௌதீகமான முறையில் வெளிப்படும் என்பதை தெளிவுபடுத்தியுள்ளான். உதாரணமாக கழுத்துப் பட்டை என்பது மனிதனின் தலையைப் பூமியின் பக்கமாகக் குனிய வைத்துக் கொண்டிருந்த அவனது உலக ஆசைகள் ஆகும். அவை மறுவுலகில் வெளிப்படையான தோற்றத்தில் காணப்படும். அதே போன்று, இவ்வுலகின் பிணைப்புகள் எனும் சங்கிலிகள் (மறுவுலகில்) அம்மனிதனின் கால்களில் கட்டப்பட்டிருக்கும். உலக ஆசைகளுக்காக பட்ட வேதனை எனும் நெருப்பு, மறுவுலகில் வெளிப்படையாக பற்றி எரிவதை காணலாம்.

தீய மனிதன் இவ்வுலக வாழ்வில் மனஇச்சைகள் எனும் ஒரு நரகத்தை தன்னுள் கொண்டிருக்கிறான். மேலும் தோல்விகளின்போது அந்த நரகத்தின் வேதனையை அவன் உணர்கிறான். ஆகவே அவன் அழிந்து விடக்கூடிய மனஇச்சைகளிலிருந்து அகற்றப்பட்டு, நிரந்தரமான அவநம்பிக்கை அவனுக்கு ஏற்படும்போது இறைவன் அந்த ஏக்கங்களை பௌதீக நெருப்பாக அவனிடம் வெளிப்படச் செய்வான்.

இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :-

وَحِيلَ بَيْنَهُمْ وَبَيْنَ مَا يَشْتَهُونَ

அதாவது அவர்களுக்கும் அவர்கள் ஆசைப்படுகின்ற பொருள்களுக்கும் இடையில் தடுப்பு ஏற்படுத்தப்படும். மேலும் இதுவே தண்டனையின் அடித்தளமாக அமையும். (34:55)

மேலும் எழுபது முழ நீளமுள்ள சங்கிலியில் அவனைக் கட்டுங்கள் என்று இறைவன் கூறியிருப்பது, தீயவன் ஒருவன் சில வேளைகளில் 70 வயது வரையிலான ஆயுட் காலத்தை பெறுகின்றான் என்பதைச் சுட்டிக்காட்டுகிறது. இன்னும்

கூறப்போனால் பல சமயங்களில் இவ்வுலகில் ஒரு தீயவனுக்கு அவனுடைய இளமைப் பருவத்தையும், முதுமைப்பருவத்தையும் நீக்கிவிட்டு எழுபது வருடங்களைக் கொண்ட சிந்தனை, உழைப்பு, பணி ஆகியவற்றை செய்யத் தகுதி வாய்ந்த தூய கலப்படமற்ற காலமும் கிடைக்கின்றது. ஆனால் துரதிஷ்டசாலியான அவன் தனது வாழ்வின் சிறந்த எழுபது வருடங்களையும் உலகப் பிணைப்புகளிலேயே கழித்து விடுகிறான். அப்பிணைப்புகள் எனும் சங்கிலியிலிருந்து அவன் விடுதலை பெற விரும்புவதில்லை. ஆகவே உலகின் பிணைப்புகளில் அவன் கழித்த அதே எழுபது வருடங்கள் மறுவுலகில் எழுபது முழ நீளமுள்ள சங்கிலியைப் போன்று வெளிப்படும் என்றும், ஒவ்வொரு முழமும் ஒவ்வொரு வருடத்திற்கு சமமானதாக இருக்கும் என்றும் இறைவன் இவ்வசனத்தில் கூறுகின்றான். இங்கு ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். அதாவது இறைவன் தானாக மனிதனுக்கு எவ்வித துன்பமும் தருவதில்லை. மாறாக மனிதன் செய்த தீய வினைகளையே அவனுக்கு முன்னால் இறைவன் வைத்து விடுகின்றான்.

அடுத்து இறைவன் தனது இதே நடைமுறையை வெளிப்படுத்தும் விதமாக பிறிதோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான் :-

اِنْطَلِقُوْٓا اِلٰى ظِلٍّ ذِىْ ثَلٰثِ شُعَبٍ ۙ﴿۳۱﴾
لَّا ظَلِيْلٍ وَّلَا يُغْنِىْ مِنَ اللَّهَبِ ؕ﴿۳۲﴾

அதாவது தீயவர்களே! வழிதவறியவர்களே! மூன்று கிளைகளைக் கொண்ட நிழலின் பக்கம் செல்லுங்கள். அவற்றால் நிழலின் பயனையும் தர முடியாது. வெப்பத்திலிருந்து காப்பாற்றவும் முடியாது. (77:31,32)

இவ்வசனத்தில் மூன்று கிளைகள் என்பது ஐம்புலன்களின் சக்தியையும், மிருகத்தனமான சக்தியையும், சிந்தனை சக்தியையும் குறிக்கும். எவரொருவர், இந்த மூவகை ஆற்றல்களையும், நல்லொழுக்க நிலைகளாகவும், நடுநிலை வாய்ந்தவையாகவும் ஆக்கிக் கொள்வதில்லையோ, அவர்களின்

இந்த ஆற்றல்கள் இலைகளற்று நிற்கும் மூன்று கிளைகளாய் மறுமை நாளில் வெளிப்படுத்தப்படும். அது வெப்பத்திலிருந்து அவர்களை காக்க உதவாது. மேலும் அவர்கள் வெப்பத்தால் எரிந்து கொண்டிருப்பார்கள்.

பிறகு இவ்வாறே இறைவன் தனது நடைமுறையை வெளிப்படுத்தும் விதமாக சொர்க்கவாசிகளுக்கு ஆதரவாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

يَوْمَ تَرَى الْمُؤْمِنِيْنَ وَالْمُؤْمِنٰتِ يَسْعٰى

نُوْرُهُمْ بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ

அதாவது இவ்வுலகில் நம்பிக்கையாளர்களுக்கு மறைமுகமாக கிடைத்திருந்த இந்த ஒளியானது அந்நாளில் அவர்களுக்கு முன்னும், அவர்களின் வலப் பக்கங்களிலும் வெளிப்படையாகவே ஓடிக்கொண்டிருப்பதை நீர் காண்பீர். (57:13)

மேலும் அடுத்து மற்றுமொரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

يَّوْمَ تَبْيَضُّ وُجُوْهٌ وَّتَسْوَدُّ وُجُوْهٌ ۚ

அதாவது, அந்நாளில் சில முகங்கள் கருமையாகி விடும். சில முகங்கள் வெண்மையாகவும், ஒளிமயமானதாகவும் ஆகிவிடும். (3:107)

அடுத்து ஒரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :-

مَثَلُ الْجَنَّةِ الَّتِىْ وُعِدَ الْمُتَّقُوْنَ ؕ فِيْهَآ اَنْهٰرٌ مِّنْ مَّآءٍ غَيْرِ اٰسِنٍ ۚ وَاَنْهٰرٌ مِّنْ لَّبَنٍ لَّمْ يَتَغَيَّرْ طَعْمُهٗ ۚ وَاَنْهٰرٌ مِّنْ خَمْرٍ لَّذَّةٍ لِّلشّٰرِبِيْنَ ۚ وَاَنْهٰرٌ مِّنْ عَسَلٍ مُّصَفًّى ؕ

அதாவது, இறையச்சமுடையவர்களுக்கு வழங்கப்படவிருக்கும் சுவர்க்கத்தின் உவமை ஒரு தோட்டமாகும். அத்தோட்டத்தில் எப்போதும் களங்கமுறாத நீராறுகளும், ஒருபோதும் சுவைமாறாத பாலாறுகளும் போதையற்ற, முழுக்க முழுக்க இன்பம் தரும் மது ஆறுகளும் இருக்கும். மேலும்

அழுக்கற்ற, மிகவும் தெளிவான தேன் ஆறுகளும் இருக்கும். (47:16)

அந்த சுவர்க்கத்தில் மேற்கூறப்பட்ட பொருட்கள் அனைத்தும் எல்லையில்லாத ஆறுகளாய் ஓடும். இதுவே அந்த சுவர்க்கத்திற்கான உவமையாகும் என்று இங்கு இறைவன் தெளிவாகக் கூறி விட்டான். மேலும் இவ்வுலகில் இறைஞானம் பெற்றவர் ஆன்மீகமான முறையில் அருந்தி வந்த வாழ்விற்குத் தேவையான அந்த தண்ணீர் மறுவுலகில் வெளிப்படையாகக் காணப்படும். மேலும் இவ்வுலகில் அவர் எந்த ஆன்மீகப் பாலால் பால் குடிக்கும் குழந்தையைப் போன்று ஆன்மீக வளர்ச்சியடைந்தாரோ, (அந்த ஆன்மீகப் பால்) சுவர்க்கத்தில் மிகவும் வெளிப்படையாகக் காணப்படும். மேலும் இவ்வுலகில் இறைநேசம் என்ற எந்த மதுவினால் ஆன்மீக ரீதியாக எப்போதும் அவர் மயங்கிய நிலையில் இருந்தாரோ அந்த மது இப்போது சுவர்க்கத்தில் ஆறுகளாக வெளிப்படையாகக் காணக் கிடைக்கும். மேலும் இவ்வுலகில் இறைஞானம் பெற்றவரின் வாயில் ஆன்மீக முறையில் சென்றிருந்த நம்பிக்கையின் இனிமை என்ற தேன் சுவர்க்கத்தில் வெளிப்படையாகக் கண்டு உணர்ந்து கொள்ளும் வகையில் ஆறுகளைப் போன்று காணக் கிடைக்கும். ஒவ்வொரு சுவர்க்கவாசியும், தனது ஆறுகளையும் தனது தோட்டங்களையும் கொண்டு தனது ஆன்மீக நிலையின் மதிப்பீட்டை வெட்ட வெளிச்சமாக்கிக் காட்டி விடுவார். இறைவனும் அந்நாளில் சொர்க்கவாசிகளுக்காக திரைகளை விட்டு வெளியே வந்து விடுவான். சுருக்கமாக, (மறுவுலகில்) ஆன்மீக நிலைகள் மறைவானவையாக இருக்காது. மாறாக அவை பௌதீகமான வடிவத்தில் காணக் கிடைக்கும்.

## மூன்றாவது நுட்பமான ஞானம்

மறுவுலகில் முன்னேற்றங்கள் எல்லையற்றவையாக இருக்கும் என்பதே மூன்றாவது நுட்பமான ஞானம் ஆகும். இது பற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :

وَالَّذِيْنَ اٰمَنُوْا مَعَهٗ ۚ نُوْرُهُمْ يَسْعٰى بَيْنَ اَيْدِيْهِمْ وَبِاَيْمَانِهِمْ يَقُوْلُوْنَ رَبَّنَآ
اَتْمِمْ لَنَا نُوْرَنَا وَاغْفِرْ لَنَا ۚ اِنَّكَ عَلٰى كُلِّ شَيْءٍ قَدِيْرٌ ۝٩

அதாவது எவர்கள் இவ்வுலகில் (ஈமான் எனும்) நன்னம்பிக்கையின் ஒளியை கொண்டிருப்பார்களோ மறுவுலகில் அவர்களின் ஒளி அவர்களின் முன்பாகவும், அவர்களின் வலப் பக்கமாகவும், ஓடிக்கொண்டிருக்கும். இறைவா! எங்களின் ஒளியை எங்களுக்கு முழுமையாக்கி, எங்களை மன்னிப்பாயாக! நீ எல்லாவற்றிற்கும் வல்லமை படைத்தவனாவாய் என எப்போதும் அவர்கள் வேண்டிக் கொண்டிருப்பர். (66:9)

எங்களின் ஒளியை முழுமையடையச் செய்வாயாக என்று அவர்கள் எப்போதும் வேண்டிக் கொண்டிருப்பர் என இத்திருவசனத்தில் இறைவன் கூறியிருப்பது எல்லையற்ற முன்னேற்றங்களைச் சுட்டிக் காட்டுகின்றது. அதாவது ஒரு முழுமையான பிரகாசத்தின் நிலை அவர்களுக்கு கிடைக்கும். பின்னர் மற்றுமொரு முழுமையான ஒளி அவர்களுக்குத் தென்படும். இதைக் கண்ட பிறகு அவர்கள் தமது முந்தைய முழுமையான நிலையை குறைவுள்ளதாகக் கருதுவர். ஆகவே இரண்டாவது முழுமையைப் பெறுவதற்கு அவர்கள் இறைவனிடம் வேண்டுவார்கள். அதுவும் கிடைத்தவுடன் மூன்றாவது அந்தஸ்திலுள்ள ஒரு முழுமை அவர்களுக்கு வெளிப்படும். பின்னர் அதனைக் கண்ட பிறகு முந்தைய முழுமைகளை-யெல்லாம் அற்பமானவையாகக் கருதுவர். எனவே அதனை (அடைய) அவர்கள் விரும்புவார்கள். மேலும், மேலும் முன்னேற்றங்கள் பெற வேண்டும் என்ற (அவர்களின்) விருப்பங்கள்தான் ‘அத்மிம்’ (முழுமை செய்வாயாக) என்ற சொல் வாயிலாக விளக்கப்பட்டுள்ளது.

சுருக்கமாக, இவ்வாறே முன்னேற்றங்களின் எல்லையற்ற தொடர் நீண்டு கொண்டே செல்லும். அதில் ஒருபோதும் வீழ்ச்சி இருக்காது. சுவர்க்கத்திலிருந்து அவர்கள் ஒருபோதும் வெளியேற்றப்படவும் மாட்டார்கள். மாறாக அவர்கள் அனுதினமும் முன்னேறிக் கொண்டே செல்வர். அவர்கள் பின்தங்கி விடமாட்டார்கள். தங்களை மன்னிக்க வேண்டுமென்று அவர்கள் எப்போதும் விரும்பிக் கொண்டேயிருப்பார்கள் என இறைவன் கூறியுள்ளதில் இங்கு ஒரு கேள்வி எழுகின்றது. அது என்னவென்றால், சுவர்க்கத்தில் நுழைந்துவிட்ட பிறகு மன்னிப்பு வேண்டுவதற்கு அவர்களிடம் என்ன குறை எஞ்சியிருக்கின்றது?

பாவங்கள் மன்னிக்கப்பட்டுவிட்ட பிறகு பாவமன்னிப்பு கோருவதற்கு என்ன அவசியம் வந்து விட்டது? இதற்குரிய பதில் என்னவெனில், 'மக்ஃபிரத்' (மன்னித்தல்) என்ற சொல்லிற்கு பொருத்தமற்ற, குறைபாடான நிலையை கீழே அமுக்குதல் மறைத்து விடுதல் என்பதே உண்மையான பொருளாகும். எனவே சொர்க்கவாசிகள் முழுமையான சிறப்பை பெற வேண்டுமெனவும், முற்றிலும் ஒளியில் மூழ்கித் திளைக்க வேண்டுமெனவும் விரும்பிக் கொண்டேயிருப்பர். அவர்கள் இரண்டாம் நிலையைக் கண்டு முந்தைய நிலையை குறைவுள்ளதாகக் காண்பர். ஆகவே முதல் நிலையை கீழே அமுக்கி விட அவர்கள் விரும்புவர். அடுத்து மூன்றாவது முழுமையைக் கண்டு தாங்கள் பெற்ற இரண்டாவது முழுமைக்கு மக்ஃபிரத் (மன்னிப்பு) கிடைக்க விரும்புவர். அதாவது குறைபாடான அந்த நிலை கீழே அமுக்கப்பட்டு மறைக்கப்பட வேண்டும் என விரும்புவர். இவ்வாறே அவர்கள் எல்லையற்ற மக்ஃபிரத்திற்கு (மன்னிப்பிற்கு) விருப்பம் கொண்டவர்களாகயிருப்பர்.

மக்ஃபிரத் மற்றும் இஸ்திக்ஃபார் (மன்னிப்புக் கோருதல், பிழை பொறுக்கத் தேடுதல்) என்ற இதே சொற்களைப் பிடித்துக் கொண்டு குறைமதி படைத்த சிலர் நமது நபி ஹஸ்ரத் முஹம்மத் (ஸல்) அவர்கள் மீது ஆட்சேபணை செய்து வருகின்றனர். இவ்வாறு (பாவ)மன்னிப்பு கோருவதற்கான விருப்பம் கொள்வது என்பது மனிதனுக்கு பெருமைக்குரிய ஒரு விஷயமாகும் என்பதை வாசகர்கள் இதிலிருந்து புரிந்திருப்பார்கள். பெண்ணின் வயிற்றிலிருந்து பிறந்த எந்தவொரு மனிதனும் பாவமன்னிப்புக் கோருவதை நிரந்தரமாக பழக்கமாக்கிக் கொள்ளவில்லையென்றால் அவன் ஒரு புழு ஆவான்; அவன் மனிதனல்லன்; அவன் குருடன் ஆவான்; பார்வையுள்ளவனல்லன். அவன் தூய்மையற்றவன் ஆவான்; அவன் தூய்மையானவனல்லன்.

இப்போது இதன் சுருக்கம் என்னவென்றால், திருக்குர்ஆனின் அடிப்படையில் நரகம் மற்றும் சுவர்க்கம் ஆகிய இரண்டும் உண்மையில் இவ்வுலகில் மனித வாழ்வின் நிழல்களும், பிரதிபலன்களுமேயாகும். வெளியில் எங்கிருந்தோ புதிதாக வரக்கூடிய பௌதீக பொருட்கள் அல்ல. இரண்டும்

பௌதீகமான முறையில் தோற்றமளிக்கும் என்பது உண்மையே. ஆனால் அவை உண்மையில் ஆன்மீக நிலைகளின் நிழல்களும், பிரதிபலன்களுமாயிருக்கும். பௌதீகமான முறையில் நடப்பட்டிருக்கும் மரங்களைக் கொண்ட ஒரு பூமியே சுவர்க்கமென்றும், கந்தகக் கற்களைக் கொண்ட ஓரிடமே நரகமென்றும் நாம் நம்புவதில்லை. மாறாக இஸ்லாமிய கொள்கைப்படி சுவர்க்ககம், நரகம் என்பது இவ்வுலகில் மனிதன் செய்கின்ற செயல்களின் பிரதிபிம்பங்களேயாகும்.

## மூன்றாவது கேள்வி :-

## இவ்வுலகில் (மனித) வாழ்வின் நோக்கம் என்ன? அதை அடைவதற்குரிய வழிகள் எவை?

பலதரப்பட்ட இயல்புகள் கொண்ட மனிதன் தனது குறைமதி அல்லது போதிய மன உறுதியின்மையின் காரணமாக தனது வாழ்வின் நோக்கங்களாக பலவற்றை கூறுகின்றான். மேலும் வெறும் உலக லட்சியங்கள் மற்றும் ஆசைகளை அடைவதே வாழ்வின் நோக்கமாக கூறி மனிதன் நின்று விடுகிறான். ஆனால் இறைவன் தனது தூய வேதத்தில் (மனித வாழ்வின்) நோக்கத்தைப் பற்றி இவ்வாறு கூறுகின்றான் :-

وَمَا خَلَقْتُ الْجِنَّ وَالْاِنْسَ اِلَّا لِيَعْبُدُوْنِ ۝٥٧

அதாவது நான் ஜின்களையும், மனிதர்களையும் என்னை அறிவதற்காகவும், என்னை வணங்குவதற்காகவுமே படைத்துள்ளேன். (51:57)

இறைவணக்கம், இறைஞானம் பெறுதல் மற்றும் இறைவனுக்காகவே தம்மை அர்ப்பணிப்பது ஆகியவையே மனித வாழ்வின் உண்மையான நோக்கமாகும் என்பது இத்திருவசனத்திலிருந்து தெளிவாகின்றது. தனது வாழ்வின் நோக்கத்தை மனிதன் சுயமாக தனது அதிகாரத்தால் தானே நிர்ணயித்துக் கொள்வதற்கு அவனுக்கு தகுதியில்லை என்பது வெளிப்படையாகும். ஏனென்றால் மனிதன் தனது சுயவிருப்பத்தின்படி (இவ்வுலகிற்கு) வருவதுமில்லை; தனது சுயவிருப்பத்தின்படி (இவ்வுலகிலிருந்து) திரும்பிச் செல்வதுமில்லை. மாறாக அவன் படைக்கப் பட்டவன் ஆவான். எந்த இறைவன் அவனைப் படைத்து மற்ற எல்லா உயிரினங்களை விடவும் மிகவும் மேலான, சிறந்த ஆற்றல்களை அவனுக்கு வழங்கினானோ அவனே மனிதனின் வாழ்விற்கான நோக்கம் ஒன்றை நிர்ணயித்துள்ளான். அதனை ஒரு மனிதன் புரிந்து கொண்டாலும் புரியாவிட்டாலும் இறைவணக்கம், இறைஞானம் பெறுதல் மற்றும் இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்ளுதல் ஆகியவையே மனித வாழ்வின் நோக்கம்

என்பதில் எள்ளளவும் சந்தேகமில்லை. அல்லாஹ் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் இவ்வாறு கூறுகின்றான் :-

إِنَّ الدِّينَ عِندَ اللَّهِ الْإِسْلَامُ

فِطْرَتَ اللَّهِ الَّتِي فَطَرَ النَّاسَ عَلَيْهَا ........................

ذَٰلِكَ الدِّينُ الْقَيِّمُ

அதாவது சரியான இறைஞானத்தையும், இறைவனை வணங்குவதற்கான அழகிய வழிமுறையையும் கொண்டிருக்கும் மார்க்கம் இஸ்லாம் ஆகும். (3:20) இஸ்லாம் மனிதனின் இயல்பில் வைக்கப்பட்டுள்ளது. மேலும் இறைவன் மனிதனை இஸ்லாத்திலேயே படைத்திருக்கின்றான். மேலும் இஸ்லாத்திற்காக படைத்திருக்கிறான். (30:30,31)

அதாவது மனிதன் தனது அனைத்து ஆற்றல்களுடனும் இறைவனை வணங்கி, அடிபணிந்து அன்பு கொள்வதில் ஈடுபட்டிருக்க வேண்டும் என்றே இறைவன் விரும்புகிறான். அதன் காரணமாகவே வல்லமையும், கண்ணியமும் படைத்த அந்த இறைவன் இஸ்லாமிய மார்க்க நெறிகளுக்கேற்ற அனைத்து ஆற்றல்களையும் மனதனுக்கு வழங்கியுள்ளான்.

மேற்கண்ட வசனங்களுக்கான விளக்கம் மிக நீண்டதாகும். நாம் ஏற்கனவே ஓரளவிற்கு அதனை முதல் கேள்வி(க்குரிய விடை)யின் மூன்றாம் பாகத்தில் எழுதியும் இருக்கின்றோம். இருந்தபோதிலும் மனிதனுக்கு என்னென்ன உறுப்புகள் அந்தரங்கமாகவும், வெளிப்படையாகவும் வழங்கப்பட்டுள்ளனவோ அல்லது என்னென்ன ஆற்றல்கள் அவனுக்கு வழங்கப்பட்டுள்ளனவோ அவற்றின் உண்மையான நோக்கம் மனிதன் இறைஞானம் பெற்று இறைவணக்கத்தில் ஈடுபட்டு இறைநேசம் பெற வேண்டும் என்பதேயாகும் என நாம் இங்கு மிக சுருக்கமாக எடுத்துரைக்க விரும்புகிறோம். ஆகவேதான் இவ்வுலகில் மனிதன் ஆயிரக்கணக்கான பணிகளில் ஈடுபட்டிருப்பினும், அவனுக்கு உண்மையான மனமகிழ்ச்சி இறைவனை தவிர்த்து வேறெதிலும் கிடைப்பதில்லை. பெரிய செல்வந்தனாக திகழ்ந்தாலும், பெரும் பதவிகளை

வகித்தாலும், மிகப் பெரிய தொழில் அதிபராக இருந்தாலும், மாபெரும் மன்னனாக இருந்தாலும், மாபெரும் தத்துவஞானி என்று போற்றப்பட்டாலும் இறுதியில் இவ்வுலக பிணைப்புகளை விட்டு மிகப் பெரிய ஏக்கங்களுடன் அவன் செல்கிறான். மேலும் உலகி(ன் இச்சைகளி)ல் மூழ்கியிருந்ததால் அவனது உள்ளம் அவனை எப்போதும் குற்றம் சாட்டிக் கொண்டேயிருக்கும். அவனுடைய சதித் திட்டங்களிலும், தந்திரங்களிலும் தகாத வேலைகளிலும் அவனது மனசாட்சி ஒருபோதும் அவனுக்கு இணங்கிப் போவதில்லை. ஒரு பிராணி தனது முழு ஆற்றலையும் பயன்படுத்தி உச்சகட்டமாக எந்த உயர்வான பணிகளை செய்து முடித்துவிட்டு ஆற்றல் அற்றதாய் அது ஓரிடத்தில் நின்றுவிடும்போது அந்தப் பிராணியின் அந்த உச்சகட்டப் பணிகளே அதன் படைப்பின் நோக்கம் என்று பரிந்து கொள்ளப்படும். (விவாதிக்கப்படும்) இவ்விஷயத்தை ஓர் அறிவாளியால் இவ்வாறு புரிந்துகொள்ள முடியும். உதாரணமாக, ஒரு காளை மாட்டின் உச்சகட்டப் பணிகள் உழுவதும், தண்ணீர் பாய்ச்சுவதும், சுமை சுமப்பதும் ஆகும். இதை விட அதிகமாக அதன் ஆற்றல்களில் வேறெதுவும் நிரூபணமாகவில்லை. எனவே ஒரு காளை மாட்டுடைய வாழ்வின் நோக்கம் இந்த மூன்று (வேலைகளை செய்வது)தான் என்று புரிந்து கொள்ள முடிகின்றது. இதை விட அதிகமான வேறெந்த ஆற்றலும் அதில் காணக் கிடைப்பதில்லை. ஆனால் நாம் மனிதனிடத்தில் உயர்விலும் உயர்வான என்ன ஆற்றல் உள்ளது? என அவனது ஆற்றல்களை ஆராயும்போது, எல்லாம் வல்ல உயர்ந்த இறைவனின் தேடுதல் அவனிடத்தில் காணக் கிடைக்கின்றது. எந்த அளவுக்கென்றால் அவன் தனக்கென ஒன்றும் எஞ்சியிருக்காத அளவில் எல்லாம் இறைவனுக்கு அர்ப்பணமாகட்டும் என இறை நேசத்தில் தன்னை மாய்த்துக் கொள்ள விரும்புகிறான். அவன் உண்ணுதல், உறங்குதல், போன்ற உடல் சார்ந்த மற்ற விஷயங்களில் மற்ற படைப்பினங்களுடன் அதிகமான ஒப்புமையைக் கொண்டுள்ளான். சில காரியங்களில் சில விலங்கினங்கள் மனிதனையும் மிஞ்சி விடுகின்றன. இன்னும் கூறப்போனால் தேனீக்கள் எல்லா பூக்களிலிருந்தும் ரசத்தை எடுத்து எந்த

அளவுக்கு தூய தேனை தயாரித்து விடுகின்றது என்றால், இன்று வரை இந்த தொழில் நுட்பத்தில் மனிதனுக்கு வெற்றி கிடைக்கவில்லை. எனவே மனிதனின் மிக மேலான சிறப்பு இறைவனை அடைதல் என்பது தெளிவாகின்றது. அதாவது மனிதன் தனது இதயக் கதவுகளை இறைவனின் பக்கம் திறந்து வைப்பதே அவனது வாழ்வின் உண்மையான நோக்கமாகும்.

## மனித வாழ்வின் நோக்கங்களை அடைவதற்குரிய வழிகள்

இந்த நோக்கத்தை எவ்வாறு அடைவது? மேலும் எந்தெந்த வழிமுறைகள் மூலம் மனிதன் அதனை அடைய முடியும்? போன்ற கேள்விகளுக்குரிய பதிலை இனி விளக்கமாகப் பார்ப்போம். மனிதன் அந்த நோக்கத்தை அடைவதற்குரிய நிபந்தனை மற்றும் **முதலாவது வழி** என்னவென்றால், இறைவனை சரியான முறையில் அறிந்து, உண்மையான அந்த இறைவனிடத்தில் நம்பிக்கை கொள்ளுதல் வேண்டும். ஏனென்றால் மனிதன் முதல் அடியையே தவறாக எடுத்துவைத்தால், அதாவது ஏதேனும் ஒரு பறவையையோ மிருகத்தையோ, ஜடப்பொருளையோ அல்லது மனித குமாரனையோ இறைவன் என்று எண்ணி மனிதன் அமர்ந்து விட்டால் பின்னர் அத்தகைய மனிதன் அடுத்த காலடியை நேர்வழியில்தான் வைப்பான் என எவ்வாறு நம்ப முடியும்? உண்மையான இறைவன் தன்னை தேடுபவர்களுக்கு உதவி செய்கின்றான். ஆனால் உயிரற்ற ஒன்று உயிரில்லாத மற்றொன்றிற்கு எவ்வாறு உதவி செய்யும்? அல்லாஹ் கீழ்காணும் வசனத்தில் எவ்வளவு அழகிய உதாரணம் வாயிலாக இதனை எடுத்துரைக்கின்றான் என்பதை பாருங்கள்.

لَهٗ دَعْوَةُ الْحَقِّ ؕ وَالَّذِيْنَ يَدْعُوْنَ مِنْ دُوْنِهٖ لَا يَسْتَجِيْبُوْنَ لَهُمْ بِشَیْءٍ اِلَّا
كَبَاسِطِ كَفَّيْهِ اِلَى الْمَآءِ لِيَبْلُغَ فَاهُ وَمَا هُوَ بِبَالِغِهٖ ؕ وَمَا دُعَآءُ الْكٰفِرِيْنَ اِلَّا
فِیْ ضَلٰلٍ ۱۵

அதாவது எல்லாவற்றின் மீது ஆற்றல் கொண்ட உண்மையான அந்த இறைவனே பிரார்த்தனை செய்வதற்கு

தகுதியானவன் ஆவான். எவர்கள் அவனைத் தவிர்த்து பிறரிடம் பிரார்த்தனை செய்கிறார்களோ (பொய் தெய்வங்களாகிய) அவர்களால் இவர்களுக்கு எவ்வித பதிலும் அளிக்க முடியாது. அவர்களின் உதாரணம் என்னவென்றால், தண்ணீரை நோக்கி கையை விரித்து தண்ணீரே! நீ எனது வாயினுள் வந்து விடு என்று கூறுபவனுக்கு ஒப்பானதாகும். அவ்வாறு செய்வதனால், வாயினுள் தண்ணீர் வந்து விடுமா? ஒருபோதும் வந்துவிடாது. எவர்கள் உண்மையான இறைவனை அறியாத மக்களாக இருக்கின்றார்களோ, அவர்களின் அனைத்து பிரார்த்தனைகளும் வீணானவையாகும். (13:15)

## இரண்டாவது வழிமுறை

மனித வாழ்வின் நோக்கத்தை அடைவதற்குரிய இரண்டாவது வழிமுறை என்பது இறைவனின் முழுமையான அழகையும், பொலிவையும் அறிந்து கொள்வதாகும். ஏனென்றால் அழகு என்பது எப்படிப்பட்டதென்றால் இதயம் இயற்கையாகவே அதன் பக்கம் ஈர்க்கப்படுகிறது. அதனைக் காண்பதால் இயற்கையாகவே அதன் மீது ஒரு நேசம் உருவாகின்றது. ஆகவே இறைவனுடைய அழகு என்பது அவனுடைய ஏகத்துவத்திலும், மகத்துவத்திலும், மேன்மையிலும், பண்புகளிலும் அடங்கியுள்ளது.

இதைக் குறித்து திருக்குர்ஆன் இவ்வாறு கூறுகின்றது:

قُلْ هُوَ اللّٰهُ اَحَدٌ ۚ﴿۲﴾ اَللّٰهُ الصَّمَدُ ۚ﴿۳﴾

لَمْ يَلِدْ ۙ وَلَمْ يُوْلَدْ ۙ﴿۴﴾ وَلَمْ يَكُنْ لَّهٗ كُفُوًا اَحَدٌ ۧ﴿۵﴾

அதாவது இறைவன் தனது இருப்பிலும், பண்புகளிலும், மகத்துவத்திலும் தனித்தவன் ஆவான். அவனுக்கு யாதொரு இணையுமில்லை. (உலகில் உள்ள) அனைத்தும் அவனது உதவியை நாடி நிற்கின்றன. ஒவ்வொன்றும் அவனிடமிருந்தே தன் வாழ்வினைப் பெறுகின்றது. அவனே அனைத்துப் பொருட்களுக்கும் அருளின் உறைவிடமாக இருக்கின்றான். அவன் எவரிடமிருந்தும் அருளைப் பெறவில்லை. அவன் எவருடைய மகனுமில்லை. எவருடைய தந்தையுமில்லை. ஏனென்றால் அவனுக்கு நிகர் எதுவுமேயில்லை. (112:2-5)

பாருங்கள்! (இஸ்லாம் கூறும்) இறைவன் உள்ளத்தை கவரக்கூடியவன் ஆவான். அவன் மரணித்தவன் அல்லன். அவன் பலவீனமானவன் அல்லன். அவன் குறைந்த கருணையுள்ளவனும், குறைந்த ஆற்றல் படைத்தவனும் அல்லன் என்று திருக்குர்ஆன் மீண்டும் மீண்டும் இறைவனின் முழுச்சிறப்பையும் எடுத்துக்கூறி, அவனது மகத்துவங்களை வெளிப்படுத்திக்காட்டி மக்களுக்கு கவனமூட்டுகின்றது.

## மூன்றாவது வழிமுறை

இறைவனின் கருணைகளை அறிந்து கொள்ளுதல் ஆகும். இது உண்மையான இலக்கை அடைவதற்குத் தேவையான இரண்டாம் நிலை ஏணியாகும். ஏனென்றால் அழகு மற்றும் பேரருள் என்ற இரண்டு விஷயங்களே 'அன்பை' உருவாக்கும் தூண்டு சக்திகளாகும். இறைவனின் பேரருள் செய்யும் பண்புகளின் சாராம்சம் சூரா ஃபாத்திஹாவில் உள்ளது. அதில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

اَلۡحَمۡدُ لِلّٰهِ رَبِّ الۡعٰلَمِيۡنَۙ ﴿۲﴾

الرَّحۡمٰنِ الرَّحِيۡمِۙ ﴿۳﴾ مٰلِكِ يَوۡمِ الدِّيۡنِؕ ﴿۴﴾

இறைவன் தனது படைப்பினங்களை எவ்வித மூலக்கூறும் இன்றி படைக்கின்றான். பின்னர் எப்போதும் அவர்களை தனது படைத்து பரிபாலிக்கும் பண்பினால் பராமரித்து வருகின்றான். மேலும் அவனே அனைத்து விஷயங்களிலும் உதவியாளனாகவும் திகழ்கின்றான். மேலும் அவனது கருணைகளின் அனைத்து வகைகளும் தனது அடியார்களுக்காக வெளிப்படுகின்றது. அவனது கருணை கணக்கில் அடங்கா வகையில் எல்லையற்றதாகவும் திகழ்கின்றது. ஏனென்றால் இந்நிலைகளில்தான் கருணை மற்றும் பேரருள் முழுமையானதாக இருக்கும் என்பது வெளிப்படையான விஷயமாகும். எனவே இது போன்ற கருணைகளை இறைவன் மீண்டும் மீண்டும் எடுத்துரைக்கிறான். (1:2-4)

ஓரிடத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

وَاِنۡ تَعُدُّوۡا نِعۡمَتَ اللّٰهِ لَا تُحۡصُوۡهَا ؕ

அதாவது நீங்கள் இறைவனின் அருட்களை எண்ணத் தொடங்கினால், அவற்றை ஒருபோதும் உங்களால் எண்ண முடியாது. (14:35)

உண்மையான நோக்கத்தை அடைவதற்கான **நான்காவது வழிமுறையாக** இறைவன் பிரார்த்தனையைக் குறிப்பிடுகின்றான் : ادْعُوْنِيْٓ اَسْتَجِبْ لَكُمْ ۭ

அதாவது நீங்கள் பிரார்த்தனை செய்யுங்கள். நான் ஏற்றுக் கொள்வேன். (40:61) மனிதன் தனது சுய ஆற்றலினால் அல்லாமல் (இறைவனை) இறைவனது ஆற்றலி(ன் உதவியி)னால் அடைய வேண்டும் என்பதற்காக பிரார்த்தனை செய்வதன் பக்கம் மீண்டும் மீண்டும் இறைவன் கவனமூட்டியுள்ளான்.

(மனித வாழ்வின்) உண்மையான நோக்கத்தை அடைவதற்கு இறைவன் 'முஜாஹிதா' எனும் இறைவழியில் கடும் முயற்சி செய்வதை **ஐந்தாவது வழிமுறையாக** கூறுகின்றான். அதாவது இறைவழியில் தனது செல்வத்தை செலவிடுதலின் மூலமாகவும், தனது ஆற்றல்களை இறைவழியில் செலவிடுதலின் மூலமாகவும், தனது உயிரை இறைவழியில் தியாகம் செய்தலின் மூலமாகவும், தனது அறிவை இறைவழியில் செலவிடுதலின் மூலமாகவும் இறைவனைத் தேடுவதே அவ்வழிமுறையாகும்.

இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:–

وَّ جَاهِدُوْا بِاَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ فِيْ سَبِيْلِ اللّٰهِ ۭ

وَ مِمَّا رَزَقْنٰهُمْ يُنْفِقُوْنَ ۝ۙ

وَالَّذِيْنَ جَاهَدُوْا فِيْنَا لَنَهْدِيَنَّهُمْ سُبُلَنَا ۭ

அதாவது நீங்கள் உங்களின் செல்வங்களையும், உயிர்களையும், அனைத்து ஆற்றல்களையும் இறைவழியில் செலவிடுங்கள். (9:41) நாம் உங்களுக்கு வழங்கியுள்ள அறிவு, ஞானம், திறமை போன்ற அனைத்தையும் இறைவழியில் செலவிடுங்கள். (2:4) எவர்கள் நம்(மைச் சந்திக்க நமது) வழியில்

எல்லாவகையிலும் முயற்சி செய்கின்றார்களோ அவர்களுக்கு நாம் நம்முடைய வழிகளைக் காட்டித் தருவோம். (29:70)

(மனித வாழ்வின்) உண்மையான நோக்கத்தை அடைவதற்கான **ஆறாவது வழிமுறை** 'இஸ்திகாமத்' (எனும் உறுதிப்பாடு) ஆகும். அதாவது இறைவழியில் பலவீனமடையாமலும், தளர்ந்தும், சோர்ந்தும் போகமலும் சோதனைகளைக் கண்டு அஞ்சாமலும் நிலைநிற்க வேண்டும். அதுபற்றி அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான் :-

إِنَّ الَّذِينَ قَالُوا رَبُّنَا اللَّهُ ثُمَّ اسْتَقَامُوا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلَائِكَةُ أَلَّا تَخَافُوا وَلَا تَحْزَنُوا وَأَبْشِرُوا بِالْجَنَّةِ الَّتِي كُنتُمْ تُوعَدُونَ ﴿٣١﴾
نَحْنُ أَوْلِيَاؤُكُمْ فِي الْحَيَاةِ الدُّنْيَا وَفِي الْآخِرَةِ ۚ

அதாவது எவர்கள் தங்களது இறைவன் அல்லாஹ் என்று கூறி பொய் தெய்வங்களிலிருந்து விலகி உறுதிப்பாட்டை மேற்கொண்டார்களோ, அதாவது பலவித சோதனைகள் மற்றும் துன்பங்களின்போது உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்களோ, அவர்களிடத்தில் வானவர்கள் இறங்குவர். மேலும் நீங்கள் அஞ்ச வேண்டாம்; கவலையடையவும் வேண்டாம். நீங்கள் மகிழ்ச்சி கொள்ளுங்கள். உங்களுக்கு வாக்களிக்கப்பட்ட மகிழ்ச்சிக்கு நீங்களே வாரிசாவீர்கள். நாம் இவ்வுலக வாழ்விலும், மறுவுலகிலும் உங்களுக்கு நண்பராக இருக்கின்றோம் என்று வானவர்கள் அவர்களிடம் கூறுவர். (41:31,32)

இஸ்திகாமத் (எனும் உறுதிமிக்க நிலைநிற்றலின்) வாயிலாக, மனிதனுக்கு இறைதிருப்தி கிடைக்கின்றது என்று இவ்வசனங்களின் மூலம் இறைவன் கூறியுள்ளான். 'உறுதியாக நிலைநிற்றல்' என்பது கராமத்தை (அற்புதங்களை) காட்டிலும் மேலானவையாகும் என்பது உண்மை ஆகும். நாலாபுறமும் துன்பங்கள் சூழ்ந்திருப்பதை கண்டபிறகும், இறைவழியில் உயிரும், கண்ணியமும், மானமும் அபாயத்திலிருப்பதை உணர்ந்த போதும், ஆறுதல் நல்கக் கூட எவ்விஷயமும் இல்லாதபோதும் எந்த அளவுக்கென்றால் இறைவன் கூட சோதனைக்காக ஆறுதல் நல்கும் ஆன்மீகக் காட்சிகள் அல்லது

கனவு மற்றும் இறையறிவிப்பை நிறுத்திவிட்டாலும் கூட, அபாயகரமான அச்சத்தில் விட்டுவிட்ட போதிலும் அந்நேரத்தில் எவ்வித பலவீனத்தையும், வெளிப்படுத்தாமல், கோழைகளைப் போல புறமுதுகு காட்டிவிடாமல் நன்றியுணர்வு எனும் பண்பிற்கு எவ்வித களங்கமும் சேர்க்காமல், இறைநம்பிக்கையில் உறுதியாக நிலைநிற்பதே முழுமையான உறுதிப்பாடாகும். மேலும் உண்மையிலும், உறுதிபாட்டிலும் எவ்வித குறைவும் ஏற்படக் கூடாது. இழிவில் மகிழ்ச்சியடைய வேண்டும். மரணத்தில் திருப்தி கொள்ள வேண்டும். நண்பர் எவராவது உதவி செய்வார் என (எதிர்பார்த்து) காத்திருக்காமல் உறுதிப்பாட்டில் நிலைநிற்க வேண்டும். மிகவும் இக்கட்டான சந்தர்ப்பத்தில் இறைவன் புறமிருந்து நற்செய்திகளை வேண்டாமலும் இருக்க வேண்டும். மேலும் முற்றிலும் இயலாதவனாகவும், பலவீனமானவனாகவும் எவ்வித ஆறுதலும் கிடைக்கப் பெறாமல் ஆன பிறகும் கூட நேரான பாதையில் நிலைநிற்கவேண்டும். என்ன நிகழந்தாலும் (அதுபற்றி கவலை கொள்ளாமல்) கழுத்தைப் பலியிட) முன் வைத்துவிட வேண்டும். இறைநியதிக் கெதிராக மூச்சு கூட விடக்கூடாது. சோதனைக்குரிய உரிமைகளை முழுமையாக வழங்கிவிடாத வரை நிம்மதியின்மையையும், சலசலப்பையும் வெளிப்படுத்தக் கூடாது. இதுபோன்ற உறுதிப்பாட்டின் வாயிலாகவே, மனிதனுக்கு இறைவன் கிடைப்பான். இத்தகைய உறுதிப்பாட்டினை வெளிப்படுத்திய ரஸூல்மார்கள், நபிமார்கள், ஸித்தீகுகள் (என்ற உண்மையாளர்கள்) ஷஹீதுக(ளாகிய உயிர்த்தியாகி)ள் ஆகியோரின் மண்ணிலிருந்து இன்றும் நறுமணம் வீசிக் கொண்டிருக்கின்றது. இதன் பக்கமே அல்லாஹ் இப்பிரார்த்தனையில் கவனமூட்டுகின்றான்.

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ ۙ﴿٦﴾
صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

அதாவது எங்கள் இறைவா! எங்களுக்கு உறுதிப்பாட்டிற்குரிய வழியை காட்டுவாயாக. எந்த வழியின் மூலம் உனது அருட்களும், கருணைகளும் திருப்தியும் கிடைக்குமோ, (அந்த வழியை எங்களுக்கு காட்டித் தந்தருள்வாயாக.) (1:6,7)

இது குறித்து மற்றுமொரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

رَبَّنَآ اَفۡرِغۡ عَلَيۡنَا صَبۡرًا وَّتَوَفَّنَا مُسۡلِمِيۡنَ۝١٢٧

இறைவா! இந்த துன்பத்தில் நாங்கள் பொறுமை செய்யும் வகையில் எங்கள் உள்ளத்திற்கு மனநிம்மதியை இறக்குவாயாக. மேலும் எங்களை இஸ்லாத்தில் மரணிக்கும்படி செய்வாயாக. (7:127)

சோதனைகள் மற்றும் துன்பங்களின் வேளையில் இறைவன் தனது நேசத்திற்குரிய அடியார்களின் உள்ளத்தில் ஓர் ஒளியை இறக்குகின்றான். அதன் மூலம் அவர்கள் ஆற்றல் பெற்று மிகவும் பொறுமையுடன் துன்பங்களை எதிர்கொள்வர். மேலும் ஈமானிய (அதாவது நம்பிக்கையின்) இனிமையின் காரணமாக இறைவழியில் அவர்களின் கால்களில் மாட்டப்பட்டுள்ள அச்சங்கிலிகளை முத்தமிடுவார்கள். இறைபக்தியுள்ள ஒருவரின் மீது சோதனைகள் இறங்கும்போதும், மரணத்தின் அடையாளங்கள் வெளிப்படும்போதும் அவர் தம்மை இந்த சோதனையிலிருந்து காப்பாற்றும்படி தமது கண்ணியமிக்க இறைவனிடம் பலவந்தமாக சண்டையிட மாட்டார். ஏனென்றால் அத்தகையத் தருணத்தில் இரட்சிப்பு வேண்டி அடம்பிடித்து பிரார்த்தனை செய்வது இறைவனுடன் சண்டையிடுதல் ஆகும். இன்னும் கூறப்போனால் ஓர் உண்மையான இறைநேசர் என்பவர் துன்பங்கள் இறங்கும்போது இறைவழியில் மேலும் முன்னேறிச் செல்வார். மேலும் அது போன்ற தருணங்களில் தமது உயிரை துச்சமாக மதித்து, தனது உயிர் மீதான அன்பை கைவிட்டுவிட்டு தனது இறைவனின் விருப்பத்திற்கு முற்றிலும் அடிபணிந்து விடுவார். மேலும் அவனது திருப்தியைப் பெற விரும்புவார். இது தொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

وَمِنَ النَّاسِ مَنۡ يَّشۡرِىۡ نَفۡسَهُ ابۡتِغَآءَ مَرۡضَاتِ اللّٰهِ‌ؕ وَاللّٰهُ رَءُوۡفٌۢ بِالۡعِبَادِ۝٢٠٨

அதாவது இறைவனின் அன்பிற்குரிய அடியார் தனது உயிரை இறைவழியில் கொடுத்து விடுகின்றார். அதற்குப்

பகரமாக இறைதிருப்தியை பெற்றுக் கொள்கின்றார். அத்தகைய அடியார்களே இறைவனின் சிறப்பான கருணைக்குரியவர்கள் ஆவர். (2:208)

சுருக்கமாக, எத்தகைய உறுதிப்பாட்டின் மூலமாக இறைவனை அடைய முடியுமோ அதன் மையக் கருத்து மேலே கூறப்பட்டு விட்டது. எவர் புரிந்து கொள்ள விரும்புகிறாரோ அவர் புரிந்து கொள்ளட்டும்!

(மனித வாழ்வின்) உண்மை நோக்கத்தை அடைவதற்கான **ஏழாவது வழி** உண்மையாளர்களின் நட்பு, மற்றும் அவர்களின் முழுமையான முன்மாதிரியை காண்பதாகும்.

நபிமார்களின் (வருகையின்) தேவைகளில் ஒருதேவை என்னவென்றால், மனிதன் இயல்பாகவே முழுமையான முன்மாதிரியின் அவசியம் கொண்டவனாக இருக்கின்றான். முழுமையான முன்மாதிரி ஆர்வத்தையும் தைரியத்தையும் அதிகரிக்கச் செய்கின்றது. எவர் அழகிய முன்மாதிரியை பின்பற்றுவதில்லையோ அவர் சோம்பேறி ஆகிவிடுகிறார். மேலும் அவர் வழிதவறிவிடுகிறார்.

இதன்பக்கம் சுட்டிக் காட்டியவாறு இவ்வசனத்தில் அல்லாஹ் கூறுகின்றான்:

كُوْنُوْا مَعَ الصّٰدِقِيْنَ ﴿١١٩﴾

صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

அதாவது நீங்கள் உண்மையாளர்களின் நட்பை மேற்கொள்ளுங்கள். (9:119) மேலும் உங்களுக்கு முன்னர் எவர்கள்மீது அருள் செய்யப்பட்டதோ அவர்களின் வழிகளைக் கற்றுக் கொள்ளுங்கள். (1:7)

## எட்டாவது வழிமுறை

இறைவன் புறமிருந்து கிடைக்கும் தூய ஆன்மீகக் காட்சிகளும் தூய இறையறிவிப்புகளும், தூய கனவுகளும் ஆகும். இறைவனை நோக்கி செல்லக் கூடிய பயணத்தின் வழி என்பது மிகவும் கடினத்திலும் கடினமான வழியாகும். அதில் பலதரப்பட்ட துன்பங்களும், துயரங்களும் காத்திருக்கின்றன.

பழக்கமற்ற அந்த வழியில் மனிதன் வழிதவறி விடுவதற்கும் அல்லது நம்பிக்கையிழந்து தொடர்ந்து முன்னேறாமல் சோர்ந்து போய்விடுவதற்கும் வாய்ப்புள்ளது. எனவே அந்தப் பயணத்தில் தன் புறமிருந்து அவ்வப்போது அவனுக்கு ஆறுதல் வழங்கவும் அவனுக்கு உற்சாகமூட்டவும், அவனது மன தைரியத்தை வளர்த்து அவனுக்கு மேலும் ஆர்வமூட்டவும் இறைவனின் கருணை விரும்புகிறது. எனவே இறைவன் தனது உரையாடல் மற்றும் இறையறிவிப்பின் வாயிலாக அவர்களுக்கு ஆறுதல் வழங்கி, நான் உங்களுடன் இருக்கின்றேன் என்பதை வெளிப்படுத்துகிறான். அப்போது இறையடியார்களும் புத்துணர்வு பெற்று மிக வேகத்துடன் அந்தப் பயணத்தை செய்து முடிக்கின்றனர். இறைவழிப் பயணிகளிடம் இறைவனின் நடைமுறை இவ்வாறே வெளிப்படுகின்றது. இது தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :-

لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ ؕ

அதாவது அவர்களுக்கு இவ்வுலக வாழ்விலும், மறுமையிலும் (இறைவனிடமிருந்து) நற்செய்தி உள்ளது. (10:65)

இது போன்ற இன்னும் பல வழிமுறைகள் திருக்குர்ஆனில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன. ஆயினும், கட்டுரை நீண்டு விடக்கூடாது என்ற அச்சத்தின் காரணமாக எம்மால் அதனை எடுத்துரைக்க முடியாது என்பது வருத்தத்திற்குரியதாகும்.

# நான்காவது கேள்வி

## இம்மையிலும், மறுமையிலும் மார்க்கச் சட்டங்களின் செயல்பாடு என்ன?

இதற்கு முன்னர் நாம் எடுத்துரைத்த விஷயங்களே மேற்கண்ட கேள்வியின் பதிலாகும். இவ்வுலக வாழ்க்கையில் மனிதனின் உள்ளத்தில் இறைவனின் உண்மையான மற்றும் முழுமையான மார்க்கச் சட்டத்தின் செயல்பாடு இவ்வாறு அமைந்திருக்கின்றது. அதாவது காட்டுமிராண்டித்தனமான நிலையிலிருந்து மனிதனாகவும் பிறகு மனிதனை நல்லொழுக்கமிக்க மனிதனாகவும், பின்னர் நல்லொழுக்கம் கொண்ட மனிதனை இறை தொடர்புடையவராகவும் அது மாற்றுகின்றது. மேலும் உண்மையான மார்க்கச் சட்டத்தில் நிலைபெறும் மனிதனது வாழ்க்கையில் மார்க்கச் சட்டம் ஏற்படுத்தும் தாக்கம் என்னவென்றால், படிப்படியாக மனித இனத்தின் மீதான தனது உரிமைகளை மனிதன் கண்டறிந்து கொள்கிறான். மேலும் நீதி, பேருதவி, அனுதாபம் போன்ற குணங்களை தகுந்த தருணங்களில் பயன்படுத்துகின்றான். மேலும் இறைவன் அவருக்கு வழங்கிய அறிவு, இறைஞானம், செல்வம் மற்றும் பிற வசதி வாய்ப்புகள் போன்ற அருட்கொடைகளிலிலிருந்து, அனைத்து மக்களையும் அவர்களின் தகுதிக்கு ஏற்றவாறு பங்கு பெறச் செய்கின்றார். அவர் முழு மனித இனத்திற்கும் சூரியனைப் போன்று தமது முழு பிரகாசத்தை வழங்குவார். மேலும் சந்திரனைப் போன்று மிக உயர்ந்த இறைவனிடமிருந்து ஒளியைப் பெற்று அந்த ஒளியை பிறருக்கும் வழங்குவார். மேலும் அவர் பகலைப் போன்று, ஒளிமயமாகி மக்களுக்கு நன்மைக்கான வழிகளை காட்டித் தருவார். மேலும் அவர் இரவைப் போன்று ஒவ்வொரு பலவீனமானவர்களின் குறைகளை திரையிட்டு மறைத்து, சோர்ந்து போனவர்களுக்கு ஓய்வளிப்பார். மேலும் வானத்தைப் போன்று தேவையுடைய அனைவருக்கும் தனது நிழலின் கீழ் அடைக்கலம் வழங்குவார். மேலும் உரிய நேரங்களில் தனது அருளின் மழையைப் பொழிவார். மேலும் அவர் பூமியைப்

போன்று மிக மேலான பணிவுடன் அனைவரின் சுகத்திற்காகவும் தன்னை ஒரு தளமாக்கி தனது கருணை எனும் மடியில் அனைவருக்கும் இடமளிப்பார். மேலும் பல விதமான ஆன்மீகக் கனிகளை அவர்களுக்கு வழங்குவார். இதுவே முழுமையான மார்க்கச் சட்டம் ஏற்படுத்தும் தாக்கமாகும். அதாவது முழுமையான மார்க்கச் சட்டத்தில் நிலைநிற்கும் மனிதன், இறைவனுக்குரிய உரிமைகளையும், படைப்பினங்களுக்குரிய உரிமைகளையும் நிறைவேற்றுவதில் உச்சத்தை அடைந்து விடுவார். மேலும் இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொள்வார். மேலும் படைப்பினங்களின் உண்மையான சேவகனாக மாறி விடுவார். இதுவே மார்க்கச் சட்டத்தின் அடிப்படையில் இவ்வுலகில் மனிதனின் வாழ்க்கையில் ஏற்படும் தாக்கமாகும். ஆனால் இவ்வுலகில் இறைவனிடம் அவன் கொண்டிருந்த ஆன்மீகத் தொடர்பு இவ்வுலக வாழ்விற்குப் பிறகு மறுமை நாளில் மிகவும் வெளிப்படையாக அவனுக்கு காட்சி அளிக்கும். இறைநேசத்தின் விளைவாக படைப்பினங்களுக்கு அவர் ஆற்றிய தொண்டு, அவ்வாறு அவரை செய்யத் தூண்டிய அவரது நன்னம்பிக்கை மற்றும் நற்செயல்கள் புரிவதற்காக அவருக்கு இருந்த விருப்பம், சொர்க்கத்தின் மரங்களாகவும், ஆறுகளாகவும் அவருக்கு கண்கூடாகக் காட்சியளிக்கும். இது தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான்.

وَالشَّمْسِ وَضُحٰهَا ۝٢ وَالْقَمَرِ اِذَا تَلٰهَا ۝٣
وَالنَّهَارِ اِذَا جَلّٰهَا ۝٤ وَالَّيْلِ اِذَا يَغْشٰهَا ۝٥
وَالسَّمَآءِ وَمَا بَنٰهَا ۝٦ وَالْاَرْضِ وَمَا طَحٰهَا ۝٧
وَنَفْسٍ وَّمَا سَوّٰهَا ۝٨ فَاَلْهَمَهَا فُجُوْرَهَا وَتَقْوٰهَا ۝٩
قَدْ اَفْلَحَ مَنْ زَكّٰهَا ۝١٠ وَقَدْ خَابَ مَنْ دَسّٰهَا ۝١١
كَذَّبَتْ ثَمُوْدُ بِطَغْوٰهَآ ۝١٢ اِذِ انْۢبَعَثَ اَشْقٰهَا ۝١٣
فَقَالَ لَهُمْ رَسُوْلُ اللّٰهِ نَاقَةَ اللّٰهِ وَسُقْيٰهَا ۝١٤
فَكَذَّبُوْهُ فَعَقَرُوْهَا ۙ فَدَمْدَمَ عَلَيْهِمْ رَبُّهُمْ بِذَنْۢبِهِمْ فَسَوّٰهَا ۝١٥
وَلَا يَخَافُ عُقْبٰهَا ۝١٦

அதாவது சூரியனின் மீதும், அதன் ஒளியின் மீதும் ஆணையாக! சூரியனைப் பின் தொடர்ந்து, அதாவது சூரியனிடமிருந்து ஒளியைப் பெற்று சூரியனைப் போன்று பிறருக்கு ஒளி வழங்கும் சந்திரன் மீது ஆணையாக! மேலும் சூரியனின் ஒளியை முழுவதுமாக வெளிப்படுத்தி பாதைகளை தெளிவாக்கித் தரும் பகலின் மீது ஆணையாக! இருளைப் பரப்பித் தனது இருள் எனும் திரையில் அனைத்தையும் மறைத்துக் கொள்ளும் இரவின் மீது ஆணையாக! வானத்தின் மீதும், அது படைக்கப்பட்ட முக்கிய நோக்கத்தின் மீதும் ஆணையாக! பூமியின் மீதும், அது இவ்வாறான தரையாக விரித்து வைக்கப்பட்ட முக்கிய நோக்கத்தின் மீதும் ஆணையாக! மேலும் மனித ஆன்மா மீதும் மேலும் (மேற்கூறப்பட்ட விஷயங்களுடன்) மனிதனை சமமாக்கிய அந்த முழுமையான ஆன்மாவின் மீதும் ஆணையாக! அதாவது மேற்கண்ட படைப்புகளில் தனித்தனியாக காணப்படும் சிறப்புகள் அனைத்தையும் முழுமையான மனிதனின் ஆன்மா ஒருங்கிணைந்து தன்னகத்தே கொண்டிருக்கும். எவ்வாறு அந்த அனைத்து பொருட்களும் தனித்தனியே மனித இனத்திற்கு தொண்டாற்றுகின்றனவோ, ஒரு முழுமை பெற்ற மனிதன் அந்த தொண்டுகள் அனைத்தையும் நான் தற்போது குறிப்பிட்டது போன்று தானே செய்து விடுகிறான். தொடர்ந்து இறைவன் கூறுகின்றான். எவர் சூரியன், சந்திரன், பூமியைப் போன்று இறைவனிடத்தில் தன்னை மாய்த்துக் கொண்டு, இறைபடைப்பினங்களின் தொண்டனாக மாறி தனது ஆன்மாவை பரிசுத்தப்படுத்திக் கொள்வாரோ, அவர் இரட்சிப்பு பெற்று விட்டார். மேலும் மரணத்திலிருந்து விடுதலை பெற்று விட்டார்.

இங்கு ஒன்றை நினைவிற் கொள்ள வேண்டும். வாழ்க்கை என்பதன் பொருள் என்னவென்றால், மறுமையில் முழுமையான மனிதனுக்கு கிடைக்கவிருக்கும் நிரந்தர வாழ்க்கையாகும். அதாவது இறைசட்டத்தின் கனி என்பது இறைதரிசனம் என்ற உணவினால் மறுமையில் எப்போதும் நிலைபெற இருக்கும் நிரந்தர வாழ்க்கையாகும்.

மேலும் இறைவன் கூறுகின்றான்: எவன் தன் ஆன்மாவை மண்ணில் புதைத்துக் கொண்டானோ அவன் அழிந்து போகிறான். மேலும் வாழ்க்கையில் அவநம்பிக்கையடைகின்றான். அதாவது உயர்ந்த நிலைகளை அடைய அவனுக்கு ஆற்றல்கள் வழங்கப்பட்டிருந்தும், அவன் அந்த உயர் தகுதிகளை அடையவில்லை. மேலும் அசுத்தமான வாழ்க்கை நடத்தி திரும்பி விடுகிறான்.

அடுத்து ஓர் உதாரணம் மூலம் இறைவன் இதனை எடுத்துரைக்கின்றான். அதாவது ஆன்மாவை நாசம் செய்து கொண்டவருடைய நிலை ஸமூத் சமுதாயத்தின் சம்பவத்திற்கு ஒப்பானதாகும். அவர்கள் இறைவனின் ஒட்டகம் எனக் கூறப்பட்ட பெண் ஒட்டகத்தை காயப்படுத்தினர். மேலும் அதை தங்களது நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதிலிருந்தும் தடுத்தனர். ஆக உண்மையில் (தனது ஆன்மாவை நாசம் செய்து கொண்ட) அவன், இறைவனின் ஒட்டகத்தை காயப்படுத்தியவனாவான். மேலும் நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதிலிருந்தும் அதனை தடுத்து நிறுத்துகின்றான். இதிலிருந்து மனிதனின் ஆன்மா என்பது இறைவனின் ஒட்டகம் என்றும், அதில் இறைவன் பயணம் செய்கின்றான் என்றும் புலப்படுகின்றது. அதாவது மனிதனின் இதயம் இறைவெளிப்பாட்டிற்கான இடம் ஆகும். மேலும் அந்த ஒட்டகம் உயிர் வாழ்வதற்குரிய தண்ணீர் என்பது இறைநேசம் மற்றும் இறைஞானம் ஆகும். இறைவன் தொடர்ந்து கூறுகின்றான்.

ஸமூத் சமுதாயம் ஒட்டகத்தை காயப்படுத்தி அதனை அதன் நீரூற்றிலிருந்து தண்ணீர் அருந்துவதை விட்டு தடுத்து நிறுத்தியபோது அவர்கள் மீது தண்டனை இறங்கியது. அவர்களின் மரணத்திற்குப் பிறகு அவர்களின் பிள்ளைகள் மற்றும் விதவையான அவர்களின் மனைவியர்களின் நிலை என்னவாகும் என்பதைப் பற்றி இறைவன் கொஞ்சமும் பொருட்படுத்தவில்லை. எனவே அதே போன்று எந்த மனிதன் 'ஆன்மா' எனும் ஒட்டகத்தை காயப்படுத்துவானோ, அதனை முழுமையடைய வைப்பதற்கு அவன் விரும்ப மாட்டானோ, அதனை தண்ணீர் அருந்துவதிலிருந்து தடுத்து நிறுத்துவானோ அவனும் நாசத்திற்குள்ளாவான். (91 : 2 -16)

## அல்லாஹ் திருக்குர்ஆனில் பல்வேறு பொருட்களின்மீது ஆணையிட்டுக் கூறுவதுடைய தத்துவம்

இறைவன் சூரியன், சந்திரன் போன்றவற்றின் மீது ஆணையிட்டுக் கூறியிருப்பதில் மிகவும் நுட்பமான ஒரு ஞானம் உள்ளது என்பதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். அதை புரிந்து கொள்ளாததன் காரணத்தினால் இறைவனுக்கு ஆணையிட்டுக் கூறுவதற்கு என்ன அவசியம் ஏற்பட்டது? ஏன் அவன் படைப்பினங்கள் மீது ஆணையிட்டுக் கூற வேண்டும்? என்று நமது பெரும்பாலான எதிரிகள் ஆட்சேபிக்கின்றனர். அவர்கள் ஆன்மீக அறிவு இல்லாமல் (வெறும்) பௌதீகமாக இருப்பதால் அவர்களால் அதன் உண்மையான ஞானத்தைப் புரிந்து கொள்ள முடிவதில்லை. எனவே ஒன்றை தெளிவாக விளங்கிக் கொள்ள வேண்டும். சத்தியம் செய்வதன் உண்மையான நோக்கம் என்னவென்றால், சத்தியம் செய்பவர் தனது வாதத்தை நிரூபணம் செய்ய ஒரு சாட்சியை முன்னிலைப்படுத்த விரும்புகிறார். ஏனென்றால் எவரது வாதத்திற்கு வேறெந்த சாட்சியும் இருப்பதில்லையோ அவர் சாட்சிக்கு பகரமாக இறைவன் மீது ஆணையிடுகின்றார். ஏனென்றால் இறைவன் மறைவானவற்றை அறிந்தவனாக உள்ளான். ஒவ்வொரு வழக்கிலும் அவன் முதல் சாட்சியாக இருக்கின்றான். ஆக, இறைவன் மீது ஒருவன் சத்தியம் செய்த பிறகு, இறைவன் அமைதியாக இருந்து, அம்மனிதன் மீது தண்டனை ஏதும் இறங்கவில்லையென்றால் அம்மனிதனின் கூற்றிற்கு இறைவன் சாட்சியாளர்களைப் போன்று முத்திரை பதித்து விடுகிறான். இந்த அடிப்படையில்தான், இறைவன் மீது சத்தியம் செய்யும் ஒரு மனிதன் இறைவனை ஒரு சாட்சியாக எடுத்து வைக்கிறான். எனவே மனிதன் பிற படைப்பினங்கள் மீது சத்தியம் செய்தல் கூடாது. ஏனென்றால் படைப்பினங்களுக்கு மறைவானவற்றின் மீதான ஞானம் இருப்பதில்லை. மேலும் அவை பொய் சத்தியங்களுக்கு தண்டனையளிப்பதற்கும் ஆற்றல் பெற்றிருப்பதில்லை. ஆனால் மேற்கண்ட வசனங்களில் இறைவன் செய்திருக்கும் சத்தியங்கள் மனிதன் செய்யும் சத்தியங்களின் பொருளில் அல்ல. மாறாக அதில் இறைவனின்

எவ்வாறான நடைமுறை உள்ளது என்றால், இறைவனின் பணிகள் இரண்டு வகைப்படும். ஒன்று, எல்லாரும் புரிந்து கொள்ளத் தக்க மற்றும் எவருக்கும் கருத்து வேறுபாடு இல்லாத மிகவும் வெளிப்படையான பணிகள். மற்றொன்று உவமையான (மறைவான) பணிகள். அதனை புரிந்து கொள்வதில் உலகம் தவறிழைக்கும். மேலும் அதில் கருத்து வேறுபாடும் கொள்ளப்படும். எனவே, மக்கள் கண்டுணரும் வகையில் இறைவன் வெளிப்படையான பணிகளின் சாட்சிகளின் மூலம் உவமையான பணிகளை நிரூபணம் செய்ய நாடுகின்றான்.

ஆக சூரியன், சந்திரன், பகல், இரவு, வானம், பூமி ஆகியவற்றில் நாம் மேலே குறிப்பிட்ட அந்த சிறப்பான பண்புகள் உண்மையில் காணப்படுகின்றன என்பது மிக வெளிப்படையான மற்றும் உண்மையான விஷயமாகும். ஆனால் அதே பண்புகள் மனிதனின் ஆன்மாவிலும் இருப்பதை எல்லாரும் அறிந்திருப்பதில்லை. எனவே இறைவன் உவமையான பணி (குறித்த விஷயங்)களை விளக்குவதற்கு தனது வெளிப்படையான பணிகளை அத்தாட்சியாக எடுத்துரைக்கின்றான். அதாவது மனித ஆன்மாவில் காணப்படும் பண்புகளைப் பற்றி உங்களுக்கு ஐயம் இருக்குமென்றால் நீங்கள் சூரியன், சந்திரன் போன்ற பிற படைப்பினங்களில் வெளிப்படையாக தென்படும் அந்தப் பண்புகளை சீர்தூக்கிப் பாருங்கள் என்று இறைவன் கூறுகிறான். மனிதன் ஒரு சிறு உலகமாக இருக்கின்றான் என்பதையும், அவனது ஆன்மா முழு உலகத்தின் வடிவத்தை ஒருங்கிணையப் பெற்றுள்ள மையமாக அமைந்துள்ளது என்பதையும் நீங்கள் அறிவீர்கள். பிரபஞ்சத்தின் பெரிய, பெரிய கோளங்களும் மேற்குறிப்பிட்ட பண்புகளை பெற்றிருப்பதும், படைப்பினங்களுக்கு தொண்டாற்றி வருவதும் நிரூபிக்கப்பட்ட உண்மையாகும். அவ்வாறிருக்க, படைப்பினங்களில் மிகச் சிறந்த மற்றும் உன்னத படைப்பாகிய மனிதன் அந்த பண்புகளை பெறாதவனாகவும், அதிலிருந்து இழப்பிற்குரியவனாகவும் எவ்வாறு இருக்க முடியும்? மாறாக, சூரியனைப் போன்று மனிதனிடத்திலும் அறிவு மற்றும் ஞானம் என்ற ஒளி உள்ளது. அவன் அதனைக் கொண்டு முழு உலகத்தையும் ஒளிமயமாக்க முடியும்.

மேலும் சந்திரனைப் போன்று, மிக உன்னதமான உயர்ந்த இறைவனிடமிருந்து ஆன்மீகக் காட்சி மற்றும் இறையறிவிப்பு எனும் ஒளியைப் பெற்று இதுவரை முழுமையான மனித பண்புகளை பெறாத பிற மக்களுக்கு அந்த ஒளியை வழங்க முடியும். அவ்வாறிருக்க நபித்துவம் பொய் என்றும், அனைத்து இறைச் செய்திகளும், இறைச் சட்டங்களும், வேதங்களும் மனிதனின் தந்திர வேலைகள் மற்றும் தன்னலத்தால் விளைந்தவை என்றும் எவ்வாறு கூற முடியும்? மேலும் பகலின் வெளிச்சத்தால் எல்லா வழிகளும், அவற்றின் மேடு, பள்ளங்களும் தென்படுவதை நீங்கள் காண்கின்றீர்கள். அதே போன்று முழுமை பெற்ற மனிதன் ஆன்மீக ஒளி வீசும் பகல் பொழுதாகத் திகழ்கின்றார். அவரின் வருகையால் எல்லா வழிகளும் தெள்ளத் தெளிவாகி விடுகின்றன. அவர் உண்மையான வழி எங்குள்ளது என்பதை காட்டித் தருகின்றார். ஏனென்றால் அவரே உண்மை மற்றும் நேர்மையின் ஒளி வீசும் பகலாக திகழ்கின்றார். அதே போன்று இரவு, களைப்படைந்தோருக்கும், சோர்வடைந்தோருக்கும் (ஓய்வு பெற) அடைக்கலம் வழங்குகிறது என்பதையும் நீங்கள் காண்கின்றீர்கள். பகல் முழுவதும் உழைத்து ஓய்ந்துபோன உழைப்பாளிகள் இரவின் பரிவான மடியில் மகிழ்ச்சியுடன் தூங்குகின்றனர். மேலும் உழைப்பிலிருந்து ஓய்வு பெறுகின்றனர். மேலும் இரவானது அனைவருக்கும் மறைக்கும் திரையாகவும் திகழ்கிறது. அதேபோன்று இறைவனின் முழுமையான நல்லடியார்கள் உலகிற்கு அமைதி நல்கவே வருகின்றனர். இறைவனிடமிருந்து இல்ஹாம், வஹீ (இறையறிவிப்பு) பெறக்கூடியவர்கள் எல்லா அறிவாளிகளுக்கும் துன்பத்திலிருந்து விடுதலை வழங்குகின்றனர். அவர்களின் மூலமாக பெரிய, பெரிய இறைஞானங்களுக்கு எளிதாக தீர்வு கிடைத்து விடுகின்றது. அவ்வாறே இரவு குறைகளை திரையிடுவது போன்று வஹீ (எனும் இறையறிவிப்பு) மனித அறிவின் குறைகளை திரையிட்டு, அதன் தூய்மையற்ற வினைகளை உலகில் வெளிப்படாமல் பாதுகாத்து விடுகின்றது. ஏனென்றால் ஞானம் படைத்தவர்கள் வஹி எனும் இறையறிவிப்பின் ஒளியினைப் பெற்று தமது தவறுகளை தமக்குள்ளே சீர்செய்து

கொள்கிறார்கள். மேலும் இறைவனின் தூய இறையறிவிப்பின் அருளினால் தம் மீதான திரை விலகுவதிலிருந்து தம்மை பாதுகாத்து கொள்கிறார்கள். இதன் காரணமாகவே பிளோட்டோ செய்ததைப் போன்று, எந்தவோர் இஸ்லாமிய தத்துவஞானியும் சிலைகளுக்கு பறவையை பலியிடவில்லை. ஏனென்றால் பிளேட்டோ இறையறிவிப்பு எனும் ஒளியிலிருந்து இழப்பிற்குரியவராக இருந்தார். எனவே அவர் ஏமாற்றத்திற்குள்ளானார். மாபெரும் தத்துவஞானி என்றழைக்கப்பட்டபோதிலும், மிகவும் அருவருக்கத்தக்க, இந்த மடமையான செயலைச் செய்து விட்டார். ஆனால் நமது தலைவரும் எஜமானருமாகிய ஹஸ்ரத் ரஸுலுல்லாஹ் (ஸல்) அவர்களின் வழிகாட்டல்கள் இஸ்லாமிய தத்துவஞானிகளை மேற்கண்ட அசுத்தமான, மடமையான விஷயங்களிலிருந்து பாதுகாத்து விட்டன. இறையறிவிப்பு அறிவாளிகளின் குறைகளை இரவைப் போன்று திரையிட்டு மறைக்கின்றது என்பது நிரூபிக்கப்பட்டு விட்டதை நீங்கள் இப்போது உணர்ந்து கொள்ளலாம்.

இறைவனின் முழுமையான நல்லடியார்கள் வானத்தைப் போன்று ஆதரவற்ற அனைவரையும் தனது நிழலின் கீழ் வைத்துக் கொள்கின்றனர் என்பதையும் நீங்கள் அறிவீர்கள். குறிப்பாக தூய இறைவனின் நபிமார்கள் மற்றும் இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றவர்கள் வானத்தைப் போன்று கருணை மழையைப் பொழிகின்றனர். அதேபோல் பூமியின் பண்புகளையும் அவர்கள் தன்னகத்தே கொண்டிருக்கின்றனர். அவர்களின் புனித ஆன்மாவிலிருந்து, பலதரப்பட்ட உயர்ந்த ஞானங்கள் எனும் மரங்கள் வெளிப்படுகின்றன. அதன் நிழல்களிலிருந்தும், கனிகளிலிருந்தும், பூக்களிலிருந்தும் மக்கள் பயனடைகின்றனர்.

எனவே நமது கண்களுக்கு முன்னால் தென்படும் இந்த வெளிப்படையான இயற்கைச் சட்டங்களே மறைமுகமான (இறைச்)சட்டங்களுக்கு அத்தாட்சிகளாக உள்ளன. அந்த அத்தாட்சிகளையே இறைவன் மேற்கண்ட வசனங்களில் ஆணைகளின் வடிவில் எடுத்துரைத்துள்ளான். திருக்குர்ஆனின் வசனங்களாகிய இவை எத்தகைய நுட்பமிகு ஞானம்

நிறைந்தவை என்பதை சிந்தித்துப் பாருங்கள். இவை எழுதப்படிக்கத் தெரியாத, பாலைவனத்தில் வாழ்ந்த மனிதரின் நாவிலிருந்து வெளிப்பட்டது. அது இறைவேதமாக இல்லாதிருந்தால் சாதாரண அறிவு படைத்தவர்களும், அறிஞர்கள் என அழைக்கப்படுபவர்களும் அதன் ஆழிய ஞானத்தை புரிய முடியாமல் அதனை ஆட்சேபணைக்குரியதாக கண்டிருக்க மாட்டார்கள். பொதுவாக மனிதன் ஒரு (மகத்தான) விஷயத்தை தனது குறுகிய அறிவால் எவ்விதத்திலும் புரிய முடியவில்லையென்றால், பின்னர் அந்த ஞானம் மிக்க விஷயத்தை ஆட்சேபணைக்குரிய ஒன்றாக ஆக்கிவிடுகிறான். இதுவே நடைமுறையாக உள்ளது. அந்த ஆழிய ஞானம் சாதாரண அறிவிற்கு அப்பாற்பட்டதும் மிக உயர்ந்த தரத்தில் உள்ளதும் ஆகும் என்பதற்கு மனிதனுடைய ஆட்சேபணை சாட்சியாகத் திகழ்கின்றது. எனவேதான் அறிவாளிகள் மற்றும் அறிஞர்கள் என்றழைக்கப்பட்டபோதிலும் அவர்கள் ஆட்சேபிக்கின்றனர். ஆனால் தற்போது அந்த இரகசியம் வெளிப்படுத்தப்பட்டு விட்டது. இதன் பிறகு எந்தவோர் அறிஞரும், (இறைவன் திருக்குர்ஆனில் செய்துள்ள ஆணைகளைப் பற்றி) ஆட்சேபணை செய்ய மாட்டார். மாறாக அதிலிருந்து இன்பமடைவார்.

திருக்குர்ஆன் மற்றோர் இடத்திலும் இறையறிவிப்பு எனும் தொன்மையான நடைமுறையின் உண்மையை நிலைநாட்ட இயற்கைச் சட்டத்திலிருந்து சான்று காட்டி (அதன்மீது) ஆணையிட்டுக் கூறியுள்ளது. அந்த வசனம் இவ்வாறு இடம்பெற்றுள்ளது :

وَالسَّمَآءِ ذَاتِ الرَّجۡعِ ﴿۱۲﴾ وَالۡاَرۡضِ ذَاتِ الصَّدۡعِ ﴿۱۳﴾
اِنَّهٗ لَقَوۡلٌ فَصۡلٌ ﴿۱۴﴾ وَّمَا هُوَ بِالۡهَزۡلِ ﴿۱۵﴾

அதாவது, மழை பொழியும் வானத்தின் மீது ஆணையாக! மழையின் துணைகொண்டு பலதரப்பட்ட செடி, கொடிகளை தழைக்கச் செய்யும் பூமியின் மீது ஆணையாக! இந்த திருக்குர்ஆன் இறைவனின் வேதமாகும். இது அவனது இறையறிவிப்பு ஆகும். மேலும் இது பொய்யையும்,

உண்மையையும் வேறுபடுத்திக் காட்டக் கூடியதாகும். இந்த திருக்குர்ஆன் வீணானதோ பொருளற்றதோ கிடையாது. அதாவது பொருத்தமற்ற தருணத்தில் தோன்றவில்லை. மாறாக திருக்குர்ஆன் பருவ(க் காலத்தில் பெய்யும்) மழையைப் போன்று தோன்றியுள்ளது. (86:12-15)

இங்கு இறைவன் தனது இறையறிவிப்பான திருக்குர்ஆனின் உண்மைக்கு ஆதாரமாக, தெள்ளத் தெளிவான ஓர் இயற்கைச் சட்டத்தின் மீது ஆணையிட்டு எடுத்துரைக்கின்றான். அதாவது தேவையான காலகட்டத்தில் வானம் மழை பொழிகின்றது என்பது இயற்கைச் சட்டத்தில் எப்போதும் கண்டுணரப்பட்ட விஷயமாகும். மேலும் பூமியின் அனைத்து பசுமைக்கும் மூலாதாரம் வானம் பொழியும் மழையாகும். வானம் மழை பொழியவில்லையென்றால் பின்னர் படிப்படியாக கிணறுகள் வறண்டு போய்விடுகின்றது. எனவே பூமியின் நீர் ஆதாரம் என்பது வானம் பொழியும் மழையையே சார்ந்திருக்கின்றது. அதன் காரணமாகவே வானத்திலிருந்து மழை பொழியும்போது பூமியிலுள்ள கிணற்றின் நீர்மட்டமும் உயர்ந்து விடுகின்றது. ஏன் உயர்கின்றது? அதற்குக் காரணம் என்னவென்றால் வானத்து நீரானது, பூமியின் நீரை மேல் நோக்கி ஈர்க்கின்றது. இதே உறவுதான் இறையறிவிப்பிற்கும், மனித அறிவிற்குமிடையில் உள்ளது. வஹி எனும் இறையறிவிப்பு வானத்து நீராகும். மேலும் அறிவு என்பது நிலத்தடி நீராகும். இந்த நீரானது எப்போதும் இல்ஹாம் எனும் வானத்து நீரான இறையறிவிப்பினாலேயே பண்படுகிறது. வானத்து நீரான வஹி வருவது நின்று போனால் பின்னர் (மனித அறிவு எனும்) நிலத்தடி நீரும் படிப்படியாக வறண்டு போய் விடும். ஒரு நீண்ட காலமாக இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றவர் பூமியில் தோன்றவில்லையென்றால், நிலத்தடி நீர் வற்றிப்போய் கழிவு நீராக ஆகிவிடுவது போல் உலக அறிஞர்களின் அறிவு செயல் இழந்து, சீர்கெட்டுப் போய்விடுவது மேற்குறிப்பிட்ட கூற்றின் உண்மைக்கு போதுமான ஆதாரம் இல்லையா? இதனை விளங்கிக் கொள்வதற்கு நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தோன்றுவதற்கு முன்னுள்ள காலத்தின் கோலத்தை சீர்தூக்கிப் பார்ப்பதே போதுமானதாகும். ஹஸ்ரத் ஈஸா (அலை)

அவர்கள் தோன்றி 600 ஆண்டுகள் கழிந்திருந்தன. இந்த இடைப்பட்ட காலத்தில் இறையறிவிப்பு அருளப் பெற்ற எந்த நபரும் தோன்றவில்லை. எனவே முழு உலகமும் சீர்கெட்டுப் போயிருந்தது. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் காலத்திலும் அவர்கள் தோன்றுவதற்கு முன்னுள்ள காலத்திலும் முழு உலகிலும் குழப்பான எண்ணங்கள் பரவியிருந்தன என்பதை ஒவ்வொரு நாட்டின் வரலாறும் நமக்கு எடுத்துரைக்கின்றது. அவ்வாறு ஏன் நிகழ்ந்தது? அதற்கு என்ன காரணம்? இறை அறிவிப்பு ஒரு நீண்ட காலமாக நின்றுபோனதுதான் அதற்குக் காரணமாக இருந்தது. மேலும் அந்த காலகட்டத்தில் வானத்தின் ஆட்சி (மனித) அறிவின் கரங்களில் இருந்தது. அந்த குறைபாடான அறிவு என்னென்ன சீர் கேடுகளில் மக்களை தள்ளியது என்பதனை அறியாதவரும் (உலகில்) உண்டோ? இறை அறிவிப்பு எனும் வானத்து நீர் நீண்ட காலம் வரை பொழியாததால் பகுத்தறிவென்னும் நீரும் எவ்வாறு வறண்டு போனது என்பதை கண்டு கொள்ளுங்கள்.

எனவே மேற்குறிப்பிட்ட ஆணைகளில் இந்த இயற்கைச் சட்டத்தையே இறைவன் எடுத்துரைக்கின்றான். மேலும், பூமியின் அனைத்து பசுமைக்கும் மூலாதாரம் வானத்திலிருந்து பொழியும் மழை நீராகும். எனவே இறைவனின் இந்த வல்லமை மிக்க நிலையான இயற்கைச் சட்டத்தை நீங்கள் சிந்தித்துப் பாருங்கள் என இறைவன் கூறுகின்றான். ஆக, இறையறிவிப்பு எனும் மறைமுகமான இயற்கைச் சட்டத்தின் உண்மைக்கு (மேற்குறிப்பிட்ட) இந்த வெளிப்படையான இயற்கைச் சட்டங்கள் அத்தாட்சிகளாகத் திகழ்கின்றன. எனவே இந்த அத்தாட்சியிலிருந்து பயன் பெறுங்கள். வெறும் (உலக) அறிவையே தமது வழிகாட்டியாக ஆக்கிக் கொள்ளக் கூடாது. ஏனென்றால் (உலக அறிவு எனும்) அந்த (நிலத்தடி) நீர் 'வஹி' எனும் வானத்தின் நீரின்றி நிலைநிற்க முடியாது. வானத்தின் நீர் நேரடியாக கிணற்றில் விழுந்தாலும், விழாவிட்டாலும் அனைத்து கிணறுகளின் நீர்மட்டத்தையும் உயர்த்தி விடும் சிறப்புப் பண்பை இயற்கையாகவே அது கொண்டிருக்கின்றது. இதைப் போன்றே இறை அறிவிப்பை பெறக்கூடிய ஒருவர் உலகில் தோன்றும்போது அறிஞர்கள் அவரை பின்பற்றினாலும், பின்பற்றாவிட்டாலும்

அக்காலத்து (மக்களின்) அறிவில் முன் எப்போதும் இல்லாத ஒளியும் தூய்மையும் ஏற்படுகின்றது. மக்கள் அவர்களாகவே உண்மையைத் தேடத் துவங்குகின்றனர். அவர்களின் சிந்தனை ஆற்றலில் மறைமுகமான முறையில் ஒரு தூண்டுதல் நிகழ்கின்றது. இவ்வாறாக அந்த அனைத்து அறிவின் முன்னேற்றங்களுக்கும், மன எழுச்சிகளுக்கும் அந்த இறை அறிவிப்பை பெறக்கூடியவரின் பாதங்கள் (இவ்வுலகில்) பதிக்கப்பட்டதே காரணமாகும். குறிப்பாக (அறிவு எனும்) நிலத்தடி நீரின் மட்டம் உயர்த்தப்படுகின்றது. எனவே (உண்மையான) மார்க்கத் தேடுதலில் ஒவ்வொரு மனிதனும் ஈடுபடும் போது, (அறிவு எனும்) நிலத்தடி நீர் பெருகி மேலோங்குவதை காணும்போது, நீங்கள் விழித்தெழுங்கள். எச்சரிக்கையாகி விடுங்கள். மேலும் விண்ணிலிருந்து பருவ காலத்து (ஆன்மீக) மழை கடுமையாக பொழிந்துள்ளதென்றும், ஓர் (இறையடியாரின்) இதயத்தில் இறையறிவிப்பு எனும் (ஆன்மீக) மழை பொழிந்துள்ளது என்றும் நீங்கள் உறுதியாக அறிந்து கொள்ளுங்கள்.

# ஐந்தாவது கேள்வி

## இறைஞானம் பெறுவதற்குரிய வழிமுறைகள் யாவை?

இக்கேள்விக்குரிய பதிலை திருக்குர்ஆன் எந்த அளவிற்கு விரிவாக எடுத்துரைத்துள்ளதென்றால் அதனை இங்கு குறிப்பிடுவதற்கு நேரமேயில்லை. இருப்பினும் ஒரு சிலவற்றை மட்டும் சுருக்கமாக எடுத்துரைக்கின்றேன். திருக்குர்ஆன் அறிவினை 1. இல்முல் யகீன் – அனுமான அறிவு 2. அய்னுல் யகீன் – பார்வை அறிவு 3. ஹக்குல் யகீன் – அனுபவ அறிவு என மூன்று வகையாக வகைப்படுத்தியுள்ளதை அறிய வேண்டும். நாம் இதற்கு முன்பு, (இந்நூலில்) தகாஸுர் எனும் (102வது) அதிகாரத்தின் விளக்கவுரையில் அதனை விவரித்துள்ளோம். அதாவது ஒருபொருளைக் குறித்து நேரடியாக அறிந்து கொள்ளாமல் (மற்றொரு பொருளின்) துணைகொண்டு அனுமானித்து அறிந்து கொள்ளும் அறிவின் பெயரே இல்முல் யகீன் எனும் அனுமான அறிவாகும். உதாரணமாக புகையிருப்பதை கண்டு, (புகையிருக்கும் இடத்தில்) நெருப்பு இருக்கும் என சான்று பகர்கிறோம். நாம் நெருப்பினை காணாமலேயே, புகையை மட்டும் கண்டு, நெருப்பு அங்கிருப்பதாக நம்புகிறோம். இதுதான் இல்முல் யகீன் எனும் அனுமான அறிவாகும். மேலும் நாம் நெருப்பினை நேரில் கண்டு விட்டால், அது திருக்குர்ஆனின் 'அத்தகாஸுர்' அதிகாரம் கூறுகின்ற, அறிவின் இரண்டாவது படித்தரமாகிய அய்னுல் யகீன் எனும் பார்வை அறிவு ஆகும். பின்னர் அந்த நெருப்பில் நாம் நுழைந்து விட்டோம் என்றால் அது திருக்குர்ஆன் கூறுகின்ற அறிவின் படித்தரமாகிய ஹக்குல் யகீன் எனும் 'அனுபவ அறிவு' ஆகும். 'அத்தகாஸுர்' அதிகாரத்தின் விளக்கத்தை இங்கு மீண்டும் எழுத அவசியமில்லை. அந்த இடங்களை அறிந்து அந்த விளக்கத்தை வாசகர்கள் கண்டு கொள்ளலாம்.

முதல் வகை அறிவான இல்முல் யகீன் எனும் அனுமான அறிவின் வழிமுறை, பகுத்தறிதலும் கேட்டறிதலும் ஆகும். நரகவாசிகள் கூறியதை இறைவன் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான் :

وَقَالُوا لَوْ كُنَّا نَسْمَعُ أَوْ نَعْقِلُ مَا كُنَّا فِي أَصْحَابِ السَّعِيرِ ⑪

அதாவது நாங்கள் அறிவுடையோராக இருந்திருந்தால், மார்க்கம் மற்றும் அதன் கொள்கைகளை அறிவுப்பூர்வமான வழிமுறைகளில் ஆராய்ந்திருந்தால், அல்லது முழுமையான அறிவாளிகள் மற்றும் ஆராய்ச்சியாளர்களின் நூல்களையும், சொற்பொழிவுகளையும் கவனமாகக் கேட்டிருந்தால் இன்று நரகில் வீழ்ந்திருக்க மாட்டோம் என நரகவாசிகள் கூறுவார்கள். (67:11)

இந்த வசனம் திருக்குர்ஆனில் மற்றோரிடத்தில் வருகின்ற வசனத்திற்கு இணக்கமானதாகும். அதில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

لَا يُكَلِّفُ اللّٰهُ نَفْسًا اِلَّا وُسْعَهَا ؕ

அதாவது இறைவன் மனித ஆன்மாவை அதன் அறிவுத் தகுதிக்கு அதிகமாக எந்தவொரு விஷயத்தையும் ஏற்றுக் கொள்ளும்படி கட்டாயப்படுத்துவதில்லை. (2:287) எதனை புரிந்து கொள்வது மனித சக்திக்குட்பட்டதாக உள்ளதோ அந்த கொள்கைகளையே இறைவன் கூறுகின்றான். அவனுடைய எந்தக் கட்டளையும் மனித ஆற்றலுக்கு அப்பாற்பட்டது அல்ல. மனிதன் செவிகளின் மூலமாகவும் இல்முல் யகீன் எனும் அனுமான அறிவை பெற்றுக் கொள்ள முடியும் என்பதையும் மேற்கண்ட வசனம் சுட்டிக் காட்டுகின்றது. உதாரணமாக, நாம் இலண்டனை கண்டதில்லை. நேரில் கண்டவர்களிடமிருந்து அந்த நகரத்தைப் பற்றி கேள்விப்பட்டிருக்கின்றோம். அவ்வாறிருக்க, அவர்கள் அனைவரும் பொய் கூறியிருக்கலாம் என நாம் சந்தேகம் கொள்ள முடியுமா?

அல்லது உதாரணமாக, நாம் அவுரங்கஸேப் பேரரசரின் காலகட்டத்தை கண்டதில்லை. அவுரங்கஸேப் அவர்களின் முகத்தையும் பார்த்ததில்லை. ஆனால் அவுரங்கஸேப் முகலாயப் பேரரசர்களில் ஒருவர் என்பதில் நமக்கு ஐயம் ஏதுமுள்ளதா? இவ்வாறான அறிவு நமக்கு எப்படி கிடைத்தது? தொடர்ந்து நமக்கு கிடைத்த கேள்வி ஞானம் மூலமே அந்த அறிவு நமக்கு கிடைத்தது என்பதே பதிலாகும். எனவே செவிவழிச் செய்திகளும்

அனுமான அறிவைப் பெற வகை செய்கின்றது என்பதில் எவ்வித ஐயமுமில்லை. இறைதூதர்களுக்கு அருளப்பட்ட வேத நூல்கள் எவ்வித முரண்பாடும் அற்ற செவிவழிச் செய்திகளாக இருக்குமென்றால் அவையும் அனுமான அறிவினை பெறுவதற்குரிய ஒரு வழிமுறையாகும். ஆனால், இறைவேதமென்று கூறப்படும் ஒரு வேதத்திற்கு ஒன்றுக்கொன்று முரண்பட்ட ஐம்பது, அறுபது பிரதிகள் இருக்குமென்றால், (அந்த வேதத்தை ஏற்றுக் கொண்ட) ஒரு கூட்டத்தினர் அவற்றுள் இரண்டு அல்லது நான்கு (பிரதிகளை) மட்டும் இறைவேதமாகவும் மற்றவற்றை போலியாக தயாரிக்கப்பட்டவை என நம்பும்போதும், முழுமையான ஆராய்ச்சியின் விளைவாக தோன்றக் கூடிய நம்பகத்தன்மை அதில் இல்லையென்றாலும் உண்மையை ஆராய விரும்பும் நபருக்கு அது பயனற்றதாகும். அதன் விளைவு என்னவாகும் என்றால், அந்த வேதங்கள் அனைத்தும் தனது முரண்பாடுகளின் காரணமாக பயனற்றவையாகவும் நம்பகத்தன்மையற்றவையாகவும் கருதப்படும். அது போன்ற முரண்பாடுகளைக் கொண்ட கூற்றுகளை ஏதேனும் ஞானத்தைப் பெறுவதற்குரிய வழிமுறையாக ஆக்கி கொள்வது எவ்வகையிலும் ஆகுமானதல்ல. ஏனென்றால் அது உறுதியான ஞானத்தை வழங்காது முரண்பாடுகள் ஒருங்கிணைந்தவற்றில் உறுதியான ஞானத்தை காண்பது சாத்தியமற்ற விஷயமாகும்.

இங்கு நினைவிற்கொள்ள வேண்டிய விஷயம் ஒன்றும் உள்ளது. அது என்னவென்றால், திருக்குர்ஆன் வெறும் கேள்வி ஞானத்தின் எல்லைக்குட்பட்டதாக மட்டும் திகழவில்லை. ஏனென்றால் அதில் மனிதர்கள் புரியும் வகையில் அளப்பெறும் அறிவுப்பூர்வமான சான்றுகள் உள்ளன. திருக்குர்ஆன் எடுத்துரைக்கும் கொள்கைகள், போதனைகள் மற்றும் கட்டளைகள் அனைத்தும் எவ்வகையிலும் பலவந்தமானவையாகவோ அல்லது திணிக்கப்படுபவையாகவோ இல்லை. மாறாக திருக்குர்ஆன் இது பற்றி கூறுவதென்னவென்றால் இக்கொள்கைகள் அனைத்தும் மனித இயல்பில் ஏற்கனவே பதிந்துள்ளன. திருக்குர்ஆனுக்கு 'திக்ர்' (நினைவூட்டும் நூல்) எனப் பெயரிடப்பட்டுள்ளது. இதுபற்றி இறைவன் கூறுகின்றான்:

وَهٰذَا ذِكْرٌ مُّبٰرَكٌ

அதாவது, இந்த அருளுக்குரிய திருக்குர்ஆன் புதிதாக எதையும் கொண்டுவரவில்லை. மாறாக, மனிதனின் இயல்பிலும், இயற்கை எனும் புத்தகத்திலும் நிறைந்து கிடப்பவற்றை நினைவூட்டும் வேதமாக திருக்குர்ஆன் உள்ளது. (21:51)

பிறிதோரிடத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

لَآ اِكْرَاهَ فِى الدِّيْنِ

அதாவது, இந்த (இஸ்லாமிய) மார்க்கம் எந்தவொரு விஷயத்தையும் பலவந்தமாக ஏற்றுக்கொள்ளும்படி வற்புறுத்துவதில்லை. மாறாக ஒவ்வொரு கருத்திற்கும் சான்றுகளை எடுத்து வைக்கின்றது. (2:257)

அது மட்டுமல்லாமல் உள்ளங்களை ஒளிமயமாக்கும் ஓர் ஆன்மீக சிறப்புதன்மையும் திருக்குர்ஆனில் உள்ளது.

இது தொடர்பாகவே இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :-

شِفَآءٌ لِّمَا فِى الصُّدُوْرِ

அதாவது திருக்குர்ஆன் தனது சிறப்புத்தன்மையினால் எல்லா நோய்களையும் நீக்கி விடுகின்றது. (10:58) எனவே அதனை செவிவழி நூலாகக் கூற முடியாது. மாறாக மிக உயர்தரம் வாய்ந்த அறிவுப்பூர்வமான ஆதாரங்களை அது தன்னகத்தே கொண்டுள்ளது. மேலும் மிகவும் பிரகாசமான ஒளியொன்றும் அதில் காணப்படுகின்றது. அதைப் போன்று சரியான நடைமுறைகளினால் நிரூபணம் ஆன அறிவுவார்ந்த சான்றுகளும் சந்தேகமின்றி மனிதனுக்கு இல்முல் யகீன் எனும் அனுமான அறிவை வழங்குகின்றது. இதனையே கீழ்காணும் வசனங்களில் அல்லாஹ் சுட்டிக் காட்டுகின்றான். இறைவன் கூறுகின்றான்:-

اِنَّ فِىْ خَلْقِ السَّمٰوٰتِ وَالْاَرْضِ
وَاخْتِلَافِ الَّيْلِ وَالنَّهَارِ لَاٰيٰتٍ لِّاُولِى الْاَلْبَابِ ﴿١٩١﴾

الَّذِينَ يَذْكُرُونَ اللَّهَ قِيَامًا وَقُعُودًا وَعَلَىٰ جُنُوبِهِمْ وَيَتَفَكَّرُونَ فِي خَلْقِ السَّمَاوَاتِ وَالْأَرْضِ رَبَّنَا مَا خَلَقْتَ هَٰذَا بَاطِلًا سُبْحَانَكَ فَقِنَا عَذَابَ النَّارِ ١٩١

ஞானிகளும், அறிவுடையோர்களும் பூமி மற்றும் விண் கோள்களின் படைப்பை பற்றிச் சிந்தனை செய்யும் போதும் இரவு பகல் கூடுவதற்கும் குறைவதற்குமான காரண காரியங்களை ஆழமான பார்வையுடன் பார்க்கும் போதும் இந்த (முழு பிரபஞ்சத்தின்) அமைப்பில் அவர்களுக்கு இறையிருப்பிற்கான சான்றுகள் கிடைக்கும். எனவே அவர்கள் இன்னும் அதிக தெளிவு பெறுவதற்கு இறைவனிடம் உதவி தேடுவர். மேலும் நின்றுகொண்டும், அமர்ந்து கொண்டும் ஒருக்கணித்துப் படுத்துக் கொண்டும் இறைவனை நினைவு கூறுவர். அதன் மூலமாக அவர்களது அறிவு இன்னும் அதிகமாக தெளிவு பெறும். எனவே அவர்கள் (இவ்வாறு கிடைத்த) இந்த அறிவின் துணைகொண்டு விண்ணின் கோளங்களையும், பூமியின் அழகிய மற்றும் உயர்வான கட்டமைப்பையும் பற்றி சிந்தித்துப் பார்க்கும் போது, அந்த முழுமையான மற்றும் உறுதியான அமைப்பு ஒருபோதும் வீணானதாகவும், பொருளற்றதாகவும் படைக்கப்படவில்லையென்று மெய்மறந்து கூறுவர். இன்னும் கூறப்போனால் அவை, படைத்த இறைவனின் திருமுகத்தை காட்டித் தருவதாகவும் கூறுவர். எனவே உலகை படைத்த இறைவனின் இறைத்தன்மையை ஒப்புக் கொண்டவாறு இவ்வாறு பிரார்த்தனை செய்வர்: இறைவா! உனது இருப்பை நிராகரித்து பொருத்தமற்ற பண்புப் பெயர்களால் அழைக்கப்படுவதிலிருந்து நீ தூயவன். எனவே நீ எங்களை நரகின் நெருப்பிலிருந்து காப்பாற்றுவாயாக. அதாவது உன்னை நிராகரிப்பதுவே நரகமாகும். மேலும் எல்லா வகையான நிம்மதியும், இன்பமும் உன்னிடத்திலும் உன் இருப்பு பற்றிய ஞானத்திலும் அடங்கியிருக்கின்றது. எந்த நபர் உண்மையான பொருளில் உன்னை அடையாளம் காண்பதிலிருந்து இழப்பிற்குரியவராக இருந்தாரோ அவர் உண்மையில் இவ்வுலகிலேயே நரகில் இருப்பார். (3:191-192)

அதே போன்று, மனித மனசாட்சியும் ஞானத்தைப் பெறுவதற்குரிய ஒரு வழிமுறையாகும். அதற்கு இறைவேதத்தில் மனித இயல்பு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

فِطْرَتَ اللّٰهِ الَّتِىْ فَطَرَ النَّاسَ عَلَيْهَا ؕ

அதாவது இறைவனின் இயல்பில் மக்கள் படைக்கப்பட்டுள்ளார்கள்.(30:31) அந்த இயல்பின் வடிவமைப்பு என்பது என்னவென்றால், இறைவனை இணையற்ற ஏகனென்றும், எல்லாவற்றையும் படைத்தவன் என்றும், அவன் பிறப்பு மற்றும் இறப்பிற்கு அப்பாற்பட்டவன் எனவும் நம்புவதாகும். புகையைக் காண்பதால் கிடைக்கும் அறிவானது (அங்கு) நெருப்பு (உள்ளது) என்ற அறிவின் பக்கம் நம்மை அழைத்து செல்கிறது. அதுபோன்று மனசாட்சியின் அடிப்படையில் ஒரு பொருளைக் கொண்டு இன்னொரு பொருளின் அறிவு கிடைப்பதில்லை. ஆயினும் அதில் ஒரு வகையான நுட்பமிகு தூண்டுதலின் நிலை உள்ளது. அது என்னவென்றால் இறைவன் ஒவ்வொரு பொருளிலும் மறைமுகமான தன்மை ஒன்றை வைத்துள்ளான். அதனை வார்த்தைகளால் வருணிக்க முடியாது. ஆனால் அந்தப் பொருளின் மீது பார்வைபடும் போதும், அதனைப் பற்றி எண்ணும்போதும் தாமதமின்றி அந்த தன்மையின் பக்கம் (மனிதனின்) கவனம் சென்று விடுகிறது. எனவேதான் நாம் இல்முல் யகீன் எனும் அனுமான அறிவை பெறுவதற்குரிய ஒரு வழிமுறையாக மனித மனசாட்சி திகழ்கின்றது எனக் கூறுகின்றோம். சுருக்கமாக, நெருப்பிற்கு புகையுடன் இருக்கின்ற பிரிக்க இயலாத பிணைப்பைப் போன்று, அந்தத் தன்மை அப்பொருளுடன் இணைந்தே இருக்கின்றது. உதாரணமாக, நாம் இறைவனின் இருப்பைப் பற்றி அவன் எத்தகையவனாக இருக்க வேண்டும்? அவனும் நம்மைப் போன்று பிறந்திருக்க வேண்டுமா? நம்மைப் போன்று துன்பங்களுக்குள்ளாக வேண்டுமா? நம்மைப் போன்று

மரணிக்க வேண்டுமா? என்று சிந்திக்கத் தொடங்கினால், இதை எண்ணிய அடுத்த கணமே உள்ளம் துன்பப்படுகிறது. மனசாட்சி பதற்றமடைகின்றது. எந்த அளவுக்கு உணர்ச்சி பொங்கி எழுகின்றது என்றால் அந்த எண்ணத்தை நமது உள்ளம் ஒதுக்கித் தள்ளி விடுகின்றது. மேலும் எல்லா ஆற்றல்களுக்கும் உறைவிடமான அந்த இறைவன் எல்லா குறைபாடுகளிலிருந்தும் தூயவனாகவும், முழுமையானவனாகவும், வல்லமை மிக்கவனாகவும் இருக்க வேண்டுமென மனசாட்சி கூறுகின்றது. அதன் காரணமாக இறைவனைப் பற்றிய எண்ணம் உள்ளத்தில் தோன்றும் அடுத்த கணமே புகைக்கும், நெருப்பிற்கும் இடையிலான உறவைப் போன்று இன்னும் கூறப்போனால் அதை விட அதிகமாக இறைவனுக்கும், ஏகத்துவத்திற்குமிடையில் முழுமையான தொடர்பு இருப்பதை நம்மால் உணர முடிகிறது.

எனவே மனசாட்சி மூலமாக நாம் பெறுகின்ற அறிவு என்பது இல்முல் யகீன் எனும் அனுமான அறிவினைச் சார்ந்ததாகும். ஆனால் அதில் இன்னுமொரு படித்தரம் உள்ளது. அது அய்னுல் யகீன்-பார்வை அறிவு என்றழைக்கப்படுகிறது. அதாவது ஒரு பொருளுக்கும், அப்பொருளைப் பற்றிய அறிவிற்குமிடையே வேறெந்த ஊடகமும் இல்லாமல், அப்பொருளிலிருந்து நேரடியாக கிடைக்கும் அறிவு பார்வை அறிவாகும். உதாரணமாக, முகர்ந்துணரும் ஆற்றலால், ஒரு நறுமணத்தையோ அல்லது துர்நாற்றத்தையோ அறிந்து கொள்கிறோம். அல்லது நாம் ருசித்தறியும் ஆற்றலால், இனிப்பு சுவையையோ, அல்லது உப்புச் சுவையையோ அறிந்து கொள்கிறோம். அல்லது தொட்டுணரும் ஆற்றலால் நாம் வெப்பம் அல்லது குளிரை அறிந்து கொள்கிறோம். ஆக, இந்த அனைத்து அறிவுகளும் நமது அய்னுல் யகீன் எனும் அனுபவ அறிவைச் சார்ந்ததாகும். ஆனால் எவ்வித ஊடகமுமின்றி நாமே நேரடியாக இறையறிவிப்பை பெறும்போதுதான், இறைவனின் குரலை நமது காதுகளால் கேட்கும்போதுதான், இறைவனின் தெளிவான சரியான ஆன்மீக காட்சிகளை நமது கண்களால் காணும்போதுதான் மறுவுலக வாழ்வு பற்றிய நமது ஆன்மீக அய்னுல் யகீன் எனும் அனுபவ அறிவின் தரத்தை நாம் அடைய முடியும்.

சந்தேகத்திற்கு இடமின்றி நாம் முழுமையான இறைஞானத்தைப் பெறுவதற்கு நேரடியான இறையறிவிப்பின் தேவையுடையவர்களாக இருக்கின்றோம். அந்த முழுமையான இறைஞானத்தின் பசியையும், தாகத்தையும் நமது உள்ளத்தில் உணர்கிறோம். அந்த இறைஞானத்தை நாம் பெறுவதற்குரிய வழிவகைகளை முன்னரே இறைவன் செய்யாதிருந்தால், நம்மிடத்தில் அதற்கான தாகத்தையும், பசியையும் ஏன் ஏற்படுத்தியுள்ளான்? நாம் மறுவுலக செல்வங்களை பெறுவதற்கு ஒரேயொரு வாய்ப்பாக உள்ள இவ்வுலக வாழ்வில் அந்த உண்மையான, முழுமையான, வல்லமை படைத்த, உயிருள்ள இறைவன் மீது வெறும் புராணக் கதைகள் மற்றும் வரலாறுகளின் அடிப்படையில் மட்டும் ஈமான் எனும் நம்பிக்கை கொள்வதில் திருப்தி அடைந்து விடலாமா? அல்லது இன்னும் முழுமைபெறாத மற்றும் குறைபாடுடைய மனித அறிவு சார்ந்த நம்பிக்கைகளில் திருப்தி கொண்டு அமர்ந்து விடலாமா? இறைவனின் உண்மையான அன்பர்களின் உள்ளம் தமது அன்பிற்குரிய இறைவனின் குரலைக் கேட்டு இன்பமடைய வேண்டும் என்று விரும்பாதா? எவர்கள் இறைவனுக்காக முழு உலகையும் அர்ப்பணம் செய்தார்களோ, தனது உள்ளத்தையும், உயிரையும் இறைவனுக்காக தியாகம் செய்தார்களோ அவர்கள் அந்த உண்மைச் சூரியனின் முகத்தைக் காணாமல் வெறும் மங்கிய ஒளியிலேயே நின்று மரணித்து விடுவதில் திருப்தி கொள்வார்களா? உயிருள்ள இறைவன், 'அனல் மவ்ஜூத்' (நான் இருக்கிறேன்) என நேரடியாக அவனே கூறும்போதுதான் மனிதனுக்கு முழுமையான இறைஞானம் கிடைக்க முடியும் என்பது உண்மையல்லவா? முழு உலகிலும் உள்ள தத்துவஞானிகளால் (இறை இருப்பு குறித்து) எழுதப்பட்ட புத்தகங்களை ஒரு பக்கத்திலும், அனல் மவ்ஜூத் (நான் இருக்கிறேன்) என்ற இறைவனின் கூற்றை மற்றொரு பக்கத்திலும் வைத்தால் இறைவனின் அக்குரலுக்கெதிரில் மற்ற அனைத்து புத்தகங்களும் அற்பமானவையாகி விடும். தத்துவஞானிகள் என்று அழைக்கப்படுவோர் தாமே குருடர்களாக இருக்கும்போது அவர்கள் நமக்கு எதனை கற்றுத் தருவார்கள்?

சுருக்கமாக, இறைவன் உண்மையைத் தேடுபவர்களுக்கு முழுமையான இறைஞானத்தை வழங்க விருப்பம் கொண்டவனாக

உள்ளான் என்றால் பிறகு நிச்சயமாக அவன் தன்னுடன் உரையாடுவதற்கான வழிகளையும் திறந்திருக்கிறான். இது தொடர்பாக அல்லாஹ் திருமறையில் இவ்வாறு கூறுகின்றான்:-

اِهۡدِنَا الصِّرَاطَ الۡمُسۡتَقِيۡمَ ۙ‏ صِرَاطَ الَّذِيۡنَ اَنۡعَمۡتَ عَلَيۡهِمۡ ۙ

அதாவது இறைவா! உனது அருளைப் பெற்றவர்களின் நேரான, உறுதிப்பாடு மிக்க வழியை எங்களுக்கு காட்டித் தந்தருள்வாயாக. (1:6,7) இங்கு அருள் என்பதன் பொருள் இறையறிவிப்பு மற்றும் ஆன்மீகக் காட்சிகள் போன்ற இறைஞானங்களாகும். இவை (இறைவனிடமிருந்து) மனிதனுக்கு நேரடியாகக் கிடைக்கின்றன. அதைப் போன்றே பிறிதோரிடத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

اِنَّ الَّذِيۡنَ قَالُوۡا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسۡتَقَامُوۡا تَتَنَزَّلُ عَلَيۡهِمُ الۡمَلٰٓـئِكَةُ اَلَّا تَخَافُوۡا وَلَا تَحۡزَنُوۡا وَاَبۡشِرُوۡا بِالۡجَـنَّةِ الَّتِىۡ كُنۡتُمۡ تُوۡعَدُوۡنَ‏ ﴿۳۱﴾

அதாவது எவர்கள் இறைவன் மீது நம்பிக்கை கொண்டு அதில் முழுமையாக நிலைத்து நிற்பார்களோ, அவர்களிடத்தில் இறைவனின் வானவர்கள் இறங்குகின்றனர். மேலும் நீங்கள் கொஞ்சமும் அச்சப்படவும், துன்பப்படவும் வேண்டாம் என்ற இறையறிவிப்பை அவர்களிடத்தில் கூறுவர். உங்களுக்காக வாக்களிக்கப்பட்ட சுவர்க்கம் உள்ளது என்றும் கூறுவர். (41:31) ஆக, இறைவனின் நல்லடியார்கள் துன்பம், மற்றும் அச்சத்திற்குரிய தருணத்தில் இறைவனிடமிருந்து இறையறிவிப்பைப் பெறுவர். மேலும் வானவர்கள் அவர்களிடம் இறங்கி ஆறுதல் நல்குவர் என்று மேற்கண்ட வசனத்திலும் இறைவன் தெளிவாகக் கூறியுள்ளான். மீண்டும் மற்றுமொரு வசனத்தில் இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

لَهُمُ الۡبُشۡرٰى فِى الۡحَيٰوةِ الدُّنۡيَا وَفِى الۡاٰخِرَةِ ‌ؕ

அதாவது இறையன்பர்களுக்கு, இறையறிவிப்பு மற்றும் இறைவனுடனான உரையாடல் போன்றவற்றின் மூலமாக இவ்வுலகிலும் நற்செய்தி கிடைக்கின்றது. மேலும் மறுவுலகிலும் கிடைக்கும். (10:65)

## இல்ஹாம் (எனும் 'இறையறிவிப்பு') என்பதன் பொருள் என்ன?

இல்ஹாம் என்ற சொல்லின் பொருள், உள்ளத்தில் புதிதாக உதிக்கும் ஓர் எண்ணமோ, சிந்தனையோ கிடையாது என்பதை இங்கு நினைவிற் கொள்ள வேண்டும். உதாரணமாக, ஒரு கவிஞர் கவிதை எழுத முயற்சிக்கும்போது ஒரு வரி எழுதி விட்டு அடுத்த வரியை எழுதுவதற்கு சிந்தித்து கொண்டிருக்கும்போது, அடுத்த வரி அவரது உள்ளத்தில் உதித்து விடுகின்றது. ஆக, இவ்வாறு உள்ளத்தில் உதிப்பது இல்ஹாம் எனும் இறையறிவிப்பு ஆகாது. இது இறைவனின் இயற்கைச் சட்டத்திற்கேற்ப மனிதனின் (உள்ளத்தில் தோன்றும்) சிந்தனை மற்றும் எண்ணத்தின் ஒரு விளைவாகும். எந்தவொரு மனிதனும் நல்ல விஷயங்களை சிந்தித்தாலும், அல்லது கெட்ட விஷயங்களை சிந்தித்தாலும் அவனது தேடுதலுக்கேற்ற விஷயம் நிச்சயம் அவனது உள்ளத்தில் உதிக்கின்றது. உதாரணமாக, ஒரு மனிதர் நல்லடியாரும், நேர்மையாளரும் ஆவார். அவர் உண்மையை ஆதரித்து சில கவிதை வரிகளை எழுதுகின்றார். மற்றொரு மனிதன் தீய மற்றும் கெட்ட குணம் படைத்தவன் ஆவான். அவன் தனது கவிதைகளில் பொய்யை ஆதரித்து நல்லடியார்களை ஏசிப் பேசி கவிதை எழுதுகின்றான் என்றால், நிச்சயமாக இருவரும் கொஞ்சமாவது கவிதை எழுதி விடுவர். நல்லடியார்களின் அந்த எதிரி பொய்க்கு ஆதரவாக, தமது நிலையான பயிற்சியின் காரணமாக அவர் எழுதிய கவிதைகள் சிறந்த கவிதைகளாக அமைந்து விட்டாலும் அதில் ஆச்சரியம் கொள்வதற்கில்லை.

எனவே வெறும் உள்ளத்தில் உதிப்பதெல்லாம் இறையறிவிப்பு எனக் கருதினால், பின்னர் நன்மைக்கும், நல்லடியாருக்கும் விரோதியான எப்போதும் உண்மையை எதிர்ப்பதற்கு எழுதுகோலை எடுத்து பொய்யையும், புரட்டையும் பயன்படுத்தும் தீய கவிஞனும் 'முல்ஹம்' அதாவது இறையறிவிப்பு கிடைக்கப் பெற்ற மனிதன் என்றழைக்கப்படுவான். உலகில் உள்ளங்களை கவரும் வகையிலான நாவல்கள் எழுதப்படுகின்றன. இது போன்ற

முழுக்க முழுக்க பொய்யான தொடர் கட்டுரைகளாக மக்களின் உள்ளங்களில் உதிப்பவற்றை இல்ஹாம் எனும் இறையறிவிப்பு என்று நாம் கூற முடியுமா? மாறாக, உள்ளத்தில் உதிக்கின்ற சில விஷயங்களே இறையறிவிப்பு எனக் கருதினால் ஒரு திருடன் கூட இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றவன் என அழைக்கப்படுவான். ஏனென்றால் அவன் சில நேரத்தில் சிந்தித்து துளையிட்டு திருடுவதற்கான மிகச் சிறந்த வழியை கண்டுபிடித்து விடுகிறான். மேலும் கொள்ளையடிப்பதற்கும், அநீதியான கொலைகளை செய்வதற்கும் அவனது உள்ளத்தில் மிகச் சிறந்த திட்டங்கள் உதித்து விடுகின்றன. இந்த தூய்மையற்ற அனைத்து வழிகளும் இறையறிவிப்பு எனப் பெயரிடப்படுவதற்கு தகுதி வாய்ந்தவையா? ஒருபோதும் இல்லை. மாறாக, தூய உரையாடல்கள் மூலமாக, தானே உள்ளங்களுக்கு ஆறுதல் வழங்கி அறியாதவர்களுக்கு ஆன்மீக அறிவின் மூலமாக இறைஞானத்தை வழங்கும் அந்த உண்மையான இறைவனை கண்டுணராத மக்களே இறையறிவிப்பைப் பற்றி இவ்வாறான தவறான எண்ணம் கொண்டுள்ளனர்.

## ‘இல்ஹாம்’ (எனும் இறையறிவிப்பு) என்றால் என்ன?

இறையறிவிப்பு என்பது என்னவென்றால், தூயவனும் வல்லமை மிக்கவனுமாகிய இறைவன் தான் தேர்ந்தெடுத்த நல்லடியார் ஒருவருடன் அல்லது தான் தேர்ந்தெடுக்க நாடும் நல்லடியாருடன் நிகழ்த்தும் உயிருள்ள மற்றும் வல்லமை மிக்க உரையாடல் ஆகும். எனவே அந்த உரையாடல் முழுமையானதாகவும், திருப்திகரமாகவும் நீடித்து அதில் எவ்வித தீய எண்ணங்களின் இருள் சூழாமலும், முழுமையற்றதாக இல்லாமலும் பொருளற்ற சொற்களாக இல்லாமலும், மகிழ்ச்சியும், இறைஞானமும், கம்பீரமும் நிறைந்ததாக அந்த வசனங்கள் இருந்தால் அது இறைவனின் வார்த்தைகள் எனக் கூறப்படும். அதன் மூலமாக இறைவன் தனது அடியார்களுக்கு ஆறுதல் வழங்கி தனது அடியாரிடம் தனது வெளிப்பாட்டை நிகழ்த்துகின்றான். ஆயினும் சில நேரத்தில் இறையறிவிப்பு சோதனைக்காகவும் வழங்கப்படுகிறது. அது முழுமையற்ற–தாகவும், அருள் நிரம்பாத ஒன்றாகவும் இருக்கிறது. அது போன்ற நிலையில் இறையடியார் இறையறிவிப்பின் ஒரு சிறு பகுதியை

சுவைத்துவிட்டு தனது நிலையையும் கூற்றையும் இறையறிவிப்பை பெறுகின்ற உண்மையான நல்லடியார்களைப் போன்று ஆக்கிக் கொள்கிறாரா? அல்லது தடுமாற்றத்திற்குள்ளாகிறாரா? என இறைவன் அவரை ஆரம்ப கட்டத்தில் சோதித்துப் பார்க்கின்றான். அவர் சித்தீக்குகள் எனும் உண்மையாளர்களைப் போன்று உண்மையான நேரிய வழியை கைகொள்ளவில்லையென்றால் அந்த அருளின் முழுமைத் தன்மையிலிருந்து இழப்பிற்குரியவராகி விடுவார். மேலும் வீணான தற்புகழ்ச்சி மட்டுமே அவரிடம் எஞ்சியிருக்கும். மற்றும் கோடிக்கணக்கான நல்லடியார்களுக்கு இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றுள்ளது. ஆனால் இறைவனின் முன்னிலையில் அவர்கள் அனைவரும் ஒரே அந்தஸ்தைக் கொண்டவர்களாக திகழவில்லை. இன்னும் கூறப்போனால் முதல் அந்தஸ்திலுள்ள மிக தெளிவான இறையறிவிப்பை பெறக்கூடிய இறைவனின் தூய தூதர்களும் கூட அந்தஸ்தில் சமமானவர்களாக இல்லை. இது தொடர்பாக இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

تِلْكَ الرُّسُلُ فَضَّلْنَا بَعْضَهُمْ عَلٰى بَعْضٍ

அதாவது நபிமார்களில் சிலருக்கு சிலரை விட மேன்மை உள்ளது. (2:254) இத்திருவசனத்திலிருந்து, இல்ஹாம் எனும் இறையறிவிப்பு என்பது ஓர் இறையருள் ஆகும் என்று தெளிவாகின்றது. மேலும் உயர்வு, தாழ்வு என்பதுடன் அதற்கு எந்த சம்பந்தமும் கிடையாது. மேன்மை என்பது ஒருவரின் உண்மை, கலப்படமற்ற பற்று மற்றும் நன்றியுணர்வு ஆகியவற்றின் அளவை சார்ந்ததாக உள்ளது. அதை இறைவனே நன்கறிவான். இறைவன் மட்டுமே அறியக்கூடிய இக்குணநலன்களுக்கேற்ப மேன்மை வழங்கப்படுகிறது. அருளுக்குரிய எல்லா அம்சங்களும் பொருந்திய இறையறிவிப்பு அவருக்கு கிடைக்கின்றது என்றால் அது கூட அந்த குணநலன்களின் ஒரு பலனேயாகும். இறையடியார் ஒருவர் இறைவனிடம் கேள்வி கேட்கும் வகையிலும் அதற்கு இறைவன் பதிலளிக்கும் வகையிலும் இறையறிவிப்பு கிடைக்கப் பெறலாம். இதில் ஐயம் கொள்ள ஒன்றுமில்லை. அதே போன்று ஒரு வரிசைக்கிரமத்தில் கேள்வி பதிலாகவும், இறைமேன்மையும்

இறை ஒளியும் கொண்டதாகவும் மறைமுகமான அறிவோ அல்லது உண்மையான இறைஞானமோ கொண்டதாகவும் அமைந்தால் அது இறையறிவிப்பாகும். ஒருவன் தனது நண்பனை சந்தித்து உரையாடுவதைப் போன்று இறைவனுக்கும் அவனது அடியானுக்கும் இடையில் உரையாடல் நடத்தல் வேண்டும். இறையறிவிப்பில் இது அவசியமாகும்.

ஓர் இறையடியான் ஏதேனும் ஒன்றை இறைவனிடத்தில் வேண்டினால் மனித மூளையின் சிந்தனை மற்றும் ஆராய்ச்சியின் எந்த பங்கும் இல்லாத இனிமையான சொல்லையும் வளமிக்க கூற்று ஒன்றையும் ஒன்றை இறைவன் புறமிருந்து பதிலாக அடியார் செவியுற்றால் அந்த உரையாடல் அந்த அடியாருக்கு இறையருளாக அமைந்தால் அது இறையறிவிப்பாகும். அவ்வாறு இறையறிவிப்பு கிடைக்கப் பெற்ற அடியார் இறைவனின் முன்னிலையில் மிகவும் அன்பிற்குரியவராவார். ஆனால் அத்தகைய உன்னத அந்தஸ்து, அதாவது இறையறிவிப்பு இறையருளாகவும், உயிருள்ள தூய இறையறிவிப்பின் தொடர் இறைவன் புறமிருந்து தெளிவாகவும், பரிசுத்தத்துடனும் தொடர்ந்து கிடைத்துக் கொண்டிருப்பது எல்லாருக்கும் வாய்க்கக் கூடியதன்று. எவர்கள் நன்னம்பிக்கையிலும், தூய்மையிலும் நற்செயல்களிலும் முன்னேற்றம் அடைபவராக திகழ்வாரோ, அவர்களைத் தவிர வேறெவருக்கும் இறையறிவிப்பு கிடைக்காது. உண்மையான மற்றும் தூய இறையறிவிப்புகள் ஏக இறைவனின் மாபெரும் அற்புதங்களை வெளிப்படுத்துகின்றன. பல வேளைகளில் மிகவும் பிரகாசமான ஓர் ஒளி தோன்றுகிறது. மேலும் அதனுடன் கம்பீரமிக்க ஒளிமயமான இறையறிவிப்பும் வெளிப்படுகின்றது. இறையறிவிப்பு கிடைக்கப் பெற்றவர் பூமியையும், வானத்தையும் படைத்த இறைவனுடன் உரையாடுகின்றார். இதை விட மேலான ஒன்று ஏதாவது நிகழ முடியுமா என்ன? இறைவனுடன் பேசுவதே இவ்வுலகில் இறைதரிசனம் ஆகும். ஆனால் ஒருவருடைய நாவிலிருந்து பொருத்தமற்ற சொற்களோ, வாக்கியங்களோ, அல்லது கவிதையோ வெளிவருகின்றதென்றால், எவ்வித உரையாடலும் நடைபெறவில்லை என்றால் அது மேலே எடுத்துக்கூறிய நல்லடியாரின் நிலையில் அடங்காது. மாறாக

(அதுபோன்ற நிலைக்கு ஆளான) அம்மனிதன் இறைவனின் சோதனைக்குள்ளானவன் ஆவான். ஏனென்றால் சில வேளையில் சில சொற்களையோ அல்லது வாக்கியங்களையோ உள்ளத்தில் உதிக்கச் செய்தும், நாவில் உச்சரிக்கச் செய்தும் இறைவன் சோம்பல் கொண்ட, கவனமற்ற அடியார்களை சோதித்துப் பார்க்கிறான். அப்போது அந்த மனிதன் அந்த சொற்கள் இறைவனிடமிருந்து வந்ததா அல்லது சாத்தானிடமிருந்து வந்ததா என்று தெரியாமல் குருடனைப் போன்று ஆகி விடுகிறான். அது போன்ற (சொற்கள் கூறும்) நிலையில் பாவமன்னிப்புக் கோருவது மிக அவசியமாகும். ஆனால் ஒரு நல்லடியாருக்கு எவ்வித திரையுமின்றி இறை உரையாடல் துவங்கி விடுமென்றால், ஒளிமிக்க இன்பமயமான மற்றும் பொருளும், நுட்பமான ஞானமும் நிறைந்த வசனம் முழுமையான கம்பீரத்துடன் இறையறிவிப்பாக அவர் கேட்கத் துவங்கினால் இறைவனுக்கும், அவருக்குமிடையில் கண்விழித்திருக்கும் நிலையிலேயே குறைந்தது பத்து முறையாவது வேண்டுதலும், அதற்கு இறைவனிடமிருந்து பதிலும் கிடைத்திருந்தால் அதாவது, அடியான் இறைவனிடம் வேண்டி, இறைவன் அதற்கு பதில் அளித்திருக்க வேண்டும். பின்னர் அத்தருணத்தில் விழித்திருக்கும் நிலையில், அடியான் வேறு ஏதேனும் வேண்டுதல் செய்ய வேண்டும். இறைவன் அதற்கும் பதில் அளித்திருக்க வேண்டும். அடுத்து மீண்டும் அடியான் புறமிருந்து தாழ்மை மிக்க வேண்டுதல் செய்யப்பட்டு அதற்கும் இறைவன் பதில் அளித்திருக்க வேண்டும். இவ்வாறு பத்து முறையாவது இறைவனுக்கும், அடியாருக்குமிடையில் உரையாடல் நிகழ்ந்திருக்க வேண்டும். அந்த உரையாடல்களில் பெரும்பாலும் இறைவன் அவரது பிரார்த்தனைகளை ஒப்புக் கொண்டிருக்க வேண்டும். மேலும் சிறந்த ஞானம் நிறைந்த கருத்துகள் அவர் கிடைக்கப் பெற்று, வருங்காலங்களில் நிகழவிருக்கும் சம்பவங்களைப் பற்றிய செய்திகளையும் அவர் கிடைக்கப் பெற்றிருக்க வேண்டும். இவ்வாறு ஒரு இறையடியாருடன் இறைவன் மிகத் தெளிவான முறையில் கலந்துரையாடி பலமுறை அவரது மன்றாடல்களுக்கு இறைவனிடமிருந்து பதில் கிடைக்கப் பெற்றிருந்தால் அதுபோன்ற

இறையடியார் இறைவனுக்கு மிக அதிகமாக நன்றி கூற வேண்டும். மேலும் மற்ற அனைவரையும் விட இறைவழியில் தன்னை அவர் அர்ப்பணம் செய்ய வேண்டும். ஏனென்றால் இறைவன் தனது அளப்பெரும் கருணையால் தனது அனைத்து அடியார்களிலிருந்தும் அவரைத் தேர்ந்தெடுத்துள்ளான். மேலும் அவருக்கு முன்தோன்றிய சித்தீக்குகள் எனும் உண்மையாளர்களின் வாரிசாக அவரை இறைவன் ஆக்கியுள்ளான். இந்த அருட்கொடை மிக அரிதிலும் அரிதானதும், நற்பேறும் ஆகும். இந்த அருட்கொடை கிடைக்கப் பெற்ற நல்லடியார் ஏனைய அனைத்தையும் ஒன்றுமற்றதாகக் காண்பார்.

## இஸ்லாத்தின் சிறப்பம்சம்

இது போன்ற அந்தஸ்தையும் உயர்நிலையையும் பெற்ற மக்கள் எல்லா காலத்திலும் இஸ்லாத்தில் இருந்துள்ளனர். இறைவன் தனது அடியாருக்கு மிக அருகில் வந்து அவருடன் பேசுவதும் அவருக்குள் (இருந்து) பேசுவதும், தனது அடியாரின் உள்ளத்தில் தனது அரியணையை அமைத்து ஆன்மீகமான முறையில் அவரை விண்ணிற்கு ஈர்த்து முன்னவர்களுக்கு அருளிய அனைத்து அருட்கொடைகளையும் இறைவன் அவருக்கும் அருளுவது இஸ்லாத்தில் மட்டுமே காணப்படும் இறையருளாகும்.

ஆனால் அந்தோ பரிதாபம்! மனிதன் இறைநெருக்கத்தைப் பெற்று எத்தகைய (உயர்)நிலையை அடையக் கூடும் என்பதை குருட்டு உலகம் அறியாமல் உள்ளது! மேலும் (இறைநெருக்கத்தைப் பெற) உலகம் தானும் முயலுவதில்லை. மேலும் எவர் அதற்கு முன்வருவாரோ அவரை காஃபிர் எனக் கூறி விடுகிறது. அல்லது இறைவனுக்குரிய அந்தஸ்தை அவருக்கு வழங்கி உலகம் அவரை இறைவனாக்கி விடுகிறது. இவை இரண்டுமே அநீதியாகும். அதில் ஒன்று வரம்பு மீறுதலால் ஏற்பட்டது. இன்னொன்று (இறைவனை அறிந்து கொள்வதில் ஏற்பட்ட) குறைவினால் தோன்றியது. எனவே அறிவுடைய மனிதன் துணிவற்றவனாகவும் மேற்கண்ட ஆன்மீக உயர்நிலையையும், அந்தஸ்தையும் மறுப்பவராகவும் இருக்கக் கூடாது. மேலும் மேற்கண்ட தகுதியை அடைந்தவர்களின்

கண்ணியத்திற்கு மாறு செய்வதும் அதே நேரத்தில் அவர்களை வணங்குவதும் ஏற்புடையதல்ல. இந்நிலையை அடையும் அடியாருடன் இறைவன் எப்படிப்பட்ட தொடர்புகளை வெளிப்படுத்துகிறான் என்றால் தன் இறைமையின் மேலாடையால் அவரை போர்த்துகிறான். அத்தகைய அடியார் இறைவனைக் காணும் கண்ணாடியாக ஆகி விடுவார். எவர் என்னைக் கண்டு கொண்டாரோ அவர் இறைவனைக் கண்டு கொண்டார் என நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதன் உட்கருத்தும் இதுதான். இது இறையடியார்களுக்கான உச்சகட்ட படித்தரமாகும். இங்கு அனைத்து முயற்சிகளும் முற்றுப் பெறுகின்றன. மேலும் முழு அமைதியும் அடியாருக்கு கிடைக்கின்றது.

## நான் இறையறிவிப்பும், இறைவனுடனான உரையாடலும் கிடைக்கப்பெற்றுள்ளேன்

எந்த இறையறிவிப்பு மற்றும் இறைவனுடனான உரையாடல்களைப் பற்றி இதுவரை நான் எடுத்துக்கூறி விவரித்து வந்தேனோ அந்த இறையறிவிப்பு மற்றும் தெய்வீக உரையாடல்களை இறைவனின் அருளால் நான் கிடைக்கப் பெற்றுள்ளேன். இத்தருணத்தில் அதனை நான் வெளிப்படுத்தவில்லையென்றால் மனிதகுலத்தின்மீது அநீதியிழைத்தவனாகி விடுவேன். குருடர்களுக்கு கண்ணொளி வழங்குவதற்காகவும், (இறைவனைத்) தேடுபவர்களுக்கு தொலைக்கப்பட்ட அந்த இறைவனை அடையாளம் காட்டித் தரவும், உண்மையை ஒப்புக் கொள்ளக்கூடியவர்களுக்கு அத்தூய நீரூற்றினைப் பற்றி நற்செய்தி வழங்குவதற்காகவும் இறைவன் எனக்கு இறையறிவிப்பை அருளியுள்ளான். தூய நீரூற்றைப் பற்றி பெரும்பாலாரிடத்தில் நம்பிக்கை காணப்பட்டாலும் மிகவும் குறைவானவர்களே அதை அடையும் நற்பேறு பெறுகின்றனர்.

நான் வாசகர்களுக்கு நம்பிக்கையூட்டுகிறேன். எந்த இறைவனை அடைவதில் மனிதனுக்கு இரட்சிப்பும், நிரந்தர பேரின்பமும் கிடைக்குமோ அந்த இறைவன் திருக்குர்ஆன் போதனைகளைப் பின்பற்றி வாழ்வதன் மூலமாக அன்றி

மனிதனுக்கு கிடைக்க மாட்டான். நான் கண்டதை மக்களும் கண்டிருந்தால், நான் கேட்டதை அவர்களும் கேட்டிருந்தால், கற்பனைக் கதைகளை கைவிட்டு விட்டு, உண்மையின் பக்கம் விரைந்தோடி வந்தால் எவ்வளவு நன்றாகயிருக்கும்!

நான் மேலே குறிப்பிட்ட இறையறிவிப்பு மற்றும் தெய்வீக உரையாடல் என்பது இறைவனைக் காணத்தக்க முழுமையான (இறை) ஞானத்தை பெறுவதற்குரிய ஊடகமாகவும், அனைத்து சந்தேகங்களையும் அகற்றி, அழுக்குகளை கழுவுகின்ற நீராகவும், மிக உன்னதமான இறைவனின் திருமுகத்தை எடுத்துக்காட்டும் கண்ணாடியாகவும் திகழ்கின்றது.

எவருடைய ஆன்மாவில் உண்மையின் தேட்டம் இருக்குமோ அவர் விழித்தெழுந்து ஆராய்ந்து தேடிக் கொள்ளட்டும். நான் மெய்யாகவே கூறுகிறேன். ஆன்மாக்களில் உண்மையான தேட்டம் தோன்றினால் உள்ளங்களில் உண்மையான தாகம் ஏற்பட்டால் மக்கள் இந்த வழிமுறையைத் தேட வேண்டும். இந்த வழியை ஆராய்ந்து பார்க்க வேண்டும். ஆனால் இந்த வழி எவ்வாறு திறக்கப்படும்? திரை எவ்வாறு விலக்கப்படும்? 'இஸ்லாம்' மட்டுமே அந்த வழிக்குரிய நற்செய்தியை நல்குகின்றது என்பதை நான் சத்தியத்தைத் தேடுகின்ற அனைவருக்கும் திறம்படக் கூறுகிறேன். மேலும் மற்ற மார்க்கங்கள் அனைத்தும் நீண்ட காலமாகவே இறையறிவிப்பு முற்றுப் பெற்றுவிட்டதாக முத்திரை பதித்து விட்டன. எனவே நன்றாகப் புரிந்து கொள்ளுங்கள். இது இறைவனால் போடப்பட்ட முத்திரை அல்ல. மாறாக பயனடையாததன் காரணமாக மனிதன் உருவாக்கிக் கொண்ட ஒரு சாக்குப்போக்காகும். நன்றாக அறிந்து கொள்ளுங்கள். எவ்வாறு கண்களின்றி நம்மால் காண முடியாதோ, செவிகளின்றி நம்மால் கேட்க முடியாதோ, நாவின்றி நம்மால் பேச முடியாதோ அதே போன்று திருக்குர்ஆனின் துணையின்றி நம்மால் அன்பே உருவான அந்த இறைவனின் திருமுகத்தையும் காண இயலாது. நான் இளைஞனாக இருந்தேன். தற்போது முதியவனாகி விட்டேன். ஆனால் திருக்குர்ஆன் எனும் இந்த தூய நீரூற்றின் துணையின்றி முழுமையான இறைஞானம் எனும் பானத்தை எவரும் அருந்தியதாக நான் காணவில்லை.

## முழுமையான இறைஞானம் பெறுவதற்குரிய வழிமுறை இறையறிவிப்பாகும்

அன்பர்களே! நண்பர்களே! இறைவனின் நோக்கங்களுக்கு எதிராக எந்த மனிதனாலும் சண்டையிட முடியாது. தூய இறைதூதர்களுக்கு கிடைத்த இறையறிவிப்பு மட்டுமே முழுமையான இறைஞானத்தைப் பெறுவதற்குரிய வழிமுறையாகும் என்பதை உறுதியாக அறிந்து கொள்ளுங்கள். அவ்வாறிருக்க, அருட்கடலான இறைவன் இனி இல்ஹாம் எனும் இறையறிவிப்பை முத்திரை இட்டு முடித்து விட்டு உலகத்தை அழித்துவிட ஒருபோதும் விரும்பவில்லை. இன்னும் கூறப்போனால் இறையறிவிப்பு மற்றும் தெய்வீக உரையாடலுக்கான வாசல் எக்காலத்திற்கும் திறந்தேயுள்ளது. ஆனால் அதனை அதற்குரிய வழிகளில் தேடும்போதுதான் அது உங்களுக்கு எளிதாக கிடைக்கும். அந்த வாழ்விற்குரிய நீர் வானத்திலிருந்து இறங்கி, அதற்குரிய தகுந்த இடத்தில் நிற்கின்றது. இப்போது அந்த நீரை பருக நீங்கள் என்ன செய்ய வேண்டும்? அதற்கு நீங்கள் எப்படியாவது அந்த நீரூற்றை வந்தடைய வேண்டும். பின்னர் உங்களது வாயினால் அந்த வாழ்விற்குரிய நீரைப் பருகி மனநிறைவு அடைய வேண்டும். எங்கிருந்து அந்த இறையொளி கிடைக்கப்பெறுமோ அங்கு விரைந்தோடுவதிலும், தவறவிட்ட அந்த நண்பனின் அடையாளம் கிடைக்கப்பெறும் வழியை மேற்கொள்வதிலும்தான் மனிதனின் எல்லாவித நற்பேரும் அடங்கியுள்ளது. நீங்கள் காண்பது போன்று ஒளியானது எப்போதும் விண்ணிலிருந்தே இறங்கி பூமியில் பரவுகிறது. அதைப் போன்றே நேர்வழியின் உண்மையான ஒளி விண்ணிலிருந்தே இறங்குகின்றது. மனிதனின் சுயவிளக்கங்களும், யூகங்களும் அவனுக்கு உண்மையான இறைஞானத்தைத் தர முடியாது. உங்களால் இறைவனின் ஒளியின்றி இறைவனை அடைந்துவிட முடியுமா? விண்ஒளியின் துணையின்றி இருளில் உங்களால் காண முடியுமா? உங்களால் அவ்வாறு காண இயலாது! ஏனென்றால் நமது கண்கள் பார்க்கும் திறன் பெற்றிருந்தபோதிலும், அதற்கு சூரிய ஒளியின் தேவையுள்ளது. நமது காதுகளுக்கு கேட்கும் திறன் இருந்தபோதிலும் அதற்கு இறைவன் வீசச் செய்யும்

காற்றின் தேவையுள்ளது. நம்மை யூகங்களில் ஆழ்த்திவிட்டு பேசாமல் மௌனமாக இருக்கும் இறைவன் உண்மையான இறைவனாக இருக்க முடியாது. மாறாக தன்னுடைய இருப்பைக் குறித்து தானே அறிவித்து தரும் இறைவனே முழுமையான மற்றும் உயிருள்ள இறைவனாக இருக்க முடியும். தற்போதும் கூட அவன் தனது இருப்பை தானே அறிவிக்க விரும்புகிறான். விண்ணின் கதவுகள் திறப்பதற்கு ஆயத்தமாக உள்ளன. மிக அருகில் பொழுது புலரும் வேளை உள்ளது. விழித்தெழுந்து உண்மையான இறைவனை தேடுபவர் அருளுக்குரியவராவார். அந்த இறைவனை எவ்வித துன்பமும் துயரமும் நெருங்குவதில்லை. அவனது கம்பீரத்தின் பிரகாசம் எக்காலத்திலும் மங்கி விடாது. இது தொடர்பாக திருக்குர்ஆனில் அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

اَللّٰهُ نُوْرُ السَّمٰوٰتِ وَالْاَرْضِ ؕ

அதாவது இறைவன் எப்போதும் வானங்கள் மற்றும் பூமியின் ஒளியாகத் திகழ்கிறான். (24:36) அவனிடமிருந்தே அனைத்திற்கும் ஒளி கிடைக்கின்றது. அவனே சூரியனுக்குச் சூரியனாய், பூமியிலுள்ள அனைத்து உயிரினங்களுக்கும் உயிராய் இருக்கின்றான். அத்தகைய மெய்யான, உயிருள்ள இறைவனை ஏற்றுக் கொள்பவர் அருளுக்குரியவராவார்.

இறைஞானம் பெறுவதற்கான மூன்றாவது வழி என்பது ‘ஹக்குல் யகீன்’ எனும் அனுபவ அறிவின் படித்தரம் ஆகும். அதாவது இறைதூதர்களுக்கும், நேரிய வழியைக் கொண்டவர்களுக்கும் எதிரிகளின் கைகளால் தரப்படும் அல்லது இறைநியதி என்றழைக்கப்படும் விண்ணின் தீர்ப்பினால் விளையும் அனைத்து வகை துன்பங்களும் துயரங்களும் வேதனைகளும் ஆகும். இது போன்ற துன்பங்கள் மற்றும் வேதனைகளின்போது மனித உள்ளத்தில் அறிவின் உருவமாக பதிந்து கிடந்த மார்க்க வழிகாட்டல்கள் அனைத்தும் செயல் வடிவம் பெற்று விடும். மேலும் செயலரங்கம் எனும் நிலத்தில் வளர்ந்து தனது சிறப்பின் உச்சத்தை அது அடைந்து விடுகின்றது. பின்னர் இவ்வாறு செயலாற்றுபவர்கள்

இறைக்கட்டளைகளின் ஒரு முழுமையான செயல் வடிவமாகவே மாறிவிடுகின்றனர். மேலும் மனிதனின் மூளையிலும், உள்ளத்திலும் நிறைந்திருந்த மன்னித்தல், தண்டனையளித்தல், பொறுமை, கருணை போன்ற அனைத்து நற்குணங்களிலிருந்தும் அனைத்து அங்கங்களுக்கும் தமது செயல் வடிவம் மூலம் பங்கு கிடைக்கின்றன. இவ்வாறு இந்த நற்குணங்கள் அனைத்தும் உடலினுள் நுழைந்து தனது முத்திரையை அதில் பதித்து விடுகின்றன. இதுதொடர்பாக அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

وَلَنَبۡلُوَنَّكُمۡ بِشَىۡءٍ مِّنَ الۡخَوۡفِ
وَالۡجُوۡعِ وَنَقۡصٍ مِّنَ الۡاَمۡوَالِ وَالۡاَنۡفُسِ وَالثَّمَرٰتِ‌ؕ وَبَشِّرِ الصّٰبِرِيۡنَ ۙ‏ ١٥٦
الَّذِيۡنَ اِذَآ اَصَابَتۡهُمۡ مُّصِيۡبَةٌ ۙ قَالُوۡٓا اِنَّا لِلّٰهِ وَاِنَّآ اِلَيۡهِ رٰجِعُوۡنَؕ‏ ١٥٧
اُولٰٓـئِكَ عَلَيۡهِمۡ صَلَوٰتٌ مِّنۡ رَّبِّهِمۡ وَرَحۡمَةٌ‌ ۖ وَاُولٰٓـئِكَ هُمُ الۡمُهۡتَدُوۡنَ‏ ١٥٨

அதாவது நாம் உங்களை அச்சத்தைக் கொண்டும், பசி, பொருள் இழப்பு, உயிரிழப்பு, முயற்சிகள் வீணாகுதல் மற்றும் பிள்ளைகளின் மரணம் போன்றவற்றால் சோதித்துக் கொண்டிருப்போம்.

அதாவது இந்த அனைத்து துன்பங்களும் இறைநியதியின் விளைவாகவோ அல்லது எதிரிகளின் கைகளினாலோ உங்களுக்கு வரலாம். எனவே துன்பங்களின் வேளையில் நாங்கள் இறைவனுக்குரியவர்கள் ஆவோம். அவனிடமே நாங்கள் திரும்பிச் செல்ல உள்ளோம் என எவர்கள் கூறுவார்களோ, அவர்களுக்கு நற்செய்தியுள்ளது. அத்தகைய மக்கள் மீது இறைவனின் அருளும், கருணையும் உள்ளது. இத்தகைய மக்களே நேர்வழியின் உச்சத்தை அடைந்தவர்களாக உள்ளனர். (2:156-158)

அதாவது மூளையிலும், உள்ளத்திலும் நிறைந்து நிற்கும் ஞானத்தால் மட்டும் எந்த சிறப்பும், உயர்வும் இல்லை. மாறாக, உண்மையான அறிவு என்பது மூளையிலிருந்து வெளிப்பட்டு அனைத்து அங்கங்களையும் ஒழுங்குபடுத்தி அழகுபடுத்த வேண்டும். மூளையின் நினைவாற்றல் செயல் வடிவில் தென்பட வேண்டும். எனவே ஒருவனது அறிவை வலுப்படுத்தவும்,

வளப்படுத்தவும் சிறந்த வழி என்னவென்றால் செயல் ரீதியாக அதன் தோற்றத்தை அங்கங்களில் பதிக்க வேண்டும். ஓர் அற்ப காரியத்திற்கான அறிவு கூட தொடர்ச்சியான செயல் பயிற்சியை மேற்கொள்ளாதவரை எவ்வித சிறப்பையும் பெற முடியாது. உதாரணமாக, ரொட்டி சுடுவது மிக எளிதான வேலை. அதில் மிக நுட்பமான வேலை ஒன்றும் இல்லை என நீண்ட காலமாக நாம் அறிந்திருக்கலாம். மாவு குழைத்து ஒவ்வொரு ரொட்டியின் அளவுக்கேற்ப மாவு உருண்டைகளை தயார் செய்து இரண்டு கைகளால் அதை பரப்பி தோசைக் கல்லில் வைத்து முன்னும், பின்னும் புரட்டி எடுத்து சூடாக்கி விட்டால் அது ரொட்டியாகி விடும். (மேற்கூறப்பட்ட) நமது இந்த வெறும் அறிவு என்பது வீண் புகழ்ச்சியாக இருக்கும். ஏனென்றால் நாம் அனுபவமற்ற நிலையில் ரொட்டி சுட ஆரம்பித்தால் நாம் பல துன்பங்களுக்கு ஆளாக நேரிடும். முதலில் மாவு குழைக்கும்போது சரியான அளவில் தண்ணீர் சேர்க்கவில்லையென்றால் ஒன்று மாவு கல் போன்றாகி விடும். அல்லது முற்றிலும் குழைந்து போய்விடும். ஒருவேளை உயிரைக் கொடுத்து களைப்படைந்து மாவை குழைத்துவிட்டாலும் கூட ரொட்டியின் ஒரு பகுதி வெந்தும் மற்றொரு பகுதி வேகாமலும் இருக்கும். மேலும் ஒரு பகுதி சரிந்தும், உருவம் சரியான வடிவத்தில் அமையாமலும் இருக்கலாம். ஐம்பது வருடங்களாக ரொட்டி சுடுவதை நாம் கண்டிருந்தும், (அனுபவ அறிவின்மையின் விளைவாகவே) மேற்கண்ட நிலை உருவாகின்றது.

சுருக்கமாக, நடைமுறைப் பயிற்சி இல்லாதவரை வெறும் அறிவின் விளைவினால் பெருமளவிலான மாவை நாம் வீணாக்கி விடுவோம். மிக அற்பமான காரியங்களில் நமது அறிவின் நிலை இவ்வாறிருக்க, பெரும் பெரும் காரியங்களில் தொடர்ச்சியான நடைமுறை பயிற்சி இல்லாமல் வெறும் அறிவின் மீது மட்டும் நாம் எவ்வாறு நம்பிக்கை வைக்க முடியும்? எனவேதான் மேற்கண்ட வசனங்களில், நான் உங்களுக்கு ஏற்படுத்துகின்ற சோதனைகள் அறிவையும் அனுபவத்தையும் பெற்றுக் கொள்வதற்கான வழிமுறையாகும் என இறைவன் கூறுகின்றான். அதாவது அதன் மூலம் உங்களது ஞானம் முழுமை பெறும்.

அடுத்து இறைவன் இவ்வாறு கூறுகின்றான் :

لَتُبْلَوُنَّ فِيْٓ اَمْوَالِكُمْ وَاَنْفُسِكُمْ ۗ وَلَتَسْمَعُنَّ مِنَ الَّذِيْنَ اُوْتُوا الْكِتٰبَ مِنْ قَبْلِكُمْ وَمِنَ الَّذِيْنَ اَشْرَكُوْٓا اَذًى كَثِيْرًا ۭ وَاِنْ تَصْبِرُوْا وَتَتَّقُوْا فَاِنَّ ذٰلِكَ مِنْ عَزْمِ الْاُمُوْرِ ١٨٧

நீங்கள் உங்கள் செல்வத்தைக் கொண்டும், உயிரைக் கொண்டும் சோதிக்கப்படுவீர்கள். மக்கள் உங்களது செல்வத்தை அபகரித்துக் கொள்வார்கள். உங்களை கொலை செய்வார்கள். நீங்கள் யூதர்கள், கிறித்துவர்கள் மற்றும் இணைவைப்பவர்களின் கைகளால் மிகவும் துன்பத்திற்குள்ளாவீர்கள். அவர்கள் உங்களைப் பற்றி மிகவும் துன்பம் தரும் வகையில் ஏசிப் பேசுவார்கள். எனவே அது போன்ற தருணங்களில் நீங்கள் பொறுமை செய்து வீணான பேச்சுக்களிலிருந்து தவிர்ந்து கொண்டால் அது துணிவு மற்றும் தைரியமிக்க செயலாக இருக்கும். (3:187)

மேற்கண்ட அனைத்து வசனங்களின் பொருள் என்னவென்றால், செயல் வடிவில் தனது பொலிவை வெளிப்படுத்தும் அறிவே அருளுக்குரியதாகும். மேலும் வெறும் எண்ணத்தின் அளவிலான மற்றும் செயல்முறைக்கு வந்திடாத அறிவு பயனற்ற சூனியமாகும். வியாபாரத்தின் மூலம் செல்வம் பல்கிப் பெருகுவது போன்று, அறிவு, தொடர் பயிற்சியின் மூலம் அனுபவ ரீதியாக செயல் வடிவம் பெறும் போதுதான் அது தனது ஆன்மீக வளர்ச்சியின் உச்சத்தை எட்டுகின்றது. எனவே அறிவை அதன் உச்சத்தை எட்டவைக்க மிகச் சிறந்த வழி அதற்கு தொடர் பயிற்சியளித்து செயல் வடிவம் தருவதாகும். அவ்வாறு அறிவின் செயல்வடிவம் வெளிப்படும்போது அறிவில் ஒளிபிறக்கின்றது.

அறிவை ‘ஹக்குல் யகீன்’ எனும் அனுபவ அறிவாக உயரச் செய்வது என்றால் என்ன? என்பதையும் இங்கு புரிந்து கொள்ளுங்கள். அது என்னவென்றால், அறிவின் ஒவ்வொரு பகுதியையும் செயல் வடிவில் ஆராய்ந்து பார்ப்பதாகும். எனவே

இஸ்லாத்தில் இதனைக் காண இயலும். திருக்குர்ஆன் மூலமாக, மக்களுக்கு கற்றுத் தந்துள்ள போதனைகளைச் செயல்படுத்தி ஒளிமயமாக்கவும், அதன் ஒளியால் நிறைந்துவிடுவதற்கும் இறைவன் வாய்ப்பு வழங்கியுள்ளான்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களது வாழ்வின் இரு காலகட்டங்கள்

இந்த நோக்கத்திற்காகவே இறைவன் நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்க்கையை இரு பகுதிகளாகப் பிரித்துள்ளான். அதாவது முதல் பகுதி என்பது துன்பங்கள், துயரங்கள் மற்றும் வேதனைகளை உள்ளடக்கிய காலகட்டமாகும். இரண்டாவது பகுதி என்பது வெற்றிக்குரிய காலகட்டமாகும். துன்பங்களின் தருணங்களில் வெளிப்பட வேண்டிய நல்லொழுக்கங்கள் துன்பங்களின் தருணங்களின்போது வெளிப்பட வேண்டும் என்பதற்காகவும் அதே போன்று வெற்றியும், அதிகாரமும் பெற்ற காலகட்டத்தில் வெளிப்பட வேண்டிய நல்லொழுக்கங்கள் வெளிப்பட வேண்டும் என்பதற்காகவும் இரு காலகட்டமாக பிரிக்கப்பட்டது. ஆக, இருவகையான நல்லொழுக்கங்களையும், இரண்டு காலக்கட்டங்களில், இரு வெவ்வேறு நிலைகளில் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திக் காட்டியது மிகப் பொலிவுடனும், தெளிவுடனும் நிரூபணமாகியுள்ளது. பதிமூன்று ஆண்டு காலங்கள் 'மக்கா'வில் நமது நபி (ஸல்) அவர்களை துன்பங்கள் சூழ்ந்திருந்தன. அக்காலகட்டத்தின் வாழ்க்கை வரலாற்றினை படிக்கும்போது ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எவ்வளவு மேலான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்தினார்கள் என்பது தெளிவாக தெரியவரும். அதாவது துன்பங்களின் வேளையில், முழுமையான ஒரு நல்லடியார் வெளிப்படுத்த வேண்டிய இறைவனின் மீதான உறுதியான நம்பிக்கை, அழுது புலம்பாமல் (பொறுமையிழக்காமல்) இருத்தல், தனது பணிகளில் சோம்பேறித்தனம் காட்டாமல் (விழிப்புடன்) இருத்தல், எவருக்கும் அஞ்சாமை போன்ற நற்குணங்களை ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் எந்த அளவிற்கு உறுதியுடன் வெளிப்படுத்தினார்கள்

என்றால், அவர்களைக் கண்டு எதிரிகள் கூட அன்னாரின் மீது நம்பிக்கை கொண்டனர். மேலும் ஒருவருக்கு இறைவன் மீது முழுமயான நம்பிக்கையில்லாதவரை இது போன்று மனஉறுதியுடன் துன்பங்களை சகித்துக் கொள்ள முடியாது என எதிரிகளே ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்களின் இறைநம்பிக்கைக்கு சாட்சி பகர்கின்றனர்.

அடுத்து வெற்றியும், அதிகாரமும், செல்வமும் மிக்க மற்றொரு காலகட்டமும் வந்தது. அந்த காலகட்டத்திலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மன்னித்தல், தாராள மனப்பான்மை, வீரம் போன்ற உயரிய நல்லொழுக்கங்களை மிக உன்னதமான– வகையில் வெளிப்படுத்தினார்கள். பெரும் எண்ணிக்கையிலான எதிரிகள் அன்னாரின் இந்த நல்லொழுக்கங்களை மட்டுமே பார்த்து நம்பிக்கை கொண்டனர். துன்பமிழைத்தவர்களை அன்னார் மன்னித்தார்கள். ஊரைவிட்டு வெளியேற்றியவர்களுக்கு அடைக்கலம் வழங்கினார்கள். எதிரிகளுக்கு செல்வங்களை வாரி வழங்கினார்கள். எதிரிகளுக்கு தண்டனையளிக்கும் அதிகாரம் பெற்றிருந்தாலும் மாபெரும் எதிரிகளைக் கூட மன்னித்தருளினார்கள். ஆக, அன்னாரின் உயரிய நல்லொழுக்கங்களைக் கண்டு பெரும்பான்மையான மக்கள், இறைவன் புறமிருந்து தோன்றிய உண்மையான தூதரைத் தவிர்த்து வேறெவராலும் ஒருபோதும் இதுபோன்ற நல்லொழுக்கங்களை வெளிப்படுத்த முடியாது என சாட்சி கூறினர். அதன் காரணமாகவே எதிரிகளின் உள்ளங்களில் நீண்ட காலமாக இருந்து வந்த பகைமையுணர்வு நொடிப்பொழுதில் அகன்று போனது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வெளிப்படுத்திய உயரிய நல்லொழுக்கங்களில் ஒன்றைப் பற்றி திருக்குர்ஆன் ஓர் இடத்தில் இவ்வாறு எடுத்துரைக்கின்றது:–

قُلْ إِنَّ صَلَاتِي وَنُسُكِي وَمَحْيَايَ وَمَمَاتِي لِلَّهِ رَبِّ الْعٰلَمِينَ ﴿١٦٣﴾ لا

இவர்களிடம் நீர் கூறுவீராக: எனது இறைவணக்கமும் எனது தியாகமும், எனது வாழ்வும், எனது மரணமும்,

இறைவழியிலேயே அமைந்திருக்கின்றன.(6:163) அதாவது இறைவனின் மகத்துவத்தை வெளிப்படுத்த வேண்டும் என்பதற்காகவும், அவனது அடியார்களுக்கு நன்மை செய்ய வேண்டும் என்பதற்காகவும் எனது இன்னுயிரை இழந்தாவது அவர்களுக்கு நான் வாழ்வளிக்க விரும்புகிறேன். இங்கு இறைவழியில் படைப்பினத்தின் நன்மைக்காக மரணிப்பது எனக்-கூறப்பட்டிருப்பதற்கு, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் அறிவிலிகளைப் போல அல்லது பைத்தியக்காரனைப் போல தற்கொலை செய்து கொள்ள நாடினார்கள் என எவரும் தவறான எண்ணம் கொண்டு விடக்கூடாது. அவ்வாறு தவறாக புரிந்து கொள்வதிலிருந்து அல்லாஹ் பாதுகாப்பானாக. இதுபோன்ற அறிவீனமான விஷயங்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கடுமையாக எதிர்த்து வந்தார்கள். அது போன்று திருக்குர்ஆன் தற்கொலை செய்து கொள்பவர்களை கடும் குற்றவாளி என்றும், அவர்கள் தண்டனைக்குரியவர்கள் என்றும் கூறுகின்றது. இறைவன் இவ்வாறு கூறுகின்றான்:-

وَلَا تُلْقُوْا بِاَيْدِيْكُمْ اِلَى التَّهْلُكَةِ

அதாவது, நீங்கள் தற்கொலை செய்யாதீர்கள். உங்களின் கைகளினால் உங்களின் மரணத்தை தேடிக் கொள்ளாதீர்கள். (2:196)

உதாரணமாக 'காலிது' என்பவனுக்கு வயிற்றுவலி என்றால், 'ஸய்து' என்பவர் காலிது மீது கருணை கொண்டு தனது தலையை உடைத்துக் கொள்வதால் அவர் காலித்திற்கு எந்த நன்மையும் செய்துவிட முடியாது என்பது வெளிப்படையாகும். இன்னும் கூறப்போனால் முட்டாள்தனத்தின் காரணமாக தனது தலையை தானே உடைத்துக் கொண்டவராகவே அவர் கருதப்படுவார். காலிது நோய்வாய்ப்பட்ட நிலையில் அவருக்குத் தேவையான பணிவிடைகளை செய்து, உகந்த மருந்துகளை வாங்கிக் கொடுத்து தகுந்த மருத்துவ முறையில் சிகிச்சை அளிக்க உதவி செய்யும் பட்சத்தில்தான் அவர் நன்மையான வேலையை செய்தவராக திகழ்வார். மாறாக, தனது தலையை உடைத்துக்

கொள்வதால் காலிதிற்கு எந்த நன்மையும் கிடைக்காது. இன்னும் கூறப்போனால் அந்நிலையில் அவர் அநியாயமாக தனது உடலின் நல்லதோர் உறுப்பிற்கு நாசம் விளைவித்தவராவார்.

சுருக்கமாக, ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் மனித இனத்தின் இரட்சிப்பிற்காக தமது இன்னுயிரையும் அர்ப்பணம் செய்யும் அளவிற்கு உண்மையான அனுதாபம் கொண்டு கடினமாக முயன்று வந்தார்கள் என்பதே மேற்கண்ட வசனத்தின் பொருளாகும். மேலும் இறைவனிடம் பிரார்த்தனை செய்தல், பிரசாரம் செய்தல், மக்கள் அளித்து வந்த துன்பங்களை சகித்துக் கொள்ளுல், அறிவுப்பூர்வமான அனைத்து வழிமுறைகளையும் கையாளுதல் என அனைத்து வழிவகைகளிலும் ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது வாழ்வையும், சுகத்தையும் இறைவழியில் அர்ப்பணித்திருந்தார்கள். தொடர்ந்து அது குறித்து அல்லாஹ் இவ்வாறு கூறுகின்றான்:-

لَعَلَّكَ بَاخِعٌ نَّفۡسَكَ اَلَّا يَكُوۡنُوۡا مُؤۡمِنِيۡنَ۝

فَلَا تَذۡهَبۡ نَفۡسُكَ عَلَيۡهِمۡ حَسَرٰتٍ ؕ

மக்க(ளின் நன்மைக)ளுக்காக நீர் அடைகின்ற வேதனைகளாலும், கடின உழைப்பாலும் உம்மை நீரே மாய்த்துக் கொள்வீரா என்ன? (26:4) உண்மையை ஏற்றுக் கொள்ளாத மக்களைப் பற்றி நீர் ஏக்கம் கொண்டு உமது உயிரையே நீர் மாய்த்துக் கொள்வீரா என்ன? (35:9)

ஆக, மனித இனத்தின் நன்மைக்காக உயிர் துறப்பதற்கான நுட்பமான வழி என்பது இயற்கைச் சட்டங்களுக்குட்பட்டு தகுந்த வழிமுறைகளில் தம்மை கடினத்தில் ஆழத்திக் கொண்டு நன்மை பயப்பதாகும். மேலும் தகுந்த திட்டங்களை செயல்படுத்தி அதற்காக தம்மை அர்ப்பணித்துக் கொள்ளுதல் ஆகும். இதைத் தவிர்த்துவிட்டு கடினமான துயரங்கள் மற்றும் வழிகேட்டில் சமுதாயம் வீழ்ந்து கிடப்பதைக் கண்டு அதன் ஆபத்தான நிலையை எண்ணி தம் தலையை கல்லால் உடைப்பதும் ஒன்றிரண்டு விஷ மாத்திரைகளை

சாப்பிட்டு இவ்வுலகை விட்டுப் பிரிந்து செல்வதும் தீரமல்ல. மேலும் தமது இந்த பொருத்தமற்ற செயல்களால் தமது சமுதாயத்தின் விடுதலைக்கான பணியாக அதை கருதுவதும் ஒருபோதும் தீரமான செயல் ஆகாது. மாறாக அது கோழைத்தனமாகும். துன்பங்களை சகித்து கொள்ள முடியாமல் விரைந்து தற்கொலையை நோக்கி ஓடுவது எப்போதும் துணிச்சலற்றவர்களின் வழிமுறையாகும். தற்கொலைகளை நியாயப்படுத்தி என்ன விளக்கங்கள் தரப்பட்டபோதிலும், சந்தேகத்திற்கு இடமின்றி அது போன்ற செயல்கள் அறிவின்மை மற்றும் அறிவீனர்களின் அடையாளமாகும். எவருக்கு பழிவாங்குதலுக்குரிய சந்தர்ப்பமே வாய்க்கப் பெறவில்லையோ அது போன்ற மனிதனின் பொறுமையும், எதிரியுடன் சண்டையிடாதிருப்பதும் நல்லொழுக்க நிலையாகிவிட முடியாது. ஏனென்றால் அவர் பழிவாங்குதலுக்குரிய வலிமை பெற்றால் அவர் என்ன செய்வார் என யாரும் அறியார். எதுவரை மனிதன் துன்பங்களின் தருணங்களையும் பின்னர் ஆட்சி, அதிகாரம் மற்றும் பணபலத்திற்கான காலகட்டத்தையும் பெறுவதில்லையோ அதுவரை அவனது உண்மையான நல்லொழுக்கம் ஒருபோதும் வெளிப்படாது. எந்த நபர் பலவீனம், இயலாமை மற்றும் ஆட்சி, அதிகாரமற்ற நிலையில் மக்களிடம் அடி வாங்கியே மரணித்துப் போயிருப்பாரோ, ஆட்சியும், அதிகாரமும், செல்வமும் பெறாமலேயே வாழ்வைக் கழித்திருப்பாரோ அவரது நல்லொழுக்கங்கள் நிரூபணமாக முடியாது. அவர் போர்க் களத்திற்கு சென்றிருக்காதபோது அவர் மன வலிமை படைத்த வீரரா? அல்லது கோழையா? என்பதும் எப்படி நிரூபணமாகும்? அப்படிபட்டவரது நல்லொழுக்கங்களைக் குறித்து நம்மால் எதுவும் கூறவியலாது. ஏனென்றால் எதிரிகளின் மீது ஆதிக்கம் பெற்ற பிறகு அவர்களுடன் அவர் எவ்வாறு நடந்திருப்பார்? அவர் பணக்காரராக ஆகியிருந்தால் செல்வத்தை மேலும் சேகரித்து பதுக்கிக் கொள்வாரா? அல்லது ஏழைகளுக்கு பகிர்ந்தளிப்பாரா? மேலும் அவர் போர்க் களத்தை எதிர்கொண்டால் புறமுதுகு காட்டி ஓடியிருப்பாரா? அல்லது

வீரர்களைப் போன்று சண்டையிட்டிருப்பாரா? என்பதையெல்லாம் நம்மால் நிர்ணயிக்க முடியாது.

ஆனால் இறைவனின் கருணையாலும், அருளினாலும், நமது நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மேற்கண்ட அனைத்து நல்லொழுக்கங்களையும் வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது. தாராள மனப்பான்மை, வீரம், மென்மை, மன்னித்தல், நீதி போன்ற அனைத்து நற்பண்புகளும் அதற்குரிய தருணங்களில் எந்த அளவுக்கு முழுமையாக வெளிப்பட்டதென்றால் உலக வரலாற்றில் அது போன்ற முன்மாதிரிகளை தேடினாலும் எவரிடமும் காணக் கிடைக்காது. தமது வாழ்வின் இரண்டு காலகட்டங்களிலும், பலவீனமான நிலையிலும், அதிகாரம் படைத்த நிலையிலும், ஏழ்மையிலும், செல்வச் செழிப்பிலும் உயரிய நற்குணங்கள் அனைத்தையும் ஒருங்கே பெற்றிருந்ததை தூய இறைத்தூதர் (ஸல்) அவர்கள் முழு உலகிற்கும் எடுத்துக் காட்டினார்கள். ஹஸ்ரத் நபிகள் (ஸல்) அவர்களுடைய வாழ்வில் வெளிப்படுத்திக் காட்டுவதற்கென வல்லமையுள்ள இறைவன் வாய்ப்பளிக்காத எந்தவொரு மேலான நல்லொழுக்கமும் இல்லையென்றே கூறலாம். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வாழ்வில் அனைத்து நல்லொழுக்கங்களையும் வெளிப்படுத்தும் வாய்ப்பை இறைவன் அன்னாருக்கு நல்கினான். அன்னாரது வீரம், தாராள மனப்பான்மை, உறுதிப்பாடு, மன்னித்தல், மென்மை போன்ற அனத்து நல்லொழுக்கப் பண்புகளும் எந்த அளவு நிரூபணமானது என்றால் அதற்கு உலகில் வேறெவரும் நிகரில்லை என்று கூறலாம்.

ஆனால் எவர்கள் அநீதியிழைப்பதில் எல்லை மீறினார்களோ, இஸ்லாத்தை அழித்து விட விரும்பினார்களோ, இறைவன் அவர்களை தண்டிக்காமல் விட்டு விடவில்லை. ஏனென்றால் அவர்களை தண்டிக்காமல் விட்டு விட்டால் அது உண்மையாளர்களை அவர்களின் எதிரிகள் தமது காலடியில் போட்டு நசுக்குவதற்கு ஒப்பானதாகி விடும்.

## ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் செய்த போர்களின் நோக்கம்

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒருபோதும் தேவையில்லாமல் அப்பாவி பொதுமக்களை கொன்று குவிக்கும் நோக்கத்தில் போர்கள் செய்யவில்லை. ஹஸ்ரத் நபி (ஸல்) அவர்கள் தமது சொந்த நாட்டிலிருந்து வெளியேற்றப்பட்டார்கள். மேலும் ஏராளமான முஸ்லிம் ஆண்களும், பெண்களும் அநியாயமாக எதிரிகளால் கொலை செய்யப்பட்டனர். அதன் பின்னரும் அநீதியாளர்கள் தமது அக்கிரமங்களிலிருந்து விலகவில்லை. இஸ்லாத்தின் போதனை பரவுவதை தடுத்து வந்தனர். எனவே அநீதிகளுக்குள்ளானவர்கள் முற்றிலும் அழிந்து போவதிலிருந்து பாதுகாக்கப்பட வேண்டும் என இறைவனின் பாதுகாப்புச் சட்டம் விரும்பியது. எனவே வாளெடுத்து வந்தவர்களுக்கெதிராக மட்டும் வாளேந்தி போர் செய்யப்பட்டது.

சுருக்கமாக, அநீதியாளர்கள் உண்மையாளர்களை அழித்துவிட முயன்றபோது கொலையாளிகளின் கொடுஞ் செயலை அடக்கி ஒடுக்க தீமையை தடுக்கும் வகையில் மட்டுமே அந்தப் போர்கள் மேற்கொள்ளப்பட்டன. அந்நிலையில் இஸ்லாம் தன்னை தற்காத்துக் கொள்வதற்கான நடவடிக்கையை மேற்கொள்ளாமல் இருந்திருந்தால் ஆயிரக்கணக்கான குழந்தைகளும், பெண்களும் அநியாயமாக கொலையுண்டு இறுதியில் இஸ்லாமும் அழிந்திருக்கும். இறைவேதங்கள் எந்த சூழ்நிலையிலும், சந்தர்ப்பத்திலும் தீயவர்களுக்கெதிராக போரிட போதனையே நல்கக் கூடாது. மாறாக எல்லாநிலையிலும் மென்மை, அன்பு, கருணை இவற்றையே இறைவேதங்கள் போதிக்கவேண்டும் என நமது எதிரிகள் எண்ணுகின்றனர். அது நமது எதிரிகளின் மாபெரும் தவறாகும். அத்தகைய மக்கள் தமது எண்ணத்தில் இறைவனை மிகவும் மகிமைப்படுத்துவதாக கருதிக் கொண்டு இறைவனின் முழுமையான பண்புகள் என்பது வெறும் மென்மையும், கருணையும் மட்டும்தான் என நம்புகின்றனர். ஆனால் அத்தகைய மக்கள் பகிரங்கமான பெரும் தவறில் மூழ்கியுள்ளனர் என்பதை சிந்தித்து, சீர்தூக்கிப் பார்ப்பவர்கள் மிக

எளிதாகப் புரிந்து கொள்வர். இறைவனின் இயற்கைச் சட்டத்தை ஆராயும்போதும் இவ்விஷயம் தெளிவாகப் புலப்படுகின்றது. அதாவது நிச்சயமாக இறைவன் இவ்வுலகிற்கு கருணையின் வடிவமாக திகழ்கின்றான். ஆனால் அந்த கருணை எப்போதும், எல்லா சூழ்நிலையிலும் மென்மை மற்றும் சாந்தத்தின் வடிவில் வெளிப்படுவதில்லை. மாறாக முழுக்க, முழுக்க கருணையின் தேட்டத்தின் விளைவாக கைதேர்ந்த மருத்துவரைப் போல சில சமயம் இனிப்பான பானத்தையும், சில சமயம் கசப்பான மருந்தையும் பருகத் தருகிறான். எவ்வாறு ஒருவர் தமது உடலின் மீது முழுமையாக கருணை கொள்கின்றாரோ அது போன்று மனித இனத்தின் மீது இறைவனும் கருணை கொள்கின்றான். நம்மில் ஒவ்வொருவரும் தத்தமது உடலை நேசிக்கின்றோம் என்பதில் எவருக்கும் எவ்வித சந்தேகமும் இருக்க முடியாது. ஒருவர் நமது ஒரு ரோமத்தை பிடுங்க விரும்பினால் கூட நாம் அவர் மீது கடுமையான கோபம் கொள்கிறோம். நமது உடலின் மீது நாம் வைத்துள்ள நேசம் நமது முழு உடலிலும் பரவிக் கிடக்கின்றது. உண்மையில் எல்லா உறுப்புகளுமே நமக்கு மிக நேசத்திற்குரியவை தான். எந்தவோர் உறுப்பிற்கும் சேதம் ஏற்படுவதை நாம் விரும்பவில்லை. ஆயினும் நாம் நமது அனைத்து உறுப்புகளின் மீதும் ஒரே தரத்தில் சமமான நேசம் கொள்ளவில்லை என்பதும் தெள்ளத் தெளிவான விஷயமாகும். இன்னும் கூறப்போனால் நமது நோக்கங்களின் மூலாதாரமாக உள்ள நமது உடலின் தலையாய மற்றும் முக்கியத்துவம் வாய்ந்த உறுப்புகளின் நேசம் நமது உள்ளத்தில் மேலோங்கியிருக்கும். அதே போன்று நம் பார்வையில், ஏதேனுமொரு குறிப்பிட்ட உறுப்பின் மீது நாம் கொண்டுள்ள நேசத்தை விட எல்லா உறுப்புகளின் மீதும் நாம் வைத்துள்ள நேசம் மேலானதாக விளங்குகின்றது. எனவே (முக்கியத்துவம் வாய்ந்த) ஓர் உறுப்பினைப் பாதுகாக்க வேண்டி, முக்கியத்துவம் குறைந்த உறுப்பினை காயப்படுத்தவோ அல்லது வெட்டவோ அல்லது முறிக்கவோ வேண்டிய கட்டாய நிலை ஏற்பட்டால் நாம் உயிரை பாதுகாக்க தாமதமின்றி அந்த உறுப்பினை காயப்படுத்துவதற்கும், வெட்டி எறிவதற்கும் ஆயத்தமாகி விடுகிறோம். அந்த தருணத்தில் நாம் நமது நேசத்திற்குரிய ஓர்

உறுப்பினை காயப்படுத்துகிறோம் அல்லது வெட்டுகின்றோம் என்ற வேதனை நமது உள்ளத்தில் ஏற்படும். ஆயினும், நோய்வாய்ப்பட்ட அந்த உறுப்பு ஆரோக்கியமாக இருக்கும் மற்ற உறுப்புகளையும் அழித்துவிடக் கூடாதே என்ற எண்ணத்தில் நாம் (அறுவை சிகிச்சை மூலம்) வெட்டி எறியும் கட்டாயத்திற்கு உள்ளாகின்றோம்.

எனவே இதே உதாரணத்தின் ஒளியில் இதனையும் புரிந்து கொள்ள வேண்டும். அதாவது இறைவனின் நல்லடியார்கள் பொய்யர்களின் கைகளால் அழிவிற்குள்ளாவதையும், குழப்பம் பரவுவதையும் இறைவன் காணும்போது நல்லடியார்களைக் காப்பாற்றி குழப்பங்களை அகற்ற உகந்த திட்டங்களை அவன் வானத்திலிருந்தோ அல்லது பூமியிலிருந்தோ வெளிப்படுத்துகின்றான். ஏனென்றால் அவன் 'ரஹீம்' எனும் மீண்டும் மீண்டும் கருணைகாட்டுபவனாக இருப்பதை போன்று அவன் 'ஹக்கீம்' அதாவது நுட்பமிகு ஞானம் படைத்தவனாகவும் இருக்கின்றான்.

எல்லா உலகங்களுக்கும் இறைவனான அல்லாஹ்வுக்கே எல்லாப் புகழும் உரியது!